ஆசை நெசவு

சென்னை மாவட்ட மைய நூலகம்
சௌந்தர், சென்னை-95.
4105083

இந்திரா சௌந்தர்ராஜன்

வானதி பதிப்பகம்
13, தீனதயாளு தெரு
தி.நகர், சென்னை-17.

முதற் பதிப்பு : செப்டம்பர், 1997

திருநாவுக்கரசு தயாரிப்பு

விலை : ரூ. 55.00

24182
4105089

☐ TITLE : AASAI NESAVU
☐ AUTHOR : INDIRA SOUNDARRAJAN
☐ LANGUAGE : TAMIL
☐ EDITION : FIRST EDITION, SEPTEMBER, 1997
☐ No. OF PAGES : xx + 260
☐ PUBLISHED BY : VANATHI PATHIPPAKAM,
13, DEENADAYALU STREET,
T. NAGAR, CHENNAI – 17.
☐ PRICE : Rs. 55.00

Laser Typeset at : LKM Computer Prints, Chennai – 17
Printed at: NOVENA OFFSET PRINTING CO., Chennai - 5 ✆ 8588471, 8548891

முன்னுரை

திரு. 'மாலன்'

பொறுப்பாசிரியர்: குமுதம்

சீட்டிக் கடை சேட்டை உங்களுக்குத் தெரிந்திருக்கும்; பாரதியாரின் புத்திரன். அதாவது பாரதியார் படைத்த பாத்திரங்களிலே ஒன்று. (கற்பனை என்று எழுதக் கை வர மாட்டேன் என்கிறது)

பாரதியார் ஒரு தராசுக் கடையும் நடத்தி வந்தார். 'பலசரக்கு'க் கடையாக வைக்கத்தான் நினைத்தார் பாரதியார். ஆனால் அவருக்கு வியாபாரம் பண்ணத் தெரியாது. தராசுக் கடையாக வைத்தார். எல்லாவற்றையும் நிறுத்துப் பார்ப்பதுதான் நோக்கம்.

தீபாவளி சமயம். சீட்டிக் கடை சேட் தராசுக் கடைக்கு வந்தார். அவர் வந்த நேரத்தில் பாரதிதாசனும் பாரதியாரும் கடையில் உட்கார்ந்து கவிதை பற்றி ரசமாகப் பேசிக் கொண்டிருந்தார்கள்.

"தீபாவளி சமயத்தில் எங்கள் கடைக்குப் பத்து நூறாகவும், நூறு ஆயிரமாகவும் லாபம் வரும்படி தராசு தன் வாயினால் வாழ்த்த வேண்டும்" என்று கேட்ட சேட், "அப்படி வாழ்த்துவதற்குக் கூலி வேண்டுமானாலும் கொடுத்து விடுகிறேன்" என்று வியாபாரிகளின் தர்மத்தை நிலை நாட்டினார்.

"கூலி வேண்டாம் சேட்ஜி. இனாமாகவே ஆசீர்வாதம் பண்ணிவிடுகிறேன். உமக்கு மென்மேலும் லாபம் பெருகும்"

என்று வாழ்த்திய தராசு கூடவே ஒரு கண்டிஷனும் போட்டது. "நாட்டுத் துணி வாங்கி விற்றால்..."

அப்படிச் சொன்னதோடு மட்டுமல்லாமல், கடைக்கு வந்திருந்த கவிராயரையும் (பாரதிதாசன்) பார்த்துச் சொன்னது:

"உமக்கும் அதுதான் காணும் வார்த்தை. நெசவிலே நாட்டு நெசவு மேல். விலைக்குச் செய்வதைக் காட்டிலும் புகழுக்கு நெய்வதே மேல். பணம் நல்லது. ஆனால் பணத்தைக் காட்டிலும் தொழிலருமை மேல். காசிப்பட்டுப் போலே பாட்டு நெய்ய வேண்டும். அல்லது உறுதியான உழவனுக்கு வேண்டிய கச்சை வேஷ்டி போலச் செய்ய வேண்டும். "மல்" நெசவு கூடாது. "மஸ்லின்" நீடித்து நிற்காது. பாட்டிலே வலிமை, தெளிவு, மேன்மை, ஆழம், நேர்மை இத்தனையும் இருக்க வேண்டும். இதற்கு மேல் நல்ல வர்ணஞ் சேர்ந்தால் குற்றமில்லை. சேராமல் இருந்தால் விசேஷம்."

சேலத்துக் கதை என்றாலும் காஞ்சிப் பட்டைப் போலச் செய்திருக்கிறார் சௌந்திரராஜன். கெட்டியான நெசவு. நல்ல அழுத்தமான நிறம். ஜரிகை வேலைகளுக்கும் குறைவில்லை.

காதல் கதையைப் போலப் 'பாவ்லா' காட்டிச் சமூகப் பிரக்ஞை இழைகளைக் கொண்டு செய்திருக்கிற இந்தக் கதை எனக்குப் பிடித்திருக்கிறது. காரணம் உண்டு.

எந்தத் தலைமுறை இளைஞனுக்கும் இல்லாமல் இந்தத் தலைமுறை இளைஞனுக்கு இருக்கிற பிரச்னைகள் சிடுக்கானவை. எங்கே ஆரம்பிப்பது, எப்படித் தொடர்வது என்று தெரியாமல் திகைப்பூட்டுபவை. எதையாவது செய்யப் போய் மேலும் மேலும் சிக்கலாகுபவை.

வறுமை இங்கு ஒரு பிரச்னையல்ல. எனக்குத் தெரிந்து, 2000 வருஷங்களாக, சங்க காலத்திலிருந்து அது இங்கே இருந்து கொண்டுதான் இருக்கிறது. திறமை இருப்பவர்கள் அதை ஜெயித்துக் கொண்டுதான் இருக்கிறார்கள்.

இந்தக் காலத்து இளைஞர்கள் அதைச் சீக்கிரமே ஜெயிக்கிறார்கள். இன்று திறமை என்பது அவர்களுக்குப் பிரச்னை அல்ல. பிரச்னை மனஉறுதி. அதைக் கலைத்துப் போடுவதற்கு ஆயிரம் மோகினிகள். அவற்றைச் சினிமா, டி.வி. அரசியல் என்று என் பங்குக்கு வைய விரும்ப வில்லை - அவிழ்த்துப் போட்டுக் கொண்டு அலைகின்றன. அவற்றிலே ஒன்று ஊர் வம்பு.

இந்தக் கதையில் முகுந்தன் சொல்கிறான்:

"ஊர் வம்பு வேண்டாண்டா... அது நம்ம லட்சியத்திற்கு நேர் எதிரி. முதல்ல நாம நம்ம லட்சியத்துல கவனம் சிதறாம பயணம் செய்வோம். அதை அடைவோம். பின்னாலே பொது ஜனம், சமூகம் பற்றியெல்லாம் சிந்திப்போம்."

அப்பட்டமான சுயநலம் போலத் தெரிய வில்லை? ஆனால் இப்படித்தான் இன்றைய இளைஞர்களில் பலர் யோசிக்கிறார்கள். ஆனால்,

இதற்காக ஒட்டுமொத்தமாக அவர்களைத் திட்டித் தீர்த்துவிட முடியாது. இது நேர்மையைக் கும்பிடுகிற ஒரு சமூகமாக இருந்திருந்தால், இங்கே விவேகானந்தர்கள் விளைந்திருப்பார்கள். ஆனால் இது அதிகாரத்தை வணங்குகிற சமூகம். குறுக்கு வழியிலாவது கோட்டையைப் பிடித்து விடத்தான் தோன்றும். இது பணத்தை வணங்குகிற கலாசாரம். இங்கே பிர்லா ஆகிவிடத்தான் தோன்றும். விதை ஒன்று போட்டால் சுரை ஒன்றா முளைக்கும்?

இந்திரா சௌந்தர்ராஜன் வார்த்தைகளில் சொன்னால், நூத்துக்கணக்கில சின்னத் தவறுகளை ஒப்புக் கொண்ட சமூகம் இது. லைன்ல குறுக்கே புகுறுதுல்ல தொடங்கி பிளாக்ல டிக்கெட் வாங்கறதிலே ஆரம்பிச்சு...

ஆனால் இந்தச் சமூகத்திலும் இளைஞர்கள் ஜெயிக்கிறார்கள். இதைத்தான் கதையாகப் பதிவு செய்திருக்கிறார் இந்திரா சௌந்தர்ராஜன்.

விசிறி மடிப்பு அங்க வஸ்திரம் மாதிரி ஒரே சீராக, ஒன்றையொன்று தொட்டுக் கொண்டு, அதே சமயம் விரித்துக் கொண்டு போகிற கதை இது.

இந்திரா சௌந்தர்ராஜன் நல்ல படிப்பாளி. 'சரித்திரம் தேர்ச்சி கொள்' என்று பாரதியார் சொன்னதற் கேற்ப, அவருக்கு வரலாற்றில் ஒரு ருசி. அவருடன் தனிப்படப் பேசிக்கொண்டிருந்த நேரங்களில், இதை நான் நேரிடையாக அறிந்திருக்கிறேன். புத்தகங்களை மட்டுமல்ல; மனிதர்களையும் படிக்கிற ஆற்றலும், ஆர்வமும் அவருள் மண்டிக்கிடப்பதை அவரது கதைகள் நமக்குச் சொல்கின்றன. இந்தக் கதையும்தான்.

அவர் மென்மேலும் வெற்றி பெற என் மனம் நிறைந்த வாழ்த்துக்கள்.

மாலன்

"பாரதி"
40, பத்திரிகையாளர் குடியிருப்பு
சென்னை – 41

மதிப்புரை

பிரபல நாவலாசிரியர் திரு ஏ.எஸ். ராகவன்

'சித்தார்த்தா' என்று ஓர் அருமையான புத்தகம். ஆசிரியர் நோபல் பரிசு பெற்ற ஹெர்மன் ஹெஸ், ஜெர்மனி நாட்டிற் பிறந்த கீழை நாட்டு ரிஷி. நூலின் பெயர் சித்தார்த்தா என்றாலும், கதை புத்தருடையதல்ல. அந்த நாவலிலே சித்தார்த்தனின் நண்பனாகிய கோவிந்தன் கங்கைக் கரையில் நிலை பெற்று, தோணி வலித்து, ஞானத் தேட்டையில் ஈடுபட்டிருக்கும் ஓர் அற்புதமான பாத்திரம்.

'கோவிந்தா, இந்த நள்ளிரவில் உனக்குத் தூக்கம் வர வில்லையா? கங்கைக் கரையில் அமர்ந்து நேரம் போவது தெரியாமல் அப்படி என்னதான் செய்து கொண்டிருக் கிறாய்?'

கோவிந்தன் பதில் சொல்கிறான்: 'கங்கையோடு பேசிக் கொண்டிருக்கிறேன். இல்லை. இல்லை. பெரும்பாலும் கங்கை தான் என்னோடு பேசுகிறது. நான் கேட்டுக் கொண்டிருக்கிறேன். இப்படித் தனித்து இருப்பதிலும், பார்ப்பதிலும், கேட்பதிலும் நான், புத்தகங்களில் படித்தவற்றை விட, நிறையக் கற்றுக் கொண்டிருக்கிறேன்.

அநாயாசமாக ஒரு பெரிய தத்துவத்தைச் சுலபமாகச் சொல்லி விட்டான் கோவிந்தன்! ஆம். இயற்கை நம்மோடு பேசுகிறது. அது அதுவாக இருக்கிறது. நம்மைப் பார்த்துச் சிரிக்கிறது, அழுகிறது. நமக்கு அது தெரிவதில்லை.

'ஆசை நெசவு' நாவலைப் படிக்கிற போது எனக்கு இந்தக் கோவிந்தன் நினைவுக்கு வந்து கொண்டே யிருந்தான்.

சேலம் நகரின் சின்னக் கடைத் தெருவோடு கிழக்கே நடந்தால், அம்மாபேட்டை மெயின் ரோடு தொடர்கிற இடத்தில், நந்தி போல, பட்டை வட்டக் கோயில் மறிக்கும்; 'கபர்தார்! இங்கிருந்து சௌராஷ்டிரா இனத்தவராகிய நெசவாளர்களின் சாம்ராஜ்யம்!' என்று சொல்கிறார் போல. சின்னத் தெருக்கள், உப தெருக்கள், சந்துகள், உப சந்துகள், முக்குகள் என்று மடங்கி மடங்கி, தலையும் வாலும் பின்னிக் கொண்டு பரந்து கிடக்கிற சாம்ராஜ்யம்.

கோவிந்தனாக மாறி அந்தச் சாம்ராஜ்யத்தில் இருந்து, கண்டு, கேட்டு, மருகி, சிரித்து ரசித்ததால்தான், இந்த நாவலுக்கு, ஆசை நெசவுக்கு இத்தனை பரிமாணம், இத்தனை ஜீவன் கூடியிருக்கிறது; கூட்ட முடிந்திருக்கிறது; இதன் ஆசிரியர் இந்திரா சௌந்தர்ராஜனால் என்று நான் உறுதியாக நம்புகிறேன்.

பொதுவாக, சில நாவல்களைப் படிக்கிற போது, சுவாரசியமாக இருக்கும். படித்து முடித்த பிறகோ இத்தனை பக்கங்களில் இவர்கள் என்ன தான் சொல்கிறார்கள் என்று ஆராய்ந்தால், எதுவுமே தேறாது. அட, திருவள்ளுவருக்கு இரண்டு வரிகள் கூடத் தேவைப் படாத விஷயத்துக்கு, பல நூறு பக்கங்களை ஏனய்யா வீணடிக்கிறீர்கள் என்று கேட்கத் தோன்றும்.

இந்திரா சௌந்தர்ராஜனின் இந்த நாவலில் நமக்கு அந்தக் குறை ஏதும் இல்லை. இத்தனை வித்தியாசமான பாத்திரங்களை நடமாட விட்டு, மோதவிட்டு, வண்ண மயமாய் உணர்ச்சிகளையும் உண்மைகளையும் உதிர விட்டு, கதையை இவ்வளவு சீக்கிரம் முடித்து விட்டாரே என்ற ஏக்கமே மேலிடுகிறது, படித்து முடித்ததும். மனசிலே ஒரு

வலி - நம் மக்களின் அவலங்களை நினைக்கிற போது, பூரிப்பு - மனித நேயம் வெற்றி பெறுகிறபோது, சர்வ சாதாரண மனிதர்கள் அசாதாரண உயரத்துக்கு எழுகிறார்கள். கதைப் போக்கு, நடை, ஆங்காங்கே ஏலக்காய், முந்திரி, பாதாம் பருப்புகளாக - ஆசிரியரின் தலையீடு இன்றி - பரம சத்தியமான வாசகங்கள், விமர்சனங்கள்!

மாதிரிக்குச் சில:

(அக்கிரமம் நடக்கிற போது அதைத் தட்டிக் கேட்கத் துணிவில்லாமல்) எல்லோர் விழிகளிலும் பயம். நமக்கெதற்கு ஊர் வம்பு என்கிற பயம். ஊருக்கு ஊர், தெருவுக்குத் தெரு, யூரியா போட்டு வளர்த்துக் கொண்டிருக்கிற பயம்.

'கண் எதுக்க கொள்ளை நடக்கும். வேடிக்கை பார்ப்போம். ஆனா கண்ணுக்குத் தெரியாத ஜாதிக்காக, கலவரத்துல, பஸ்ஸைக் கொளுத்துவோம்.'

'கடல் கூட அலைக் கைகளோடு சப்தம் போட்டுக் கொண்டிருக்காவிட்டால் அபேஸாகியிருக்கும்!'

'நான் படிச்ச பாரதி என் கோபத்தை இப்படித் தான் காட்டச் சொன்னான். எப்பவுமே, அடிச்சா அது எல்லோருக்கும் தெரியும். ஆனா அணைக்கறது அப்படி இல்லை. அது தெரியாது.'

'பள்ளம் மேடில் உண்டியல் காசாய் ஆட்டோ குலுங்குகிறது.'

'இட்லிப் பானையும் இரும்பு வாணலியும் தகரப் பொட்டியும்... அற்பச் சொத்தாக இருக்க, அற்புதச் சொத்தாக இளமை மட்டும் இருக்கிறது!'

'இன்னும் இன்னும் என்று (கிணற்றை) தோண்டியதில் பூமியின் மறு பக்கமாய் நியூயார்க்கு வந்து விடும் அபாயம் வேறு!'

இப்படி நிறைய. பதம் பார்க்க இவை போதுமே!

சுசீலா என்னும் பாத்திரம் - அவள் விபசாரியாம். இருக்கலாம். ஆனால் கதை நெடுகிலும் பரம உபகாரியாய்த் தான் அவள் இருக்கிறாள். ராமாயணத்தில் ஒரு சுலபை. இங்கே ஒரு சுசீலா. இருவருக்கும் எனக்கு வேற்றுமை தெரியவில்லை. உப்புக் கடலுக்குள் அவள் குதித்திருக்கலாம். ஆனால் முத்துக்களை அல்லவோ வாரிக் கொண்டு வந்து பிறருக்காகக் கொட்டி விட்டாள்!

நபீஸா! அவள் ஒரு கேள்வி கேட்கிறாள், பாருங்கள். 'முட்டாப் பயலே, இஸ்லாம்னா என்னடா அர்த்தம்?'

அந்த அர்த்தத்தை அவள் வார்த்தைகளால் விளக்கவில்லை. செயலால் வெளிப்படுத்துகிறாள். போலீஸ் இன்ஸ்பெக்டரை அவள் பிடித்த பிடியில், அவருடைய இதயத்தைக் குறி வைத்து அவள் கொட்டிய வார்த்தைகளின் சக்தியில் அங்கெல்லாம் இப்போது வலி!

'வைஷ்ணவ ஜனதோ தேனே கஹியே?'க்கும் இதற்கும் என்ன ஒற்றுமை, பார்த்தீர்களா?

தேசிகாச்சாரி எண்பது வயது மார்க்கண்டேயர்! சூத்ரதாரியாக இருந்து கொண்டு இந்தச் சிலம்ப - வர்ம - யோக பண்டிதர் மோகன்ராமை எப்படிப் புடம் போடுகிறார் என்பதைப் படித்து ரசிக்க வேண்டும். மாமிசப் பிண்டமான சுசீலாவை மரகதக் கல்லாக மாற்றியது வேறு யாராம்?

பகவந்த ராவ்! நேர்மையான வழக்கறிஞர்.

பம்பாய் மணியம், ஜவஹர் பாபு, தாமு, கிருஷ்ணா ராவ் பட்டியலிட்டு மாளாத கொள்ளைக் கூட்டம்!

இவர்களுக்கு நடுவே பானு, மோகன்ராம், கனகா!

கால் தான் ஊனமே தவிர, கனகாவுக்கு அறிவில் ஊனம் இல்லை. தெளிவு. வெறும் கனவு காண்கிற

பைத்தியக்காரியாக இல்லாமல் ஆழமாகச் சிந்தித்து வாழ்வை நிர்ணயித்துக் கொள்கிற புத்திசாலிப் பெண்!

பானு - அவள் அகல் விளக்கு. பூஜை மாடத்து விளக்கு.

மோகன் ராம் கொடுத்து வைத்தவன். 'நல்ல குணங்களே நம்மிடை அமரர் பதங்களாம்!' என்பான் பாரதி. இயல்பாகவே நல்ல சிந்தனைகள், தனிமையில் நாட்டம், ஊடும் பாவுமாகத் தொழிலையும் படிப்பையும் திட்டமிட்டுத் தொடர்கிற கவனம், கணக்கு. அவனுக்கு நல்ல ஞானாசிரியர்கள், நண்பர்கள் - பரஸ்பர ஈர்ப்பாக - கூடுகிறார்கள். கை கொடுக்கிறார்கள்.

இவ்வளவு பேரும் இந்த நாவலில் இருந்து கொண்டு நம்மைப் பிரமிக்க வைக்கிறார்கள்; சிந்திக்க வைக்கிறார்கள்.

நம் மனசுக்குள் புயல் அடித்து ஓய்ந்த மாதிரி ஓர் அமைதி. ஒரு திருப்தி. ஓர் ஏக்கம், ஒரு நம்பிக்கை உருவாகிடக் காரணமான இவர்கள் - 'பரம தர்மக் குன்றின் மிசை ஒரு பாய்ச்சலாய்ப்' பாய்கிறவர்கள்!

வாருங்கள்! நீங்களும் படித்து மகிழுங்கள்.

ஏ.எஸ். ராகவன்

'ஸ்ரீகாந்த்'
9. பாலாஜி நகர்,
உடையாம்பாளையம்,
கோயம்புத்தூர் – 641006
19.8.97

**இந்த ஆசை நெசவை நான் நெய்த போதும்
நெய்து முடித்த பின்பும் என்னை ஊக்கப்படுத்திய
சில இலக்கிய நெஞ்சங்களின் கருத்துக்கள்**

"எந்த ஒரு நாவலும் அந்தப் படைப்பாளியின் பிறந்த மண்ணின் வாசம் சுவாசித்து உருவாகும் போது, அதன் தனித் தன்மை சிகரமாக உயர்கிறது.

இதிலும் அதைப் பார்க்க முடிகிறது.

அதிலும் - ஆதி மனிதன் கலாச்சாரத்தில் முதல் பாதம் வைத்ததும், அவனது மானங்காக்கத் தோன்றிய தொழில்தான் நெசவு.

அந்த நெசவாளர்களின் வாழ்க்கைக்குள் இந்திரா சௌந்தர்ராஜன் நிகழ்த்திய இனிய பிரவேசம் 'ஆசை நெசவு.'

எத்தனை யுகங்கள் ஆனாலும்,
எத்தனை காலங்கள் மாறினாலும்,
என்றும் மாறாதது இறை நம்பிக்கை.

எதிலும் நம்பிக்கையுடன் பிரார்த்தனை செய்தால் எந்தக் காரியமும் சிதறாது; எத்தனை எதிர்ப்புச் சிக்கலில் சிக்கினாலும் ஏறுமுகமாய்ச் சிகரம் நோக்கி உயரும் என்பதை அழுத்தமாகச் சிந்தனைக் கருத்துக்களை - உரையாடல்களை உலுக்காமல் சிக்கலில்லாத பாத்திரப் படைப்புகள் மூலம் நேர்த்தியான நாவலைச் சுபமாக நிறைத்துள்ளார் இந்திரா சௌந்தர்ராஜன்.

மலைப்புறத்து மக்களின் பிரச்சினைகள் ஓராயிரங் கோடி.

அதில் ஒரு கீற்று தான் இந்த ஆசை நெசவு.
அற்புதமான ஜீவிதப் படைப்பு"

5.8.97 கா. பால்ராஜ் எம்.ஏ.
மதுரை - 11

"துப்பறியும் நாவலில் முடிவு முக்கியமானதாக இருக்கும். அப்படித்தான் இந்தச் சமூகத் தொடரும்.

பொறுப்புணர்ந்த எந்தப் பிரஜைக்குள்ளும் எழும் நியாயமான கோணங்களில்தான் இந்தக் கதையைக் கொண்டு செல்கிறது என்றாலும் முடித்து வைத்திருக்கும் விதம் நைச்சியம்.

எரிந்து கொண்டிருக்கும் பிரச்சினைகள் மேல் சொறிந்து விட்டிருக்கின்றார் குடம் நிறையத் தண்ணீரை.

ஐம்பது வருஷத்திற்கு ஒரு முறை எந்த ஒரு கொள்கைக்கும் வாழ்வு வரும் என்றால் காந்தியத்துக்கு மறு வாழ்வு தற்போது நிச்சயம். அதைத் தறியேற்றிய புண்ணியம் இந்த ஆசை நெசவிற்கு உண்டு.

மும்மதமும் கை இணைப்பதும், வில்லத்தன மெல்லாம் சலவையாகி விடுவதும் விரும்பத்தக்க செயற்கையே. போதனைக் கஷாயம் கசக்கும். அதுவே கதை என்கிற சூப் கப்பில் பரிமாறப்படும்போது சௌரிமானமாகி விடுகிறது.

தோண்டித் துருவிப் பார்த்துவிட்டேன், இதில் எனக்கு ஒரு குறையும் தோன்றவில்லை.

கிட்டப் பார்வையும் - மூக்குக் கண்ணாடியும் ஒட்டிப் பிறந்த மாதிரி சின்னக் குறைகள் கூட அதற்குரிய சமாதானங்களுடன் இருக்கின்றன.

அடுத்த முறை இந்திரா சௌந்தர்ராஜனைப் பார்க்கும் போது மறக்காமல் கேட்க வேண்டும்:

"நீங்கள் எந்தக் கடையில் உங்கள் பேனாவிற்கு மை வாங்குகிறீர்கள்?"

கவிஞர்
மதுரை - 11 பத்மாவதி தாயுமானவர்
22.7.97

என்னுரை

கல்கியில் தொடர் எழுத வாய்ப்பு கிட்டியபோது அவர்கள் என்னிடம் ஒரு கோட்டைப்புரத்து வீட்டையோ, ரகசியமாக ஒரு ரகசியத்தைத் துளிக் கூட எதிர்பார்க்கவில்லை.

'சௌந்தர்ராஜன் உங்கள் பாணி நாவல்கள் ஒரு புறம் இருக்கட்டும். கல்கிக்கு வித்யாசப்படுங்களேன்' - என்றார்கள். உடனேயே என்னுள் உருவான படைப்புதான் இந்த ஆசை நெசவு.

இதை நெய்தபோது நான் நிறைய கற்பனை செய்ய வேண்டிய அவசியங்களோ கட்டாயமோ எனக்கு ஏற்படவேயில்லை! நான் பிறந்த மண்ணான சேலத்தில் என் மிக நெருங்கிய ஒரு சமூகமாக இந்த நெசவாளர் சமூகமே இருந்தது.

எனவே அவர்களின் வாழ்க்கை - வேட்கை எல்லாமே எனக்கு மிக மிகப் பரிச்சயம். நான் கண்ணாடியில் பார்த்துக் கொள்ளும் என் முகம் போல...

'சமயங்களில் நானும் பட்டு நெய்ததுண்டு. கெண்டை நூற்றதுண்டு. அள்ளு நீட்டி பிசுக்கெடுத்ததுண்டு. அவர்களுடன் அமர்ந்து வள்ளிக்கிழங்கு தின்று இரண்டாவது ஆட்டத்துக்குப் போய்க் கடலை கொரித்ததுண்டு.

இன்றும் எனது உயிர் நண்பர்கள் நெசவாளர்களில் தான் உள்ளனர்.

அற்புதமான கலைத் தொழிலுக்குச் சொந்தக்காரர்கள் இவர்கள். ஐம்புலனாலும் பணியாற்றுபவர்கள். ஆனாலும் இவர்கள் இன்றுவரை பெறுவது சன்மானமோ சம்பளமோ இல்லை, கூலிதான்!

செய்யும் தொழிலில் நெய்யும் தொழிலைப் போலில்லை என்று சொல்லி விட்டால் போதுமா? அவர்களை மேம்படுத்த வேண்டாமா? குறைந்த பட்சம் கதைகளில் கூட அவர்களுக்கு இடமில்லை.

வெகு சிலரே இந்தக் கூட்டம் பற்றி நாவல் செய்த நிலையில் எனது சித்தம் மிகுந்த இவர்களைப் பற்றி நாவல் செய்ய நானும் தீர்மானித்தேன்.

கல்கி இடமளித்தது. சாதாரண இடமல்ல இது. மிக கௌரவமான ஒரு இடம். என்றைக்கும் நான் நினைத்துப் போற்றும்படியான ஒரு இடம்.

அத்தகைய ஒரு இடத்தை அசாதாரணமாகப் பயன்படுத்தலாமா? நன்கு பயன்படுத்தத் தீர்மானித்து இந்த நெசவைப் பட்டுத் துணியை நெய்வது போல நெய்ததாகவே நம்புகிறேன்.

பொதுவில் என் படைப்புகளுக்கென்று ஒரு தனி முத்திரை உண்டு. அந்த முத்திரை வராதபடி ஒரு கமர்ஷியல் படம் எடுப்பவர் விருதுக்காக ஆசைப்பட்டு, கலைப்படம் எடுக்கிற மாதிரி நானும் மாறுபாடு கொண்டு கதை முழுக்க உண்மை பேசினேன். சத்யம் சொன்னேன். நிஜம் செய்தேன். எதார்த்தம் பின்னினேன். நடுநடுவே மிக பயந்தேன்.

காரணம் இந்த மாதிரியான ஒரு மாற்றத்தை என் வாசகர்கள் வரவேற்பார்களா என்கிற பயம் மிகுதியாக இருந்தது.

ஆனால் முடிவில் என் கரங்களைப் பற்றிச் சிலர் முத்தமிட்டபோது பயம் தெளிந்தது. பரவசம் தொற்றியது. நம்பிக்கை வலுப்பட்டது.

எவ்வளவோ நாவல்களை எழுதியுள்ளேன். ஆனால் இந்தத் தொடரை நான் அவை நடுவே ஒரு தனித்துவத்துடன் பார்க்கிறேன். எனக்கே மிக நிறைவைத் தந்த ஒரு படைப்பு இது.

இதன் நாயகன் மோகன் ராம் எனது நண்பர்கள் சிலரின் கலவை. தேசிகாச்சாரி, பகவந்த ராவ், கிருஷ்ணா ராவ், பாம்பே மணியம், தாமு - எல்லாருமே கூட நான் பார்த்த பழகிய மனிதர்களில் சிலரே.

சம்பவங்களில் வேண்டுமானால் கற்பனையிருக்க லாம். ஆனால் அந்தப் பாத்திர வார்ப்புகள் எதார்த்தமாய் வந்து விழுந்தன. சிலர் இந்தத் தொடரை இன்னும் கூட சற்று வளர்த்தியிருக்கலாம் என்று கூறினார்கள்.

எனக்கு அதில் ஒப்புதலில்லை. ஒரு மனிதனின் சரியான உயரம் ஐந்தரை அடி சொச்சம் என்பது போல தொடர்களுக்கேயுரிய சரியான உயரத்துடன் இது இருப்பதாக நம்புகிறேன்.

கல்கி மிக அழகாக வெளியிட்டது. அரஸ் பாத்திரங்களைப் புரிந்து வரைந்திருந்தார். கல்கி ஆசிரியர் திருமதி சீதாரவி தொடரில் காதலுக்குச் சற்றுக் கூடுதல் பங்கினைக் கோரினார். அந்த எதிர்பார்ப்பும் ஆலோசனையும் படைப்பில் உயிரோட்டத்தை மிகக் கூட்டின.

அவருக்கும் கல்கிக்கும் என் நன்றிகள்.

மதிப்புரை நல்கியுள்ள உயர்திரு ஏ.எஸ். ராகவன், உயர்திரு மாலன் - மற்றும் நட்பு வட்டத்திலுள்ள திரு

பால்ராஜ், திருமதி பத்மாவதி தாயுமானவர், என அனைவர்க்கும் என் நன்றி.

— பிரத்யேக நன்றி திரு மாலனுக்கு.

— காரணம் அவருக்கு மிக நன்கு தெரியும்.

— ஒரு வகையில் இந்த ஆசை நெசவை நான் இப்படி நெய்ய அவரும் ஒரு காரணம். எனது 'ரகசியமாக ஒரு ரகசியம்' நாவலை விமர்சித்தவர் அவர். எழுத்தாளன் என்பவன் கதைக்குள் ஒளிந்து விடாமல் தன்னையும் முன் நிறுத்தி ஒரு போடு போடவேண்டும் என்று எனக்குள் தூண்டுதல் நிகழ்த்தினார். அந்த நிமிண்டல் ஆசை நெசவில் நான் என்னை முன்னிலைப்படுத்திக் கொள்ள பெரிதும் துணை செய்தது.

மேலும் பல படைப்புகளுக்கும் துணை செய்யும்.

நன்றி.

24.8.97
மதுரை – 3

பணிவன்புடன்
இந்திரா சௌந்தர்ராஜன்

சமர்ப்பணம்

'எனது அன்பிற்கும் பெருமதிப்பிற்குமுரிய
பெரியப்பா நாவலாசிரியர்
திரு ஏ.எஸ். ராகவன்
அவர்களின் திருவடிகளுக்கு
இந்த ஆசை நெசவை நேசமுடன் சமர்ப்பிக்கின்றேன்.'

– இந்திரா சௌந்தர்ராஜன்

ஆசை நெசவு

கொளத்தூர், சென்னை.

1

அடிவாரத்தில் நின்றபடி அண்ணாந்து பார்த்த போது பானுவுக்கும் மற்றவர்களுக்கும் அத்தனை உயரத்தை எப்படி ஏறப் போகிறோம் என்றுதான் தோன்றியிருக்க வேண்டும். அப்படித்தான் தோன்றவும் செய்யும்.

சீராகப் படிகள் வெட்டி, ஓரஞ்சாரமாக மரங்கள் நட்டு, கீழே நிழல் பிடித்து வைத்து ஆங்காங்கே சிமிண்டு பெஞ்சுகளையும் போட்டு வைத்திருக்கும் குமரகிரியையும், கலிய பெருமாள் கரட்டையும் ஏறிக் கடக்கும்போதே மூச்சு இறைக்கிறது. இதயம் 'சண்டாளா சண்டாளா' என்று சபித்தபடி 'பந்த்' நடத்துகிறது.

இந்த நாம மலையோ ஒரு ஒழுங்கில்லாத மலை. அரக்கர் தலைபோலத் திண்டு திண்டாய்ப் பாறையும், கோரமான கரடுமுரடும் கொண்ட ஒரு மலை வரிசையின் மைய முதுகுப் பகுதி.

இதன் உச்சியை எட்டுவது சுலபமா என்ன? இந்த உச்சி மேல் ஸ்கூட்டர் ஷெட் அளவில் ஒரு பெருமாள் கோயிலும், அதற்கென ஒரு ஜனக்கூட்டமும் இருப்ப தெல்லாம் கேட்க, பார்க்க வேண்டுமானால் ஆச்சரியமாகத் தோன்றலாம்.

ஆனால் இந்த ஜனக் கூட்டத்துக்கு இந்த மலை விஜயம் இருக்கிறதே, அது ஒரு கட்டாயக் கடமை கூட—

அதிலும் பொங்கலுக்கு மூன்றாம் நாள் கட்டுச்சாதக் கூடையோடு மலையையும் பெருமாளையும் ஒரு கை

பார்க்காவிட்டால் அந்த நாள் கழிந்தது போலவே இருப்ப தில்லை.

கழுத்திலும் மார்பிலும் வியர்வை பெருகி ஓட, மலை ஏறும் நிலையில் அப்படியே இலேசாகத் திரும்பிப் பார்த்தால் கூடப் போதும் - சலீர் என்று எதிர்ச் சாரியில் தெரியும், சேர்வராயன் மலையின் வாசக் காற்று ஒரு குபீர் மோதல் நிகழத்தும்.

சுற்றிலும் வட்டம் கட்டி ஒரு மலைக் கூட்டமே மறித்து நிற்பதும் நடுமையில் குழிப்பரப்பில் சேலம் நகரமும் தெரியும்.

"தோ... தோ... அதோ பார், அங்க ஏ.ஆர்.கே. காம்ப்ளக்ஸ்..."

"ஆமா முத உனக்குச் சினிமா தியேட்டர் தான் தெரியும். ஈஸ்வரன் கோயில், பட்டக்கோயில்லாம் தெரியாதே..."

"யாருடாவன் சாமியார்ப் பய... இங்க வந்ததும் கோயில் குளம்னுகிட்டு... டேய்... அதோ பார் நம்ம தெரு..."

"எங்கடா? தெரியலியேடா."

"அப்ப நாளைக்கே போய் மகாதேவன் டாக்டரைப் பாரு. பொட்டக் கண்ணா..."

பாதி மலை கடந்திருக்கும். சில இளசுகள் வார்த்தைகளில் மோதிக் கொள்கிறார்கள், ஒரு பருத்த பாறை மேல் நின்றபடி கைவசம் ஆளுக்கொரு அரை சவ்வாளக் கரும்பு; ஏறி இறங்குவதற்குள் சக்கை துப்பி விடுவார்கள்.

இப்படிக் கரும்பு சாப்பிடவும் ஊரைப் பார்க்கவும் மட்டுமா வந்திருக்கிறார்கள்? இல்லையில்லை என்பது போலக் கொலுசு சப்தம் அவர்களை உலுக்குகிறது.

அவர்களில் ஜவஹர் பாபு என்பவனை அது அதிகமே உலுக்குகின்றது.

"டேய் டேய் ஜவஹர், வந்துட்டாடா உன் ஆளு..."

"எங்கடா?"

"அதோ அதோ..." ஒரு விடலை கைநீட்டிக் காட்ட, ஆயாசத்துடன் பையப் பைய ஏறிக் கொண்டிருக்கிறாள் பானு. எப்படி ஏறப் போகிறோமோ என்று மலைத்து நின்ற அதே பானு...

"பின்ன என்ன இவ பாட்டியால இந்த மலையெல்லாம் ஏற முடியுமா என்ன?"

இப்போது மேலும் சில பெண்கள். அதில் ஒருத்தி வெள்ளிக் கம்பி உருண்டையும் குத்தூசியுமாக அரைஞாண் கயிறு பின்னியபடி தெரிகிறாள்.

"டேய் இவ தூங்கும்போது கூடக் கயிறு பின்னு வாளாடா?"

"ஆமா... நீ என்ன யோக்யம் - நாலு மணிக்கு எழுந்திரிச்சு தறி நெய்யற பய நீ..."

"ஆமா... அய்யா கராத்தே, சிலம்பம்னு சாயங்காலம் வித்தை கத்துக்கப் போயிடறார். அப்ப காலைல தறியில உக்காந்தாதானே மாசம் ஒரு தறியாவது அறுக்க முடியும்."

"டேய்... இங்க வந்தும் ஏண்டா தறி நெசவுன்னுகிட்டு. கொஞ்சம் நிம்மதியா இருக்க விடுங்கடா..."

அந்த இளவயதுக் கூட்டம் கேலி, கிண்டல் என்று அந்தப் பெண் கூட்டத்தை நோட்டம் போட்டபடி பின் தொடருகிறது.

அந்தப் பெண் கூட்டம் கூட ஓரஞ்சாரமாகத் திரும்பிப் பார்த்து அதை ரசித்தபடி மேலேறுகிறது.

கூர்ந்து கவனித்தால் அந்த ஒழுங்கில்லாத மலைப் பாதையில் நிறைய இடங்களில் இதுதான் நிலை.

பானு மட்டும் யாரையோ தொலைத்து விட்டுத் தேடுகிற மாதிரி இருக்கிறாள். பார்வையைச் சுழலவிட்டுச் சுழலவிட்டுச் சோர்ந்து போயிருக்கிறாள்.

'கஷ்டப்பட்டுப் பாட்டியிடம் அனுமதி வாங்கிக் கொண்டு இப்படி மலைப்புரம் வந்தது சோர்ந்து ஏமாறவா?'

யார் யாரெல்லாமோ அவள் கண்ணுக்குத் தெரிகிறார்கள். ஆனால் அவன் தெரியவில்லை!

மொத்த நெசவாளக் கூட்டமும் படை எடுத்து வந்திருக்கிறது. கால மாற்றத்துக்கேற்ப ஜீன்ஸ் பேண்ட் கூடப் போட்டிருக்கின்றனர் சிலர்.

ஆனால் அவன் மட்டும் அவர்கள் நடுவில் இல்லை. 'பளீர்' வெளுப்பில் வேஷ்டி, மடித்து விட்ட சட்டை - சளைக்காத அதே வெளுப்பில், புயலடித்தாலும் கலையாது என்று நம்பும்படியான சுருட்டையில்லாத படிய வாரிய தலை, சதுர ஃபிரேமில் கண்ணாடி, காலில் கிடந்தாலும் இம்மியழுக்குப் படியாத நிலையில் ஸ்லிப்பர் செருப்பு.

மொத்தத்தில் மோகன்ராம் நடந்து சென்றால் பார்க்க பதவிசாகத் தெரியும். மனத்தில் மரியாதை பிடிபடும்.

சாதாரண நாளிலேயே சட்டப் புத்தகமும் கையுமாக, நினைத்தால் இந்த மலைப்புரம் பக்கமாகக் கிளம்பி விடுகின்றவன் இன்று மட்டும் எப்படி வராமல் போனான்?

அடிவாரச் சருக்கத்தில் ஏகாந்தமாய் மரக்கூட்டம். கீழே குளிரக் குளிர நிழல் மூட்டம். அதில் எங்காவது மரத்தண்டின் மேல் அமர்ந்து வைத்த விழி வாங்காமல் படித்துக்கொண் டிருப்பானோ? 'நிம்மதியா படிக்கணும்னா நாம மலை அடிவாரம்தான்' என்று வார்த்தைக்கு

வார்த்தை கூறுபவன் இன்று மட்டும் வராமலா போயிருப்பான்? பானு கேள்வியோடு அலைமோதுகிறாள். அவளது சகாக்களுக்கும் அது தெரிகிறது.

"பானு... இந்தக் கூட்டத்துல போய்த் தேடறியேடி - ஆளரவம் இல்லாத இடமா பாரு... அங்க இருப்பான் உன் மன்மதன்."

"ஆமாண்டி. அந்தச் சாமியாருக்குக் கூட்டம் கொண் டாட்டம்தான் சுத்தமா ஆகாதே..."

"ஏண்டி, எப்படி அந்த மனுஷனை நீ நேசிக்கிறே...?"

பானுவை அவளது சகாக்கள் கிண்டலில் போட்டுப் புரட்டப் பார்க்க, அவள் அதையெல்லாம் காதில் போட்டுக்கொள்ளாமல் அங்கிருந்து நழுவ ஆரம்பித்தாள்.

நிச்சயம் அவன் அங்கேதான் இருக்க வேண்டும் என்று தெரிந்து விட்டமாதிரி எங்கோ ஓடத் தொடங்கினாள். அதுவரை அவளைக் கண்களால் அள்ளி விழுங்கிக் கொண்டிருந்த ஜவஹருக்கு அவளது ஓட்டம் என்னவோ செய்தது.

"டேய் அவ அந்த மோகன்ராமைத் தாண்டா தேடிப் போறா... வழக்கம் போல உனக்குப் பெப்பே..." - ஒருவன் அவனைக் குத்தத் தொடங்குகிறான். அவன் முகம் கும்பிப் போகிறது. தலைதாழ்ந்து போகிறது.

"கவலைப்படாதே. இவ என்னதான் அவனை விழுந்து விழுந்து லவ் பண்ணுனாலும் மோகன் இவளை நிமிர்ந்து கூடப் பார்க்க மாட்டான். இன்னும் ஆறு மாசத்துல அவன் ஒரு வக்கில். நம்மளை மாதிரி கூலித் தறி பிச்சை கேஸ் கிடையாது. இவளோ, திண்ணைல இட்லி சுட்டு விக்கற ஒரு கிழவியோட பேத்தி. அம்மாதான் நம்ம சாதி. அப்பன் ஒரு..."

பேச்சை வளர்த்தியவன் வாயைச் சட்டென்று மூடுகிறான் ஜவஹர் பாபு.

"அதுக்கு மேலே அவளைப் பத்தி என் எதுக்கையே மட்டமா பேசாதே" என்று எச்சரிக்கிறான்.

"வாஸ்தவம்தான்... அவளுக்கு ஒரு விஷயத்துல ஓட்டைன்னா உனக்கும் ஒரு விஷயத்துல..." அவன் சொல்லி முடிக்கும் முன் அந்த விஷயம் தொடர்பான நினைவில் ஜவஹரின் முகத்தில் சற்றே சலனம்.

"என்னடா ஜவஹர், எங்க மலைக்கா?" - மலை ஏறும் ஒரு காவிப் பல் கிழடு மெதுவடை கடித்தபடி கேட்கிறது.

"இல்ல சுடுகாட்டுக்கு... இது மலையில்லாம என்ன உன் தலையா?" - ஜவஹர் சார்பாக அவன் சினேகிதனிடம் குத்தலான பதில். கிழடு அதிருகிறது.

'வாய்க் கொழுப்புடா உங்களுக்கெல்லாம். சாராயம் விக்கற குடும்பத்துப் பசங்களுக்கு நல்லதெங்கே தெரியப் போகுது?"

கிழவரின் உடனடி பதிலில் ஜவஹரின் ஓட்டை எது என்பதும் தெரிந்து விடுகிறது. முகத்தில் நெருப்பெரிய ஆரம்பிக்கிறது.

"ஏ கிழவா, வாய மூடிகிட்டுப் போ... இங்க ஏகத்தாளம் பேசிட்டு அங்க குடிக்க வந்தே பொறட்டி எடுத்துடுவோம் ஆமா..."

கிழவர், அங்கிருந்து விலகி அண்ணாந்து பார்க்கிறார். உச்சியில் காவிப் பட்டையடித்த, செவ்வக சதுரத்தில் சின்னதாய்க் கோவில். வெளியே பட்டாசாரி சாவதானமாய் வருபவர்களுக்காகக் காத்துக் கொண் டிருப்பது தெரிகிறது.

முன்பெல்லாம் கூட்டம் கட்டி ஏறும். இரவில்லை, பகலில்லை, ஆணில்லை பெண்ணில்லை... அதிலும் இளவயதில்லை, பெரியவயதில்லை என்று மாடாய் உழைக்கும் மானங்காக்கும் நெசவுக் கூட்டத்துக்கு இப்படி மலை ஏறும்போதுதான் ஒரு மாறுதல் தெரியும். மேலே நின்றபடி புள்ளி புள்ளியாய் ஜனக்கூட்டத்தையும் வாகனங்களையும் பார்க்கும் போது ஒரு பிரமிப்பு கூடத் தோன்றும். அடி வயிறு பருக்க ஆழ்ந்து மலைக் காற்றைச் சுவாசித்து, எங்கெங்கோ விரவிக் கிடக்கும் தன் ஜனக் கூட்டத்தையும் ஒரே இடத்தில் பார்த்துச் சங்கமித்துப் புளிசோறு, கொழுக்கட்டை என்று வகைக்கொரு பதார்த்தத்தையும் அந்த மலை உச்சியில் அமர்ந்து தின்னும் போது 'உலகம் - பிறப்பு - வாழ்க்கை - அதன் போக்கு' எல்லாவற்றிலுமே இன்பம் மட்டுமே இருப்பதாகத் தெரியும்.

பின்பு கீழ் இறங்கி விட்டாலோ, காத்திருந்த மாதிரி பிடித்துக் கொள்ளும் வயிற்றுப் பாடு.

கை, கால், கண், காது என்று சகல உறுப்புக்களையும் ஒருமைப்படுத்திச் செய்ய வேண்டிய ஒரே வேலையாகிய நெசவுப் பணியில் அந்த மொத்த கூட்டமே கரைந்து போக ஆரம்பிக்கும்.

நடுநடுவே உடம்பு வலித்தால் சாராயம், உள்ளம் களைத்தால் சினிமா என்று ஓடியும் திரியும்.

அதற்கு மேலான வாழ்க்கை விஷயங்களெல்லாம் அவர்கள் வரையில் எட்டாத நிலவைப் போலத்தான்...

சமயங்களில் எட்ட முடிந்த விஷயங்களைக் கூட நிலவைப் போலக் கருதி ஒதுக்கிவிடும்.

ஒரு வங்கிக் கணக்கு; அதில் சில ஆயிரம் சேமிப்பு என்பது கூடப் பாஸ்போர்ட், விசா வாங்குகிற மாதிரி ஒரு களைப்பான விஷயம் என்று கருதும் கூட்டத்தில்

மோகன்ராம் மட்டும் விதிவிலக்காக இருப்பது சற்று ஆச்சரியமான விஷயம்தான்.

இல்லாவிட்டால் எட்டாம் வகுப்புக்கு மேல் படிப்பெதற்கு என்று கேட்டு, அவன் பள்ளி வாழ்க்கைக்கு மூடுவிழா நிகழ்த்திவிட்ட நிலையில் இன்று தபாலிலும் மாலைக் கல்லூரியிலுமாகப் படித்தே வக்கீலாகும் அளவு வளர்ந்திருப்பானா என்ன?

அந்த வளர்ச்சிக்குக் கூடத் தன் நெசவுப் பணியிலேயே வழியைப் பார்த்திருப்பானா என்ன?

இத்தனைக்கும் தாய்க்காரிக்குக் காச நோய்!

தகப்பன் பரலோகம் சேர்ந்து பல வருஷம் ஆகிவிட்டது.

தார்க் குச்சி சுற்றிப் போட்டுத் தணலில் குச்சிக்கிழங்கை அவித்துத் தந்து, வியர்த்து வடிகையில் புடைவை முந்தானையில் அதைத் துடைத்தெடுத்து, இத்தனைக்கும் நடுவில் இதயம் தொடும் அன்பை அவன் திக்கித் திணறும் வண்ணம் அதில் கலந்து தந்த அக்காவைக் கூடக் காலம் அள்ளிக் கொண்டு போய் விட்ட நிலையில் மோகன்ராமினால் மட்டும் எப்படித் தன்னை இப்படிச் செலுத்திக் கொள்ள முடிந்தது?

இந்தக் கேள்வியில் விழுந்தவள்தான் பானு என்னும் பானுமதி. இன்று வரை அவள் எழுந்திருக்கவில்லை; எழ முடியவுமில்லை.

தினமும் பாட்டியிடம் இட்லி வாங்க வருவான்.

பாட்டி மந்தா கூட அவனைப் பார்த்து விட்டால் கொஞ்சம் பரவசத்தோடுதான் இட்டிலியைத் தருவாள்.

எல்லோருக்கும் சட்னி, சாம்பார் என்கிற துணைச் சரக்கென்றால் மோகன் ராமுக்குக் கூடவே மிளகாய்ப் பொடி, வெங்காய சட்டினி என்று கூடுதல் கவனிப்பு.

இதற்கு நடுவில் பானுவின் பார்வை அவனைக் கவனிப்பதை மட்டும் அந்தக் கிழவி கவனிக்காமல் இருப்பாளா என்ன?

அதிலும் சிறுவாட்டுக் காசில் பவுடர், ஸ்னோ என்று வாங்கிப் பூசிக் கொண்டும், நாற்பட்டுப் பாவாடை, அதன் வண்ணத்துக்குத் தோதாகச் சோளி என்று அணிந்து கொண்டும் அவள் அவனை வளைய வளைய வந்தாலும், அவனிடம் மட்டும் ஏனோ பதிலுக்கு விருப்போ வெறுப்போ எதுவும் தெரியவில்லை.

தனியாகப் பேசவும் வாய்ப்பு வாய்க்க வில்லை.

நல்லவேளை பொங்கலும், கரிநாளும் வந்து இப்படி மலை ஓரமாக ஒதுங்க முடிந்திருக்கிறது.

எத்தனையோ பேர் இங்கே வந்துதான் தங்கள் காதல் தறியை விரித்து நெய்திருக்கிறார்கள்.

அதிலும் இந்த மலைப் பெருமாளை வேண்டிக் கொண்டு தொடங்கும் விருப்பம் ஈடேறாமல் போனதே யில்லை.

தன் விருப்பம் மட்டும் ஈடேறாமல் போகுமா என்ன?

பானு கேள்வியும் தவிப்புமாக இப்போது அடி வாரத்தில் இருக்கிறாள்.

விடலைகள் சிலம்பமாடிக் கொண்டிருக்கிறார்கள். அது அவர்களின் ஆசை விளையாட்டு. முழங்கால் உயரம் கூட இல்லாத ஒரு பொடியன் கூட 'போடு போடு' என்று போடுகிறான்.

சுற்றி நிற்கும் கூட்டம் குச்சி ஐஸைச் சப்பிக் கொண்டும் கரும்பைக் கடித்தபடியும் வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கிறது.

அந்தக் கூட்டத்தில் தாமுவும் தெரிகிறான், முரட்டு முகத்தோடு!

'இவன் எப்போது ஜெயிலில் இருந்து வந்தான்?' - பானுவுக்கு மட்டுமல்ல; பல பேருக்குள் இந்தக் கேள்வி. அவனோ சிலம்பத்தில் ஆழ்ந்த கவனத்தில் இருக்கிறான். அவனுக்குச் சில அடி தள்ளித்தான் மற்றவர்கள் நிற்கின்றனர்.

"பாவா... அந்த மோகன்ராம் பய இங்க எங்கேயும் இல்ல. கூட்டமா இருக்குன்னு வழியில உள்ள கவுண்டர் காட்டுவயல் வரப்பு மேல உக்காந்து பாடம் படிச்சு கிட்டிருக்கான்."

"பாடமா?"

"ஆமா... வக்கீலுக்குப் படிக்கிறானுல்ல...?"

"வக்கீலுக்கா?"

"என்ன பாவா தெரியாதா? - அவர் வக்கீலுக்குப் படிப்பாராம்; நம்ம கூட்டம் நிறைய விஷயத்துல மாட்டிக்கிட்டு இருக்குதாம். அவங்களுக்கெல்லாம் இலவசமாவே வாதாடுவாராம்..."

"ஓஹோ... அதான் என் விஷயத்துலயும் சாட்சி சொல்வேன்னு சொல்லியிருக்கானா?"

"நேர்ல போய்க் கேட்டுட்டா போச்சு."

"கேட்டுட்டா மட்டுமில்லடா... போட்டும் தள்ளினாதான் சரிப்பட்டு வரும்."

தாமு சிலிர்ப்பிக்கொண்டு கிளம்பும் விதம் சுற்றியிருப்பவர்களை மட்டுமல்ல; பானுவைக் கூடப் பதைக்க வைக்கிறது.

அவனை முந்திக் கொண்டு கவுண்டர் காட்டு வயல் வெளி நோக்கி ஓட ஆரம்பிக்கிறாள்!

2

சேலம் மிக வளர்ந்து விட்டது. மனிதக் கூட்டம், ஆறு, குளம், ஏரி என்று ஒன்றை விட்டு வைக்கவில்லை. எல்லா இடங்களிலும் வீடுகள்!

ஆனாலும் குமரகிரி செல்லும் பாதையில் பச்சைப்பட்டியைக் கடந்த வயல்வெளிகள் இன்னமும் மாறவில்லை.

வட்டக் கிணறுகளில் வழிய வழிய நீர் இருப்ப தாலோ, இல்லை, மலை அடிவாரப் பரப்பு என்பதாலோ, இயற்கை இன்னமும் கொஞ்சம் ஈரத்தோடு வாழ்ந்து கொண் டிருக்கிறது.

அந்தப் பசுமைக்கு நடுவில் மெத்மெத்தென்ற புல் வரப்பை மிதித்தபடி நடந்து கொண்டோ, இல்லை, அதன்மேல் வரப்பை மிதித்தபடி நடந்துகொண்டோ, இல்லை அதன்மேல் ஒருக்களித்துப் படுத்துக் கொண்டோ படிப்பதென்பது சுகமான அநுபவமாக இருக்கிறது.

'தடக் தக்... தடக் தக்...' சதா இரைச்சலிடும் நெசவுத் தறிகளின் ஓட்ட சப்தம் இங்கு இல்லை.

'உமாமகேஸ்வரா... உலகைக் காக்கும் பரம் பொருளே...' - என்று தெரு வீதி விளக்கு கம்பத்தில் இருந்து ஸ்பீக்கரில் திருவிளையாடல் வசனம் கேட்காது... (லட்சத்து எட்டாவது தடவையாக...)

குறிப்பாக நெஞ்சைக் குத்தும் அம்மாவின் இருமல் சப்தம் இங்கே காதில் விழுந்து அவன் பாச நினைப்பைக்

கிளறிப் பார்க்காது. நிம்மதியாகப் படிக்கலாம். இன்னமும் சில பரீட்சைகள்தான்.

அதன்பிறகு வக்கீல் பகவந்த ராவ் ஜூனியராகச் சேர்த்துக் கொள்வதாகக் கூறியிருக்கிறார். பெருமாள் கோயில் பட்டரோ தமது சொந்த வீட்டு வில்லங்க வழக்கைத் தான் முதலில் தீர்த்துத் தரவேண்டும் என்று துளசியும் தீர்த்தமும் தரும்போது மறவாமல் கூறி வருகிறார்.

நினைக்க நினைக்கச் சுகமாக இருக்கிறது மோகன் ராமுக்கு. படிப்புக்கு நடுவில் ஒரு புல் துண்டை எடுத்துக் கடித்தபடி சற்று ரிலாக்ஸ் ஆகிறான். திரும்பிப் பாக்கிறான். கிட்டத்தட்ட ஒரு கிலோ மீட்டர் தூரத்தில் நாம மலை தெரிகிறது. ஜனங்கள் ஏறி இறங்குவது தெரிகிறது. அப்படியே நடுவில் வரப்பின் மேல் காளியப்பனும் தெரிகின்றான்!

தலையில் பெரிய கூடை - கூடைமேல் கித்தான் சாக்கு போட்டு மூடிய நிலையில் அந்தச் சனியன்!

அவன் அங்கு வரும் முன்பே வாடை மோகன் ராம் மூச்சை நிரட வந்து விட்டது.

அடி வயிற்றை ஒரு குச்சியால் குத்திப் புரட்டிப் போடுவது போல் நாற்றம். வாடை பழகிப் போன மலைச் சாராயத்தைக் கூடையில் வைத்துக் கத்தரி, வெண்டையை விற்பது போலத் தூக்கிக் கொண்டு வருவது ஒன்றும் சேலம் நகருக்குப் புதிய விஷயமில்லை.

விடலைகள் சரக்கு வீதியில் சுமந்து செல்லப்படும் போது, "டேய் கரகம் போவுதுடா..." என்று கூக்குரலிட்ட படி கூடவே ஓடுவார்கள்.

காளியப்பன் கூட அவர்களை விரட்டாமல் பார்த்துச் சிரிப்பான்.

போலீஸ், கோர்ட், வழக்கு என்று பல விஷயங்களை ஜெயித்த சிரிப்பு அது.

இப்போதும் காளியப்பன் சிரிக்கிறான். மோகன்ராம் வசிக்கும் தெருவுக்குத் தான் சரக்கும் போய்க் கொண்டி ருக்கிறது.

ஜவஹர் பாபுவின் தகப்பன் பம்பாய் மணியம்தான் காளியப்பனின் பாஸ்.

சாராயம் விற்றே வீதிக்கு நாலு வீடு வாங்கியவன் இந்தப் பம்பாய் மணியம். அதில் மோகன் ராமின் பூர்விகச் சொத்தான வீடு ஒன்றும் அடக்கம். அவன் அப்பா குடித்தே அழித்த முதல் விஷயம் கூட...

இன்றைக்கெல்லாம் இருந்தால் இரண்டு லட்சம் போகும்.

வெறும் இருபதினாயிரம் கடனுக்கு மணியத்துக்கு விலையாகப் போய் விட்டது. நினைக்கவே நெருப்பாகச் சுடும் அந்தச் சங்கதி காளியப்பனைப் பார்க்கவும் மோகன்ராம் நெஞ்சில் மூண்டு எழுகிறது. காளியப்பன் கடந்து போன பின்பும் அணையாமல் எரிந்து கொண்டிருக்கிறது.

இந்த வேளையில்தான் சுசிலா அங்கே காலடி எடுத்து வைக்கிறாள். அதீதமான கொலுசு சப்தத்தோடு...

"டேய் மோகன், நீ இங்கையா இருக்கே?" - என்று கேட்டபடி ஓடி வேறு வருகிறாள். மோகனுக்கும் அவளை அங்கே பார்க்கவும் பகீர் என்றாகிறது. சங்கடத்துடன் முகத்தைத் திருப்பிக் கொள்கிறான்.

"அங்க உன் அம்மா நெஞ்சு வலில துடிச்சுகிட்டு இருக்காடா" என்று முகத்தைத் துடைத்தபடி பேசுகிறாள்.

அவனுக்குத் தூக்கிவாரிப் போடுகிறது. புத்தகத்தை மடக்கியபடி எழுந்து கொள்கிறான்.

"இதைச் சொல்ல நீ வரணுமா... யாரையாவது அனுப்பக் கூடாதா?" - எங்கோ பார்த்தபடி சிடுசிடுவெனப் பேசுபவனைப் படபடப்போடு பார்க்கிறாள் சுசீலா.

"கிளம்புடா அப்புறமா கதை பேசலாம்" என்கிறாள், நடந்தபடி அவனிடம் பேச்சு.

"கதை அல்ல இது. என் அவஸ்தை எனக்குத்தான் தெரியும். உன்னோட என்னை யாராவது பார்த்தா என்ன நினைப்பாங்க?"

"அடுத்தவங்க நினைப்ப பத்தி கவலைப் படற ஆளா நீ... சீக்கிரம் போடா வீட்டுக்கு..."

முறைத்துக் கொண்டே வேட்டியை ஏற்றிக் கட்டிக் கொள்கிறான். விறுவிறுவென்று நடக்க ஆரம்பிக்கிறான். சுசீலா, 'அப்பாடா' என்று பெருமூச்செறிகிறாள். கால் அங்குலம் பவுடர் தோய்ந்த முகத்தை, செயற்கை ரசம் பூசிய உதட்டை, ஷாம்பூவால் ஒட்டாத கூந்தலை, இறுக்கமான உடல் அமைப்பை, ஹீல்ஸ் செருப்பை என்று அவள் வசம் உள்ள விஷயங்களைப் பார்ப்பவர்களுக்கு அவள் எந்த வகைப் பெண் என்பது தெரிந்து விடும்.

அவள் பார்வை இப்போது நாம மலை செல்லும் திசை நோக்கித் திரும்புகிறது. மூச்சிறைக்க பானு ஓடி வந்து கொண்டிருப்பதும் தெரிகிறது.

சட்டென்று சுசீலாவைப் பார்த்துவிட்டு ஓட்டத்தை நடையாக்கிக் கொண்டு அவள் பம்மிப் பம்மி வருவதைப் பார்க்கவும் சுசீலாவிடம் சிரிப்பு.

"எங்கடி இந்தப் பக்கம்?" - பலமாகவே கேட்கிறாள்.

"சும்மா..."

"சும்மா மோகன்ராமைப் பார்க்கலாம்னு... அப்படித்தானே?"

பானு லேசாய் மௌனத் திணறல் கொள்ள, பின்னாலேயே ஆவேச கதியில் தாமு வந்து கொண்டிருந்தான்.

அவனைப் பார்க்கவும் சுசீலாவின் விழிகளில் விரிவு.

"இப்பத்தான் வெளிய வந்துருக்கான். அதுக்குள்ற இவனுக்கு உள்ற போகணும்னு ஆசை வந்துடுச்சு - அதான் கிளப்பிகிட்டு வந்துட்டான்."

விரிந்த விழியோடு சிடுசிடு முகத்தோடு சுசீலா பேசுவது பானுவுக்குப் புரிந்தும் புரியாமலும் போகும் போது அவன் நெருங்கி விட்டான். உடன் ஜால்ராப் படை!

"என்னா சுசீ... எப்படி இருக்குறே?" - விஸ்தாரமான விசாரிப்போடும் வந்த களைப்போடும் ஆசுவாசிக்கிறான்.

"ஆமா எப்ப வந்தே வெளில...?" - சுசீலாவிடமும் ஸ்நேக பாவம்.

"நேத்துதான். போகட்டும், அந்த மோகன் ராம் பயலப் பார்த்தியா?"

"இல்லியே... என்னா விஷயம் தாமு?"

"பயல கொஞ்சம் தட்டி வைக்கணும்."

"எதுக்கு?"

"அது உனக்குத் தேவையில்லாத விஷயம். அப்புறம்... கிராக்கி பிடிக்க மலைப் பக்கம் சுத்தாம இதென்ன இந்த வயக்காட்டு பக்கம்...?"

"அது உனக்கும் தேவையில்லாத விஷயம்." சுசீலாவின் பதில் தாமுவை நச்சென்று குட்டுப் பட்ட மாதிரி ஆக்குகிறது. முறைத்தபடி பார்ப்பவன் பானுவையும் அவள் உடன் பார்த்துவிட்டு, "ஆமா, இதென்ன இந்தப் பொண்ணும் உன்னை மாதிரி கிராக்கியாயிட்டாளா?" என்று கேட்க, பானு முகம் போன போக்கில் ஏக கலக்கம்.

"அளந்து பேசு தாமு... அது வாழ வேண்டிய பொண்ணு..." சுசீலாவிடம் சட்டென்று ஆவேச கதி தொற்றுகிறது.

"என்ன நான் தப்பா பேசிட்டேன்? இவ கிழவி மந்தாவோட பேத்திதானே?" - அவனும் விடுகிற மாதிரி இல்லை.

"யாரா இருந்தா உனக்கென்ன?"

"எனக்கென்னவா... திரும்பத் திரும்பச் சீறுனா எப்படி? நீ யாருன்னு உனக்கே தெரியும். உன் கூடக் குடும்பப் பொண்ணுங்க பழகமாட்டாங்கன்னும் தெரியும். கூட்டிக் கழிச்சு பாரு... நான் சொன்னதுல என்ன தப்பு? அதோட இது பிறப்புலயும் தெளிவு கிடையாது. அம்மா தான் நம்ம சாதிக்காரி. அப்பன் ஒரு முஸ்லீம். இப்ப ரெண்டு பேருமே உசுரோடையும் இல்ல. இந்த நிலையில இவ வயித்தைக் கழுவிக்கணும்னா வேற வழி?"

பானு அதற்கு மேல் அவன் பேச்சைக் கேட்கப் பிடிக்காமல் அங்கிருந்து ஓட ஆரம்பித்தாள். நெஞ்சில் இடி விழுந்த மாதிரி கலங்கியபடி அவள் ஓடுவதைப் பார்க்கும் சுசீலாவுக்குப் பரிதாபமாக இருக்கிறது.

"பாவி... உன் நாக்குல தீயை வைக்க. அந்தப் பொண்ணு மனசுல நெருப்ப அள்ளிக் கொட்டிட்டியேடா! அது செத்தாலும் சாகும். ஆனா என்னை மாதிரி மட்டும் ஆகாதுடா... ஆகவே ஆகாது..."

"ஆக்கிக் காட்டிட்டா?" - தாமு எந்த அடிப்படையில் இப்படிக் கேட்கிறான் என்று தெரியவில்லை. இனியும் பேசக்கூடாது என்று முடிவுக்கு வந்தவளாக விறுவிறுவென்று அங்கிருந்து அகல ஆரம்பித்தாள்.

சில அடி தூரம் சென்றவள் நின்று அவனை ஒருமுறை முறைத்துவிட்டுச் சொல்கிறாள்.

"மோகன்ராம் இங்கதான் இருந்தான். ஒரு பொய்ய சொல்லி நான்தான் அவனை வீட்டுக்கு அனுப்பி வெச்சேன். உன்னைத் தொட்டு அவன் கை அசிங்க மாயிடக் கூடாதுன்னுதான் இப்படிச் செஞ்சேன். இந்தச் சாமர்த்தியத்தைப் பானு விஷயத்துலயும் காட்ட எனக்குத் தெரியாம இல்லை. திருந்தி வாழற வழியைப் பாரு. முண்டா தட்டிட்டுத் திரும்ப ஜெயிலுக்குப் போயிடாதே..." சுசீலா பேச்சு அவனை அப்படியே கட்டிப் போடுகிறது, புழுங்க விடுகிறது.

மகாலட்சுமி இராட்டை சுற்றிக் கொண்டிருந்தாள். திருவட்டத்து வெள்ளி ஜரிகை இராட்டையின் தார்க்குச்சியில் காதோரம் பறக்கும் வண்டு போல் சப்தமிட்டபடி ஏறிக் கொண்டிருந்தது. 'ரொய்ங்ங்ங்... ரொய்ய்ங்ங்ங்...'

வேகமாக வீட்டினுள் நுழையும் மோகன்ராம் அந்தக் காட்சியைப் பார்த்து அதிசயிக்கிறான்.

"அம்மா என்ன இது? உனக்கு நெஞ்சு வலியின்னாங்களே?" - கேள்வியோடு அவள் அருகே சென்று குறையாத பதற்றத்தோடு அமருகிறான்.

"எனக்கு நெஞ்சு வலியா - யாருடா சொன்னது?"

"சுசீலா."

"அவளா?" - மிக மிகச் சாவதானமாகக் கேட்டு விட்டுத் திரும்ப இராட்டையைச் சுழற்ற ஆரம்பிக்கிறாள் மகாலட்சுமி.

"என்னம்மா அவளாங்கறே?"

"ஆமாடா... அவ சொன்னா ஏதாவது சரியான காரணம் இருக்கும். நீ போய் வேலையைப் பார்."

"சரியான காரணமா? என்னம்மா சொல்றே?"

"ஆமா நீ மலைக்குப் போகலையா - ஊரே போயிருக்கேடா?"

"நீ பேச்ச மாத்தாதே! அந்தச் சுசீலா எதுக்கு இப்படிச் சொன்னா?"

"என்கிட்ட கேட்டா... போய் அவகிட்டையே கேளு..."

மோகன்ராம் அம்மாவை வெறிக்கிறான். ஏதோ ஒரு வகையில் ஏமாற்றப்பட்ட மாதிரி ஓர் இனம் தெரியாத வேதனை.

"தோ பார்... அவ எப்படிப்பட்ட பொண்ணுன்னு நான் சொல்லத் தேவையில்லை. அவளைப் பார்க்கறதே பாவம்னு நினைக்கறவன் நான். இதுல அவ நம்ம குடும்ப விஷயத்துல இந்த மாதிரி தலையிட்டு ஏதாவது விளையாட்டு பண்ணிக்கிட்டுத் திரிஞ்சா நான் சும்மா விட மாட்டேன். ஆமா..."

நிஜமான கோபத்தோடு புத்தகத்தைத் தறிமேடையில் பதவிசாக வைத்துவிட்டு வீதியில் இறங்க ஆரம்பிக்கிறான் மோகன்ராம்.

குண்டும் குழியுமான வீதி.

எப்போதோ போட்ட தார்ச்சாலை முற்றிலும் தொலைந்த நிலை. பார்த்துத்தான் நடக்க வேண்டும். வீதிக்காரர்களுக்கு அது அநிச்சையாகவே கைவரும். ஆனாலும் அவர்களுக்கும் சவாலான விஷயம் தெரு நாய்கள்! அதிலும் ஒரு வாலில்லாத செம்பழுப்பு நாட்டு நாய் ஒன்று ஏகப்பட்ட பேரைப் பிடுங்கிக் குதறியிருக்கிறது. அதற்கு யாரும் அந்த வீதி வழியே சப்தம் போட்டபடி போகக் கூடாது. ஒரு ஸ்கூட்டர்காரர் தெரியாத்தனமாக வீதிப் பக்கம் வந்து அதனிடம் கடிபட்டு ஓடின கதைதான் தற்போது வீதியின் பிரதான சிரிப்பம்சமான பேச்சு.

அதிலும் இராத்திரியில் ராட்சஸனின் வாக்கிங் ஸ்டிக் போல் தலை வளைந்து நிற்கும் எரியாத விளக்குக் கம்பத்துக்குக் கீழே பார்த்து நடக்க வேண்டும். ஏனென்றால் கம்பத்தின் ஓரமாகக் குழிபறித்துக் கதகதப்பாகப் படுத்திருக்கும் தெரு நாய்களின் பட்டா பூமி அது.

நாய்கள் மட்டுமா? சாக்கடைப் பன்றிகளையும் கோழிகளையும் மறந்தால் எப்படி?

இத்தனையோடு நகரின் ஐம்பது தியேட்டர் போஸ்டர்களுக்கும் இடம் கொடுத்திருக்கும் வீட்டு முகப்புச் சுவர்கள்.

சலிப்போடு சகலத்தையும் பார்த்தபடி நடக்கிறான். வீதியே வெறிச்சிட்டுக் கிடக்கிறது. ஒரு பாதி பேர் நாம மலைக்கும் மறுபாதி பேர் சினிமா தியேட்டருக்குமாகப் போய் அடங்கி விட்டிருக்கிறார்கள்.

தொண்டுக் கிழங்கள் மட்டுமே வீடுகளில் காவலாக...

ஊரில் டீ குடிக்கக் கூட ஒரு கடை இருக்காது.

இந்நிலையில் எங்கே கிளம்பி விட்டோம்? கோபத்தோடு நோக்கமில்லாமல் கிளம்பி விட்டது அவனுக்குள் உறைக்கும்போதுதான் அந்தக் காட்சி அவன் கண்ணில் படுகிறது. பகீர் உணர்வு கவ்வித் திருக - ஐய்யய்யோ!

3

அதிக நீள அகலமில்லாத குச்சு வீடு அது. சிவப்பான அரை வட்ட நாட்டு ஓடுகளெல்லாம் கறுத்துப் பலமிழந்து விட்ட நிலையில், உத்திரம் கூட உளுத்துக் கிடக்கிறது.

இருந்தாலும் கயிற்றைக் கட்டித் தூக்கு மாட்டிக் கொள்ள ஆயத்தப்பட்டிருக்கும் பானுவைத் தாங்கிக் கொள்ளும் போலத் தெரிகிறது.

கதவைச் சாத்திக் கொண்டு தூக்கு மாட்டிக் கொண்டவள் என்ன காரணத்தாலோ ஜன்னலை மூடத் தவறி விட்டாள். அதிலும் ஆளுயர அந்தக் கால ஜன்னல் அது. அதனால் மோகன்ராமால் வீதியில் இருந்தே பார்க்கவும் முடிந்தது. பதறிப் போய்க் கதவை உதைத்துத் திறந்து, கிட்டத்தட்ட கழுத்து எலும்புகள் ஒடியும் நிலைக்குப் போனவளை ஓடிப் போய்த் தாங்கிப் பிடிக்கவும் செய்தான்.

சப்தம் கேட்டு ஓடி வந்து நிற்பவர்கள் எல்லாம் கிழங் கட்டைகள். எதற்கோ வெளியே போயிருந்த மந்தாகிழவி கூட அடித்துப் பிடித்தபடி ஓடி வருகிறாள்.

"பாவி மகளே... பாவி மகளே என் தலையில் நெருப்ப அள்ளி கொட்டத் தெரிஞ்சியே..." என்ற பிலாக் கணத்தோடு... நரம்பு புடைத்த அந்தக் கிழவியின் கரங்களில் அப்படி ஒரு நடுக்கம். அது மோகன்ராமின் கரத்தைத் தேடிப் பிடித்துக் கொண்டு நடுக்கம் நீக்கிப் பார்க்கிறது.

"மோகா... தெய்வம் மாதிரி வந்தேப்பா, தெய்வம் மாதிரி வந்தே... இவளுக்கு நா ஒரு குறை கூட

வைக்கலைப்பா - இவ இப்படி செஞ்சுக்கலாமா? நீயே கேளு..."

மந்தாவின் தூண்டுதல் மோகன்ராமை அவள் பக்கம் திருப்புகிறது. அவளோ முழங்கால் மடித்து அதனுள் முகம் புதைத்துக் கொண்டு அழுது கொண்டிருக்கிறாள்.

"ஏன் பானு இப்படி நடந்துக்கிட்டே...?" - அவன் மெலிதான குரலில் கேட்கிறான். அவளிடம் விசும்பலின் தொடர்ச்சி.

"கேக்கறேன்ல..."

ஊஹூம்... அவளிடம் பதிலில்லை. அவள் முகம் கூட இப்பொழுது மாறி விட்டிருக்கிறது. அவளிடம் மன்றாடி விஷயங்களைத் தெரிந்து கொள்ளும் விருப்பம் இல்லாத மாதிரி தெரிகிறது. "பாட்டி ஜாக்கிரதையா பார்த்துக்கோ... நான் அப்புறமா வரேன்" என்று ஈன சுரத்தில் சொல்லி விட்டுத் திரும்பவும் வீதியில் இறங்குகிறான்.

திரும்ப வீடு நோக்கி நடக்கிறான். அவன் மனக்கண்ணில் அக்காள் பத்மாவதி தூக்கில் தொங்கிய அந்தக் காட்சியின் விரிவு இப்போது. எதை நினைக்கவே பிடிக்காதோ அதைப் பானு தூண்டி விட்டுவிட்டாள்.

வீட்டுக்குள் நுழைபவனை மகாலட்சுமி ஆச்சரிய மாய்ப் பார்க்கிறாள்.

"என்னடா கோபமா வெளியே போனே அதுக்குள்ளே வந்துட்டே...?" - கேள்வியோடு கெண்டை சுற்றிக் கொண்டிருக்கிறது அவள் கை.

அவனிடம் பதிலில்லை.

மூங்கில் பரணில் இருந்து ஒரு பாயை உருவி எடுக்கிறான்.

சாணி மெழுகிய தரைப் பரப்பில் விரிக்கிறான். அப்படியே சட்டைக்கூடக் கழற்றாமல் சயனிக்கத் தொடங்குகிறான்.

கால் கழுவாமல், சட்டையைக் கழற்றாமல் பாயில் ஒருபோதும் படுத்திராத மோகன்ராமா இப்படி?

மல்லாக்கப் படுத்திருப்பவனின் பார்வை வீட்டுக் கூரையின் நடுவாந்தர உத்திரத்தின் மேலேயே இருக்கிறது. கருமருது மரக்கட்டை அது. பத்மாவதியைக் கிட்டத்தட்ட நான்கு மணி நேரம் புடைவைக் கயிற்றால் சுமந்து கொண்டிருந்த கட்டை அது...

அதுவும் விடிந்தால் திருமணம் என்கிற நிலையில்! மோகன்ராமின் நினைவலைகளைக் கொழுகொம்பில் பிடித்துக் கட்ட முடியவில்லை. அது அக்கா அக்கா என்று அறுத்துக் கொண்டு ஓட ஆரம்பித்து விட்டது. அதிலும் பின்னோக்கி...

பத்மாவதி நல்ல சிவப்பு!

மைதாவை உருட்டிப் பிசைந்து துளி குங்குமப் பூவைத் தூவிக் கலந்தால் வருமே ஒருவகை நிறம்? அது போலவும் என்று சொல்லலாம்.

மரவள்ளிக்கிழங்கும், சேப்பங்களியும்தான் பிரதான உணவென்றாலும் யோகாசனம் போன்ற நெசவுப் பணியால் நல்ல திடகாத்திர சித்தம், அவளது ஏழைமையை மீறி அந்தக் கும்பகோணத்து மாப்பிள்ளையை மிகவும் கவர்ந்து விட்டது.

மாப்பிள்ளை நல்ல காசுக்கார ஆசாமி. பட்டு சொஸைட்டிக் கெல்லாம் தலைவர் என்று கூடக் கேள்வி. ஆனாலும் நாற்பது வயதாகி விட்டது. முதல் தாரம் போய் விட்டால் இது இரண்டாவதற்கான முயற்சி என்பதை யெல்லாம் பத்மாவதி பொருட்படுத்தவேயில்லை.

'கல்யாணம் என்ற ஒன்று தன் வரையில் நடப்பதே பெரும்பாடு' என்பது அவள் தீர்மானம்.

சரி என்று சொல்லிவிட்டாள்.

சுருக்கிச் சுருக்கிச் செலவழித்தாலும் நாற்பதாயிரம் தேவைப்பட்டது.

ஒரு தறி முதலாளியிடம் ஐந்து வருடத்துக்கு மாதம் ஒரு தறி அறுக்கும் கட்டாயத்துடன் மோகன்ராம் கூட ஒப்பந்தமெல்லாம் செய்து கொண்டு விட்டான்.

தன் முகூர்த்தப் பட்டைக் கூடப் பத்மாவதி தானே நெய்து கொள்வது என்று தீர்மானித்து விட்டாள். கடையில் வாங்குவதற்குப் பாதிக்குப் பாதி மிச்சமாகும் என்பது மட்டுமல்ல... பார்த்துப் பார்த்து நெய்து கொள்ளலாம்.

நன்கு அழுத்தம் கொடுத்தும் நெய்யலாம்.

புட்டா, பேட் எல்லாம் விருப்பம் போல்... மயில்தோகை பார்டரிலிருந்து, கஜலஷ்மி சொரூபம் வரை, எதை வேண்டுமானாலும் பிடித்துப் போட்டுக் கொள்ளலாம்.

ஆசை ஆசையாக அங்குலம் அங்குலமாக வளர்ந்த அந்தத் தறிக்கு மகாலட்சுமியும், மோகன்ராமும் கூட நல்ல ஒத்தாசை செய்தனர்.

துளி அழுக்குப் பட்டு விடாமல் இன்டென்சிவ்கேரில் உள்ள ஒரு ஜீவனைப் பார்த்துக் கொள்கிற மாதிரி பார்த்துக் கொண்டார்கள்.

மகாலட்சுமி கெண்டை சுற்றிப் போடுவாள். மோகன்ராம் பிசிறு எடுத்து விடுவான். நெய்யாத வேளைகளில் மறக்காமல் பாலிதீன் தாளால் மூடி வைப்பான்.

ஆசை ஆசையாக நெய்த அந்தப் புடைவையைக் கூட உடுத்திக் கொண்டு மணவறையில் உட்காரும் வேளை வந்து விட்டது.

முதல் நாள் மாப்பிள்ளை அழைப்பில் விரதம் நலுங்கு, கை பார்த்தல் என்று ஏக கலாட்டாக்கள்.

'ஓய் மாப்பிள்ளை...

நீர் இதுநாள் வரை சரியில்லை.

இனிதான் எங்கள் பெண்ணால் கடைத்தேறப் போகிறீர்.

எங்கள் பெண் யாராம்?

சாட்சாத் அந்த மகாலட்சுமி ஸ்வாமி.

இவளைப் பெண் கேட்டு ஒரு பட்டாளமே வந்தது.

ஆயினும் இந்தத் தேவதைக்கு உங்களைத் தான் பிடித்திருக்கிறது.

பார்த்து ஸ்வாமி...

இனி இவள்தான் உங்கள் சொர்க்க பூமி.

இவள் தான் உங்கள் மோட்சப் பாதை.

இவள்தான் எல்லாம்.

இனி பாரும் உங்கள் வாழ்க்கையை, பிடியுங்கள் இவளது பூக்கரத்தை...'

கை பார்த்தல் எனும் சடங்கில் இப்படிப் பெண் சார்பில் கித்தாப்பான பேச்செல்லாம் உண்டு. பெண்ணும் கூட அதையெல்லாம் கேட்டு, நாணிக்கோணி நெளிந்தபடி அந்தக் கரத்தைப் பிடித்துக்கொள்ள வேண்டும்.

பத்மாவதியும் பிடிக்கிறாள்!

அந்நிய ஆண் மகன் ஒருவனின் முதல் ஸ்பரிசம்.

கிட்டவே கிட்டாது என்று எண்ணிய ராஜ உணர்ச்சி.

மேடை என்றும் பாராமல் மாப்பிள்ளை பத்மாவதியின் காதோரமாகக் கேட்கிறான்.

"என்ன பிடிச்சுருக்குதானே?"

"ரொம்ப..."

"நிஜமா?"

"சத்யமா..."

"நான் ரொம்பக் கொடுத்து வெச்சவன்."

"நானும் தான்."

-இருவரின் குசமுசுப்பு கூட்டத்தைக் குதூகலப் படுத்துகிறது.

"பாருடா... அதுக்குள்ள ஒட்டிக்கிறதை..."

"தாயே, நாளைக்கு ராத்திரி கட்டாயமா பால் சொம்போட உள்ள விடுவோம்மா..."

"ச்ச்சீ... போங்க பாவா..."

-பத்மாவதி அப்படிச் சிவந்து மோகன் ராம் பார்த்ததில்லை. அவளிடம் அப்படி ஒரு சந்தோஷத்தையும் பார்த்ததில்லை.

நாலு மணிக்கு விழிப்பு. வாசல் தெளிப்பு, கோலம், சமையல், கெண்டை சுற்றுதல், துணி துவைத்தல், தறிமேடையில் நெசவு நெய்தல், பின்பு பத்துப் பாத்திரம் தேய்த்தல், வீடு கூட்டல் என்றே வாழ்ந்து பழகிவிட்ட செக்கு மாட்டிடம் இப்போது குதூகலம் - கொண்டாட்டம்.

தனக்கொரு தனிவாழ்க்கை என்பதாலா?

இல்லை, ஒவ்வொரு பெண்ணுக்கும் புருஷ சேர்க்கைதான் வாழ்வின் உண்மையான ஆரம்பமா?

எது? எது?

கண்ணில் நீர் திரையிட கேள்வியோடு பார்த்துக் கொண்டிருக்கிறான் மோகன்ராம்.

'அக்கா நீ இனி இங்க இருக்க மாட்டே. போயிடுவே...'

- நினைத்துப் பார்க்கக் கூட முடியாமல் தொண்டை கமற விம்முகிறது அவன் மனசு.

மழையில் நனைகையில் தாவணி முந்தானையைக் குடையாகப் போர்த்தும் அந்த அன்பை...

பாடம் படிக்கையில் சுக்குக் காப்பி போட்டுத் தந்து, தலை நீவி விட்டு, 'நானிருக்கேன்' என்று ஆதரவாக அணைத்துக்கொள்ளும் அந்தப் பாதுகாப்பை...

கோயிலுக்குப் போகும்போதெல்லாம் எனக்கும் சேர்த்து வேண்டும் அந்தப் பாசத்தை...

சீட்டுப் போட்டுச் சேமித்த காசில் பேண்ட் சட்டை வாங்கித் தந்து போட்டுப் பார்த்து ரசித்த அந்த நெகிழ்ச்சியை...

மோகன்ராம் மனத்தில் அக்காவின் எண்ணங்கள் கொடி பிடிக்காத குறையாக ஊர்வலம் போக, வெளியில் பத்மாவதியும் மாப்பிள்ளையும் கூட ஜானவாசக் காரில்...

"ஜானவாச செலவு என்னது..." என்று ஏற்றுக் கொண்ட மோகன்ராமின் நெசவுத் தறியின் முதலாளி, காருக்கு முன்னால் நாதஸ்வரத்தை ரசித்தபடி அதோ...

ஊரே பார்க்கிறது, வியக்கிறது, பத்மாவதி அதிர்ஷ்டக்காரி என்கிறது.

'நல்ல பொண்ணுல்லியா, அதான் மனம்போல மாங்கல்யம்' என்று அவள் காதுபடவே பேசுகிறது.

ஊரே கண்பட்ட மாதிரி ஒரு ஊர்வலம்.

ஒரு வழியாக முடிகிறது.

மாப்பிள்ளை தன் அறையில் மாலையைக் கழற்றிவிட்டு ஃபேன் காற்றில் மார்பைக் காட்டி வியர்வைக் கசகசப்புக்கு ஒரு வழி பார்க்கும்போது நெருங்குகிறது ஒரு கூட்டம்.

"என்ன மாப்பிள்ளை, ஒரு குறையுமில்லாம போய்க்கிட்டிருக்கற கல்யாணத்துல அந்தக் குறை இருக்கலாமா?" - ஒருவன் பீடிகையுடன் ஆரம்பிக்கிறான்.

"என்ன சீட்டாட்டமா?"

"அட அது இல்லீங்க... இது அதுக்கும் மேல..." - சொல்லி விட்டு ஒருவன் முழங்கையை உயர்த்திக் காட்டி பாட்டில் ஞாபகத்தை மூட்டுகிறான்.

"அட ஆமாம்... நான் அப்பவே அதுக்கு ரூவா கொடுத்துட்டேனே. சரக்கு வரலியா இன்னும்..."

"எங்க... மணி இப்ப பன்னெண்டு - எந்தக் கடை இப்ப திறந்திருக்கும்?"

"ஏன் உங்களுக்குச் சீமை சரக்கு குடிச்சாத்தானா? நம்ம மலைச்சரக்கை விடவா அது கிக்கு?"

"அதானே... என்ன மாப்ளை, அதை வாங்கிட்டு வந்துடவா... ஆட்சேபணையில்லையே...?"

"ஏதோ ஒண்ணு..."

"உங்க கும்பகோணத்துல எப்படி?"

"இந்தியாவுல எல்லாக் கோணத்துலையும் கிடைக்கற ஒரே சரக்குங்க அது. இங்க மலைன்னா அங்க ஆத்தங்கரை, அவ்வளவு தான் வித்தியாசம்."

உடனே எல்லோரும் கலகலவென சிரிக்க, ஒருவன் உற்சாகமாக ஓடுகிறான். சற்றைக்கெல்லாம் ஓர் ஐந்து லிட்டர் கேனில் துண்டு போட்டு மூடி எடுத்துக்கொண்டு திரும்புகிறான்.

மாமிசக் கறி முன் சிறகு விரிக்கும் கழுகுக் கூட்டம் போல எல்லோரும் வட்டம் கட்டிக் கேனைக் காலி செய்யத் தொடங்குகின்றனர்.

கேலியும் கிண்டலுமாக ஆரம்பித்த முதல் ரவுண்டில் ஒரு ஐந்து நிமிட அளவிற்குப் பிறகுதான் ஆரம்பித்தது அந்த விபரீதம்!

மாப்பிள்ளை அடிவயிற்றைப் பிடித்துக் கொண்டு சுருண்டு விழ, அதன்பின் ஒவ்வொருவராக அதே போல் விழ...

தூக்கக் கலக்கமாயிருந்த கல்யாணப் பந்தலே கதிகலங்கி விழித்துக் கொண்டது. அம்பு போல் சீறி வந்து நின்ற ஒவ்வொரு ஆட்டோவிலும் ஒவ்வொரு உடல்.

பெரிய ஆஸ்பத்திரிக்கே இந்த வருகையால் ஜுரம் காண ஆரம்பித்து விட்டது.

ஒருவரல்ல...

இருவரல்ல...

வரிசையாய் ஒன்பது பேர்...

டாக்டர்கள் முடிந்த மட்டும் போராடியும் எமன் விடுவதாக இல்லை.

குறிப்பாக மாப்பிள்ளையின் உயிரை அவர் பத்மாவதியின் கழுத்தில் எந்த முகூர்த்தத்தில் தாலி கட்ட வேண்டுமோ, அந்த முகூர்த்தத்திலேயே வந்து தனது பாசக் கயிற்றால் கட்டி அழைத்துக் கொண்டு போனான்.

'பாழாப் போன சாராயம்...

நாசமாப் போன சாராயம்...

எந்தப் பாவி கண்டுபிடிச்சான் இந்த விஷத்தை?'

- ஆஸ்பத்திரிக்கு வெளியே குமுறும் எரிமலையாக ஒரு சுவர் ஓரமாக அப்படியே முடங்கிக் கிடந்த மோகன்ராமை ஒருவர் தோளைத் தொட்டுத் திருப்புகிறார்.

"சீக்கிரமா வீட்டுக்குப் போ..."

"இங்க உடம்பை வாங்கணுமே..."

"நாங்க பாத்துக்கறோம். அங்க போய் ஒரு உடம்பை வாங்கப் பாரு..."

"என்ன சொல்றீங்க?"

"போய்ப் பாருப்பா... தெரியும்!"

ஓடினான் மோகன்ராம் வீடு நோக்கி...

பத்மாவதி தூக்கில் தொங்கிக் கொண்டிருந்தாள்...

கயிறாக அந்த நாகவல்லி பட்டுப் புடைவை!

புதிய புடைவை. கயிற்றை இறுக்கி அறுத்து ரத்தம் ஓடவிட்டு... அந்த ரத்தம் கூட உறைந்து, காய்ந்து போய்...!

தொங்கும் சடலத்துக்குக் கீழே கால்மாட்டில் ஒரு கடிதம்.

'தம்பி...

ஊரறிய ஒருவரோடு உட்கார்ந்து வலம் வந்து விட்டு, இனி அவரில்லை என்ற நிலையில் நானும் வாழ விரும்பவில்லை. நம் அப்பாவை எந்தச் சாராயம் கூட்டிச் சென்றதோ அதே சாராயம் இப்போது என்னையும் கூட்டிச் சென்று விட்டது.

நீயும் என் வழி வந்து விடாதே!

அந்தச் சனியனை விரட்டி அடி. நமது இனத்தின் பலவீனத்துக்கு நீயும் பலியாகி விடாதே. அந்த அரக்கனை விரட்டி அடி.

அப்போதுதான் மோகன் என் ஆத்மா அடங்கும். அக்கா உன்னுடன் ஆவி சொரூபமாய் எப்போதும் இருப்பேன்.'

அன்று பத்மாவதி எழுதிய கடிதம் இப்போதும் மோகன்ராம் மார்பின் மேல்! பார்வையோ அவள் தொங்கிய அந்த உத்தரத்தின் மேலேயே...

பானு அவன் மனநிலையையே தலைகீழாக மாற்றி விட்டாள். அது தெரியாமல் மகாலட்சுமி கேட்கிறாள்.

"அக்கா ஞாபகம் வந்துடிச்சா மோகன்..."

- அவனிடம் பதிலில்லை.

"இப்படி இருந்தா எப்படிடா... ஏன் ஒருமாதிரி இருக்கே?"

- ஊஹூம், இதற்கும் பதிலில்லை.

"என்னப்பா நடந்துச்சு. ஏன் ஒருமாதிரி இருக்கே...?"

அடப்பமாக மௌனம் சாதிப்பவன் மூக்கில் இப்போது சாராய வாசம். பாம்பை அடித்துப் புரட்டிப் போடுவது போல் குடலைப் புரட்டும் அதே வாசம்... அன்று குடும்பத்தையே குப்புறத் தள்ளிக் குழியில் மூடிய வாசம். சிருட்டென்று எழுந்து வாசல்புறம் பார்க்கிறான். காளியப்பன் இரண்டாவது ரவுண்ட் சரக்குடன் போய்க் கொண்டிருந்தான்.

மோகன்ராமின் பார்வையில் நெருப்பெரிய ஆரம்பித்தது. பந்து போல் எம்பி எழுந்து உடனேயே வெளியே ஓட ஆரம்பித்தான்.

"டேய்ய்ய்ய்...!"

4

"அடேய்ய்ய்..."

மோகன்ராமின் அடிவயிற்றில் இருந்து பீறிட்டுக் கிளம்பிய அந்தச் சப்தம் கேட்டுக் காளியப்பன் திடுக்கிட்டுப் போகிறான்.

தலைக்கு மேலே சாராயக் கூடையின் பாரம் அழுத்த, ஒரு தினுசாகப் பார்க்கிறான்.

இதற்குள் மோகன்ராமின் நெருங்கி விட்ட சரீரம் காளியப்பனின் பனியன் மார்பை ஆவேச கதியோடு பற்றுகின்றது.

"ஏய் என்ன பண்றே... எதுக்கு பிடிக்..." - முழுதாகப் பேசுமுன் அந்தச் சாராயக் கூடை அவன் தலையிலிருந்து தப்பிக் கீழே விழுகிறது. சாக்கிலிருந்து விலகி, அந்த தகர டின் தன்னுள் அடங்கிய சாராயத்தை வீதியில் பாய்ச்சுகிறது!

குமட்டல் நெடி வீதியையே வெளியே இழுத்து வருகிறது.

காளியப்பனிடமும் இப்போது கொதிக்கும் ஆவேசம்.

"என்னா தில் இருந்தா நீ இந்தக் காளியப்பன் மேலேயே கை வைப்பே? நாயே - உன்னால சரக்கெல்லாம் கூட வீதியில..." - காளியப்பன் பதிலுக்கு மோகன்ராமைப் பிடித்து, கடலைச் செடி போல் உலுக்க ஆரம்பிக்கிறான்.

'ஐயய்யோ...' என்கிற அலறலுடன் இடை யிடுகிறாள் மகாலட்சுமி.

"டேய் மோகன் விட்றா. என்னடா இது? விடுங்கடா... விட்டுடுங்கடா..." - அவளின் புலம்பலுக்கு நடுவில் இருவருமே வீதியில் அந்தச் சாராய ஓட்டத்தின் மேலேயே விழுந்து புரளுகின்றனர்.

வீதியில் கூடப் பெரும்பாலோர் மலைப்பக்கம் போய் விட்ட நிலையில் கழுடு கட்டைகளாகவே எட்டிப் பார்த்துக் கை பிசைந்து நிற்கின்றனர். அந்த யுத்தத்துக்கு இடையீடே இல்லாத நிலை. ஆயினும் மோகன்ராமின் கைதான் ஓங்கும் போல இருந்தது.

அவனது ஆவேசம் காளியப்பனைப் புரட்டி எடுப்பதிலும் அவன் திணறுவதிலும் நன்கு தெரிந்தது. தாக்குப் பிடிக்க முடியாத நிலையில் ஒரு கட்டத்தில் காளியப்பன் அந்தக் குண்டும் குழியுமான சாலை ஓரமாகக் கிடந்த ஒரு பெரிய கல்லைச் சட்டென்று கையில் எடுத்துக் கொண்டான். மோகன்ராமின் தலையைக் குறிவைத்துத் தாக்கப் போக, அது தப்பாமல் அவன் பின் மண்டையைப் பெயர்த்து அவனை மயங்கி விழவைத்துவிட்டது!

கசகசவென்று ரத்தக் கசிவு. தோள்பட்டை கழுத்து என்று ஓடி, ஒரு கொலை செய்து விட்டதைப் போன்ற பயத்தைக் காளியப்பனிடமும் ஏற்படுத்துகிறது.

"ஐயய்யோ... அடேய் மோகன்... மோகன் கண்ணைத் திறந்து பாருடா... டேய்" - மகாலட்சுமி வேறு அழுது அரற்றத் தொடங்குகிறாள். இனியும் அங்கிருப்பது ஆபத்து என்கிற மாதிரி கூடையையும், முக்கால் பாகத்தை வீதியில் கொட்டிவிட்ட அந்தத் தகர சாராய டின்னையும் அள்ளி எடுத்தபடி அப்படியே நழுவ ஆரம்பித்தான் காளியப்பன்.

எள் முனை எதிர்ப்பில்லாத தெரு.

அவன் வேகமாக ஓடுவதை வேடிக்கை பார்த்து நிற்கிறது.

அதன் பிறகுதான் மோகன்ராமின் மயக்க நிலையையே கவனிக்கிறது.

மகாலட்சுமி, குமட்டும் சாராய வாடைக்கு நடுவில் மகனை மடியில் போட்டுக்கொண்டு என்ன செய்வதென்று தெரியாமல் விழிக்கும்போது, செய்தியறிந்து புழுதி பறக்க ஓடி வந்து கொண்டிருந்தாள் பானு. பின்னாலேயே பதைப்போடு மந்தாகிழவி.

நெருங்கி விட்ட பானு ரத்த உருண்டையாகக் கிடக்கும் மோகன்ராமின் தலையைப் பார்த்து, விழி விரிக்கிறாள். அதில் அதிகபட்ச அதிர்ச்சியும் பயமும்.

"மாமி என்னாச்சு... எப்படி இப்படி?"

"நான் என்னத்தச் சொல்வேன் - நீ போய் ஒரு குதிரை வண்டி கூட்டிக்கிட்டு வாடி. டர்க்டர்கிட்ட போவோம்..."

அதற்கு மேல் அங்கு நிற்காமல் ஓடுகிறாள் பானு. இன்டர்நெட் யுகத்திலும் இன்னமும் சில மட்டக் குதிரை வண்டிகள். இருமலோடும் உருமாவோடும் சாயபு வண்டி ஓட்டிகள். மந்தா கிழவி முதல் வீதிக் கிழடுகள் வரை எல்லாரும் வேடிக்கை பார்க்க, அதில் ஒரு வண்டி மோகன்ராமைச் சுமந்தபடி ஓடத் தொடங்குகிறது. அடுத்த தெருக் கடைசியில் இருக்கிறது கம்பவுண்டர் பழனியின் வீடு. முன்னாலே ஒரு பத்துக்குப் பத்து சதுர அறையில் ஒரே ஒரு மர பெஞ்சு. அதில்தான் ஆபரேஷன் கேஸ் முதல் காலில் முள் தைத்த கேஸ் வரை படுத்து எழுந்தாக வேண்டும்.

பழனியிடம் வியாதிக்கெல்லாம் தோராயக் கணக்கு தான். யார் வந்தாலும் எதற்கு வந்தாலும் கட்டாயம் ஊசி போட்டு விடுவான். பெரிய ஆஸ்பத்திரி போலக் கட்டி கட்டியாக மாத்திரை தந்து கலர்த் தண்ணீர் தந்து அனுப்பும் வேலையெல்லாம் கிடையாது.

"எலே பழனி நீயாச்சும் ஊசி போடுடா..." என்கிற ஏழை விருப்பம் நிறைவேற்றுபவன். பத்து ரூபாய்க்கு எய்ட்ஸுக்கே வைத்தியம் பார்க்கும் ஏழை பங்காளன்!

மோகன்ராமுக்கு வைத்தியம் பார்க்கிறான். பின் தலையில் ஒரு கறப்பு படுத்திருப்பது போல் சிவப்பாய்ப் பிளவு. ரத்தம் சுதந்திர வேட்கையோடு தாவிக் குதித்து வந்து கொண்டேயிருக்கிறது.

"தையல் போட்டாகணுமே... இல்லாட்டி ஒண்ணும் பண்ண முடியாது. டாக்டர்கிட்டதான் போயாகணும்" என்று கட்டுப் போட்டு அனுப்புகிறான். "அப்ப நீ?" மகாலட்சுமியின் அப்பாவிக் கேள்வி முன் வழிசலாகச் சிரிக்கிறான்.

"டாக்டர் கிட்டைன்னா? நூறு ரூபாயாச்சும் வேணுமே..." கையை உதறுகிறாள் பானு. சட்டென்று, "மாமி எங்கிட்ட இருக்கு. திருவட்டம் சுத்தி சேத்த காசு" - என்றபடி ஓடிப் போய் எடுத்தும் வருகிறாள்.

மகாலட்சுமி நன்றியோடு அவள் கையைப் பிடித்துக் கொண்டாள்.

"மாமி கிளம்புங்க, இப்படித் தேங்கி நின்னா எப்படி?" - அவள் திரும்பவும் மட்டைக் குதிரை வண்டியில் அவனைத் தூக்கிப் போட்டுக் கொள்ள, அந்தக் குதிரை 'லொக்கடி லொக்கடி' என்று ஓட ஆரம்பித்தது.

மகாலட்சுமியைத் துக்கம் கவ்விக் கசக்கிக் கொண்டு இருந்தது. நடுவில் -

"யார் எப்படிப் போனா நமக்கென்ன? வீண் கோபத்தால, பாரு எவ்வளவு சிரமம்?" என்று விசும்புகிறாள்.

எதுவும் பானு காதில் விழுந்த மாதிரி தெரியவில்லை.

மோகன்ராமைத் தன் மடியில் கிடத்தியிருக்கும் அந்த நிலையில், வண்டி ஓட்டத்தில் அவன் தலை அவள் அடிவயிற்றில் மோதுகிறது. இன்பமாக இருக்கிறது.

அர்த்த ராத்திரி!

அங்கும் இங்குமாகச் சில கோலி பல்ப் வெளிச்சம் கசியும் வாசல்களுடன் தெரு. விளக்குக் கம்பங்களில் ஒன்றில் கூட உயிரில்லை. இருக்கவும் ஜவஹர் பாபு விட மாட்டான்.

இரவு நேரத்தில்தான் எங்கிருந்தெல்லாமோ குடிக்க வருவார்கள். பிறர் கண்களில் படாமல் வந்து குடித்து விட்டுப் போக நினைக்கும் எவ்வளவோ பெரிய மனிதர்கள் எல்லாம் பாபுவின் வாடிக்கை. அவர்களுக்காகத்தான் அந்த ஏற்பாடும் கூட. சமயங்களில் அந்த இருட்டில் தெரு நாயை மிதித்துக் கடிபட்டவர்கள் முதல் கழுத்து நகையைத் திருடக் கொடுத்தவர்கள் வரை எவ்வளவோ பேர். எத்தனைதான் கத்தினாலும் வீதிக்கு மட்டும் வெளிச்சம் வரவே வராது.

அந்த இருட்டு இப்போது சுசீலாவுக்கு மிக உதவியாக இருக்கிறது. வேகமாக வந்திருப்பவள் மோகன்ராம் வீட்டுக் கதவைத் தட்டுகிறாள். திறந்து கொண்டே கதவுக்குப் பின்னால் மட்டமான கோலி பல்ப் வெளிச்சத்தில் மகாலட்சுமி. அவளிடம் கூடப் பகிர் உணர்ச்சி.

"என்னடி இது, வீட்டுக்கே வந்துட்டே...?" கேட்டபடி வேகமாக அவளை உள் இழுத்துப் போட்டுக் கதவடைக்கிறாள். உள் நுழையும் சுசீலாவின் பார்வை தலையில் கட்டுடன் படுத்திருக்கும் மோகன்ராமையே சில விநாடிகள் வெறிக்கிறது.

"என்னடி... என்ன விஷயம், எதுக்கு வந்தே? சத்தமில்லாம சொல்லு. மோகன் காதுல விழுந்து எழுந்துடப் போறான்" என்று ரகசியக் குரலில் மகாலட்சுமி எச்சரிக்கையோடு பேச, சுசீலா சட்டென்று அவள்

கையைப் பிடித்தபடி அந்தக் குச்சு வீட்டின் பின்பக்கமாய் விரைகிறாள்.

கிணற்றடியும் கீரைச் செடியுமாய்க் கிடக்கும் திறந்தவெளிப் பகுதியில் ஒரு துணி துவைக்கும் கல் மேடை. அதன் மேல் அமர்ந்தவள், ஆழமாக மகாலட்சுமியை ஏறிடுகிறாள். சலிப்பாகப் பேச்சையும் ஆரம்பிக்கிறாள்.

"ஆமா, உன் மகனுக்குக் கொஞ்சம் கூட அறிவு இல்லியா? இப்படியா அந்தக் காளியப்பன்கிட்ட மோதுவான்?"

"அதுக்கென்னடி...?"

"அதுக்கென்னவா... அவன்லாம் மனுஷ ஜாதியா? ஏற்கெனவே தாமு வேற இவனை அடிக்கணும்னு நினைச்சுக்கிட்டிருக்கச்சே, இவனுக்கு எதுக்கு புது வம்பு?"

"ஐயோ... அவன் மோதணும்னு மோதலடி. பத்மாவதி ஞாபகம் வந்து அவனை இப்படிப் பண்ணிடிச்சு. ஆமா, காளியப்பனைப் பாத்தியா, ஏதாவது மிரட்டினானா?"

"மிரட்டினானாவா? ஒரு கையையோ காலையோ வாங்காம விடப் போறதில்லைன்னு சொல்லிக்கிட்டிருக்கான்."

"இப்ப என்னடி பண்ண?"

"என்ன பண்ணவா? உன் மகனை அடக்கிவை. வெளிய விடாதே. அத சொல்லத்தான் வந்தேன். ஒரு தனிமனுஷன் ஜெயிக்கறதெல்லாம் சினிமா கதைலதான். சமூகத்துல கிடையாது. ஒழுங்கா படிச்சு பாஸ் பண்ற வழிய பார்க்கச் சொல்லு. அப்படியே அந்தத் தாமு விஷயத்துலயும் இப்ப தலையிட வேண்டாம்னு சொல்லு."

"நான் சொன்னா கேக்கறவனா இவன். ஆண்டவன் ஏன் என்னை இப்படிச் சோதிக்கறான்?"

"அவனுக்குச் சோதிக்க மட்டும்தான் தெரியும். அதனாலதான், நாமதான் நம்ம புத்திசாலித்தனத்தால தப்பிச்சுக்கணும். சரி, சரி, செலவுக்குப் பணம் இருக்கா?"

"இருக்கு" என்பது போல் மகாலட்சுமி பெரிதாகத் தலையாட்டினாள்.

"எங்க இருக்கு... ஆஸ்பத்திரி செலவுக்கே பானுதான் தந்தாளாமே...?"

"உனக்கு எப்படிடி தெரியும்?" தயங்கியபடி கேட்கிறாள்.

"எனக்குத் தெரியாம இந்தத் தெருவுல ஈ, காக்கா கூடப் பறக்காது, அது தெரியுமா உனக்கு? போகட்டும் உன் மகன் இன்னிக்கு அந்தப் பானு பொண்ணைக் காப்பாத்தி, புண்ணியத்தக் கட்டிக்கிட்டான் போல இருக்கே?"

"ஆமாம்... அந்தப் பொண்ணே பின்னால சொன்னப்பதான் எனக்கே தெரியும்."

"ஆமா. அந்தப் பொண்ணைப் பத்தி என்ன நினைக்கறே நீ?"

"காலாகாலத்துல கல்யாணம்னு ஒண்ணு ஆகலைன்னாலே இப்படித்தாண்டி. அதுலையும் பானு மாதிரி வில்லங்கம் உள்ளதுங்க எப்படித்தான் கரை ஏறப் போகுதோ தெரியலை. ஹூம்..."

– மகாலட்சுமி பெரிதாகச் சலித்துக் கொண்ட அந்த நொடியில், உள்ளிருந்து மோகன்ராம் குரலும் பெரிதாகக் கேட்கத் தொடங்கியது.

"அம்மா... யார் கூட பின்னால பேசிக்கிட்டிருக்கே?"

"ஐயய்யோ மோகன் எழுந்திரிச்சிட்டான் போல. இப்ப என்னடி பண்ண?"

"இந்தா இந்த ரூவாய பிடி. நான் அப்புறம் உன்னைப் பாக்கறேன். இப்படியே பின்வழியே சாக்கடை வழியா நான் போய்க்கறேன். நீ எதையாவது சொல்லி அவனைச் சமாளிச்சுக்கோ..."

- சுசீலா பேச்சோடு பேச்சாகச் சேலையை ஏற்றிச் செருகியபடி பின் வழியே இருளில் ஓடி மறைய, ரூபாய் நோட்டுக்களைச் சேலை முந்தியில் மூடிக் கொண்டு மகாலட்சுமி உள்நுழைகிறாள்.

"ஆமா, யார் கூட பேசிக்கிட்டிருந்தே?"

மோகன்ராம் முன் ஒரு சின்னத் திணறல். வெறிக்கிறாள் அவன். பின், "அந்தச் சுசீலா கூடத்தானே?" என்று சரியாகக் கேட்கிறான். மகாலட்சுமியின் மௌனம் அதை ஆமோதிக்க, அவள் கைவசம் உள்ள ரூபாய் வேறு இப்போது அவன் கண்களில் பட்டு அவனைக் கோபத்தில் தள்ளுகிறது.

"இது என்ன ரூபா? அவ தந்தாளா...?"

"ஆ... ஆமா... கடனா நான்தான் கேட்டேன்."

"அதுக்கு அவதான் கிடைச்சாளா?"

"ஏன் அவளுக்கு என்ன?"

"அவளுக்கு என்னவா? அம்மா உன் கைல இருக்கற காசு நல்ல வழியில வந்தது இல்லம்மா. ஆசையிலையும் போதையிலையும் திரியற ஒழுக்கமில்லாதவங்களோட கைபட்டு வந்த காசும்மா அது. வெக்கத்த விட்டு உடம்பை வித்து, அத அவங்ககிட்ட இருந்து வாங்கி உன்கிட்ட தந்துருக்காம்மா அவ... அது சரி, இப்ப எதுக்கு இங்க வந்தா அவ?"

முக்கிய கேள்விக்கு வந்தவனை வெறிக்கிறாள் மகாலட்சுமி. பின் மெள்ள உதடு பிரிக்கிறாள்.

"அந்தக் காளியப்பன் உன் கை காலை வாங்கணும்னு துடிச்சுக்கிட்டு இருக்கானாம்..."

"ஓஹோ, அதைச் சொல்லி என்னை மிரட்ட வந்தாளா?"

"இல்லடா... உன்னை எச்சரிக்கை செய்ய வந்தா. பகல்லையே அந்தத் தாமு வேற உன்னை மலைல அடிக்கத் தேடியிருக்கான் போல..."

"அதனால...?"

"என்னடா இப்படிக் கேக்கறே? அவங்கள்லாம் இந்தச் சமூகத்தோட ராட்சஸங்கடா. அவங்களோட மோதி மீள முடியுமா நீ?"

மாகலட்சுமியின் கேள்வி முன் ஒரு நீண்ட மௌன வசம் சிக்குகிறான் மோகன்ராம்.

அவன் மௌனத்தைக் கண்டிப்பது போல் வெளியே திடுமென்று பலமான இடி எடுப்பிலேயே பெரிய ஆரம்பத்தோடு சடசடவென மழை வந்து, வீட்டின் ஓட்டுக் கூரை மேல் விழுந்த விதத்தில், ஒரு தினுசான சப்தம்.

"இதென்ன இப்படித் திடீர்னு மழை பிடிச்சுக் கிட்டு...?"

மகாலட்சுமி சட்டென்று மழையால் திசை திரும்பி, அது ஒழுகி உபத்திரவப்படுத்தும் இடங்களை உத்தேசித்து, சமையல் கட்டுப்பக்கம் சென்று அலுமினியப் பாத்திரங் களை எடுத்து வருகிறாள். வீடு முழுக்கத் தரை மேல் வைத்து ஒழுகும் நீர்ச் சொட்டுக்களைப் பிடிக்க ஆரம்பிக்கிறாள்.

நடுவில் மோகன்ராமும் எழுந்து தன் பட்டுத் தறியைப் பாலிதீன் தாளால் மூடப் பார்த்தான். ஆதனால் பின்மண்டைக் காயம் ஆவென அவனை அலற விட்டது. அப்படியே அதிசயமாக அவனை மயங்கவும் விட்டது. அத்தனை பலமான அடி!

மகாலட்சுமிக்குள் பதற்றம் பரவிய நொடியில், பெரிய இடி ஒன்று அவளை 'அர்ச்சுனா!' என்று கதறியபடி ஓர் ஓரமாக முடக்கித் தள்ளியது. கருத்த வானில் ஏகமாய் மின்னல் கிளைகள் - டிராகன் உருப்போலத் தோற்றம். கூடவே இடியுடன் ஒரு ஆபத்தான மின்னல், அந்த ஏழை வீதியில் பானுவின் நொடிந்த வீட்டைக் குறிவைத்து இறங்க ஆரம்பித்தது!

5

பானுவின் வீட்டின் மேல் பாய்ந்த இடிச் சப்தத்தைத் தொடர்ந்து, 'அம்மாடி... பானு..." என்கிற மந்தா கிழவியின் அலறல் சப்தம் கூடப் பெரிதாக அந்த மழை இரவை வெட்டிப் பிளக்கிறது.

வீட்டுக்குள் ஒழுகுகிறதே என்று திண்ணையில் பேத்தி பானுவுடன் ஒடுங்க வந்தவள் இயற்கை உபத்ரவத்திற்காக எழுந்து பின்பக்கம் செல்லப் போக, கொல்லைத் தென்னையின் தலையில், விழுந்த இடியும் அந்த விவரிக்க முடியாத ஒளி மின்னலும் அருகில் நிற்கும் மந்தாவின் பூஞ்சை விழிகளை விருட்டென்று பறித்துக் கொள்ள, அதன்பிறகுதான் மந்தா அந்த அலறு அலறினாள்!

சின்னத் தூறலுக்கே தாங்காத மின்கம்பங்கள் இந்த இடி மின்னல் நிமித்தம் சட்டென்று தங்கள் சப்ளையை வேறு நிறுத்திக் கொள்ள, இப்போது இருட்டின் சாம்ராஜ்யம் வேறு.

தடவித் தடவி வரும் பானு, மந்தாவை இருட்டில் தேடுகிறாள்.

"பாட்டி எங்க இருக்கே... என்ன ஆச்சு?" மேனியைச் சிலிர்ப்பிக்கும் மழை நனைசலோடு விழிகளைக் கசக்கி நோக்குகிறாள்.

"பானு இங்கதாண்டி இருக்கேன். மின்னலைப் பார்த்ததுல இருந்து கண்ணு வேற தெரியலடி..." - மந்தாவின் புலம்பலில் அதிர்ந்து போகிறாள். ஐய்யய்யோ...!

விடிந்து விட்டது.

வானத்தில் பொட்டு மேகத்துண்டு கூட இல்லாத ஒருவகை நிர்மலம். மந்தா கிழவியின் கண்களைப் பறிக்கவென்றே இடி இடித்து மழை பெய்த மாதிரி ஒரு தோற்றம்.

வீதியெல்லாம் கூட நீர் வடிந்து அலம்பி விட்ட மாதிரி இருக்கிறது. வாசற்படி முருங்கை மரங்கள் மட்டும் தன் மேல் அமர்ந்து, பின் எழும்பிப் பறக்கும் காக்கைகளின் உந்துதல் நிமித்தம் அவ்வப்போது இலை நீரைக் கீழே தெளித்து மழை பெய்த தடையமாய் நிற்கின்றன.

மந்தாவின் குச்சு வீட்டு முன்னால் கூட இப்போது கூட்டம்.

"கிழவி கண்ணு போயிடுச்சுடி... இனி எப்படிக் கடை விரிப்பா?"

"இந்த வயசுல இப்படி ஒரு சிக்கலா அவளுக்கு? அட பாவமே!"

- ஆளாளுக்கு ஆயாசித்தபடி வீட்டுத் திண்ணை மேல் அமர்ந்து புலம்பும் மந்தாவைப் பார்த்து வருந்தி முகம் தூக்குகிறார்கள்.

"பாழாப் போன மின்னல்... என் உசுரைக் கொண்டு போகாம என் கண்ணைக் கொண்டு போயிருச்சே... நான் என்ன பண்ணுவேன்?"

மந்தாவும் பதிலுக்குப் புலம்புகிறாள். அருகில் சோகமாய்ப் பானு. அந்த நிலையிலும் அவள் அவ்வப்போது மோகன்ராம் வீட்டுப் பக்கமாய் ஏறிட்டு ஏறிட்டு ஏமாந்து கொண்டிருக்கிறாள்.

செய்தியறிந்து யார் யாரெல்லாமோ வந்து குசலம் விசாரிக்கிறார்கள். ஆனால் அவன்.... ஒரு வேளை இன்னமும் மயக்கத்திலேயே இருக்கிறானோ?

கேள்விக் குமைச்சலோடு உழல்பவள் எதிரே இப்போது வீதி மணியம்!

"என்னம்மா இப்படி ஆயிடிச்சேன்னு இடிஞ்சு போயிட்டியா? கலலப்படாதே. வாலிஸ்வரன் டாக்டர் நல்லா பார்ப்பாரும்மா. முதல்ல கூட்டிக்கிட்டுப் போய்க் காட்ற வழியப் பார்..." என்கிறார்.

"ஆமா இன்னிக்குக் கடை?"

"என்ன பண்றதுன்னு தெரியலியே... அஞ்சுபடி மாவும் அரைப்படி சட்னியும் அப்படியே இருக்கு."

"ஏன் பானு... நீதான் கடை போடக் கூடாதா? சரக்கு வீணாப் போயிடப் போவுது."

யார் கருத்தும் அவள் காதில் விழுந்தமாதிரி தெரியவில்லை. பார்வை மோகன் ராம் வீட்டுப்புறமே இருக்கிறது.

வழக்கமாக இந்த வேளையில் ரங்காசாரி டீக்கடையைக் குறிவைத்துக் கிளம்பியிருப்பான் அவன்.

குளித்து முடித்து நெற்றியில் சின்னக் குங்குமக் கீறலோடு பளிச்சென்று இருப்பான். ரங்காசாரி டீக்கடையில் தினத்தந்தி, தின மலர் என்று தினசரிகள் விரித்துக் கிடக்கும்.

அதில் ஒரு கூட்டம் லாட்டரி முடிவுகளைப் பார்த்து, பரிசு விழாத சீட்டுக்களைப் பந்தாகச் சுருட்டி எறிந்தபடி இருக்கும். இன்னும் சிலர் அந்தக் காலையிலேயே அரசியல், அக்கப் போரில் உருண்டு கொண்டிருப்பார்கள். 'சர்ர்ர்ர்...'

நடு நடுவே கண்ணாடித் தம்ளரில் ஒரு உறிஞ்சு!

மோகன் ராம் இந்தக் கூட்டத்தில் நுழைவது தெரியாமல் நுழைந்து பேப்பரையும் பார்த்து விட்டுத் திரும்புகிறவன்.

திரும்பும்போது மந்தா இட்லியையும் தோசையையும் பொட்டலமாய்க் கட்டி வைத்து நீட்டுவாள். கடன் சொல்லாமல் காசு கொடுத்து விட்டு, அதை வாங்கிக் கொண்டு நடப்பான். காசில்லாத நாளில் வாங்காமல் போய்விடுவான். மந்தா அந்தச் செய்கைக்காக ஆச்சரியப் பட்டுப் போவாள்.

"மோகா, நீ தப்பிப் பொறந்துட்டேடா, தப்பிப் பொறந்துட்டே..." என்பாள்.

சாதாரண நாளிலேயே இது தவறாதே... இன்று என்ன ஆயிற்று அவனுக்கு? அவள் விட்டால் அழுது விடுவாள் போல் இருந்தது.

இந்த நேரம் பார்த்துத் தானா தாமு வர வேண்டும்?

"என்னா பாட்டி கடை இல்லியா இன்னிக்கு...? உன் கடை சரக்குன்னா உஸ்தா இருக்கும்னு வந்தேன்" என்றபடி வருகிறான்.

"வா தாமு... கிழவிக்கு ராத்திரி இடிமழைல கண் போயிருச்சுப்பா. அதான் கடை போடலை" என்று வரவேற்பளிக்கிறான் ஒருவன்.

"அட பாவமே! கண்ணு போயிருச்சா...? அப்ப கஷ்டம்தான்."

- தாமு பதிலுக்குப் பரிதாபப்பட்ட விதமும் அப்படியே பானுவைப் பார்த்த விதமும் அவளை உலுப்புகின்றன.

"என்னா பானு, என்னா பண்ணப் போறே?" இது அவனது அடுத்த கேள்வி. பதில் சொல்லாமல் உள்ளே ஓடினாள் பானு. போய் மறைவாக நின்று கொண்டாள். அநியாயத்துக்கு மூச்சிறைத்தது. அவனும் அவன் பார்வையும் மனக்கண்ணில் மிரட்டின. முந்திய நாளில்

அவன் கவுண்டர் வயல் காட்டில் பேசியது வேறு ஊர்வலமாய்ப் போய் முள்ளாய்க் குத்தியது.

தாமு மிக உரிமைப்பட்டவன் போல இப்பொழுது வீட்டுக்குள்ளேயே நுழைய ஆரம்பித்தான்.

அவன் பயங்கரமானவன் என்கிற அபிப்பிராயம் இருப்பதால் யார் வீட்டுப் படி அவன் ஏறினாலும் எங்கு வந்தாய் என்று கேட்க யாருக்குமே துணிச்சல் கிடையாது. பிடிக்கிறதோ - பிடிக்கவில்லையோ வழிசல் சிரிப்போடு வரவேற்று உட்கார்த்தி வைத்து நைச்சியமாகப் பேசித்தான் எல்லாருக்கும் பழக்கம்.

அதே ஜமாவோடு உள்நுழைபவன் பானுவைக் கடிக்கிற மாதிரி பார்க்கிறான்.

"என்னா உள்ள ஓடிவந்துட்டே, என் கேள்விக்குப் பதிலே சொல்லாம...?" எதிரே நின்று கொண்டு தாடையைத் தடவியபடி பேசுபவன் முன் ஒரு புறாக்குஞ்சு போல் நடுங்கியபடி நிற்கிறாள் பானு.

துல்லியமான அந்த நொடிகளில் மோகன்ராம் கூட அவன் வீட்டுக்கு வெளியில்...

"படுத்துக் கிடந்தா என்ன? அந்தப் பேப்பரை ஒரு நாள் படிக்கலேன்னா என்னா குறைஞ்சிடப் போவுது?" என்கிற மகாலட்சுமியின் கேள்வியை ஒதுக்கியபடி தலைக்கட்டோடு நடக்கிறான்.

பல்லில் வேலங்குச்சியை விளையாட விடும் விருத்தாச்சலம் செட்டியாரிலிருந்து விழித்த விநாடியில் சுருட்டுக்கு நெருப்பு வைத்து விட்ட பிசுக்குத் தாத்தா வரை அவனை வேடிக்கை பார்க்கிறார்கள்.

"எங்க மோகன், கிழவிய பாக்கவா?"

"எதுக்கு?"

"விஷயம் தெரியாதா? ராத்திரி மின்னல்ல அதுக்குக் கண்ணு அம்பேல் ஆயிடிச்சுல்ல...?"

- நிஜமாலுமே மோகனுக்கு அந்த நடு வீதியில்தான் செய்தி தெரியவருகிறது. என்ன காரணத்தாலோ மகாலட்சுமி சொல்லியிருக்க வில்லை. அவளும் கூட எட்டிப் பார்த்திருக்க வில்லை. மோகன்ராம் நடையில் இப்போது சற்று வேகம்.

வேட்டியில், ஸ்லீப்பர் செருப்பு போட ஆசைப்படும் மழைநீர்ப் புள்ளிகளை உத்தேசித்து வேட்டியை மடித்துக் கட்டிக் கொண்டு நடக்கிறான்.

கிழவி வீட்டு வாசலை நெருங்கியபோது கிழவியின் கண்களில் கரகரவென கண்ணீர்.

பார்க்கப் பரிதாபம் உடைப்பெடுத்துக் கொள்ளும் உருவப்பாடு. மோகன்ராம் மனம் கணத்தில் உருகிக் கரைகிறது. நெருங்குகின்றவன் மந்தாகிழவியின் கைகளை இறுகப் பற்றிக் கொள்கிறான்.

"மந்தா நான் மோகன்ராம்..." என்கிறான். சப்தம் உள்ளே பானு காதிலும் விழ, அவள் விடைக்கிறாள். ஆனால் தாமு சற்றுத் தள்ளிப் பின்புறமாய்ப் போய் நின்று கொண்டு சிகரெட்டை பற்றவைத்துக் கொண்டிருந்தான். அவன் காதில் விழுந்திருக்க நியாயமில்லை. பானுவுக்குப் பதைக்கிறது. 'நேற்றே அடிக்க வேண்டும் என்று அலைந்தானே - இப்போது பார்த்து விட்டால்?' கேள்வி வந்து கொத்தி, பயம் அவளது அழகிய கண்களை ஆட்சி செய்ய ஆரம்பிக்கிறது.

சமயோசிதமாக அவனை நெருங்கித் திடும்மென்று சினேகமாய்ச் சிரிக்கிறாள். வெளிப் பேச்சு அவன் காதில் விழுந்து விடக்கூடாது என்கிற மாதிரி பலமாக எதை எதையோ பேச ஆரம்பிக்கிறாள்.

"கவலைப்படாதே. பெரிய ஆஸ்பத்திரியிலதான் இந்த மாதிரி கேஸைப் பார்ப்பாங்க. நான் கூட்டிக்கிட்டுப் போறேன். பத்து மணிக்கு வரேன் தயாரா இரு" என்று ஆறுதலின் எல்லையைத் தொட்டவன், சட்டென்று பானு நினைப்பு வந்தவனாக, "ஆமா எங்கே உன் பேத்தி?" என்று கேட்க, பதில் பட்டென்று வந்தது.

"மோகா... உள்ள அந்தத் தாமுவோட சிரிச்சு சிரிச்சுப் பேசிக்கிட்டிருக்கா. காதுல விழலை?" - பக்கத்திலிருந்தவள் கேட்ட பிறகுதான் அந்தச் சிரிப்பும் பேச்சும் கூட காதில் விழுந்தன. சட்டென்று முகம் ஒருமாதிரி ஆகியது. இனி அங்கு நிற்கவே கூடாது என்கிற மாதிரி ஒரு அபிப்பிராயம் விநாடியில் உருவாகி விட்டது.

"சரி நான் வரேன்..." - கிளம்பி விட்டான்.

"அப்பாடா..." - உள்ளே பானுவிடம் கூடப் பெருமூச்சு. தாமு நடுவில் ஒரு ஐந்நூறு ரூபாய்த் தாளை எடுத்துப் பானு எதிரே நீட்டுகிறான்.

"எதுக்கு?"

"பாட்டியோட வைத்தியச் செலவுக்கு..."

"வேண்டாம் - என்கிட்ட இருக்கு."

"பொய் சொல்லாதே பானு. பிடி."

"இல்ல வேண்டாம். இத திருப்பிக் கொடுக்கிற சக்தி கூட எனக்கு இப்ப கிடையாது."

"உன்னை யார் கேட்டா?"

"கேக்காட்டியும் கடன், கடன்தானே?"

"இது கடன் இல்லை. அட்வான்ஸ்னு நினைச் சுக்கோ."

"அட்வான்ஸா? எதுக்கு?"

"ஆமா... நீ என் கூடச் சேர்ந்து தொழில் செஞ்சா நான் உனக்குச் சம்பளம் தரணுமில்லியா? அதுக்கு இது அட்வான்ஸ்."

"வேண்டாம் தாமு... உன் பேச்சே சரியில்லை..."

"என்ன பானு... என்னைப் பத்தி தெரிஞ்சுதானே சிரிச்சு பேசுனே. அப்ப சரியா இருந்தது - இப்ப இல்லையா?"

"தாமு, நீ என் அண்ணன் மாதிரி - வேண்டாம். வெளிய போயிடு."

"அண்ணனை ஒரு தங்கச்சி இப்படித்தான் துரத்துவாளா?"

"சரி, நீ இரு... நான் வரேன்" - அம்பாரமாய் அதற்குள் பெருகிவிட்ட வியர்வையோடு வெளியே நகரக் கிளம்பியவளைச் சட்டென்று தோளைப் பற்றி நிறுத்து கிறான். கடூரமாய் முறைக்கிறான்.

"ஒண்ணு மட்டும் ஞாபகத்துல வை. உன்னைக் கட்ட ஒரு பய வர மாட்டான். வெச்சுக்க வேணும்னா நான் நீன்னு வருவாங்க. உன்னை மாதிரி ஆக்சிடென்ட் கிராஸ் கேசுங்களுக்கெல்லாம் என் மாதிரி ஆளுங்களும் - பம்பாயும்தான் கதி. நீயா வந்தா அது ஒரு மாதிரி - நான் வந்து இழுத்துக்கிட்டுப் போனா அது வேற மாதிரி. ஆனா ஒண்ணு. இந்த இரண்டுல ஒண்ணு உன் விஷயத்துல நடக்கத்தான் போகுது. அதை நீ பாக்கத்தான் போறே..."

- பேசின ஜோரில் அச்சு அசல் சினிமா வில்லனைப் போலவே பாதி புகைத்த சிகரெட்டைத் தரையில் போட்டுத் தேய்த்துவிட்டுக் கிளம்புகிறான். வெளியே வந்து அழுதபடி இருக்கும் கிழவி மேல் ஒரு அலட்சியப் பார்வை வேறு!

உள்ளே நொறுங்க ஆரம்பித்திருந்தாள் பானு!

பத்து மணி.

சொன்னது போல் வந்து விட்டான் மோகன்ராம்!

வரும்போதே குதிரை வண்டியையும் கூட்டிக் கொண்டு வந்து விட்டான்.

வந்தவன் நேராகப் பானு எதிரில் போய் நின்ற நொடியில் அவளிடம் திகைப்பு. சாந்துப் பொட்டும் கண்ணாடியுமாக நிற்பவள், அவனைப் பார்த்து விதிர்க்கிறாள்.

இது என்ன இத்தனை நெருக்கத்தில்? நேர் எதிரில்...?

"வா... வாங்க..." வாய் குழற வரவேற்பு தருகிறாள்.

"நேத்து என் மருந்துச் செலவுக்குப் பணம் கொடுத்தியாமே?" - அவனிடம் சீவினாற் போல் கேள்வி.

"ஆ.. ஆமா அதுக்கென்ன?"

"இந்தா பிடி" - அவன் நீட்டும் பணத்தைப் பார்க்கவும் அவளிடம் சடைப்பு.

"இதுக்கென்ன இப்போ அவசரம்?" - வாங்கியபடியே கேட்கிறாள்.

"எனக்குக் கடன் பிடிக்காது. பிடி." - அவனிடம் பேச்சோடு அவசரமும் துளி கோபமும் கூடத் தெரிகின்றன. எதனால் என்று பானுவால் ஊகிக்க முடியவில்லை.

இதற்குள் சப்தம் கேட்டுப் புரண்டு படுக்கும் மந்தா எழுந்து அமர்ந்து கொள்கிறாள். அவள் கண்ணில் மருந்து வைத்துக் கட்டியிருப்பதை அப்போதுதான் பார்க்கிறான் மோகன்ராம்.

"ஆமா யார் வந்து உனக்குக் கட்டு போட்டது?" ஆச்சரியத்தோடு கேட்க, பட்டென்று பதில் மந்தாவிடம்.

"சொன்னா வருத்தப்பட மாட்டியே...?"

"எதுக்கு வருத்தப்படணும்...? நல்லதுதானே நடந்திருக்கு."

"நடந்தது நல்லதுதான்... ஆனா அத நடத்திக் கொடுத்தவனைத்தான் யாருக்குமே பிடிக்கறதில்லை."

"மந்தா புதிர் போடாம சொல். நான் வண்டிக் காரனை அனுப்பணும்."

"நீ அனுப்பிட்டு வா சொல்றேன்."

"இதோ பார்! நான் நின்று பேசற நிலையில் இல்லை. தலைக்கு மேல எனக்கு வேலை. வானம் வேற மிரட்ற மாதிரி கருத்துக் கிடக்கு. ஒரு கெஜமாவது இன்னிக்கு நெஞ்சாத்தான் அடுத்த வாரமாவது தறி அறுக்க முடியும். நீ சொல்றியா? இல்ல நான் கிளம்பட்டா?" அவன் கேள்விக்குப் பதில் அந்தச் சரிந்த குச்சு வீட்டின் பின்புறம் இருந்து வந்தது.

"நான்தாண்டா...!" என்கிற அந்தப் பதிலோடு அங்கே சுசீலா!

24182
4105089
6

சுசீலாவை அங்கு மோகன்ராம் துளியும் எதிர்பார்க்கவில்லை. அவளைப் பார்க்கவும் வழக்கமாய் அவனை அணுகும் வெறுப்பும் நெருடலும் கூச்சமும் கலந்த ஒரு விஷயம், அவன் தலையை வேறு பக்கம் திருப்புகிறது. உடம்பைக்கூட மனசு வெளியே இழுத்துச் செல்லப் பார்க்கிறது.

"நில்லு... எங்க கிளப்பிட்டே?" - சுசீலாவோ அவனைத் தடுக்கிறாள்.

"நான் உன் கூடல்லாம் பேச மாட்டேன்னு தெரியும்தானே?" மோகன்ராமின் பதிலைக் கேட்டு இப்போது துளி எகத்தாள சிரிப்பு அவளிடம்.

"தெரியும்டா... நீ என் கூட பேச மட்டுமில்லடா - எதையும் சரியா புரிஞ்சுக்கவும் மாட்டேன்னு எனக்கு நல்லா தெரியும்" - அழுத்தமான ஒரு வளைப்போடு பேச்சைத் தொடங்குகிறாள்.

"எதைப் புரிஞ்சுக்கணும்?" - மோகன்ராம் உளுத்துப் போன உத்தரத்தில் ஊஞ்சலாடிக் கொண்டிருக்கும் சிலந்தியைப் பார்த்தபடி கேட்கிறான்.

"ஆமா... ஏண்டா என்னைக் கண்டாலே உனக்கு ஆக மாட்டேங்குது. நான் விபசாரிதான், ஒப்புக்கறேன். ஆனா உன் வரைல ஒரு அக்காவாதானே நடந்துக்கறேன்? என் மேல ஏன் இத்தனை வெறுப்பு?"

"என் அக்கா அக்காவா மட்டும்தான் இருக்க முடியும். ஒரு விபசாரியால்லாம் இருக்க முடியாது.

அக்கான்னு இல்ல; எந்தப் பொண்ணும் விபசாரியா இருக்கவும் கூடாது..."

"நானா விரும்பி இப்படி ஆகலைடா..."

"தெரியும். ஒவ்வொரு விபசாரி பின்னாடியும் ஒரு கதை இருக்கு. ஆனா அதைக் கேட்டு உன் தப்பை நான் ஒத்துக்கத் தயாரில்லை. என் வரைல நீ கெட்டுப் போன அன்னிக்கே செத்துப் போயிருந்தா என் மதிப்புல எவ்வளவோ உயர்ந்திருப்பே. இந்த அசிங்கத்தை வாழ்க்கையாவே ஒத்துக்கிட்டே பாரு - அதனாலதான் எனக்கு உன்னைப் பிடிக்கலே."

"அப்ப நான் செத்துடணும்கிறியா?" - உடைந்து போய்க் கேட்கிறாள் சுசீலா.

"என் வாயால நான் அதைச் சொல்லணுமாக்கும்? நான் வரேன்..." - பேசிய ஜோரில் வெளிக்கிளம்பி விட்டவனைச் சுசீலா மட்டுமில்லை; பானுவும் கூட விக்கித்துப் போய்த் தான் பார்க்கிறாள்.

கிழவியிடம் இப்போது சுரிசனம்.

"அடியே சுசி. மோகன் பேசிட்டான்னு எதையாவது செய்துக்கிடாதடி. அவனுக்கு இன்னும் மனசு பாத்துப் பேசற பக்குவம் வரலே. அது வாழ்க்கைல அடிபட அடிபடத்தான் வரும். இளரத்தம் இல்லியா? இப்படித் தான் துடிக்கும். நாமதான் புரிஞ்சு காத்துக்கிடணும். போகட்டும். இனியாவது மானத்தோடு வாழ முயற்சிக்கப்படாதா நீ?"

"போ கிழவி... எல்லாம் தெரிஞ்சும் நீ கேக்கற கேள்வியா இது...? என்ன வாழ்க்கை... ச்சை! சமயத்துல எதுக்கு வாழறேன்னே தெரியலை." - கரிய அவளது விழிகளில் கண்ணீர் மணி திரள, சுசீலா பொருமத் தொடங்கியதைப் பார்த்து, பானு அவளை நெருங்கிச் சற்று அணைப்பாக நின்று கொண்டு பேசுகிறாள்.

அப்படியே வாசல் பக்கமாக வந்தபடி...

"அக்கா எனக்குப் பயமா இருக்குக்கா..."

"எதுக்குப் பயப்படறே நீ?"

"அந்தத் தாழு என்னைக் குறிவெச்சுட்ட மாதிரி தெரியுது."

- சுசீலாவிடமும் இப்போது பயத்தின் தொற்றுதல்.

"ஆமா... நான் கூடக் கேள்விப்பட்டேன். அவன் இங்க வந்தான், உன் கூடப் பேசிக்கிட்டிருந்தான்னு. என்ன பேசினான்?"

"சுருக்கமா சொல்றேன். இந்தப் பானுவும் இன்னொரு சுசீலாவா..." - பானு பேசி முடிக்கு முன் வாயைப் பொத்தினாள் சுசீலா

"அப்படிச் சொன்னானா, அந்த நாய்?"

"சொல்லலை. சவாலே விட்டான்."

"ஆமாம், இவன் பெரிய சத்யசந்தன். சவால் விட்டான் ஜெயிக்க."

"பயமா இருக்குக்கா. மோகனும் என்னைத் திரும்பிக் கூடப் பாக்க மாட்டேங்குது. பாட்டிக்கும் இப்படி ஆயிடுச்சு. எல்லாக் கதவையும் சாத்தி இருட்டு அறைக்குள்ள விட்ட மாதிரி இருக்கு என் நிலை."

"கவலைப்படாதேடி. கவலைப்படாதே. ஒரு சுசீலா போதும். என் கண் எதுக்க நான் இன்னொருத்தி உருவாகறத பாத்துகிட்டு இருப்பேனா?"

"அக்கா எனக்கு நீ இருக்கிற தைரியம் தான்."

பானு சொல்லும்போதே வாசற்புறம் குதிரை வண்டி வந்து நிற்கும் சப்தம்! - யார்?

உள்ளிருந்து ஒரு கோஷா உருவம் இறங்குகிறது!

'ஹக்!' - சுசீலா விழிகள் திகைத்து விரிய முகத் திறப்பைப் புறந்தள்ளியபடி ஒரு முஸ்லிம் பெண்மணி முன்வருகிறாள்.

"வா பாத்திமா..." - சுசீலாவிடம் மட்டும் வரவேற்பு. வீதியிடம் கூடச் சற்றுக் கூர்மையான பார்வை.

பட்டு நூற்பாவை நீட்டி உலர்த்திக் கொண்டிருக்கும் சிலரிலிருந்து, வாசல்படி மேல் நின்று ஈருவாளியால் கூந்தலைக் கோதிப் பேன் பிடித்தபடி இருக்கும் பலர் வரைக்கும் பார்க்க, அந்தப் பாத்திமா எனும் பெண் உள் நுழைகிறாள். பானு குளித்து எழுந்து துவட்டாமல் வந்த மாதிரி வியர்வை ஈரம் பூக்கக் கிடக்கிறாள்.

"எப்படி இருக்கீங்க?" - உள் நுழையும் பாத்திமா விடம் விசாரணையான கேள்வி. கேள்வியோடு கூடிக் கொண்டு வந்திருந்த வயர் கூடையில் இருந்து ஹார்லிக்ஸ் வாழைப் பழம் என்று வெளிப்படும் வரிசைகள்.

"யாரு... யார் வந்திருக்கிறது?" - ஊடே நுழைகிறது மந்தாவின் பதற்றமான கேள்வி.

"பாத்திமா... அதாவது செத்துட்ட உங்க மருமகனோட தங்கச்சி."

- சுசீலாவின் பதிலில் மந்தா முகம் உரு மாறுகிறது.

"நான் எத்தினி தடவை சொல்லியிருப்பேன்., அவன் என் மருமகன் கிடையாது. அவங்கள்லாம் இந்த வீட்டுக்கும் வரக் கூடாதுன்னு.."

"ஏ மந்தா நானே வரலாம்... அவங்க வரக்கூடாதா?"

"கூடாது... கூடாதுன்னா கூடாது. போகச் சொல்லு அவளை."

- கிழவி புலம்ப ஆரம்பிக்க, இதெல்லாம் சகஜம் என்பது போல அதைப் புறந்தள்ளிக் கொண்டு பாத்திமா

என்னும் அந்தப் பெண்மணி பானுவை நெருங்கி வாஞ்சையாக அவள் கரம் பற்றுகிறாள்.

"எப்படிம்மா இருக்கே... பாட்டிக்குத்தான் இப்படி ஆயிடிச்சு."

"ஆமா உங்களுக்கு எப்படித் தெரியும் இந்த விஷயம்?" - இது சுசீலா.

"தெரியும் சுசீலா. நம்ம இரண்டு குடும்பத்துல எது நடந்தாலும் அதை தந்தி போல எடுத்து வந்து சொல்ல நிறைய பேர் இருக்காங்க. இந்தச் சமூகத்துல ரொம்பப் பேர் பொழுதே அப்படித்தானே போகுது?"

"தெரியுதுல்ல... அப்புறம் எதுக்கு வீட்டுக்கு வந்து என் மானத்தை வாங்கறே? நான் என் மகளைத் தான் இழந்தேன். மானத்தை இழக்கலை..." - மந்தாவிடம் படபடவென்று புலம்பல்.

"ஐயோ கிழவி, கொஞ்சம் சும்மா இருக்கியா... நீங்க உக்காருங்க."

- சுசீலா பேசியபடியே பாயை எடுத்து விரிக்கிறாள்.

"சந்தோஷம்மா. பாட்டிய பாத்துட்டு ஒரு முக்கிய விஷயத்தைச் சொல்லிவிட்டுப் போகலாம்னு வந்தேன். நான் இங்க வந்தது என் வாப்பாக்குத் தெரிஞ்சா நிச்சயம் வெட்டிப் போட்டுடுவார். இருந்தாலும் அண்ணனுக்காக வந்தேன். இன்னிக்குத்தான் அண்ணன் நம்மையெல்லாம் விட்டுப் பிரிஞ்ச நாள்..."

- பாத்திமா சொன்ன பிறகுதான் பானுவுக்கே உறைத்தது. புகை மூட்டத்துக்குள் தெரியும் முகம் போல அவளுக்குள் இப்போது அவளது தகப்பன் முகம் முண்டுகிறது. டாக்சி டிரைவராக வாழ்ந்ததும் டாக்சியிலேயே தன்னையும் அம்மாவையும் மேட்டூர்

கூட்டிப் போய் ஊரைச் சுற்றிக் காட்டியதெல்லாமும் நினைவில் பொறிந்தெழுகிறது.

திரும்பும் போதுதான் அந்த விபத்து நடந்தது. அவர்கள் இருவரும் போய்ச் சேர, தான் மட்டும் தப்பிப் பிழைத்ததும் இன்று தத்தளிப்பாக நிற்பதையும் ஒரு விநாடி யோசித்துப் பார்க்கிறாள்.

அன்றே அவர்களுடன் போயிருந்தால் எவ்வளவு நன்றாயிருக்கும்?

'எனக்கு வேண்டாம் அந்தச் சனியன்' என்று ராவுத்தர் தாத்தா அவளை ஒதுக்கித் தள்ள, அள்ளி அணைத்துக் கொண்டவள் மந்தா கிழவிதான். பாசம் விடவில்லை.

காலப்போக்கில் துப்புரவாகத் தகப்பன் வழி நினைப்பும் தொடர்பும் பட்டுப் போய் அந்த இடத்தில் புல்லும் கூட முளைத்து விட்டாலும் அவ்வப்போது அதன் மேல் நடந்து வந்து ஒரு சிலிர்ப்பை உருவாக்கிச் செல்வாள் அத்தை பாத்திமா!

என்ன இருந்தாலும் அண்ணன் மகள் என்று பாசம் காட்டுவாள். அந்த ரகசியப் பாசத்திற்கு அச்சாரமாகப் பனாரஸ் பட்டு, வெள்ளிக் கொலிசு என்று சில சாட்சிப் பொருட்களும் கூட உண்டு.

இன்று?

பாத்திமா ஒரு தங்கச் சங்கிலியை எடுத்து நீட்டுகிறாள்.

"எதுக்குங்க இது...?" சுசீலாதான் கேட்கிறாள்.

"நான் குவைத் போயிடப் போறேன். சேலம் திரும்பறதுங்கறது இனி எப்போதுன்னு அல்லாக்குதான் தெரியும். பானுக்கும் கல்யாண வயது. அத்தை எதையாச்சும் செய்தாத்தானே நல்லாருக்கும்? இந்தச்

சங்கிலி அண்ணன் எனக்குப் போட்டது. அதைத்தான் நான் இப்ப அதுக்குக் கொடுக்கறேன். வா... வந்து வாங்கிக்க..."

- பாத்திமா சங்கிலிக் கையோடு அவளை விட்டு விலகிப் போன பானு பக்கம் திரும்புகிறாள். அவளிடம் அசைவில்லை.

"வேண்டாம். எதுவும் வேண்டாம். வெளிய போனா போதும்..." மந்தாவிடம் அலறல்.

"மந்தா கொஞ்சம் சும்மா இருக்கியா?" - சுசீலா அதட்டி அடக்குகிறாள். "பானு வாங்கிக்கம்மா..." என்று பானுவையும் தூண்டி விடுகிறாள்.

பானு தயங்கித் தயங்கிக் கையை நீட்ட அந்தக் கரத்தை இழுத்துத் தன் மார்போடு அணைத்துக் கொள்கிறாள் பாத்திமா. கண்கள் கசிகிறாள்.

"பானு... நா உன் அத்தை... ஆனா இதுவரை ஒரு தடவை கூட என்னை நீ அத்தைன்னு கூப்பிட்டதில்லை. இன்னிக்காவது கூப்பிடேன்..." - உடைந்த குரலில் பாத்திமாவிடம் கேவல். ஆனால் இறுதிவரை அந்தக் குதிரை வண்டி ஏறி வீதி முக்கில் அவள் திரும்பும் வரை பானுவால் அப்படிச் சொல்ல முடியவில்லை.

சுசீலாவிடம் மட்டும் இனம்புரியாத நெகிழ்ச்சி.

இப்படித் தன் மேல் பாசம் காட்ட ஒருவர் கூட இல்லையே...

நினைக்கும்போதே நெஞ்சை வலிக்கிறது. மோகன்ராமின் ஆவேசமான புறக்கணிப்பு வேறு முள்ளாய்க் குத்தத் தொடங்குகிறது புடைவைத் தலைப்பால் முகம் துடைத்தபடி வாசல் பக்கமாய் வெளிக்கிளம்ப ஆரம்பித்தவள், திரும்பிப் புழக்கடை வழியாகச் செல்ல ஆயத்தமாகிறாள்.

"பானு... நீ எதுக்கும் வெளியே போகாதே. எதுக்கு வந்தா உன் அத்தைன்னு கேட்டு வீதி உன்னைத் தோண்டித் துருவும். நான் ராத்திரி ஊர் அடங்கின பிறகு வரேன். மருந்து மாத்திரையை மட்டும் கிழவிக்கு நேரம் தவறாம கொடுத்துடு."

- போய் விட்டாள் சுசீலா.

தறிமேடையில் இருந்தான் மோகன்ராம். பட்டித் தகட்டால் நெய்த அளவிலான பட்டுத் துணி மேல் ஒரு அழுத்தமான தேய்ப்பு கொடுத்துக் கொண்டிருந்தான். கிச்சுவீச்சு என்று நான்கைந்து எலிகள் கூடி விளையாடுகிற மாதிரி சப்தமெல்லாம் கேட்டது.

தேய்க்கத் தேய்க்கத்தான் பட்டு பளபளக்கும். கெண்டை நூலுக்கும் பாவுக்கும் உருவான இணைப்பில் ஒருவகை சொரசொரப்பு இருக்கும். அதுவும் போகும். உடுத்தும் போது வெண்ணையோ, எண்ணெயோ உடம்பில் ஓடுவது போல, உரசுவது போல இருக்கும்.

அந்தக் கிச்சு வீச்சு சப்தம் கேட்டுப் பக்கத்து வீட்டு முகுந்தன் எட்டிப் பார்க்கிறான்.

முகுந்தன் ஒரு தினுசான பாத்திரம். சேலத்து அழுக்குச் சந்தில் இருந்து கொண்டு அமெரிக்கக் கனவு காண்பவன். பத்து தமிழ் வார்த்தைக்கு ஒரு இங்கிலீஷ் வார்த்தை அவன் பேச்சில் கட்டாயம் இருக்கும். எல்லாரும் கமல் ரஜினி என்று உருகிக் கொண்டிருக்க, இவன் மட்டும் ஸ்டாலோன், செகால், எடிமர்பி என்று உளறிக் கொண்டிருப்பான். நெய்வது கூடச் சுத்தப் பட்டு இல்லை; பாரிஸ் பட்டுதான். அசல்பட்டு போல இருக்கும் போலி அது.

"என்ன மோகன் அதுக்குள்ள தறி ஏறிட்டே?" - கேட்டபடியே அவன் தறிமேடை ஓரம் அமருகிறான்.

"ஏறாம... அதான் வெயில்தான் நல்லா அடிக்குதுல்ல."

"இல்ல, படத்துக்கு எதுவும் போகலையான்னு கேட்டேன்."

"நான் என்னிக்குடா படத்துக்கெல்லாம் போயிருக்கேன்?" - எரிச்சலான பதில் கேள்வி மோகன்ராமிடம். கையும் காலும் 'டக்டக்' என்கிற தாள கதி மாறாத பட்டு நெய்தலில்...

"அப்புறம்...?"

"என்ன அப்புறம்... நீ தறிக்குப் போகலையா?"

"சங்கீத்ல ராக்கி போட்ருக்கான். ஷல் வி கோ?"

- மோகன்ராம் பார்வை தறி நெய்வதைக் கூட நிறுத்திவிட்டு இப்போது முகுந்தனை ஆழமாகப் பார்க்கிறது. அதில் கணிசமான கோபம். பின் ஒரு கேலிச் சிரிப்பின் வழிசல்.

"எதுக்குச் சிரிக்கிறே?"

"சிரிக்காம... நம்மாளுங்க ஒருத்தரை ஒருத்தர் பார்த்துக்கிட்டா முதல்ல கேட்டுக்கற கேள்வியே என்ன படம் பார்த்தே? - எத்தனை நாள் ஓடும்கறதுதான். ஏண்டா நான் எப்படி இருக்கேன்... நம்ம வாழ்க்கை எப்படி ஓடும்னெல்லாம் கேக்கவே யாருக்கும் தெரியாதா?"

- அதைக் கேட்டுப் பதில் சிரிப்பு சிரிக்கிறான் முகுந்தன்.

"நாம மோசமா இருக்கோம். இதைக் கேட்டுத் தெரிஞ்சுக்க வேண்டிய அவசியம் இல்லை. நம்ம வாழ்க்கை ஒரு தேங்கி நிற்கிற குட்டை. காவிரியே ஓட முடியாத பூமியில குட்டை தானா ஓடப் போகுது? ஆகையால வி டோன்ட் வான்ட் டு ஆஸ்க் திஸ் கொஸ்சன் ஆல்ஸோ... அப்புறம்?"

"அப்புறம் என்னடா அப்புறம்? இதை எல்லாம் மாத்த முயற்சிக்க வேண்டாமா?"

"முடியாது மோகன். முடியவே முடியாது. தலைவலின்னா மாத்திரை சாப்பிடலாம். நம்ம நிலையோ கான்சருக்கும் மேல. ஹியர் ஈஸ் நோ மெடிசின்."

"அப்ப என்ன பண்ணலாம்கறே?"

"இப்போதைக்கு ராக்கி போய்ட்டு வருவோம்கறேன். கிளம்பு."

"திரும்ப சினிமாதானா?"

"அலுத்துக்காதே. நான் பி.ஈ. முடிக்கணும். கேட் பாஸ் பண்ணணும். யு.எஸ். போகணும். எம்.எஸ் பண்ணணும்னு எவ்வளவோ கனவு கண்டேன். முடியலை. இப்போ அபிப்ராயத்தை மாத்திக்கிட்டேன்."

"எப்படி?"

"கோடம்பாக்கம் போகணும். பாலசந்தர் கால்லையாவது அகத்தியன் கால்லையாவது விழணும். ஸ்டார் ஆகணும். எலெக்ஷன்ல நிக்கணும். மினிஸ்டர் ஆகணும்..."

-மோகன்ராம் கடகடவென்று சிரிக்கத் தொடங்கி விட்டான். அவன் இப்படிச் சிரித்து நெடுநாள் ஆகிவிட்டது. கிழங்கு அவித்துக் கொண்டிருந்த மகாலட்சுமி கூட ஆச்சரியமாக நிமிர்ந்து பார்க்கிறாள்.

"என்னடா சிரிக்கிறே... நீ வேணா பாரு - இது நடக்கத்தான் போகுது."

"டேய் நீ விரக்தியில பேசறே..."

"என்னடா பண்ணச் சொல்றே... யுக்தி இங்க ஜெயிக்க மாட்டேங்குதே...?"

"ஜெயிக்கும்டா... பொறுமை வேணும்!"

"டேய்... நாமெல்லாம் எருமையே வெட்கப்படற பொறுமைசாலிகள். தெரிஞ்சுமா இப்படிச் சொல்றே?"

"இதோ பார் முகுந்தன். பீ பாசிடிவ். என்ன நானும் உன்னை மாதிரி இங்கிலீஷ் பேசறேனேன்னு பாக்கறியா? பேசணும். நான் மட்டுமில்ல. நம்ம சமூகமே பேசணும். அந்த அளவு அறிவு வளரணும். நீயும் உன் லட்சியத்துல கரை ஏறணும். தயவுசெய்து உன் எம்.எஸ். கனவைக் கோடம்பாக்கம் கனவா கன்வர்ட் பண்ணிடாதே. ப்ளீஸ். உனக்கு என்ன உதவி வேணும் - கேள். என்னால முடிஞ்சதைச் செய்யறேன்."

முகுந்தன் அதைக் கேட்டுக் கண்கள் பனிக்க மோகன்ராமின் கையைப் பிடித்துக் கொண்டான்.

"நீ இப்படிச் சொன்னதே போதும்டா..." என்றபோது குமட்டலாய் இருவரையும் ஊடுருவியது சாராய நாற்றம்.

திரும்பவும் கூடையில் சாராய டின்னோடு வீதியில் காளியப்பன்!

7

காளியப்பனைத் திரும்பவும் தெருவில் பழைய தீர்க்கத்தோடு பார்க்கவும் அதிக பட்சம் கசங்கிப் போகிறான் மோகன்ராம். முகுந்தன் புரிந்து கொள்கிறான்.

மோகன்ராமுக்கு எழுந்து போய் அவனைத் திரும்பத் தாக்க வேண்டும் போல் தோன்றியது. ஆனால் சமையல் கட்டிலிருந்து ஓடி வந்து அவன் முன் பதைபதைக்க நிற்கும் அவன் தாயும், முகுந்தனும் அவனைத் தடுப்பதுபோல் பார்க்கிறார்கள்.

"முகுந்தா, இவன் பண்றது கொஞ்சம் கூட நல்லால்ல... வீதியில போற ஓணானை எடுத்து மேல விட்டுக்கறான். எனக்குப் பயமா இருக்கு..."

"தெரியும்மா... நானும் கேள்விப்பட்டேன். மோகன், இவங்க விஷயத்துல ஒதுங்கிப் போறதுதான் நமக்கு நல்லது. அதுதான் நாகரிகமும் கூட..."

முகுந்தனின் கருத்துக்குப் பதில் முறைப்பு மோகன்ராமிடம்.

"டேய் இப்படியே விட்டு விட்டுத் தாண்டா இன்னிக்குப் பத்து வயசுப் பையன்லாம் தண்ணி போட்டுட்டுத் திரியற நிலை வந்திருக்கு..."

கை கால்கள் ஸ்தம்பிக்க, தறி ஓட்டம் நின்று போக, மோகன் ராம் கண்கள் சிவக்கப் பேசுவதை முகுந்தன் இளக்காரச் சிரிப்போடு அணுகுகிறான்.

"என்னடா சிரிக்கிறே...?"

"சிரிக்காம?"

"வயிறு எரியற விஸ்ஷயம்டா இது. சாராயத்தால நீ பாதிக்கப்பட்டிருந்தா இப்படிச் சிரிக்க மாட்டே..."

"நான் இல்லடா, இந்தத் தேசமே.. என் நம்ம கண்ணுக்குத் தெரியாத இந்திர சந்திர லோகங்களே பாதிக்கப்பட்டுத்தாண்டா கிடக்கு! அங்கெல்லாம் இதுக்குப் பேர்தான் வேற... சோமபானமோ என்னவோ... லுக் மோகன்ராம், இந்த விஷயத்துல பெரிய பெரிய அரசியல் தலைவர்களே தோத்துட்டாங்க. இது விஷயமா செய்யாத பிரசாரமும் இல்லை. எதுவும் குடிகாரங்க முன்னால ஒர்க் அவுட் ஆகலை. இது கூடாதுன்னு சொன்னவங்களும் தோத்து, காணாமப் போயிட்டாங்க. நீயும் அந்த லிஸ்ட்டுல சேர விரும்பறியா?"

முகுந்தனின் பொருள் பொதிந்த கேள்வி முன் மௌனம் கட்டிக் கொள்கிறது மோகன்ராம் மனசு. பதில் உடனேயே தெருவில் கிடைக்கிறது. அச்சுப் பிணைப்பு செய்து தினக்கூலியாக முப்பதோ, நாற்பதோ கிடைத்தாலே பெரிதென்று நினைக்கும் குமாரசாமித் தாத்தா குடித்துவிட்டு ஊறுகாய்க்காக மோகன்ராம் வீட்டு வாசலுக்கே வந்து நிற்கிறது.

"மகா... மகா... ஊறுகாய்..." - என்று எச்சில் ஒழுக விக்கல் குரலுடன் கேட்கும்போது மோகன்ராம் முகத்தில் ஒரு பிரளய உணர்வே தெரிகிறது.

"முகுந்தா, நீ என்ன சொன்னாலும் நான் கேக்க மாட்டேன். புத்தி சொல்லி இவங்களைத் திருத்த முடியாதுன்னும் எனக்குத் தெரியும். பயத்தால மட்டும்தான் இவங்களைக் கட்டுப்படுத்தலாம். அத நான் உருவாக்குவேண்டா... நிச்சயம் உருவாக்குவேன்..."

மோகன்ராம் கிட்டத்தட்ட பித்துப் பிடித்தது போலவே பேசுகிறான். ஆனாலும் பொருள் சிதறாத பேச்சு,

நைச்சியமாகத் தொடங்கி இதயமாய்ப் போய்க் கொண்டிருந்த பேச்சு இப்படியா இந்தக் காளியப்பனால் நிறம் மாறும்?

இட்லிப் பானையில் ஆவி அலையடிக்கிறது. விறகடுப்புப் புகை கூடச் சேர்ந்து கொள்கிறது. பக்கத்துக் கும்முட்டி அடுப்பில் சாம்பாரின் உற்சாகக் கொந்தளிப்பு.

மூக்கில், காதிலெல்லாம் கரிக் கிறலோடு அருகில் பானு. இன்னமும் வாழை இலையைப் பிரித்து நறுக்கவில்லை, தினத்தந்தி காகிதச் சதுரங்களைத் தொங்கும் கம்பி மூக்கில் கோத்து முடிக்க வில்லை. குடிக்கத் தண்ணீர் எடுத்து வந்திருக்க வில்லை. கைப்பிடி இல்லாத இரும்பு வாளியிலும் கை கழுவத் தண்ணீர் எடுத்து வைத்திருக்க வில்லை.

ஆனால் கடையோ திறந்தாகி விட்டது. ஒதுங்கி ஓரமாகக் கண்ணில் கட்டோடு அமர்ந்திருக்கிறாள் மந்தா. பானுவைத் தனது குரல் எனும் ரிமோட்டால் இயங்க வைத்துக் கொண்டிருக்கிறாள்.

மூக்கும் காதுமே சாம்பாரின் கொதிப்பை அடக்கச் சொல்கிறது. இட்லி முதல் ரவுண்டு வெந்து விட்டதையும் உணர்த்துகிறது. பானுவிடமோ சமாளிக்க இயலாத முணுமுணுப்பு.

"உம்... உம்... கைக்குக் கை வாய்க்கு வாய்னு வேலை நடக்கணும். அடுத்த ஈடு இட்லிக்கு மாவு ஊத்தி வெச்சுட்டுத் தண்ணி எடுத்துட்டு வர கிளம்பு. மத்தத நான் பாத்துக்கறேன்..." என்று அந்தக் குருட்டு வேதனையிலும் கடமை தழுவுகிறாள் மந்தா.

வயிறு இருக்கிறதே... அவளுக்கு மட்டுந்தானா? வீதிக்கே இருக்கிறதே... மந்தாவின் கடையை நம்பித்தான் எத்தனை ஜீவன்? மந்தாவும் கூடக் கடையைக்

கடையாகவா நடத்துகிறாள். சிலருக்கு அது அன்னதான மடம். பலருக்கு அது கடன் சொல்ல முடிந்த இட்லி வங்கி. ரொம்பப் பேருக்கு மிக நியாய நிலையில் கிடைக்கும் அற்புதமான மலிவுச் சரக்கு.

இரண்டு நாளாக கடை நடத்தாமல் போக அத்தனை பேரும் ஏமாந்து மந்தாவை ஆய்ந்த ஆய்வில் மந்தாவே திணறிப் போய் விட்டிருக்கிறாள்.

தப்பித் தவறி லாட்டரியில் லட்சம் விழுந்து இட்லி கடைக்கு ஒரு முழுக்குப் போடலாம் என்றால் கூட முடியாது என்கிற மாதிரி, அந்தக் கடை அவளுடன் பிணைந்து விட்டதை அவளால் உணர முடிந்தது.

பானுவும் புரிந்து கொண்ட மாதிரி இப்போதைக்குப் பாட்டியின் கண்ணாய் இருந்து ஓடியாடுகிறாள். ஒருவகையில் இந்த இட்லி கடையின் மறு பிறப்புக்கு மோகன் ராமும் கூட ஒரு காரணம்.

சாப்பிட வரும்போது பார்க்கலாமே...?

தனது அன்பைக் கூட ருசி மூலமாக உணர்த்த லாமே..?

முடிந்தால் நாலு வார்த்தை கூட பேசலாமே...?

அவன் நினைப்பாகவே அடுப்பெரித்து, இட்லி அவித்து, கண்கலங்க நிற்கும்போது கடைக்கு முன்னாலும் கூட ஏகமாய்க் கூட்டம்.

ஆளாளுக்குத் தட்டில் இட்லி போட்டு, சாம்பார் சட்னி போட்டுத் தூர உட்காரச் சொல்லி, பார்சல் இட்லி கட்டி, காசு வாங்கிப் போட்டு மீதிச் சில்லறை தந்து...

உஸ்ஸ்... அப்பாடா! இளைப்பெடுக்கிறது பானுவுக்கு, வியர்வையில் தெப்பமாகிறது உடம்பு. அழுக்கே படாமல் உடுத்திக் களிக்கும் பாவாடை தாவணியில் எல்லாம்

அழுக்கு பட்டுக் குனியும் போதும், நிமிரும் போதும் என்ன நடக்கிறதென்றே தெரியவில்லை.

ஆனால் ஒன்று மட்டும் பளிச்சென்று உறைக்கிறது. பாட்டி இந்த வயதிலும் எப்படி இந்தக் கடையைச் சமாளித்தாள் என்பதுதான் அது...

இட்லிக் கடைதானே என்கிற இளப்பம் இடிந்து விழுந்து, அந்த நினைப்பில் இப்போது கோபுரம் எழும்பிக் கொண்டிருக்கிறது.

பார்வைக்குச் சாதாரணமாய்த் தெரியும் தொழிலுக்குள் பிடிபட வேண்டிய ஒரு லயம் இருப்பதையும் எண்ணிப் பார்க்கிறாள். அவள் அப்படி எண்ணும்போது அவளை ராமசாமி மாமாவோ வேறுவிதமாய்ப் பார்த்துக் கொண்டிருந்தார், தோசைக் கல்லில் எண்ணெய்க் குச்சியால் ஒரு வட்டத் தீட்டு அவள் நிகழ்த்தும்போதெல்லாம்.

இனி மாமா தவறாமல் கடைக்கு வரப்போவது நிச்சயமாகிறது. மாமா மட்டுமா? அவர் சகாக்களுந்தான். விடலைக் கூட்டமும் கட்டி ஏறக்கூடும்.

இந்தப் பயம் முன்பே மந்தாவுக்கு உண்டு. அதனால்தான் பானுவைக் கடைப் பக்கம் அண்ட விடாதிருந்தாள். இப்போது வழியில்லையே...

அந்தக் கிழவி கடை நடக்கும்போது அடிக்கடி "யார் வந்திருக்கிறது... வெங்கிட்டுவா? குணாவா?" - என்று கேட்பதில் அதை உணர முடிகிறது. ராமசாமி மாமா குரலைக் கேட்ட மாத்திரத்தில் நிறைய பயப்படுவதும் கூடத் தெரிகிறது. அவனது சபலம் ஜெகப்பிரசித்தம்.

"அடியே இழுத்து மூடி பவிஷா வேலை பார்க்கணும். அதுதான் பொம்பள லட்சணம்" என்று ராமசாமிக்கும்

கேட்கும்படி உரக்கச் சொல்கிறாள். பானுவும் புரிந்து கொள்கிறாள்.

"கிழவி, ஏன் அதை அதட்றே...? இப்பத்தான் உன் கடைக்கு ஒரு களையே வந்திருக்கு.." - என்று இட்லி வாயுடன் ராமசாமியும் பதில் தருகிறான். அந்தப் பதிலால் பானு சற்றுச் சலனப்பட்டுப் போகிறாள்.

ஓ... இனி இப்படி வரும் பிரச்னைகளையும் எதிர்கொள்ள வேண்டி வருமோ?

வரும் என்ன, வந்தே விட்டது... தாமு வடிவில்!

"பார்றா... யாரது பானுவா? பானுவா கடைல... என்னா பானு உனக்கெதுக்கு இந்த அவதாரம்?"... கேள்வியோடு லுங்கியை ஒரு தினுசாக ஏற்றிக் கட்டுகிறான் தாமு.

"உனக்கு என்ன வேணும்?" - பானுவிடம் கோபமான கேள்வி.

"உம்... நான் கேட்டா கொடுத்துடுவியா?" - தாமுவிடம் கிண்டலான பதில் கேள்வி.

"நானும் செருப்பால அடிப்பேன். வாங்கிக்குவியா?"

"தோ பார்... நீ மட்டும் இல்ல - நானும் நிறைய தமிழ் சினிமா பார்த்தவன்தான். இந்த மாதிரி வசனமெல்லாம் நிறைய கேட்டுருக்கேன். நீ இப்படிப் பேசப் பேச எனக்குள்ளே கூடுதலா விழுந்துக்கிட்டே போறே... ஞாபகத்துல வெச்சுக்கோ..." - தாமு கணிசமாகப் பதில் கோபம் காட்டுகிறான். மந்தாவிடம் பதற்றம்.

"டேய் தாமு... அவகிட்ட என்னடா பேச்சு? இன்னிக்குத்தான் அவளைக் கடையில நிறுத்தியிருக்கேன். முத நாளே தகராறு பண்ணாதீங்கட. நீங்க நல்லா இருப்பீங்க..."

"அப்ப உன் பேத்தியை ஒழுங்கா பேச சொல்லு..."

"டீ பானு! வார்த்தைக்கு வார்த்தை பதில் பேசாம பொழப்பப் பாருடி..."

"வந்தவங்க சரியா நடந்துக்கிட்டா நான் ஏன் பாட்டி பேசறேன்...?"

"வியாபாரம்னா நாலும் இருக்கும்டி. நாமதான் அனுசரிச்சுப் போகணும். பேசாம வேலையப் பாரு."

- கிழவி மிக பயந்து விட்டது நன்கு தெரிகிறது. பானு கூட உடைந்து விட்டாள். கண்ணீரைச் சுண்டி விட்டபடி நிமிர்கிறாள். எதிரில் தூக்கு வாளியும் கையுமாக அவள். ஜனங்கள், யாரிடமிருந்தும் அவளுக்குச் சப்போர்ட்டாக ஒரு வார்த்தையில்லை. எல்லோர் விழியிலும் பயம். நமக்கு எதற்கு ஊர் வம்பு என்கிற பயம், ஊருக்கு ஊர், தெருவுக்குத் தெரு யூரியா போட்டு வளர்த்துக் கொண்டிருக்கிற பயம்!

கலங்கியபடியே அடுப்பு ஊத ஆரம்பிக்கிறாள்.

தாமுவும் ஓரமாக உட்கார்ந்து சிகரெட் பற்றவைக்க ஆரம்பிக்கிறான். பின், "சரி, சரி ஒரு ஆம்லெட் போடு" என்கிறான்.

"இங்க அதெல்லாம் போட்றதில்ல...."

"ஏன்?"

"இங்க சைவம் மட்டும்தான்."

"நான் சொல்றேன் அசைவமும் போடு."

"பாட்டி, இந்த ஆளைப் பாரு... வம்பு பண்றதுக் கின்னே வந்துருக்கான்."

"டேய் தாமு வேண்டாம்டா... விட்டுட்றா" - கிழவி திரும்பவும் பயந்து கெஞ்ச, இப்பொழுது அங்கே ஜவஹர் நுழைந்திருந்தான்.

"வா ஜ்வஹர்" என்கிற பலமான வரவேற்பு தாமுவிடம்.

"என்ன தாமு காலங்கார்த்தால கரைச்சல்...?"

"ஒண்ணுமில்லை. சும்மா பானுவைச் சீண்டிக்கிட்டிருந்தேன்."

"வேண்டாம் தாமு. அவ என் ஆள்!"

"அப்படியா... சொல்லவேயில்லையே?"

"இப்ப சொல்லிட்டேன்..."

"ரைட்மா... ரொம்ப சந்தோஷம்! அப்புறம்..."

"உன்னைப் பாக்கத்தான் வந்தேன். வா உனக்கொரு முக்கியமான வேலை வெச்சிருக்கேன்."

"சொல்லுபா, என்ன எதாவது டமால் டுமீல் வேலையா?"

"கிட்டத்தட்ட அப்படித்தான். எங்க தெருவுல ஒரு மகாத்மா குடியிருக்கான். நம்ப காளியப்பன்கிட்ட மோதி பெரிய பிஸ்தா வேலையெல்லாம் காட்டியிருக்கான். அவன் கைகாலை ஒடிக்கணும்."

"யாரு... அந்த மோகன்ராமைச் சொல்றியா?"

"அவனையேதான். பெரிய ஹீரோன்னு நினைச்சுக்கிட்டிருக்கான். அவனை ரெண்டுல ஒண்ணு பாக்கணும்."

- பானுவின் காதிலும் விழ வேண்டும் என்றே ஜவஹர் பேசப் பேசப் பானுவும் அருகில் எரியும் அடுப்போடு போட்டி போட்டுக் கொண்டு எரியத் தொடங்குகிறாள்.

"சரி, இப்பவே கதைய முடிச்சிடுவோமா?"

"ஏய்ய்... நீ என்ன - கை காலை ஒடிச்சா போதும்., ஸ்டேஷன்லயும் யாரும் இல்லை. எல்லாரும் மந்திரி பின்னாடி சுத்தப் போயிட்டாங்க. மீறி ஏதாவது வந்தாலும் நான் பாத்துக்கறேன்."

"தோ பாரு... எனக்கே அவனோட ஒரு கணக்கு இருக்கு. நீ கவலையே படாதே. வா, இரண்டு பேருமா சேர்ந்தே போவோம்."

இருவரும் மோகன்ராம் வீட்டைக் குறி வைத்து நடக்கின்றனர். இதுபோல் இதற்கு முன் பல பேர் வீட்டுக்குள் புகுந்து பலரது கால் கைகளை ஒடித்த முன் அநுபவம் நிறையவே அவர்களுக்கு உண்டு.

மோகன்ராம் தறிமேடை முன் திமிறிக்கொண்டு நிற்கும் இருவரையும் பார்த்து விதிர்க்கிறான்.

8

ஜவஹர் பாபுவையும், தாமுவையும் இப்படி வீட்டிற்குள்ளேயே மோகன்ராம் எதிர்பார்க்கவில்லை. சரி, அதற்காக வந்தவர்களிடம் பகைமை பாராட்டுவதும் பண்பில்லையே! "வாங்க... என்ன விஷயம்?" என்றபடி தறிமேடையில் நிமிருகிறான்.

"யாரு ஜவஹரா... வாப்பா வா - எங்க இவ்வளவு தூரம்?" மகா வேறு திருவட்டம் சுழற்றிய கையோடு கூடவே மனம் நிறைய பயத்துடன் எழுந்து வருகிறாள்.

"நாங்க ஒண்ணும் விருந்து சாப்பிட வரவில்லை..." பேச்சின் ஆரம்பமே ஜவஹரிடம் தினவாகத் தொடங்குகிறது.

"நாங்களும் விருந்து சாப்பிட கூப்பிடலைன்னு நினைக்கறேன்..." பட்டென்று மோகன்ராமும் பதில் தருகிறான்.

"ஆனா இப்படித் திமிறா பேசிக்கிட்டுத் திரியறே பாரு, அதுக்குத் தகுந்த பதில் கொடுக்கத்தான் வந்திருக்கோம்..." தாமு தாடையைத் தடவிக் கொண்டு அவன் பங்குக்கு ஆரம்பிக்கிறான்.

"என்ன பதில்... அடிக்கப் போறீங்களா?"

"ஏன் ஏற்கெனவே காளியப்பன்கிட்ட வாங்கினது போதலையா?"

"அந்தப் பேடி, நான் கொடுத்ததைச் சொல்லாம, அவன் செஞ்சதை மட்டும் சொல்லியிருக்கான் போல..."

பேச்சு மூவருக்கும் நடுவில் அனல் பாகமாய்ப் பெருகத் தெடங்க, மகாலட்சுமி கசங்கிப் போகிறாள்.

"ஜவஹர், நீ சண்டை போட வந்திருந்தாலும் சரி, எதுக்கு வந்திருந்தாலும் சரி... உக்காந்து பேசுப்பா..." என்று அவனிடம் உபசரணை காட்டுகிறாள். கிழிசல் பாயைத் தரையில் விரிக்கிறாள். அவன் அவள் பக்கம் திரும்பாமல், தறி மேடையில் இருக்கும் மோகன்ராமையே வெறிக்கிறான்.

"இதோ பார்... நீ உன்னை எவ்வளவோ பெரிய ஹீரோவா வேணா நினைச்சுக்கோ. ஆனா எங்க விஷயத்துல தலையிட்டே, சும்மா விட மாட்டோம்."

"தலையிடாத நாள்லேயும்தான் சும்மா விடலையே...?"

"என்னடா சொல்றே?"

"தமிழ்லதான் சொல்றேன். உன் குடியாலதான் என் அப்பா செத்தாரு. நாங்க வீட்டை இழந்தோம். என் அக்கா தூக்குல தொங்குனா. அதைத்தான் சொன்னேன்."

"அது அவங்க தலையெழுத்து... அதுக்கு நாங்க காரணமில்லை."

"இதே மாதிரி ஒரு பதிலை ஒரு நாள் நான் உங்களைப் பார்த்துச் சொல்வேன். அப்ப தெரியும் எது தலையெழுத்து, கால் எழுத்துன்னு..."

"ஜவஹர் இவன்கிட்ட பேசறது தப்பு. வந்த வேலையைப் பார்."

"என்னைச் சொல்லாதே... நீயே செய்."

"சரி, இப்பவே செய்யறேன். என் விஷயத்துலேயும் இவன் ஒரு சாட்சியா உறுத்திக்கிட்டு இருக்கான். தேரடி வீதியில நான் லட்சுமணனைத் தாக்கினதை இவன் பார்த்தானாம். கோர்ட்லையும் சொல்வானாம். கூடவே இதையும் சேர்த்துச் சொல்லட்டும். ஆறு மாசம்கறது ஒரு

வருஷம்னு மாறி நான் உள்ள இருந்தாலும் சரி. இனி இவன் என்னை நினைச்சாலே ஒண்ணுக்கிருக்கணும்."

பேசிக் கொண்டே ஒரு தீக்குச்சியைக் கொளுத்திய தாமு அதைப் பட்டுப் பாவின் மேல் போட்டு விட, அந்த விலை மதிப்பற்ற செல்வம் மோகன்ராம் கண் எதிரிலேயே திகுதிகுவெனப் பற்றி எரியத் தொடங்கியது.

"ஐயோ. நெசவுத் தறி சாமி மாதிரி. கொளுத்திட்டியேடா பாவி..." - அரற்ற ஆரம்பிக்கிறாள் மகாலட்சுமி. மோகன்ராமுக்கோ அவன் உடம்பே பற்றி எரிவது போல ஒரு பிரமை. திகுதிகுவெனவும் சடசடவெனவும் சப்தித்த படி எரிந்து, தொங்கின நிலையில் மெஷின் கட்டையருகு வரை வந்து விட்டது நெருப்பு. அணைக்கக் கூடத் தோன்றாது வெறிக்கின்றான் மோகன் ராம்.

மகாலட்சுமி உள் ஓடுகிறாள். இரும்பு வாளியில் தண்ணீர் மொண்டு வருகிறாள். பதற்றத்தில் மோகன்ராம் மேல் எல்லாம் அந்த நீர்த்தாரையைச் செலுத்துகிறாள்.

நெய்த பட்டு சதுரக் கட்டையில் சுருண்டு மடித்திருக்கும் அளவில் தண்ணீர் பட்டு நமுத்துப் போகிறது. தீயும் அணைகிறது. ஆனாலும் அந்தப் பட்டுப் பாவும் வேட்டியும் இனி கால் காசு பெறாது...

தாமுவும் ஜவஹரும் முறைப்போடு திரும்பி நடக்கின்றனர்.

வாசல் நிலைக்காலருகே நின்று கொண்டு, ஜவஹர் மட்டும் திரும்பிப் பார்த்து, "யார்கிட்ட வேணா போ... தெரிஞ்சதப் பார்... எது வந்தாலும் சரி, எங்களால ஏறி வெளிய வர முடியும். ஆனால் உன்னால முடியாது. ஞாபகம் வெச்சுக்கோ..." என்று ஒரு கடைசி எச்சரிக்கை வேறு செய்கிறான்.

வீதியே திரண்டு வந்திருக்கிறது. எரிந்த பட்டுத் தறியைப் பார்த்து உச்சுக் கொட்டுகிறது. 'அநியாயம், அக்கிரமம்' என்கிறது. கூடவே "நமக்கெதுப்பா ஊர் வம்பு? துஷ்டனைக் கண்டா தூர விலகணும்" என்ற பழமொழியையும் சொல்கிறது.

"ஹூம் எல்லாம் கலிகாலம். உலகம் அழியப் போகுது. அதான் இப்படி நடக்குது."

"மகாத்மாவையே சுட்ட மண்ணு இது. இங்க போய் நல்லதை எதிர்பார்க்கலாமா?"

- இப்படித்தான் அபிப்ராயங்கள் வந்தன. அனுதாபமும் கூடப் பாலாய்ப் பொங்கியது. ஆனால் யாரும் மறந்தும் இதற்கொரு நியாயம் பெற்றே தீர வேண்டும் என்கிற ஆவேசத்தை மட்டும் எங்கும் அடைந்த மாதிரியே தெரியவில்லை. எல்லோர் கண்களிலும் பயம் நன்றாகவே மின்னுகிறது. அதையும் தாண்டி நேர்மையாய் இருப்பது என்பது தவம் செய்வதைப் போன்ற ஒரு கடின காரியம் என்றும், சராசரி ஜனங்களுக்கு அது பிடிபடாத ஒன்று என்றும், அப்படியும் இப்படியுமாகத்தான் இருக்க முடியும் என்றும் நம்பிக் கொண்டிருக்கிற அவர்கள் எண்ணம் பளிச்சென்று புரிய வருகிறது. அதன் எதிரொலியாக விபரீத நியாயங்கள் கூடப் பிறக்க ஆரம்பிக்கின்றன.

"வேணும்னா ஜவஹரை ஊருக்கு வெளியே போய் வித்துக்கப்பான்னு சொல்லலாம். நீ சாராயமே விக்கக் கூடாதுன்னு சொல்றது சரியில்லை. நாள் பூரா நாயா உழைக்கிற நமக்கு அதை விட்டா வேற மருந்து இருக்கா என்ன?"

"நா பத்து வருஷமா குடிக்கறேன். நல்லாத்தான் இருக்கேன். என்னா கெட்டுப் போயிட்டேன்? மோகன்

அப்பனுக்குப் பூஞ்சை உடம்பு. போய்ட்டான். அது புரியாம சாராயத்தை நொட்டு சொல்லிக்கிட்டுத் திரியறான் இந்தப் பய..."

இடிந்தும் இடியாதபடி அமர்ந்திருக்கும் மோகன் ராமின் காதுகளையும் இந்தக் கருத்துக்கள் எட்டாமல் இல்லை. மௌனமாய் இருக்கிறான் அவன். பதிலடி எப்படி கொடுக்கப் போகிறான்? கேட்கிறான் முகுந்தன்.

"என்ன பண்ணப் போறே?"

"என்ன பண்ணலாம், நீயே சொல்லு..."

"மன்னிச்சுடப் போறியா?"

"அது தப்பை உணர்ந்தவங்க விஷயத்துல செய்ய வேண்டியது. இது அப்படி ஒரு விஷயமா?"

"இல்ல... இவங்க அரக்கங்க! அழிக்கப்பட வேண்டியவங்க."

"சரியாச் சொன்னே... அழிக்கத்தான் போறேன்."

"மோகன், நீ ஒண்ணும் ரஜினி, கமல் இல்லை. நம்ம வாழ்க்கையும் சினிமா இல்லை. நம்ம ஜனங்களும் சரியானவங்க இல்லை."

"தெரியும்... அதுக்காக.?"

"எப்படி அழிப்பே?"

"எப்படியாவது அழிக்கணும்."

"எப்படியாவதுன்னா? நக்ஸலைட்டா மாறப் போறியா? வேண்டாம்..."

"நிச்சயம் அப்படி எல்லாம் மாற மாட்டேன்."

"நம்மளைச் சாராயம் மட்டுமா பாதிக்குது? முதலாளிமாருங்க, சினிமாக்காரங்க, அரசியல்வாதிங்க எல்லோரும்தான் பாதிக்கறாங்க. பேசாம விட்டுடு. கடவுள்

பாத்துக்குவார்." முகுந்தன் கூடக் கிட்டத்தட்ட சராசரி கருத்துக்கே வந்து விட்டதில் மோகன்ராமிடம் சிரிப்பு.

"என்னடா சிரிக்கிறே...? நான் சொன்னதுல என்ன தப்பு? மோசமான உலகம்டா இது. நமக்குப் பிடிக்கலைன்னா நாமதான் ஒதுங்கிப் போகணும். இல்லைன்னா அது நம்மை ஒதுக்கிடும். அவ்வையாரும் வள்ளுவரும் சொல்லாததையா நாம சொல்லிடப் போறோம்? காந்தியை விடவா ஒரு மகாத்மாவைப் பாத்துடப் போறோம்? எல்லாரும் தோத்தவங்கதானே? நீ மட்டும் எப்படிடா ஜெயிக்க முடியும்...? வேண்டாம் விட்டுடு. பரீட்சை வருது. படிக்கற வழியைப் பார். அந்த ஜவஹருக்கே வக்கீலாகிக் காசு சம்பாதிக்கற வழியைப் பார். அதுதான் யதார்த்தம்... அதுதான் புத்திசாலித்தனம்."

முகுந்தன் ஆழமாக உழுது விட்டுப் போய் விட்டான். மோகன்ராம் மனத்தைச் சலிப்பு கவ்விக் கொள்கிறது. நல்லதற்கு நிஜமாலுமே காலம் இல்லையா? கேள்வியின் பிடியில் அகப்பட்டு அல்லாட ஆரம்பிக்கிறான்.

நாமமலை அடிவாரத்தில் ஆலமரப் பந்தலுக்குக் கீழே அந்த ஆசிரமும் அழகு... பயிற்சியும் கூட அழகு! அந்த ஆசிரமத்தைக் கைவசம் புத்தகத்தோடு தாண்டிச் செல்கிறான் மோகன்ராம். எப்பொழுதும் பளிச்சென்று இருப்பவன் முகத்தில் இப்போது கருமை பூசிக் கிடக்கிறது. தாடையில் கூட அறுவடை வயல் போலச் செதில் செதிலாகச் சிரைக்காத முடிக்கூட்டம். யாரை அது ஆச்சரியப்படுத்தியதோ இல்லையோ, தேசிகாசாரியை அது மிக ஆச்சரியப்படுத்துகிறது. ஏன் எதற்கு என்று தெரியவில்லை. அருகில் கம்புச் சண்டையில் கலக்கிக் கொண்டிருந்த ஒருவனைக் கூப்பிட்டுக் கேட்கிறார்.

"டேய் அது மோகன்ராம்தானே?"

"ஆமாம் குரு..."

"ஏன் ஒருமாதிரி இருக்கான்?"

"சும்மா இல்லாம சாராயக்கார ஜவஹர் பாபுகிட்டேயும், தாமுகிட்டேயும் முறைச்சிக்கிட்டான். அவங்க அவன் பட்டுத் தறிக்கே நெருப்பு வெச்சிட்டடாங்க. அதான்...?"

"இவன் திருப்பி அடிக்கலையா?"

"அது எப்படி முடியும் குரு...? அவங்க அடிப்பாங்க, அடியும் வாங்கிக்குவாங்க... ஜெயில் அவங்களுக்கு மாமியார் வீடு மாதிரி. போவாங்க வருவாங்க. நம்மளால முடியுமா? ஒதுங்கிப் போறதுதானே நமக்கு மரியாதை...?"

"இது அவன் அபிப்ராயமா... இல்லை உன் அபிப்ராயமா?"

"எல்லார் அபிப்ராயமும்..."

"ஓஹோ... அப்ப எதுக்கு உனக்கு இந்தச் சிலம்பம், யோகப் பயிற்சி எல்லாம்?"

தேசிகாசாரி கேள்வி முன் பதில் சொல்லி வந்தவனிடம் ஒரு திணறல்... அடர்ந்த மௌனம்.

'இவர் என்ன சொல்கிறார்? திருப்பித் தாக்க வேண்டும் என்றா? அது எதிரியை ஓட விரட்டினால் நல்லது... மாறாகப் பகையைக் கூட்டி வளர்த்து எதிலெதிலெல்லாமோ போய் முடியுமே...?"

அவன் மனத்துக்குள் நினைக்கிறான். ஆனால் கேட்கவில்லை. இருந்தபோதிலும் தேசிகாச்சாரி அவன் சிந்தனையை வார்த்தை விடாமல் அப்படியே சொன்னார்! சொல்லி விட்டு மோகன்ராமை நோக்கிக் கிளம்புகிறார்.

'இவர் எப்படி மனத்தில் இருப்பதை வார்த்தை மாறாமல் பிட்டு வைத்தார்?' - சிலம்பக் கழியோடு

நிற்பவன் தேசிகாச்சாரியின் இந்தச் சக்தியைப் பலமுறை பல இடங்களில் பார்த்து விட்டான்.

இந்த எண்பது வயது கிழத்தை யாராவது பார்த்தால் ஐம்பதுக்கும் குறைவாகத்தான் மதிப்புப் போடுவார்கள். அத்தனை இளமை, அத்தனை திடகாத்திரம்! கட்டுமஸ்தான உடம்பு, நரைக்காத தலை, உதிராத பற்கள் என்று சகலத்திலும் மார்க்கண்டேயம்!

உச்சி முடி உதிர்வதில் இருந்து எப்போது எங்கே எச்சில் உமிழுவோம் என்பது வரை சகலமும் எப்பொழுதோ தீர்மானமாகி விட்ட விஷயங்கள் என்று அவர் சொல்லும் போது, சிலருக்கு அது ஒரு பிற்போக்குச் சிந்தனையாகத் தெரியலாம். ஆனால் அவர் அதில் இந்த விநாடி வரை அணுவளவு மாறவில்லை. தண்டவாளத்தை விட்டு விலகாத பெட்டிகளைப் போல, விதியை விட்டு வாழ்க்கை விலகுவதேயில்லை என்பதும் அவர் நம்பிக்கை.

அதனாலேயே அவர் வரை வாழ்க்கை பாரமானதாக இல்லை; இலேசானதாகவும் இல்லை. கடமையைச் செய்து கொண்டேயிரு - நடப்பது தானாக நல்லவிதமாகவே நடக்கும் என்கிற கீதா ஸ்லோகத்தைப் பல கோணத்தில் புரிந்து வைத்துக் கொண்டிருக்கிறார்.

ஒரு காலத்தில் பட்டு நெய்த நெசவாளி. இப்போதைக்கு யோகி. தனியே ஆஸ்ரமம், யோகம் என்று ஒதுங்கி விட்டிருக்கிறார். ஆனாலும் சிலர் அவரை ஒதுங்க விடாமல் குருவே என்று சரண் புகுந்திருக்கின்றனர்.

அவருக்குத் தெரிந்த சிலம்பம், வர்மம், யோகம் எல்லாவற்றிலும் நுனிப் புல் மேயவும் தொடங்கியிருக் கின்றனர்.

இப்பொழுது கூட அந்தக் கூட்டம் விர்ர்ர் விர்ர்ர் என்று கழி சுற்றுக் கொண்டும் தண்டால் பஸ்கி எடுத்துக் கொண்டும்...

அந்த மேற்பார்வையையெல்லாம் விட்டு விட்டு இப்பொழுது எதற்காக மோகன்ராமைத் தேடிப் போகிறார்? அவன் அவர் போன திக்கையே பார்த்து நிற்கிறான்.

நிச்சயம் அதில் பெரிய அர்த்தம் இருப்பதாக நம்புகிறது அவன் மனது.

அருகில் அமர்ந்து கொண்டு படிக்கவே மனம் ஒட்டாமல் எதிர்ச்சாரியில் தெரியும் அடிவாரச் சருக்கத்தையே பார்த்த மாத்திரத்தில் பக்தி, பணிவு, பரவசம் எல்லாம் குழைந்தடித்து வருகின்றன.

"எல்லாம் கேள்விபட்டேன்பா..." என்று ஆரம்பிக்கிறார். அவனிடம் ஊன்றுதல்.

"நல்லதுக்கே காலமில்லாம போச்சுன்னு நினைச்சு வெறுத்துப் போயிட்டியோ?" அந்தக் கேள்வி முன் ஆமோதிப்பாகத் தலையசைக்கிறான்.

"இல்லைப்பா... காலம் சரியாத்தான் போய்க்கிட்டிருக்கு..." - இந்தக் கருத்துக்காகத் துளி சிரிக்கிறான்.

"நீ என் கருத்தை ஒதுக்க மாட்டேங்கற, அப்படித்தானே?"

"ஏன் உங்களுக்கே தெரியாதா?" எதிர்க்கேள்வி கேட்கிறான்.

"எதை வெச்சுக் கெட்டுப் போச்சுங்கறே?" அவர் எதற்காக இப்படிக் கேட்கிறார் என்று தெரியவில்லை. ஆனாலும் சிரிக்காமல் இருக்க மோகன்ராமால் முடியவில்லை.

"சிரிக்காம பதில் சொல்லு..."

"நீங்க எதுக்குக் கேக்கறீங்கன்னு நான் தெரிஞ்சுக் கலாமா?"

"அதைப் பிறகு சொல்றேன். நீ என் கேள்விக்குப் பதில் சொல்லு..."

"எதைச் சொல்ல... ஒண்ணா இரண்டா? தொட்ட இடமெல்லாம் ஊழல். ஒரு பக்கம் சுரண்டல் கூட்டம் - மறுபக்கம் பயந்த கூட்டம். மழை கூடப் பருவம் தப்பிப் பெய்யற கொடுமை. மார்கழியிலயும் வெயில் தாளாத நிலைமை. எதைச் சொல்ல இதுல..."

"இவ்வளவுதானா... இல்லை, இன்னும் இருக்கா?"

"நிறைய இருக்கு... நல்லது கெட்டது எல்லாத்துக்கும் நடுவில் ஏற்பட்டுப் போச்சு... படிப்பு, கல்யாணம் உத்தியோகம் எல்லாமே இன்னிக்குப் பணத்தோட பிடில. இந்தப் பணமோ ரவுடிகள்கிட்டே... மோசமான மனிதர்கள் கிட்டே..."

"உம்... அப்புறம்?"

"கண் எதுக்க கொள்ளை நடக்கும்; வேடிக்கை பார்ப்போம். ஆனா கண்ணுக்கே தெரியாத ஜாதிக்காகக் கலவரத்துல பஸ்ஸைக் கொளுத்துவோம். ஒரு கோயில்ல பொறுமையா வரிசையில் நிக்க சகிக்க மாட்டோம். ஆனா சினிமா தியேட்டர்ல சாயங்கால ஆட்டத்துக்கு மத்தியானமே போய்த் தவம் இருப்போம். பக்கத்து வீட்டுல, குடியிருக்கற தெருவுல, வசிக்கற ஊருல, எவ்வளவோ திறமைசாலிகள் இருப்பாங்க. திரும்பிக் கூடப் பாக்க மாட்டோம். ஆனா சினிமாக்காரனுக்கு மன்றம் வெப்போம். உடல் மண்ணுக்கு, உயிர் அவனுக்கும் போம்..."

ஓர் ஆயிரம் வெடி வரிசை போல மோகன் வெடித்து நிற்பதைப் பளிச்சென்ற கண்ணோடும் ரசனையோடும்

பார்க்கும் தேசிகாச்சாரி விடாமல், "அப்புறம்?" என்று விடாமல் கேட்கிறார்.

"அப்புறம் என்ன அப்புறம்? முன்ன இந்த மோசடி வித்தை ஜனக்கூட்டத்துகிட்ட மட்டும்தான் இருந்துச்சு. இப்ப தெய்வத்துகிட்டேயும் போயிடிச்சு. வருஷம் பூரா எப்படி வேணா இருக்கலாம். ஒரு நாற்பது நாள் விரதம் இருந்து சபரமலை போய்ட்டு வந்தா அதெல்லாம் சரியாயிடும்கற அளவுக்கு வந்தாச்சு. பவித்ரமா பக்தி சிரத்தையோட தவமிருந்து போய் வரவேண்டிய இடம், இன்னிக்குக் கிட்டத்தட்ட ஒரு பிக்னிக் ஸ்பாட் ஆக ஆரம்பிடிச்சு. அற்புதமான அந்த மூலிகை மலைக்காடு இப்போ சிறுநீரும் மலமும் பட்டு நாறத் தொடங்கியிருக்கு. இதைச் சொன்னா என்னை நாத்திகன்னும் கிறுக்கன்னும் சொல்லிக் கல்லால அடிக்கற அளவு ஒரு நிலை. ஆரோக்கியமா ஒரு விஷயம் இல்லை. ஏன் பிறந்தோம்னு இருக்கு. நீங்க என்னடான்னா காலம் சரியாத்தானே இருக்குங்கிறீங்க..."

- மோகன்ராம் புயலடித்து ஓய்ந்த மாதிரி உலுங்கிப் போய் அவரைப் பார்க்கிறான்.

அவரிடமோ ஓர் அர்த்தமுள்ள கேள்வி.

"ஆமா, நீ இனி எப்படிச் செயல்படப் போறே?"

9

நீ இனி எப்படிச் செயல்படப் போறே?" - தேசிகாச்சாரியின் கேள்வி முன் அவரையே வெறித்துப் பார்க்கிறான் மோகன்ராம். 'எப்படிச் செயல்படுவது?' ஒரு முடிவுக்கு வர முடியாத கேள்வியாக நிரடிக் கொண்டிருக்கிறது அது. 'நிச்சயம் ஒதுங்கி நமக்கெதுக்கு ஊர் வம்பு என்று போய் விடப் போவதில்லை. அதற்காக முண்டாசு கட்டிக்கொண்டு கிளம்பவும் முடியாது. இது இரண்டுக்கும் நடுவில் கண்ணுக்குத் தெரியாத, ஆனால் அறிவுக்குத் தெரிந்த ஒரு பாதை இருக்கிறது. அதில்தான் போக வேண்டும்.

'ஆமாம் அதில்தான் போக வேண்டும். அதில் செல்ல நிறைய பொறுமை வேண்டும்; மனோதிடம் வேண்டும்...' - ஒரு பக்கம் மோகன்ராம் நினைத்துக் கொண்டே போக,

தேசிகாச்சாரி அதை அப்படியே போட்டு உடைக்கிறார். கூடவே அதுதான் சரியான முடிவு என்கிறார். ஆச்சரியத்தில் மோகன்ராம் அரண்டு போகிறான். 'மனத்தில் இருப்பதை எப்படி இவர் கண்டுபிடிக்கிறார்?" என்ற கேள்வியில் இப்பொழுது சிக்கிக் கொள்ளுகிறான்.

"இதோ பார் மோகன்! நான் சொல்றதை நல்லா கேட்டுக்கோ..." என்று அவன் எதிரே பாறை மேல் ஏறி ஒரு ரிஷி போல அமருகிறார். அமர்ந்த விதம், பார்க்கும் பார்வை, பின்னால் சொல்லி வைத்த மாதிரி அவர் சிரத்துக்குப் பின்னால் வந்து நிற்கும் மாலைச் சூரியன்

எல்லாமாய்ச் சேர்ந்து அவரைத் தெய்வ வடிவாகவே காட்டுகின்றன.

"காலத்துல நல்ல காலம் கெட்ட காலம்னு எதுவுமில்லை. சூரிய சந்திரர்கள் தங்கள் கடமையை இது நாள் வரை ஒரு முறை கூட மறந்ததில்லை. கொஞ்ச மாகவோ இல்லை கூடவோ மழையும் பெய்யத்தான் செய்யுது. பசு பால் தராம இல்லை. கதிர் நெல் தராம இல்லை... இயற்கை தன் கடமைல தவறலை. ஆறாம் அறிவுள்ள மனிதன்தான் இந்தப் பூமியிலேயே கடமை தவறினவன். அந்தத் தவறுக்குத் தண்டனையையும் அவன் வாழற நாள்ளேயே அடையறான். அதனாலதான் ஏற்ற இறக்கம் சந்தோஷம் துக்கம் எல்லாம்.

"இப்படித்தான் நேற்றும் இருந்தது. இன்னிக்கும இருக்கு. நாளையும் இருக்கும். இதுக்கு நடுவுல இதை எல்லாம் புரிஞ்சுக்கறவன்தான் ஞானி. இத முதல்ல புரிஞ்சுக்கோ... ஒரு தப்புக்கு இன்னொரு தப்பு சரியான பதிலாகாது. அதே சமயம் ஒதுங்கிப் போறதும் உத்தமமில்லை. ஆகையால கடவுளே எனக்குச் சரியான பாதையைக் காட்டுன்னு கடவுளோட ஒரே போராட்டத்த தொடங்கு. அவர் நிச்சயம் வழிகாட்டுவார்."

தேசிகாச்சாரியின் பேச்சில் துளி நம்பிக்கை துளிர் விடத்தான் செய்கிறது. ஆனாலும் ஒரு கேள்வியும் எழும்புகிறது.

"கேட்காமலே காட்ட கடவுளுக்குத் தெரியாதா?" - இந்தக் கேள்விக்குத் தேசிகாச்சாரியிடம் ஒரு அர்த்தமுள்ள புன்சிரிப்புதான் பதிலாகப் பூக்கிறது.

"எதுக்குச் சிரிக்கிறீங்க?"

"அவன் காட்டாம இல்லை."

"அப்ப எனக்கு அவன் பாதை காமிச்சுட்டானா... எனக்குத்தான் அது தெரியலையா?"

"ஆமாம்..."

"உங்க வாதத்தை நான் ஒத்துக்க மாட்டேன். நான் எற்கெனவே சோர்ந்து போயிருக்கேன். நீங்க எதை எதையோ பேசி எனக்குள்ள மேலும் சோர்வைத்தான் உருவாக்கறீங்க..."

"அப்படியா? நல்லது..." - தேசிகாச்சாரி பேசியது போதும் என்பது போலக் கிளம்புகிறார்.

"என்ன இது... என் கேள்விக்குப் பதில் சொல்லாமப் போறீங்களே...?" தேசிகாச்சாரியிடம் திரும்பவும் சிரிப்பு.

"உங்களை மாதிரி பெரியவங்க இப்படி நடந்துக்கக் கூடாது. பேசினா வேதாந்தம், இல்லேன்னா வறட்டுச் சிரிப்புன்னா அதுக்கு என்ன அர்த்தம்...?"

"உனக்கு இன்னும் பக்குவம் வரலைன்னு அர்த்தம்..."

"ஓஹோ... உங்களை மாதிரி குழப்பறதுக்குப் பேர்தான் பக்குவமா?"

"கோபப்படாதே மோகன். நான் சொன்னதுல ஒரு தப்பும் இல்லை."

"அத நான் சொல்லணும். ஒரு தப்பான விஷயத்தைக் கண்டு ஒதுங்கக் கூடாது... அதை ஒதுக்கவும் கூடாது. இதுவரை பேச்சு சரி. கடவுள் பாதை காட்டுவார்னீங்களே அது எந்தப் பாதை...? தெளிவா சொல்லுங்க."

"அத சொல்லால விளக்க முடியாது, மோகன். மனசுல பிடிபட வேண்டிய விஷயம் அது."

"இத சொல்லவா நீங்க இங்க வந்தீங்க...?"

"அதுக்கு மட்டுமல்ல... தினமும் இந்த ஆஸ்ரமத்துக்கு நீ வரணும்; தியானம் பழகணும். அதையும் சொல்லத்தான் வந்தேன்."

"அதெல்லாம் நாளைய பொழுதுன்னு ஒண்ணு இருக்கிறதா நம்பறவங்களுக்கு, எனக்கில்லை. என் வாழ்க்கை எப்படிப் போகும்னே தெரியலை."

"ரொம்ப நல்லவிதமா போகப் போகுது மோகன். நம்பிக்கை வை."

தேசிகாச்சாரி பேச்சோடு பேச்சாக அவன் தோளில் கை போடுகிறார். அவன் உடம்பிலும் எண்ணத்திலும் சரேலென்று மாற்றம். மனத்தில் கூட அலையடித்து ஓய்ந்தது போல ஒரு நிசப்தம்.

"மோகன் ஒரு விஷயத்த ஞாபகத்துல வெச்சுக்கோ... யாரையும் வெறுக்காதே. ஒருத்தன் செய்யற தப்புக்குக் கூட ஒரு சரியான காரணம் இருக்கு. இன்னொரு விஷயத்தையும் சொல்றேன். நல்லா கேட்டுக்கோ, வலிதான் ஞானம்! துன்பம்தான் உண்மையான இன்பம்! இது போகப் போகப் புரிஞ்சுப்பே."

பேசிவிட்டு நகர்கிறார் தேசிகாச்சாரி. அவரையே வெறிக்கிறது மோகன்ராமின் இமைக்க மறந்த பார்வை.

உளளையிட்டபடி ஊர்ந்து கொண்டிருக்கிறது திருப்பாப்புலியூர் பாசஞ்சர். டயர் உருட்டி விளையாடும் சில சட்டை போடாத சிறுவர்கள் முடிந்தவரை உற்சாகமாக அதோடு சேர்ந்து ஓடப் பார்க்கின்றனர். சிலரிடம் சினிமாப் பாதிப்பு. வாயில் பின்னணி இசை சப்தம் கொடுத்தபடி ஆள்காட்டி விரல் நீட்டி, சொச்ச விரல் மடக்கித் துப்பாக்கியால் கடும் போஸோடு ஓடுகின்றனர்.

ரயில்வே லைனை ஒட்டிய சின்னக் காலனிவாசிப் பெண்கள் சிலர் பசங்களின் அந்த விளையாட்டைப் பார்த்து அலறுகின்றனர்.

"நாசமா போனவங்களா... ஓடி ... மேல் வெக்காதீங்கடா."

"சும்மாரு. ரயில்லே திருடன் போறான். பிடி... ...ண்ணி போறோம்."

"கிழிச்சீங்க... போய்ப் படிக்கற வழியப் பாருங்கடா..."

சம்பாஷணைகளைக் காதில் வாங்கியபடியும், சற்று விரைத்த முகத்தோடும் காலனியைக் கடந்து கொண்டிருக்கிறாள் சுசீலா. ரயில்வே லைனைக் கடந்தால் காலனிக்கு எதிர்சாரியில் அடர்ந்த கருவேலங்காடு. காலனிவாசிகளின் கொல்லைப் பகுதி அது. அதன் மையப் பகுதி கடந்தால் திருமணிமுத்தாற்றின் ஒரு சின்னக் குறுக்கீடு.

ஒரு காலத்தில் அகலக் கால் விரித்து அலை பாய ஓடிய ஆறுதான் அது. நேர் எதிரில் நிமிர்ந்து பார்த்தால் தெரியும் சேர்வராயன் மலைக்கூடம். அந்த மழை நீருக்கெல்லாம் ஒரு போக்கிடமாகவும் கூடவே முத்தையும் மணியையும் உருட்டிக் கொண்டும் வந்த அந்த ஆறு, இன்று நாகரிக ஜனக் கூட்டத்தால் திருடப்பட்டு விட்டது! கடல் கூட அலை கைகளோடு சப்தம் போட்டுக் கொண்டிருக்காவிட்டால் அபேஸாகியிருக்கும் என்று சொல்லாமல் சொல்லிக் கொண்டிருக்கும் அந்த ஆற்றின் காய்ந்த மணல் வெளியில்தான் சாராய ஊறல்கள் பூமியில் புதைக்கப்பட்டிருக்கும். காவலாக ஒரு கூட்டம் சீட்டாடிக் கொண்டிருக்கும். தாமு பெரும்பாலும் அங்கேதான் இருப்பான். இன்றும் இருக்கிறான். எதிரில் வந்து நிற்கிறாள் சுசீலா. நிமிர்ந்து பார்க்கும் தாமு "வா சுசீலா" என்கிறான் சிநேகத்தோடு.

"பட்டுத் தறிக்கு நெருப்பு வெச்சிட்டியாமுல்ல...?" அவளிடம் ஆவேசம்.

"ஓஹோ... வக்காலத்து வாங்கிட்டு வந்துருக்கியா...?"

"ஏன், கேக்க யாரும் இல்லைன்னு நினைச்
யோ?"

"அதான் நீ வந்துருக்கியோ... ஆமா அதுக்கென்ன
பபோ?" - படு எகத்தாளம் தாமுவிடம்...

"ஒண்ணுமில்ல பாராட்டிட்டுப் போகலாம்னு வந்தேன்." பேசிக் கொண்டே பக்கத்தில் ஐந்து கருங்கல் வைத்த அடையாளத்தோடு உள்ள மணற்பரப்பைத் தோண்ட ஆரம்பிக்கிறாள்.

"ஏய்... ஏய் எதுக்கு ஊறலை வெளிய எடுக்கறே...?"

"உம்... ஊத்தி குடிக்கத்தான். பார்ட்டி தரப் போறேன் தாமு."

"என்ன சுசீ... புதிர் போடறே? கட்சி மாறிட்டியா?" - சந்தேகத்தோடு தாடையைச் சொறிகிறான் தாமு.

"அப்படித்தான் வெச்சுக்கேயேன்..." - ஊறல் டின்னை வெளியில் எடுத்துக் கட்டை மூடியைப் பிடுங்கி எறிந்து விட்டு, அதன் தாங்கமுடியாத நாற்றத்திற்காக ஒரு சிலிர்ப்பு சிலிர்ப்புகிறாள் சுசீலா. அதில் சற்று வழுக்க ஆரம்பிக்கிறான் தாமு. ஊற்றித் தர ஆரம்பிக்கிறாள். அவளை விழுங்கியபடியே அதையும் விழுங்குகிறான். காட்டம் அதிகம். போதை வேகமாக ஏற ஆரம்பிக்கிறது. காது மடல் கட்டை போல் விரைத்துக் கொள்கிறது.

"தாமு, உன் கைத்தடிகளைக் கொஞ்சம் போகச் சொல்லேன்..." செல்லக் கட்டளை வேறு சுசீலாவிடம். தாமு புரிந்து கொள்கிறான். அவர்களும் அசட்டுப் பார்வை பார்த்தபடி எழுந்து நகர்ந்து கொள்கின்றனர்.

"ஊறுகா இல்லாம இதக் குடிக்கறது இருக்கே, அது விஷத்தைக் குடிக்கற மாதிரி..." - கையை முறுக்கிக் கொண்டு தாமு அபிப்பிராயம் வேறு சொல்கிறான். அவள் திரும்பத் திரும்ப ஊற்றுகிறாள், ஏதோ ஒரு தீர்மானத்தோடு.

ஒரு கட்டத்தில் டின் சாராயத்தையே அவன் மேல் அபிஷேகிக்கிறாள்.

"ஏய் என்ன இது... எசகுபிசகா எதையாவது பண்ணி வைக்காதே! நீ ஒரு டைப்பான பொம்பளை..."

அவளிடம் அதைக் கேட்கவும் சிரிப்பு.

"ஆமா, நான் ஒரு டைப்பான பொம்பளைதான்" என்கிறாள், அந்தச் சிரிப்பு கலையாமல்.

"ஆமா... உன் உயிர் சினேகிதியோட தம்பியாச்சே அந்த மோகன்ராம். அவனுக்காக என் கூட சண்டை போடுவேன்னு பார்த்தா சாராயத்தை ஊத்திக் கொடுத்துச் சந்தோஷப்படுத்தறியே..." - கேள்வியோடு எழுந்திருக்கப் பார்க்கிறான். முடியவில்லை. காலிரண்டும் பின்னிக் கொண்டிருக்கிற மாதிரி ஒரு பிரமை.

"என்ன நிக்க முடியலையா?"

"கல்ராயன் மலைச் சரக்காச்சே... மோந்தாலே போதை வருமே... எப்படி நிக்க முடியும்?"

"நல்லது... இதுக்குத்தான் காத்திருந்தேன் தாமு. சோறு போடற பட்டுத் தறிக்கா நெருப்பு வெச்சே...? நாயே இப்போ நான் உனக்கு வைக்கப் போறேண்டா..."

பேசிக் கொண்டே தீப்பெட்டியை ரவிக்கை மறைப்பிலிருந்து வெளியே எடுக்கிறாள். அதை உரசு முன்பே தாமு தீப்பிடித்தது போல அவளையே பார்க்கிறான்.

"நான் முழுக்க நனைஞ்சவ... பொட்டச்சித் தானேன்னு உனக்குத்தான் எவ்வளவு இளக்காரம்....! மானத்தோட வாழற வரைக்கும்தான் தாமு ஒரு பொம்பளை பசு, அந்தக் கோட்டை தாண்டிட்டா அவளுக்குக் கீழ தாண்டா பூமி. இது தெரிஞ்சதனாலதான்

பெரியவங்க கற்பு, கட்டுப்பாடுன்னு அடக்கிக் கட்டி வெச்சிருக்காங்க."

"ஏற்கெனவே சினிமா ஆசை காட்டி என் மானத்துக்கு விலை வெச்சவனும் நீதான். என்னை இப்படி ஆக்கினதுல உனக்கும் ஒரு பங்கு உண்டு. அது பழைய கணக்கு. போகட்டும்னு விட்டா ஆட்டக் கடிச்சு மாட்டக் கடிச்சு மனுஷனையே கடிச்ச கதையா என் தம்பி கிட்டையேவா உன் கை வரிசையைக் காட்டுனே... நாயே எரிஞ்சு சாம்பலாகுடா..."

- பற்கள் நறநறக்க, சுறுவியபடியே தீக்குச்சியை உரசி அவன் மேல் போடுகிறாள். அலற ஆரம்பிக்கிறான் தாமு. ஆற்று மணலில் விழுந்து புரளத் தொடங்குகிறான். சப்தம் கேட்டு ஒதுங்கியிருந்த அவன் சகாக்கள் ஓடி வருகின்றனர். ஒரு பக்கம் சுசீலா திரும்பி ஓடத் தொடங்க, மறுபக்கத்தில் தாமுவைக் காப்பாற்றும் முனைப்பு.

அடுப்பில் மரவல்லிக் கிழங்கு வெந்து கொண்டிருக்க ஈரவிறகுடன் ஓர் உச்சகட்ட போராட்டம் நிகழ்த்திக் கொண்டிருக்கிறாள் மகாலட்சுமி.

"க்கவூக்க்..." - ஒருக்களித்துச் சாத்தப்பட்டிருந்த அந்தக் குச்சி வீட்டின் கதவை இப்போது யாரோ திறக்கிறார்கள்.

"யார் அது?" - சும்மாட்டுத் துணியும் கையுமாக நிமிரும் மகாலட்சுமி எதிரில் அண்ணன் பரமக்குடி நரசிம்மன். மகாலட்சுமியின் பெரியப்பா மகன். சட்டென்று முதலில் அடையாளம் தெரியவில்லை. ஆனால் போகப் போகத் தெரிகிறது.

"யாரு நரசிம்மனா... நச்சுவா...?"

"ஆமாம் மகா... நரசிம்மனேதான்..." - நரசிம்மனும் நெருங்கி வந்து கூரைக் கண்ணாடியின் சூரியக் கதிர் மேலே படும்படி நிற்கிறான்.

"எப்படி இருக்கே... இப்பத்தான் வழி தெரிஞ்சுச்சா?"

"ஐய்யய்யோ! அப்படி எல்லாம் ஒண்ணுமில்லை மகா. நீ எப்படி இருக்கே... மோகன் எப்படி இருக்கான்... ஆமா மோகன் எங்கே?"

"ஏதோ இருக்கோம், மண்ணுக்குப் பாரமா..."

ஏன் அப்படி எல்லாம் சொல்றே? நாங்கள்ளாம் இல்ல?"

நைச்சியம் பேசும் நரசிம்மனைச் சற்று இளக்காரச் சிரிப்புடன் பார்த்தபடி மூங்கில் பரணில் சுருண்டு கிடந்த பாயை எடுத்து விரிக்கிறாள். "உக்காந்து பேசு..." என்கிறாள்.

அந்தச் சிரிப்பே அவள் நினைப்பதைச் சொல்லி முடித்து விட்டது. நரசிம்மனிடமும் சற்று நெருடல். கிட்டத்தட்ட பதினைந்து வருடம் கழித்து வந்து விட்டு "நாங்கள்ளாம் இல்ல...?" என்று கேட்டால் சிரிக்காமல் என்ன செய்வது?

"ஆமா நீ மட்டும்தான் வந்திருக்கியா?" மகாலட்சுமி யிடம் இப்போது அடுத்த கேள்வி.

"எல்லாரும்தான் வந்திருக்கோம். மச்சினன் பொண்ணு வயசுக்கு வந்துருக்கால்ல... அதுக்காக வந்தோம். அப்படியே உன்னையும் பாத்துட்டுப் போகலாமுன்னு..."

"அவங்கள்ளாம் எங்கே?"

"வாசல்ல நிக்கறாங்க..."

"அடப்பாவி! வாசல்ல நிக்க வெச்சுட்டா நீ மட்டும் வந்தே? கூப்பிடு அவங்களை உள்ளே..." மகாலட்சுமியே போய் வெளியே எழுந்து அவர்களை அழைக்கச் செல்கிறாள்.

சென்ற வேகத்தில் ஸ்தம்பித்து நின்று விட்டாள்!

10

வாசலில் நரசிம்மனுடைய மனைவி நாமகிரியும் மகள் கனகாவும் நின்று கொண்டிருக்கின்றனர். இதில் கட்டைக் காலுடன் நிற்கும் கனகாதான் மகாலட்சுமிக்குள் அதிர்ச்சியை மூட்டியவள்.

'எப்படி ஆனது இப்படி?' - சொற்ப விநாடிகளில் நினைப்பைக் கண்களில் தேக்கியபடி நரசிம்மன் பக்கம் திரும்பிப் பார்க்கிறாள் மகாலட்சுமி. அவர்களை உள்ளே கூப்பிடக் கூட மறந்து போய் விட்டது.

"என்னா பார்க்கறே? அம்மன் விக்ரகமாட்டம் இருக்கறவளுக்கு இப்படி ஒரு குறையின்னா...?'' நரசிம்மனிடம் உஷ்ணமான பெருமூச்சு.

"வா நாமகிரி... வாம்மா வா..." - இருவரையும் உள்ளே அழைத்து அழுக்குப் பாயை விரித்து அதில் உட்கார்த்தியும் வைத்த பிறகே அடுத்த கேள்விக்குப் போகிறது மகாலட்சுமியின் மனசு.

"ஆமா எப்படி ஆச்சு?"

"ஹூம்... எல்லாம் தலை எழுத்து."

"தோ பார்... இப்படித் தலை எழுத்து கால் எழுத்துன்னா எப்படி? உன்கிட்ட காசா இல்லை? நல்ல டாக்டர்கிட்ட..."

"நிறுத்துக்கா... நிறுத்து... நிறுத்து... காட்டாம இருப்பேனா? போலியோ கொடுமைக்கு இன்னும் சரியான

மருந்து இல்லை.. அதனாலதான் தடுப்பு மருந்து கொடுக்க அரசாங்கமும் பாடாபடுது..."

"இது எனக்குத் தெரியாதே நரசிம்மா...?"

''உனக்கு மட்டுமில்லை! யாருக்கும் நான் தெரிவிக்கலை. என் பாரம் என்னோட இருக்கட்டும்னு விட்டுட்டேன்."

மகாலட்சுமியின் பார்வை இப்போது கனகா மேல் அனுதாபக் கசிவோடு தாவுகிறது. நல்ல உயரம், நிறம் எல்லாம். உட்கார்ந்திருக்கையில் பார்க்க ஒரு ஊனமும் தெரியவில்லை.

கண்ணில் கூடக் காந்த அலை சரம் சரமாக; கால் ஊனத்துக்கு ஈடுகட்டுவது போல இடுப்பைத் தாண்டி விட்ட கூந்தல். நிறத்திலும் கூடச் செம்மையை விழுங்கி விட்டிருக்கிறாள்.

லாகவமாய் மருதாணி இட்டுக் கொண் டிருக்கிறாள். நகம் திருத்தியிருக்கிறாள். தலை வகிடு கூடச் சற்று ஓரம் கட்டப்பட்டு அந்த நாளைய இந்திராகாந்தியை நினைவில் பற்றி இழுக்கிறது.

"என் கண்ணே...! பிரம்மா உன்னைப் பாத்துப் பாத்துப் படைச்சிருக்காண்டி! பாழாப் போனவன் கால்ல மட்டும் கைய வெச்சுட்டானே?" அவற்றைத் திருஷ்டி கழித்துச் சளைக்கிறாள் மகா லட்சுமி.

''ஆமா, எங்க மோகன்ராம்?'' - நாமகிரி கேட்கும்போது மோகன்ராமே வந்து விட்டிருக்கிறான்.

முதலில் அவனுக்கு நரசிம்மனை அத்தனை அடையாளம் தெரியவில்லை. யாரோ அம்மாவுக்குத் தெரிந்தவர்கள் என்பதாகத்தான் நினைக்கிறான். அதனால் அவர்களைப் பார்த்தும் பார்க்காதது போல் கைவசமிருந்த

புத்தகத்தைத் தறிமேடையில் வைத்து விட்டு, கால் கழுவக் கொல்லைப்புறம் செல்கிறான்.

"என்ன உன் மகனுக்கு என்னை அடையாளம் தெரியலியா?"

"அப்படித்தான் நினைக்கிறேன். நீ அடிக்கடி வந்து போய்க்கிட்டு இருந்தா தெரியும். உன் பாவா சாவுக்குக் கூட பத்தாம் நாள் வந்து பத்து நிமிஷம் மட்டும் இருந்துட்டுப் போயிட்டே. அவனுக்கு எப்படி அடையாளம் தெரியும்? சரி சரி, இரு வந்துடறேன்..."

"எனக்கு எங்க போனாலும் இவ கவலையே பெரிசா இருக்கச்சே, நான் என்ன பண்ணட்டும்?"

- நரசிம்மனின் சமாளிப்பில் தான் மிதிபடுவதை உணர்ந்து, கனகா நிமிர்ந்து அப்பனை ஒரு பார்வை பார்க்கிறாள். 'இன்னும் எத்தனை பேரிடம் என்னைப் பாரம் என்றாக்கி உனது அலுப்பை கரைத்துக் கொள்ளப் போகிறாய்?' என்று கேட்காமல் கேட்கிறாள்.

நொண்டி முடமாக இருப்பதை விடவும் பெரிய கொடுமை இப்படிப் பிறத்தியாரின் கழிவிரக்கத்துக்கு உள்ளாவதுதான் என்கிற மாதிரி எல்லாம் நினைப்பவள் அப்படியே தலையைத் திருப்பி மோகன்ராமின் செயல் பாடுகளைப் படம் பிடிக்க ஆரம்பிக்கிறாள். மகாலட்சுமி ஒரு தூக்கு வாளியுடன் வெளிக் கிளம்புவதைப் பார்த்தால் காப்பி வாங்க ரங்காச்சாரி கடைக்குப் போகிறாள் என்பது புரிகிறது.

'மோகன் ரொம்ப நல்ல பையன். ஒரு சின்னக் கெட்ட பழக்கம் கூடக் கிடையாது. எட்டாம் கிளாஸ் வரைதான் பள்ளிக்கூடம் போனான். அப்புறம் பிளஸ் டூ, காலேஜ் எல்லாமே தானே படிச்சு எழுதி பாஸ் பண்ணினதுதான். அவனுக்குப் பெரிய வக்கீலா வந்துடணும்னு என்ன ஒரு ஆசை தெரியுமா?

"ஏண்டா, உனக்கு இந்தப் பொய் சொல்ற உத்தியோகம்னு கேட்டா, பொய்ய கொல்ற உத்தியோகம்னு சொல்லுங்கன்னு திருத்தறான்!

"சதா சமூக நினைப்பு. தப்பு எங்க, யார்கிட்ட பார்த்தாலும் சீறி விழற குணம், நல்லதுக்காக உசுரையும் கொடுக்கத் துணிஞ்ச வைராக்ய மனசு... நம்ப சமூகத்துல இப்படி ஒரு பிள்ளையைப் பாக்கறது அபூர்வம்ப்பா..."

நரசிம்மனிடம் நேற்றோ முந்தினமோ யாரோ சொன்னது கனகாவின் காதில் ஓடிக் கொண்டிருக்கிறது.

- அது மட்டுமா ஓடுகிறது? பேசிய அத்தனையும் தான்...

"தோ பார் நரசிம்மா... பேசாம மகாலட்சுமியைப் போய்ப் பார். ரொம்ப நாளாச்சே, சொந்தம் சுணங்கிக் கிடக்கேன்னுல்லாம் நினைக்காதே. அவ கைல கால்ல விழுந்தாவது உன் பொண்ணை மோகன்ராமுக்குக் கட்டி வை.

"அவன் நொண்டி, முடம், நான் பண்ணிக்க மாட்டேன்னுல்லாம் ஒருக்காலும் சொல்ல மாட்டான். அவனை எனக்குத் தெரியும்.

"அதோட சில நியாயக் கதை பேசி ஊர் ரவுடிகளால கொஞ்சம் பாதிக்கப்பட்டிருக்கான். தறிக்கெல்லாம் நெருப்பு வெச்சுட்டாங்கப்பா! இனிமே இவனுக்கெதுக்குத் தறியும் பட்டும்? பேசாம வீட்டு மாப்பிள்ளையாக்கிப் பரமக் குடிக்கே கூட்டிக்கிட்டுப் போ. உன்னோட வெச்சுக்கோ. அது அவனுக்கும் நல்லது.

"மதுரைலயும் நம்ம ஜனங்க அதிகம் இருக்காங்க. அங்க வேணாலும் பிராக்டீஸ் பண்ணட்டும். உன் சொத்து ஒண்ணு போதுமே, அவன் ஒக்காந்து சாப்பிட ஆகையால

பிராக்டீஸ்ல வருமானம் பெயரலைன்னாலும் பாதக மில்லை."

- இப்படியும் பேசியதெல்லாம் அவள் காதில் ஓடி அடங்குகிறது. மோகன்ராமோ முகம் கழுவி, தலை வாரி, விபூதி தரித்துத் திரும்ப பாடப் புத்தகத்தை எடுத்துக் கொள்ள தயாராகிறான்.

வாலிப வயதில் ஒரு பெண் தேவலட்சணங்களோடு இருப்பதை ஓரஞ்சாரமாகக் கூடப் பார்க்காமல், யார் என்று கூடக் கேட்காமல் தன் காரியத்திலேயே எப்படி இத்தனை கருத்தாக இருக்க முடிகிறது? கனகாவிடம் வியப்பு மூளத் தொடங்குகிறது. நாமகிரி முதல் நரசிம்மன் வரை எல்லாருக்கும் வியப்புத்தான். அவர்களுக்கு அவனிடம் எப்படிப் பேச்சைத் தொடங்குவது என்றுதான் தெரியவில்லை.

"என்ன மோகன்ராம்...?" - நரசிம்மனே ஒருவழியாக ஆரம்ப நூல் பிடிக்கிறார்.

ஏறிடுகிறான் மோகன்ராம்.

"என்னைத் தெரியலையா?" - நரசிம்மன் அப்படிக் கேட்ட காரணத்தால் ஊன்றிப் பார்க்கிறான். தெரிய வரவில்லை என்பதை முகத்துத் தசை நார் சுருக்கத்திலேயே உணர்த்துகிறான்.

"நான் பரமக்குடி நரசிம்மன் மாமாப்பா..."

"அப்படியா?" - மோகன்ராமிடம் சுரத்தில்லாத அங்கீகாரம்.

"என்ன அப்படியான்னுட்டே... உன் அம்மா வழிக்கு இப்ப நான் ஒருத்தன்தான் உசுரோட இருக்கேன்..."

"சந்தோஷம். இருந்து சாப்ட்டுப் போங்கோ..."

"நாங்க சாப்டுட்டுப் போறது இருக்கட்டும். நீ எங்க கிளம்பிட்டே?"

"இன்னும் கொஞ்ச நாள்ல பரீட்சை. அதான் கிளம்பிட்டேன்!"

"இப்பல்லாம் எல்லாரும் டாக்டராகணும், எஞ்சினியராகணும்னுதான் ஆசைப்படுவாங்க. நீ வக்கீலாக ஆசைப்பட்டிருக்கியே. நொவடேஸ் இட் ஈஸ் ஹைலி ரிஸ்கி ஜாப். யூ ஆல்சோ நோ தி எக்ஸாம்பிள் ஆஃப் சண்முகசுந்தரம்..."

- நரசிம்மன் தனது கல்வி உலக ஞானத்தை மெல்லக் கலந்தடிக்க, மோகன்ராமிடம் அதற்கு வழிசலான சிரிப்பு மட்டும்தான் பதிலாக மிஞ்சுகிறது. கனகா கைநிறையக் கண்ணாடி வளையல் தரித்திருக்கிறாள். அதை வேண்டுமென்றே அசைத்துச் சப்தித்துத் தன்னைப் பார்த்திராத அவன் கவனத்துக்குள் சலனம் மூட்டுகிறாள். அவன் பார்வையும் கூட மெள்ள அவள் பக்கம் திரும்புகிறது. அவள் ஏறிடுகிறாள். ஊசி குத்தியது போல் ஓர் உள்ளுணர்வு. பார்வையா அது? முதல் தடவையாக மோகன்ராம் பிரமிக்கிறான்.

"அது என் பொண்ணுப்பா! பேரென்னன்னு கேக்கலையே...?" வாகாக எடுத்துத் தருகிறார் நரசிம்மன்.

"நிச்சயம் ஊர்வசி, மேனகான்னுதான் இருக் கணும்" - மோகன்ராமை மீறி விட்டது அவன் ரசனை. அதுதான் அப்படிப் பேசிவிட்டான். அவளிடமும் பனிக்குளத்தில் பாய்ந்தது போல் ஒரு பரவசம்.

"வேணும்னா உன் விருப்பத்துக்காக அந்தப் பேரையும் வெச்சுடறேன். ஆச்சுவலி ஷி ஈஸ் கனகா!"

"ஐ... சி... என்ன படிச்சிருக்காங்க...?"

"சும்மா படிச்சிருக்கான்னே கேளு. எம்.ஏ. சோஷியாலஜி!"

"எக்ஸெலண்ட்."

"இந்தச் சோஷியாலஜிக்கு ஒரு வக்கில்தான் மாப்பிள்ளையா வரணுமாம். அதுக்குத்தான் சேலம் வந்திருக்கோம்..."

நரசிம்மன் ஒருவழியாக விஷயத்தை நெருக்கிப் பிடிக்கிறார். மோகன்ராம் முகத்தையே கவனிக்கிறார். அவனிடம் ஒருவிதமான தடுமாற்றம். என்ன நினைத்தானோ, புத்தகத்தோடு வெளியே கிளம்பி விட்டான்.

அவன் அப்பால் நகரவும் மகாலட்சுமி தூக்கு வாளியுடன் காப்பியுடன் உள்நுழைகிறாள்.

"அட என்ன நீ... இதுக்கா வெளிய போனே?" - நரசிம்மனிடம் போலி விசாரணை.

"அது சரி... வராதவன் வந்துருக்கே, ஒரு காப்பி கூடக் கொடுக்கலைன்னா எப்படி? ஆமா, மோகன் ஏதாவது பேசினானா?"

"எங்க.. படிக்கணும் படிக்கணும்னு பறந்துட்டான்."

காப்பியை உறிஞ்சிக் கொண்டே நரசிம்மன் சடைத்துக் கொள்ள, அதை மகாலட்சுமி துல்லியமாக நறுக்குகிறாள்.

"அப்ப நிறைய பேசணும்னு நினைச்சியோ?"

"இல்லியா பின்னே... என் மருமகப் பிள்ளை கூடப் பேசணும்னு எனக்கு ஆசை இருக்காதா?"

"அவன் கிட்டையோ என் கிட்டையோ... பேச நாங்க என்ன மிட்டாவா, மிராசா, நரசிம்மா?"

மகாலட்சுமி எந்த அர்த்தத்தில் அப்படிக் கேட்டாளோ தெரியாது; நரசிம்மன் அடுத்த நொடி மகாலட்சுமியின் காலடியில்.

"நேத்து வரை எப்படி இருந்தாலும் மன்னிச்சு, இனி சகஜமா இருக்கணும்க்கா நீ. என் பொண்ணை நான் ஒரு நாலு நாளைக்கு இங்க விட்டுட்டுப் போகலாம்னு இருக்கேன். எப்பவும் கூட அவ இங்க இருக்கிறதுல எனக்கு ஆட்சேபணையில்லை - என்ன சொல்றே?"

"தாராளமா..."

இப்போதைக்கு இந்த அளவு விஷயம் பழுத்ததே பெரிதாகத் தோன்றியது நரசிம்மனுக்கு. 'நாராயணா' என்று நன்றி சொல்கிறது உதடு.

காட்டுத் தீயை விடக் கூடுதல் வேகத்தில் தாமு எரிந்து போய் ஆஸ்பத்திரியில் கிடக்கும் சேதி பரவிக் கொண்டிருந்தது. அத்தனை களேபரத்திலும் ஒரு ஆச்சரியமான விஷயம் என்னவென்றால் யாரால் அப்படி ஆனது என்கிற பேச்சே இல்லாததுதான்!

'ஒரு பொட்டச்சி எனக்கு நெருப்பு வெச்சுட்டாங் கறது வெளிய தெரிஞ்சா எனக்குத்தாண்டா அவமானம். மூச்சு விடக் கூடாது என்று தாமுவே கூடச் சொல்லி விட்டானோ என்னவோ? செய்தியறிந்து ஊரே பட்டாசு வெடித்துக் கொண்டாடாத குறை.

"பட்டுக்கு நெருப்பு வெச்சான். அதான் பகவானா பாத்து அவனுக்கு வெச்சுட்டான். கலியுகத்துல எதுவும் கண்ணுக்கு முன்னே..." - பருத்திப் பால் குடித்தபடி ஒரு பவர்லூம்காரன் ஆரம்பிக்கிறான்.

"எப்படிப்பா ஆச்சு... விட்டா அவன் ஊருக்கே நெருப்பு வைக்கறவனாச்சே..." - ஒரு அரை தாடி, திவான் பீடிப் புகையோடு கேள்வியைக் கரைக்கிறான்.

அப்படியே அரசியல், ஆட்டுக் குட்டி என்கிற சமாசாரங்கள். இதற்கு நடுவில் அன்றைய பகலைக் கவ்விப் பிடித்து விழுங்க ஆரம்பித்து விட்டது இருட்டு. போகட்டும் என்று நிலாவிளக்கு ஏறுகிறது தென்கிழக்குக் கீழ்வானில்...

அந்த நாளைய திருமணிமுத்தாறு இந்த நாளில் மெலிந்தும் ஒருத்தும் ஊர்ச் சாக்கடையை உள்வாங்கிக் கொண்டும் நாற்றக் கமறலோடு கிடக்கிறது. அதன் ஓரமாக நடந்து மாரியம்மன் கோவிலைப் பார்த்தபடி நடக்கும் போது மாரியம்மன் மேலேயே ஒரு பரிதாபம் தோன்றும்.

இந்த நாற்றம் சகியாமல்தான் அவள் கல்லானாளோ? சமயத்தில் இப்படிக் கூட மோகன் ராமுக்குத் தோன்றும். இன்று வேறுமாதிரி தோன்றுகிறது. அவனும் முகுந்தனும் காலாரக் கிளம்பி வந்திருக்கிறார்கள்.

"என்னடா... என்ன எதுவும் பேச மாட்டேங்கறே... தாமுவைக் கடவுள் எவ்வளவு சீக்கிரமா தண்டிச்சுட்டார் பார்த்தியா?" - என்று தாமுவின் விஷயத்தை அவனும் தொடுகிறான். - மோகன்ராமை எகத்தாளச் சிரிப்பு கவ்வுகிறது.

"எதுக்குடா சிரிக்கிறே?"

"இல்ல, கடவுள் தண்டிச்சுட்டார்னு சொன்னியே, அதை நினைச்சு சிரிச்சேன்."

"இல்லியா பின்னே...?"

"அநாவசியமா இங்க கடவுளைக் கூப்பிடாதே. தாமு மேல பரிதாபப்பட வேண்டிய நேரம் இது. கடவுளை நினைச்சு கைகூப்பற நேரமில்லே..."

"என்னடா நான்சென்ஸ் பேச்சு இது... அவன் ஒரு தெருப் பொறுக்கி. அவனுக்குப் போய்ப் பரிதாபப் படணும்கறே... மோகன், என்ன கிண்டலா?"

"சத்யமா இல்லை முகுந்தா... எனக்கு என்னவோ இப்ப அவனை நினைச்சா ரொம்பப் பரிதாபமாத்தான் இருக்கு."

"விட்டா போய்ப் பால் பழம் வாங்கித் தந்து உடம்பைப் பாத்துக்கோன்னு கூடச் சொல்வே போல இருக்கே?"

"கரெக்டா சொன்னே. நாம இப்ப பெரிய ஆஸ்பத்திரிக்குத்தான் போகிறோம்..."

"டேய்ய்ய்..." முகுந்தன் நிஜமாலுமே அதிர்கிறான்!

தாமுவைச் சுற்றி ஜவஹர் பாபுவிலிருந்து ஒரு கூட்டமே நிற்கிறது. கருகிப் பொசுங்கிப் போய் மேனி முழுக்க தீக்காயத்தோடு நீலத்தில் குளித்தது போல ஊதா நிறமருந்து பூசி உருத்தெரியாமல் கிடக்கிறான். அருகே கவலையோடு வந்து நிற்பவனைப் பார்க்கக் கூட அவனிடம் திடமில்லை. ஆனால் ஜவஹரிடம் அவனுக்கும் சேர்த்து இருக்கிறது.

"என்ன, எவ்வளவு எரிஞ்சிருக்குன்னு பாக்க வந்தியா?" எனும் கேள்வியில் அது தெரிகிறது.

மோகன்ராம் அவனைக் கனிவாகப் பார்க்கிறான்.

"நீ பெரிய ஆளுடா, பிள்ளையையும் கிள்ளி விடுவே, தொட்டிலையும் ஆட்டிவிடுவே. ஆனா நாங்க அப்படி யில்லை. எங்களுக்கெல்லாம் உங்களை மாதிரி நடிக்கத் தெரியாது..." - ஜவஹரின் பேச்சு இந்த முறை மோகன்ராமைக் குழப்புகிறது.

"ஜவஹர் உனக்கும் எனக்கும் ஆயிரம் கொள்கை வேறுபாடு இருக்கலாம்.... அது வேற... இப்ப நீ சம்பந்தமில்லாம ஏதேதோ பேசறே..." என்கிறான் அந்தக் குழப்பம் நீங்காமல்.

"யார் சம்மந்தமில்லாமப் பேசறது? நானா? நீதான் சம்மந்தமில்லாத மாதிரி நடிக்கிறே?"

"திரும்பவும் சொல்றேன். குழப்பாம நேரா பேசு."

"என்னடா நேரா? நாங்க நேராதான் உன் வீட்டுக்கு வந்தோம். நெருப்பும் வச்சோம். ஆனா உன்னை மாதிரி ஒரு பொட்டச்சிய ஏவி விடலை...!"

"யார் பொட்டச்சிய ஏவி விட்டது...? என்ன சொல்றே நீ?"

"அப்ப சுசீலாவை நீ அனுப்பலேங்கிறியா?"

"சுசீலாவா... அவளா...?"

அவன் மனத்தில் சுசீலா எரிய ஆரம்பித்திருந்தாள்!

24182
H105089

11

'சுசீலாதான் தனக்காக எதையோ செய்திருக்கிறாள். இல்லாவிட்டால் அவள் பெயரை ஜவஹர் சொல்ல வேண்டிய அவசியமும் இல்லை' - நினைவுகளின் நெளிசலுக்கு நடுவே முகுந்தனைப் பார்த்துக் கேட்கிறான் மோகன்ராம்.

"முகுந்தா, சுசீலாதான் தாமுவுக்கு நெருப்பு வெச்சுட்டதா ஜவஹர் சொன்னதைக் கேட்டியா நீ?"

"நான் நம்பத் தயாரில்லை. கொஞ்சம் விட்டா நீ வெச்சேன்னு கூடச் சொல்வான். நீ அந்தப் பேச்சை விடு. நம்ப விஷயத்துக்கு வா..." - வேறு வழியின்றி முகுந்தனிடம் வேறு பேச்சுக்கு மாறுகிறான்.

"சொல்லு என்ன விஷயம்?"

"தறி எல்லாம் எரிஞ்சு போச்சே... அடுத்து என்ன பண்ணப் போறே?"

"அதப்பத்தி இப்போ நான் யோசிக்கலை முகுந்தன். ஏற்கெனவே நிறைய கடன். ஆகையால அந்த விஷயத்தை எப்படி ஆரம்பிக்கறதுன்னே தெரியலை..."

"தெளியறதுக்காகக் குழம்பினா தப்பில்லை மோகன். ஆனா குழம்பியே எப்பவும் இருக்கக் கூடாது."

"நீ என்ன சொல்றே?"

"நமக்குள்ள எவ்வளவோ ஆசைகள், லட்சியங்கள். அதை நோக்கி ஒரு அடி கூட எடுத்து வைக்க முடியற

தில்லை. அல்ப பிரச்னைகளைச் சமாளிக்கவே நேரம் சரியாக இருக்கு."

"வாஸ்தவம்தான். அதுக்கு என்ன பண்ணச் சொல்றே?"

"ஊர் வம்பு வேண்டாண்டா... அது நம்ம லட்சியத்துக்கு நேர் எதிரி. முதல்ல நாம நம்ம லட்சியத்துல கவனம் சிதறாம பயணம் செய்வோம். அதை அடைவோம். பின்னால சமூகம் - பொதுஜனம் பற்றி எல்லாம் சிந்திப்போம்."

- முகுந்தனின் கருத்தில் மோகன்ராம் உடன்பட்டது மாதிரிதான் தெரிகிறான். மௌனமாக நடக்கிறான்.

"இந்தச் சமூகம் எங்கேயும் போயிடப் போறதில்லை. ஆனா நாம பலமில்லாம மோதினா நிச்சயம் எங்கயாவது போயிடுவோம். அதனாலதான் சொல்றேன். முதல்ல பலம் சேர்ப்போம். பின்னல மத்த விஷயங்களைப் பாத்துக்கலாம்..."

"உம்... அப்புறம்?"

"நீ உன் வக்கீல் படிப்பை முடி. அது வரைக்கும் வயிறு வளக்கணுமே அதுக்காகத் திரும்பத் தறி போடு. கடிவாளக் குதிரை மாதிரி ஆயிடு. வேற எதையும் பார்க்காதே. சிந்திக்காதே..."

"மொத்தத்துல ஒண்ணா நம்பர் சுயநலவாதி யாயிடுங்கறே, அப்படித்தானே?"

"அடப் பாவி... நல்லதுக்குச் சொல்றதைக் கொச்சைப் படுத்திட்டியேடா! ஆயுசும் பலமா இருந்தாத்தானே அது நாட்பட உழைக்கும்? நமக்குன்னு ஒரு அந்தஸ்து இருந்தாத்தானேடா நம் பேச்சையும் நாலு.பேர் கேட்பாங்க. நாமளே அன்றாடங்காய்ச்சியா இருந்தா நம்மளால

எதைடா சாதிக்க முடியும்?" - முகுந்தன் வசமாகவே வளைத்துக் கட்டத் தொடங்குகிறான்.

"மோகன் நல்லா யோசிச்சுப் பாருடா. நம்ம வயித்தை விடவாடா ஒரு பெரிய எதிரி இந்த உலகத்துல இருந்துட முடியும்? நம்ம கூடவே இருக்கு... நாம பாத்து என்ன வேணும்னா பண்ணிக்கலாம். ஆனா ஒழுங்கா அதுக்குச் சோறு போடாம விட்டா நம்ம எஜமான் தானேன்னு அது நினைக்கறதில்லை. நம்மளை மயக்கத்துல பிடிச்சுத் தள்ளிடுது. இதை ஜெயிக்காம வெளிய எந்த ராஜாவை ஜெயிச்சு என்னடா புண்ணியம்?"

முகுந்தனின் விளக்கத்தில் மோகன்ராமின் சிந்தனையில் ஒரு புதிய கோணம் அகப்படுகிறது. அதில் தேசிகாச்சாரி தெரிகிறார். எப்பொழுதோ அவரிடம் பேசிக்கொண் டிருந்தபோது, 'சாப்பிட்டுக் கிட்டத்தட்ட பதினைந்து நாட்களாகி விட்டது' என்று அவர் சொன்னது நினைவுக்கு வந்தது. அப்பொழுது விளையாட்டுக்கோ அல்லது எதற்கோ சொன்னதாகச் சாதாரணமாக உள் விழுந்த விஷயம் இப்போது புதிய பரிமாணம் எடுக்கிறது.

'முகுந்தன் சொல்கிற மாதிரி முதல் எதிரியை ஜெயிக்க அவர் வழிபார்த்து விட்டாரோ?'

சின்னக் கடைத் தெருவில் இப்போது அவர்களிடம் நடை...

"டேய்... என்னடா நான் பேசிக்கிட்டு வரேன். பதிலைக் காணோம்?"

முகுந்தன் நிமிண்டுகிறான். தார்ச்சாலையே தெரியாதபடிக்குக் கடைத் தெரு. குப்பையுடன் ஏதோ உரம் போட்டு உழுத நிலம் போல காட்சியளிக்கிறது.

நாற்றத்தில் மூக்கு விடைக்கிறது. நாற்றாண்டுக்கு முந்தைய சாலை. விரிவடையவே இல்லை. ஜனங்களுக்கு

அந்தக் கவலை எல்லாம் இல்லாத மாதிரி தெரிகிறது. புன்னகை மாறாமுகத்துடன் தங்கள் வியாகூலமே பெரிதாக அவர்கள். இதில் தன் பங்குக்கு உழப்பிக் கொண்டு திரியும் தடிதடியான கோவில் மாடுகள் வேறு.

"ஏ முகுந்தா! நம்ம வீட்ல இப்படி ஆடும் மாடும் திரிய விடுவோமா? இப்படி ஒரு நாற்றத்தை அனுமதிப்போமா?"

"எதுக்குடா கேக்கறே?"

"இல்ல... நூத்துக்கணக்குல நம்மைத் தாண்டி நடக்கற எந்த ஒரு பொதுஜனத்துக்காவது நாம நடந்து போற பாதை இவ்வளவு மோசமா இருக்கேன்னு துளியாவது கவலை இருக்கா பார்த்தியா?"

"டேய்... டேய்... இப்பத்தான் சொன்னேன், அல்பத்துக்குக் கவலைப்படறை விடணும்னு... மண்டைய ஆட்டிட்டுத் திரும்ப அதுக்குள்ளதானே நுழையறே?"

"முடியலைடா... என்ன ஜனங்கடா இவங்க...?"

"மோகன், நூத்துக்குத் தொண்ணூறு பேர் இப்படித்தான். நூத்துக் கணக்குல சின்னத் தவறுகளை ஒப்புக்கிட்ட சமூகம் இது. லைன்ல குறுக்கே புகறதுல தொடங்கி, பிளாக் டிக்கெட் வாங்கறதுல ஆரம்பிச்சு, எதுல பாரு இலவசப் பசி பிடிச்சுக் கிடக்கறோம். மளிகைக் கடைல கூடக் கொசுறா பொட்டுக் கடலை கொடுக்கற கடைலதான் உப்பு புளி வாங்குவோம். உன்னைக் கெஞ்சிக் கேட்டுக்கறேன், தயவுசெய்து இந்த சப்ஜெக்டை விடுடா. காதல், சினிமா, அமெரிக்கான்னு எதையாவது பேசுடா..."

முகுந்தன் நிஜமாலுமே மூக்கைச் சிந்துகிறான்.

"சரி சரி... நீயே அதைப் பத்தியும் பேசேன்..." மோகன்ராம் விட்டுத் தருகிறான்.

"உன் வருங்கால மனைவி பத்தி என்னடா நினைக்கறே...?"

"வருங்காலத்தப் பத்தியே நினைக்க முடியலை. அதுல வரப் போற மனைவி பத்தி என்னத்த நினைக்க?"

"உன் வரைல ரெண்டும்தான் முடிவானதாச்சே?"

"என்னடா புதிர் போடறே?"

"அதான் மாமா வந்துட்டாரே - உனக்கு இனி கவலை இல்லை..." - பட்டை கோவிலைத் தொட்டு நின்று முகுந்தன் சொன்ன விதத்தில் ஏதோ மர்மம்...

"யாருடா மாமா, புதுசா?"

"பழைய மாமாதான் இப்ப புதுசா தெரியறாரு. அதாண்டா பரமக்குடி நரசிம்மனைத்தான் சொல்றேன்."

"அவருக்கென்னடா...?"

"அவர் இன்னுமா உன் வீட்டுக்கு வரலை?"

"தோ பார்... நேரா விஷயத்துக்கு வா. அவர் வீட்டுக்கு வந்ததுக்கும் என் வாழ்க்கைக்கும் என்ன சம்பந்தம்?"

"அவர் மட்டுமா வந்துருக்கார், கூட ஒரு ஊர்வசியும் வந்துருப்பாளே?"

"ஓ... நீ கனகாவைச் சொல்றியா?"

"ஆள் எப்படி?"

"நல்ல லட்சணம். ஆமா அதுக்கென்னடா?"

"டேய் நீ ட்யூப் லைட்டா... இன்னுமாடா புரியலை?"

"பாம்..." 'காதைக் கிழிக்கும் சப்தத்துடன் நாலாம் நம்பர் அயோத்தியாபட்டணம் பஸ் உரசிச் செல்கிறது; ஊஹூம் பறந்து செல்கிறது. போனவன் வந்தவனிட மெல்லாம் டிவிஎஸ் சுசுகி. வாயுமண்டலமே வண்ணம்

இழந்து விட்ட அசுத்த நிலை. எங்கே பார்த்தாலும், யாரிடம் பார்த்தாலும் வேகம்... வேகம்... வேகம்...

"டேய்ய்..." - மோகன்ராமின் கவனப் பிசகைப் பற்றி உசுப்புகிறான் முகுந்தன்.

"என்னடா...?"

"என்ன பதிலே காணோம்...?"

"சாரிடா முகுந்தன். அழகான பெண்ணுக்கு ஆயிரம் மாப்பிள்ளை கிடைப்பாங்கடா. ஆனா ஊனமுள்ள பொண்ணோட நிலை அப்படி இல்லை. ஆகையால என் வாழ்க்கைல கல்யாணம்னு ஒண்ணு நடந்தா அது ஊனமுள்ள ஒரு பெண்ணோடதான்..."

"ஆமா நீ கனகாவை முழுசா பாக்கலையா?"

"ஏன் எதுக்குக் கேக்கறே...?"

"போய்ப் பாரு. ஆல்த பெஸ்ட் மோகன். எப்படியோ உன் லட்சியமும் ஈடேறப் போகுது. வாழ்க்கையும் மாறப் போகுது.... நல்லா இரு."

முகுந்தனின் பதில் புரியாமல் அப்போதைக்கு விழிக்கத்தான் முடிந்தது மோகன் ராமால்!

ஒரு கால்தான்... ஆனால் அதை வைத்துக்கொண்டே வீடு முழுக்கக் கூட்டிக் குப்பை அள்ளி, அடுப்பங்கரையிலும் சாணியிட்டு மெழுகி, ஸ்வாமி சந்நிதியின் சின்ன அகல் விளக்கையும் பொன் போலத் துலக்கி விளக்கேற்றி... கனகா ஏக காரியம் செய்து விட்டாள்!

"எதுக்கும்மா உனக்கு வீண் சிரமம்...?" என்கிற மகாலட்சுமியின் வார்த்தைகளைக் கண்டுகொள்ள வேயில்லை.

வீட்டுக்குள் காலண்டரில் தேதி கிழிபடாமலும், நிலைக்கண்ணாடி அழுக்குப் படிந்தும், தறிமேடையில் கெண்டைகள் சிதறியும் பலவாறு கிடக்கின்றன. எல்லாமே இப்பொழுது ஓர் ஒழுங்குக்கு வந்து விட்டிருக்கின்றன.

தளர்ந்து போய்த் தொங்கிக் கொண்டிருந்த துணிக்கொடி கூட விரைப்பாகி, அதில் கச முசாவென்று கிடந்த துணிகள் மடிக்கப்பட்டு, பதவிசாகத் தொங்கிக் கொண்டிருக்கின்றன.

ஒரு பெண் தானும் அழகாய் இருந்து சூழலையும் அழகுபடுத்தி விட்டால் அங்கே கோயில் களை வந்து விடுகிறது. கருவறைப் புனிதம் புகுந்து விடுகிறது.

கனகா இனி அது தன் வீடு என்று நினைத்து விட்டதும் பளிச்சென்று தெரிகிறது. மகாலட்சுமிக்கு மகிழ்ச்சி பிடிபடவில்லை. 'இப்படி எல்லாம் கூடவா வாழ்க்கை திசை திரும்பும்?' என்று கேள்வி கேட்டுத் தனக்குள்ளேயே நெகிழ்ந்து போய்க் கிடக்கிறாள்.

அந்த மகிழ்ச்சியை அவளால் சுமக்க முடியவில்லை. அக்கம் பக்கம் பகிர்ந்து கொள்கிறாள்.

"அப்ப எப்போ மோகனுக்குக் கல்யாணம்?" என்று நேராகவே பலரும் கேட்கின்றனர்.

"நம்ம கைலயா இருக்கு. எல்லாம் அவன் கைல..." பொத்தாம் பொதுவாக ஒரு பதில் சொல்கிறாள்.

"மகா... நீயும் இனிமே பரமக்குடி போயிடுவேன்னு சொல்லு..."

"மாட்டேண்டியம்மா... என்னால இந்த ஊரைப் பிரிய முடியாது."

"எப்படியோ இனியாவது மோகன் ஊர் வம்பு இல்லாம அமோகமா இருந்தா சரி..."

"ஆமாமா... அந்தத் தாமு எரிஞ்சதுல கூட ஏதோ கசமுசா இருக்கு போல. நம்ப மோகன்தான் ஏதோ பதிலுக்குப் பண்ணிப்பிட்டதா பேச்சிருக்கு! இதுக்கு எதுக்கு இந்த ஊர்ச்சனியன்? சீக்கிரமா கல்யாணத்த பண்ணி அனுப்பி வை."

பேச்சின் முடிவில் இப்படி அஸ்திரம் திரும்பும் என்று மகாலட்சுமியே நினைக்க வில்லை. அதுவரை ததும்பிய மகிழ்ச்சி ஆவியாகிறது. சோர்ந்து போகிறது மனசு. மோகனுக்கு ஏதாவது ஆகிவிடுமோ? வீட்டுக்குள் நுழைபவளின் முகக் குறிப்பறிந்து கனகாவும் கூடக் கேட்கிறாள்.

"என்ன அத்தை... ஏன் ஒரு மாதிரியா இருக்கீங்க...?"

"ஒண்ணுமில்லம்மா..."

"இல்ல ஏதோ பிரச்னை. வெளிய யாராவது எதாவது சொன்னாங்களா? போயும் போயும் உனக்கெதுக்கு நொண்டி மருமகள்னாங்களா?"

"ஐயோ..." தாவி வந்து கனகாவின் வாயைப் பொத்துகிறாள்.

"வேற என்ன அத்தை?"

"எல்லாம் மோகனைப் பத்தித்தாம்மா... அவனுக்கு அவன் வாழ்க்கைக் கவலையை விட ஊர்க் கவலைதாம்மா எப்பவும் பெரிசு. அதனால புதுசு புதுசா வம்புங்க."

"தெரியும்... சில ரவுடிங்க கூட வீட்டுக்குள்ள நுழைஞ்சு தறிக்கு நெருப்பு வெச்சுட்டாங்கன்னு கேள்விப் பட்டேன்."

"அதனாலதான் நான் பயப்படறேன். இப்ப அந்த நெருப்பு வைச்ச பயலுக்கு யாரோ நெருப்பு வெச்சுட்டாங்க! அத செஞ்சது மோகன்ராம்தான்னு ஒரு பேச்சு அடிபடுதும்மா..."

அதைக் கேட்க கனகாவுக்கும் கலங்கியது மனசு.

"இருக்காது... அத்தான் பழிக்குப் பழி வாங்குவார்னு நான் நம்பலை" என்கிறாள் உடனேயே. மகாலட்சுமி கனகாவை அடுத்த கணமே ஆழமாக ஏறிடுகிறாள்.

"கொஞ்சம் கூடப் பழகாம எப்படிம்மா என் மகன் பத்தி இப்படிச் சரியான அபிப்ராயம் சொல்றே நீ?" - கேட்கிறாள்.

"எனக்குச் சொல்லத் தெரியலை அத்தை, அவர் முகத்தைப் பார்த்தா அவர்கிட்ட அழுக்கான விஷயம் இருக்க முடியாதுன்னு ஒரு நம்பிக்கைதான்..."

"பரவால்லாம்மா... அவனுக்கு ஏத்தவதான் நீ?" - மகாலட்சுமி நிஜமாலுமே மகிழ்ந்த அந்த நொடிப் பொழுதில் கொல்லைப்புறம் அரவம் கேட்டது. திரும்பிப் பார்த்தபோது சுசீலா தெரிந்தாள்.

"வாடீ..." என்று அவளுக்கு அழைப்பு விடுக்குமுன் வாசல் பக்கமும் நிழல் விழுந்தது. திரும்பிப் பார்த்தால் முகம் கொள்ளாத துக்கத் தவிப்போடு பானு!

12

வாசல் பக்கமா பானு... கொல்லைப்புறத்தில் சுசீலா. இருவரில் மோகன்ராம் பானுவைத்தான் முதலில் பார்க்கிறான். அவள் வந்து நிற்கும் விதத்தில், பார்க்கும் தோரணையில் ஒரு பொருளேரிய மாற்றம் தெரிகிறது.

"வா..." என்கிறான் மிகப் பொறுமையாக. இதுதான் சாக்கு என்று சுசீலாவைப் பார்த்துவிட்டுப் பின் ஓடிப் போய்க் கதவை அடைத்துக் கொள்கிறாள் மகாலட்சுமி.

"ஏய் எங்கடி வந்தே?" - நூல் புடைவை முகம் துடைக்க, கண்ணிரண்டில் பதற்றம் காட்டி நிமிர்கிறாள்.

"உம்... விருந்து சாப்பிட..."

"உனக்கு அதுதான் கொறச்சல். உள்ள மோகன் வேற இருக்கான். இப்ப எதுக்கு வந்தே?"

"ஆமா, யார் அது புதுசா?"

"நீ கனகாவைப் பத்திக் கேக்கறியா?"

"ஓஹோ... அவ பேர் கனகாவா?"

"ஆமாம் சுசீலா. எங்கண்ணன் பொண்ணு..."

"அண்ணன் பொண்ணு... பலே! அண்ணன் எங்க திடீர்னு ஆகாசத்துல இருந்து குதிச்சிருக்கான்?"

"டீ... உன் கேள்விக்குப் பதில் சொல்ற நிலைல நான் இப்ப இல்லை. கிளம்பறியா?" - மகாலட்சுமி முகத்திலடித்து விட்டுத் திரும்ப உள்நுழைகிறாள்.

பானு உள்ளே வந்து கனகாவையே விழுங்கிக் கொண்டிருக்கிறாள். மோகன்ராம் ஏதோ பொது இடத்தில் நிற்கிற மாதிரி நின்று கொண்டு புத்தகப் புரட்டல் செய்து கொண்டிருக்கிறான்.

கனகாவுக்கு மோகன்ராமும் புரியவில்லை; பானுவும் புரியவில்லை.

"நீ எப்படி வந்தே?"

"இ... இப்பத்தான்."

"எப்படி இருக்கா கிழவி...?"

"இருக்கா."

"ஏண்டி அலுத்துக்கறே... என்ன விஷயம்?"

"கொல்லைல சுசீலா. இங்க நீ - இன்னிக்கு என்ன இரண்டு பேரும் பேசி வெச்சிக்கிட்டு வந்திருக்கீங்களா...?"

மகாலட்சுமி வாயில் பிசகலாக, சுசீலா வெளிப்பட்டு விடுகிறாள். அடுத்த கணம் புத்தகத்தை மூடிவிட்டு வேகமாக வேட்டியையும் மடித்துக் கட்டிக்கொண்டு கொல்லைப் பக்கம் விரைகிறான் மோகன்ராம்.

மகாலட்சுமி சொல்லி விட்டதற்காக வருந்தாமல் - திரும்பியும் போய் விடாமல் ஆட்டுக்கல் மேல் குத்துக்காலிட்டு உட்கார்ந்திருக்கிறாள் சுசீலா.

மோகன் வந்து நிற்கவும் அவனைத் துளி நெருடலுடன்தான் ஏறிடுகிறாள். மோகன்ராம் பார்வை அவளைக் கணிசமான கோபத்துடன் பார்க்கிறது.

"எதுக்கு அப்படிப் பார்க்கிறே?"

"நீ பொம்பளதானா?"

"இன்னிக்கு வருமானம் முந்நூறு ரூபா - பொம்பளையா இல்லேன்னா ஆம்பளைங்க கொடுத்திருப் பாங்களா?" - சர்வ அலட்சியமான பதில் சுசீலாவிடம்.

"த்தூ நாயே...! பெரிய ரவுடி மாதிரி தாமுக்குத் தீ வெச்சிருக்கே. அவன் செத்து வெச்சிருந்தா நீ கம்பி எண்ண வேண்டி வந்துருக்கும். இதையெல்லாம் யோசிக்கவே மாட்டியா?"

"இவ்வளவுதானா? இல்லை இன்னும் இருக்கா?"

"என்ன இன்னும் இருக்கா... உன்னால எனக்குக் கெட்ட பேர். நான்தான் உன்னை ஏவி விட்டேன்னு அவன் ஆட்கள் நினைக்கறாங்க."

"உம்... அப்புறம்?"

"நான் என்ன கதையா சொல்றேன். அப்புறங்கறே! தாயே, உன்னைக் கை எடுத்துக் கும்பிடறேன். எங்கையாவது ஓடிடு. என் அக்கா மட்டும் இப்ப இருந்திருந்தா உன்னைச் செருப்பாலே அடிச்சிருப்பா..."

- கலங்காமல் ஒருவகைத் திடத்தோடு இதுவரை இருந்தவள் இந்த வார்த்தைக்குப் பிறகு சற்றுக் கலங்க ஆரம்பிக்கிறாள்.

"மோகன் நீ புரியாமப் பேசறே..." என்கிறாள். பின்னாலேயே பானுவும், கனகாவும் கூட வந்து நின்று விட்டனர்.

"நீ போடி...! டேய் மோகன், விட்றா. நடந்தது நடந்து போச்சு. நீ போடி.... போடின்னா..." - மகாலட்சுமி அவளை இடையில் புகுந்து துரத்தப் பாக்கிறாள்.

"விடு மகா... அவன் இன்னும் பேசட்டும் - எவ்வளவு பேசணுமோ பேசட்டும்."

"என்ன பசப்பறே? எங்க எப்படி நடந்துக்கணும்னு தெரியாத நீ எல்லாம் எதுக்கு மண்ணுக்குப் பாரமா? உன்னை இனி நான் என் வீட்டுப் பக்கம் பார்த்தேன், நடக்கறதே வேற..."

மோகன்ராம் வெடி வெடி என்று வெடிக்கிறான். பக்கத்து வீட்டு வாதாமரத்து அணிலும், ஓட்டுக்கூரை மேல் செத்த எலிக் குஞ்சைக் கொத்தியபடி இருக்கும் காக்கையும் கூட மோகனின் அதட்டலால் துணுக்குற்று, நடப்பதை வெறிக்கின்றன.

சுசீலா கரைய ஆரம்பிக்கிறாள். திடச்சித்தம் நொறுங்கினாற்போல் ஒரு பிரமை. எத்தனை முறைதான் தாங்குவது? அது யாருக்குப் புரிந்ததோ இல்லையோ... பானுவுக்கு நன்கு புரிகிறது. அவள் அருகில் போய் ஆதரவாகத் தோள் பற்றி, "அழாதக்கா..." என்கிறாள்.

"வேலிக்கு ஓணான் சாட்சி..." - பானு விருட்டென்று திரும்பி முதல் தடவையாக மோகன்ராமைப் பார்க்கிறாள்.

பார்வையா அது? நெருப்பு!

நான்கு நாட்கள் ஓடி விட்டன. ஒரு நாள் கூட மோகன்ராம் கடைப் பக்கம் வரவில்லை. மகாலட்சுமி கூட எட்டிப் பார்க்கவில்லை. என்னதான் முயன்று பார்த்தும் பானுவால் கழுத்து அவன் வீட்டுப் பக்கமாகத் திரும்புவதையோ, அவன் வராதது குறித்து வருந்தாமலோ இருக்க முடியவில்லை.

கூடவே கிழவி விஷயமும் சேர்ந்து கொண்டு படுத்திக் கொண்டிருக்கிறது. கண் போன கையோடு கிழவிக்கு இப்பொழுது காமாலை வேறு! ஓர் ஓரமாக அழுக்குத் துணி மூட்டை போல் சுருண்டு கிடக்கிறாள். ஈன சுரத்து முனகல் மட்டும் உயிருடன் இருப்பதைக் காட்டிக் கொண்டிருக்கிறது.

வியாபாரம் மட்டும் தூள் பறக்கிறது! தெருவில் நடந்தே பார்த்திராத சண்முகம் கூட இப்பொழுது புதிய கஸ்டமர். 'சர்ரு பிர்ரு' என்று கவசாகி பஜாஜில் பறக்கும் மெடிகல் ரெப்ரசென்டேடிவ் ஜோசப் கூட கஸ்டமர்!

ஆங்கிலப் பேச்சோடு இட்லி விழுங்கி, அவ்வப்போது பானுவையும் விழுங்கி, தங்களின் சுவை எதில் என்பதைச் சொல்லாமல் சொல்கின்றனர். பானுவுக்கு எல்லாமே புரிகிறது. பகிர்ந்து கொள்ளத்தான் ஒருவர் இல்லை. எப்போதாவது வரும் தோழி சாந்தி கூட அவளுக்குள் சோகத்தைக் கூட்டத் தான் செய்கிறாள். "ஹூம்... மோகனை மடக்கலாம்னு பார்த்தே. அவனை மாமன் மக மடக்கிட்டா. ஒனக்கு ஜவஹர்தான்" என்று உசுப்பேத்து கிறாள்.

'எனக்கென்ன தலையெழுத்து!' என்று எதிர்த் தெல்லாம் பேச முடியாது. எடுத்துக் கட்ட இருக்கும் கிழவி கூட நாளை எண்ண ஆரம்பித்து விட்டாள். உலகம் முழுக்கக் கோடி கோடிப் பேர். ஆனால் அதில் ஒருவர் கூடப் பானுவுக்காகக் கவலைப்படத் தயாராக இல்லை என்பதுதான் யதார்த்தம். அவர்களுக்கு அவசியமும் இல்லை.

ஒரு பெண்ணுக்கு இப்படி ஒரு நிலை வாய்க்கவே கூடாது. நினைத்தாலே நெஞ்சுக்குள் சுருக்கென்றது. இந்த மனநிலையோடு கடை நடத்தினால் அது மட்டும் சகிக்கவா போகிறது.

"ஏய் என்ன புள்ள... உப்ப அள்ளிக் கொட்டியிருக்கே?"

"என்ன ஆத்தா மிச்ச சில்லறைல அஞ்சு ரூவா கூட இருக்கு?" என்கிற தடுமாற்றங்களைப் பார்க்க முடிகிறது. அதைக் கட்டுவது போல வந்து சேருகிறான் ஜவஹர். ஸ்பெஷல் தோசை போடச் சொல்லிவிட்டு அவளையே வெறிக்கிறான்.

"தோசை எனக்கில்ல, ஆஸ்பத்திரியில இருக்கிற தாமுவுக்கு... பாத்துப் போடு" என்கிறான் சற்றுச் சொரசொரப்பாக, பக்கத்தில் கூடவே ஒரு கைத்தடி.

"நேத்து வியாபாரம் சரி இல்லைண்ணே. ஆயிரம் ரூவாய தொடலை" என்று ஆரம்பிக்கிறான் அவனும் கூட தகர டின் காலுடன் கூடிய பலகை பெஞ்சில் அமர்ந்தபடி...

"அந்த ஏட்டுப் பய வந்து ஐந்நூறு ரூபா கேட்டான். பொண்டாட்டிக்கு உடம்பு சொகமில்லியாம். எவ்வளவு வந்தாலும் டாக்டருக்கே போவுதாம்" என்று தொடர்கிறான். "போவோமா...?" என்று ஒரு கேலிச் சிரிப்பு ஜவஹரிடம்.

"காளியப்பன் சரக்கு பாக்கிய கேட்டான். நாளைக்கின்னுட்டேன். மாத்தியிருக்காங்க உங்களுக்குப் பிடிச்ச படம். பதினஞ்சு நிமிஷம் பிட்டு ஓட்றாங்களாம். சினிமாஸ் கோப்புல...!"

- பேச்சை அங்கேயும் இங்கேயும் கொண்டு சென்று விட்டு, மோகன்ராமிடமும் கொண்டு வந்து நிறுத்துகிறான்.

"அண்ணே, மோகன் ராமுக்கு வந்த வாழ்க்கையைக் கேள்விப்பட்டியா?" என்று இடைவெளி விடுகிறான்.

"ஏதோ ஒரு நொண்டிப் பொண்ணு வந்துருக் குன்னாங்க..."

"பொண்ணு நொண்டியா இருந்தாலும் ஸ்ரீதேவில்ல? சுண்டுனா ரத்தம் வர்ற கலரு. வகை தொகையில்லாம காசு வேற. மோகனுக்குக் கொடுத்துப் பரமக்குடிக்கே கூட்டிக்கிட்டுப் போயிடப் போறாங்களாம்."

"சீக்கிரமா போகச் சொல்லு..."

"எங்க...? இந்தப் பய கல்யாணம் கில்யாணம்னு பேசுனா தெரியும் சேதி. எல்லாம் வக்கீலாகிக் கோர்ட்டுக்குப் போன பின்னால தாங்கறான்..."

"ஆமா... பெரிய பாரிஸ்டர் ரஜனியாகப் போறாரு பாரு! நினைப்புதாண்டா ரொம்ப பேர் பொழப்பக் கெடுக்குது..." - எகத்தாள பதிலுடன் கத்திரி சிகரெட்

ஜவஹரிடம் கருக ஆரம்பிக்கிறது. மூக்குத் துவாரமே புகைக் கூண்டு ஆகிவிட்ட மாதிரி இருக்கிறது.

- பானுவிடம் கூட இறுக்கம் தளர்ந்த மாதிரி ஒரு மாற்றம். கை, கால் அசைவில் உணரும்படியாக ஒரு வேகம். ஜவஹரின் கழுகுக் கண்களில் அது துல்லியமாகப் பதிகிறது.

"டேய் நம்ம சுசீலா என்னடா பண்றா?" என்ற கேள்வியை வேண்டுமென்றே ஆரம்பிக்கிறான்.

"ஏழு இடத்துலையோ எட்டு இடத்துலையோ எலும்பு முறிவாம். இந்த ஜென்மத்துக்கு எழுந்திரிச்சு நிக்க முடியாதாம்ல...?!"

"இதுக்குக் கொளுத்தியிருக்கலாம்ங்கறே...?"

"பின்னே... நம்ம விஷயத்துல தலையிட்டா கண்ணுக்குக் கண், கைக்குக் கைங்கறதுதானே வழக்கம்?"

"முட்டாப் பயலே... இவ விஷயத்துல இவளைக் கொளுத்துனா கதையே மாறிப்போகுண்டா. அவதான் தாமுவைக் கொளுத்துனாங்கறது போஸ்டர் போட்ட மாதிரி ஊர் பூரா தெரிஞ்சு போகும். பொட்டத்தனம்பாங்க. அதனாலதானே அடிச்சுப் போட்ட விஷயமே வெளிய கசியலை. இனி பிச்சை எடுத்துத் தானே பிழைச்சாகணும். பாப்போமே, அந்த மோகன்ராம் பய உக்காத்தி வெச்சி சோறு போட்றானான்னு..."

- அவர்கள் பேச்சு சொரேல் என்று இந்த முறை பானுவின் வயிற்றில் ஈட்டியைச் செருகின மாதிரி ஆக்கிவிட்டது.

"ஜவஹர், இப்ப அக்கா எங்க?" என்று கண்களில் கண்ணீரோடு நிமிர்கிறாள்.

"யாருக்குத் தெரியும்...? அடிச்சுப் போட்டவங்களல்ல கேக்கணும்."

"அண்ணே அத அந்த ஆஸ்ரமக் கிழவன் பாத்துட்டுச் சிகிச்சை கொடுக்கறானாம்."

"யாரு தேசிகாச்சாரியா?"

"ஆமா..."

"அவனுக்கு நேரஞ்சரியில்லைன்னு நினைக்கறேன்" என்று கூறியபடி ஜவஹர் எழுந்து கொள்கிறான். தேசிகாச்சாரி பற்றித் தெரிய வந்ததில் மொத்த எண்ணமும் மாறிப் போய் விட்டது.

உடல் முழுக்க மாவுக் கட்டு. வகை தொகை இல்லாத அடி. விபசாரத்துக்கு அழைத்துச் சென்று, நாமமலை அடிவாரப் பாறை மறைவில் வைத்துப் பொறித்து எடுத்து விட்டிருக்கிறார்கள் தாமுவின் ஆட்கள். வேறு கோஷ்டி ஆட்களை வரவழைத்துக் காரியத்தை முடித்திருக்கிறார்கள். 'செத்து விடக் கூடாது; எழுந்து நடமாடவும் கூடாது' என்கிற நிபந்தனையைக் கச்சிதமாக ஈடேற்றியிருக்கிறார்கள்.

விடியும் போது ஒரு பாறை மேல் அலங்கோலமாகக் கிடந்தவளைத் தேசிகாச்சாரிதான் முதலில் பார்த்தவரே- கடவுளே அவர் உருவில் வந்த மாதிரி இதோ சுசீலா தெளிவான பார்வையோடு...

"அக்கா..." ஓடிவந்து பெருமூச்சோடு நிற்கிறாள் பானு.

"வா உட்கார்..." - அந்த நிலையிலும் சுசீலாவிடம் உபசரணை.

"பாவிங்க... படுபாவிங்க... இப்படிப் பண்ணிட்டாங்களே."

"இதை எல்லாம் நானும் எதிர்பார்த்துத் தாண்டி அந்தக் காரியத்த செஞ்சேன்."

"செஞ்சு என்னக்கா பிரயோஜனம்? மோகன் உன்னை என்ன பேச்சு பேசிடிச்சி பாத்தியா?" நின்றபடியே விசும்புகிறாள்.

"அவன் கிடக்கறான் விடு. எப்படி இருக்கு வியாபாரம்? பாட்டி எப்படி இருக்கா...?"

"த்ச்சௌ..." - பானு கவளி போல் செருமும் போது தேசிகாச்சாரி வருகிறார். பானுவை ஊன்றிப் பார்க்கிறார்.

"நீ மந்தா பேத்திதானே?"

- பானுவிடம் தலையசைப்பு.

"உக்காந்து பேசு" - என்று சொல்லிவிட்டு வெளியேற ஆரம்பிக்கிறார். அதிர்வில்லாத நடை.

"நல்ல வேளை உன்னை இவர் பார்த்தாரு. ஆமா எப்படி இருக்கு வலி?"

"வலியே இல்லை பானு. அப்பப்போ சூரணம் பச்சிலைன்னு தர்றாரு... பசி கூடத் தெரியலை. ரொம்பச் சுகமாக இருக்குடி..."

- உடல் முழுக்கக் கட்டோடு ஒரு பெண் பேசும் பேச்சா இது? ஆச்சரியமாக இருக்கிறது பானுவுக்கு.

"ஆமா... மோகனைப் பாத்தியா?" - சுசீலாவின் கேள்வி முன் அந்த ஆச்சரியம் அழிந்து சோகம் கட்டிக் கொள்கிறது.

"கவலைப்படாதே. எல்லாம் நல்லபடி நடக்கும்."

"எந்த நம்பிக்கைலக்கா சொல்றே? அநேகமா பாட்டி போயிடுவான்னு நினைக்கறேன். நீயும் இப்படி இருக்கே... நடுக்காட்டுல சிங்கம் புலிங்க கிட்ட ,சிக்கிக்கிட்ட மாதிரி இருக்கு..."

"புரியுது பானு. ஆனாலும் எதாவது ஒரு வழி கிடைக்கும்னு தோணுது. இப்ப எனக்குக் கிடைக்கலியா?"

"எனக்கு நம்பிக்கை இல்லைக்கா. என் வரைல எல்லாம் முடியப் போகுது."

"மனசு தளர்ந்துடாதேடி...!"

அந்தக் கார் இப்பொழுது தெருவிற்குள் நுழைய வழி கேட்டுக் கொண்டு நிற்கிறது. தெரு முழுக்க பாவு விரிப்புகள். ஒருவருக்கு நான்கு பேராகப் பாவை விரித்து 'அள்ளு நீட்டல்' என்கிற வைபவத்தைத் தொடர்ந்து கொண்டிருக்கிறார்கள். கிழக்கு வானில் நாற்பத்தைந்து டிகிரியில் நின்று கொண்டு கதிர்க்கரம் நீட்டி அந்த பாவு நூலின் ஒவ்வோர் இழை ஈரத்தையும் உறிஞ்சிக் கொண்டிருக்கிறான் சூரியன். வாலறுந்த நாயும், கறிக்கோழிகளும் ஏதோ சடுகுடு மைதானம் போல அந்த இடைஞ்சலிலும் ஓடி விளையாடிய படியிருக்க, ஆங்காங்கே சாக்கடைகளில் பன்றிகள் படுத்துக் கொண்டு நீரோட்டத்தை அடைத்துக் கொண்டிருக்கின்றன.

அனைத்துக்கும் நடுவில் கார் ஹாரன் திரும்பத் திரும்ப அலற, ஒரு பாவுக்காரன் வந்து பாவை இழுத்துக் கட்டி, போய்க்கோ என்பது போலப் பார்க்கிறான். அப்படியே காருக்குள் யார் என்றும் பார்க்கிறான். உள்ளே நரசிம்மன்!

காரும் மோகன்ராமின் ஓட்டு வீட்டு முன் தேங்கி நிற்கிறது.

கம்பீரமாகக் காரை விட்டு இறங்கும் நரசிம்மனை வீதியே பார்க்கிறது. உள்ளிருந்து வெளியே வரும் மகாலட்சுமியும் கூடக் காரைப் பார்த்து வாயைப் பிளக்கிறாள்.

"என்ன மகா பார்க்கிறே... புதுக் கார்! நேத்துத்தான் வாங்கினேன். உடனேயே மகளையும் மாப்பிள்ளையையும்

பார்க்கக் கிளம்பி வந்துட்டேன்'' என்று சொல்லிக் கொண்டே உள்ளே பிரவேசிக்கிறான்.

கனகா பூக்கட்டிக் கொண்டிருக்கிறாள். அப்பா வரவும் அளவாகச் சிரிக்கிறாள்.

"என்னம்மா எப்படி இருக்கு அத்தை வீடு...?'' கேட்கும்போதே பாய் விரிகிறது. அமருகிறான்.

"நல்லாருக்குப்பா... அத்தை ஒரு வேலை செய்ய விடமாட்டேங்கறா."

"ஆமா எங்க மாப்ளை...?" - கேள்வியோடு கொண்டு வந்த பூ பழத்தை அடுக்குகிறான்.

"வெளிய போயிருக்கான்... வந்துடுவான்'' என்ற படியே மகாலட்சுமி அவற்றை வாங்கிக் கொள்கிறாள்.

"சரி... மகா ஒரு முக்கிய விஷயம். நாள் நிச்சயித்து முடிச்சிடலாம்னு நினைக்கறேன். என்ன சொல்றே...?"

"அவன் கல்யாணப் பேச்செடுத்தாலே ஓட்றான்.... படிப்புதான் முதல்லேங்கறான்."

"அது பாட்டுக்கு அது. இது பாட்டுக்கு இது. எனக்கும் மாப்ளை படிக்கணும். அதான் முக்கியம்."

"வருவான் நீயே கேட்டுக்கோ..." - திரும்பிப் பார்த்த நரசிம்மனின் காதில் ஆமோதிப்பதாக வீதி பிள்ளையார் கோவில் மணி சப்தம்.

ஆனால் வாசலில்...!

13

வாசலில் கிருஷ்ணாராவ்! கிருஷ்ணாராவைப் பார்க்கவும் மகாலட்சுமி சற்றுத் தடுமாறுகிறாள். ஆமை, அமீனா புகுந்த வீடுகள் மட்டுமல்ல; கிருஷ்ணாராவ் புகுந்த வீடும் கூட உருப்படாது என்பது அந்த வீதியின் அசைக்க முடியாத நம்பிக்கை. மனிதரும் ஒரு கோணல் புத்தித் திலகம்! நடமாடும் வட்டிக் கடையாகவும் இருப்பதால் அவரைப் பார்ப்பவர்கள் பல காரணங்களுக்காக ஓட வேண்டிய நிலை.

"என்ன மகா வான்னு கூடக் கூப்பிடமாட்டேங்கறே? யாரு வந்திருக்கறது?'' - கேள்வியோடு, 'நீ என்ன கூப்பிடுவது' என்கிற மாதிரி மனிதர் உள்நுழைந்து விடுகிறார். வந்த ஜோரில் கனகாவையும் வெறிக்க ஆரம்பித்து விடுகிறது பார்வை.

"என்ன வேணும் கிருஷ்ணாராவ்? உங்ககிட்டே என் மகன் எதாவது கடன் கிடன் வாங்கிட்டானா என்ன?"

"யாரு மோகா... என்கிட்டையா... கடனா? நல்லா கேட்ட போ. சும்மா கொடுத்தாலே வேண்டாங்கறவன் உன் புள்ளை."

"அப்ப என்ன விஷயம்?"

"ஏன் சும்மா வரக்கூடாதா நான்?"

இருவரின் பேச்சை நரசிம்மன் புரிந்து கொண்டு கனகாவைப் பார்க்க, அவள் கொல்லைப்புறம் செல்லத் தயாராகிறாள்.

"அடடா... கால் விளங்கலையா? பகவானே..." - கிருஷ்ணாராவிடம் விதரணையே இல்லாத ஆதங்கம். கனகா நின்று திரும்பி ஒரு முறை முறைத்தாள்.

"தப்பா எடுத்துக்காதேம்மா. எப்படி ஆச்சு இப்படி?"

"உங்களுக்கு எதுக்கு இதெல்லாம்? நீங்க கிளம்பறீங்களா? இங்க எங்களுக்கு நிறைய வேலை இருக்கு..." - மகாலட்சுமி பொறுமை இழந்து விட்டது பேச்சில் தெரிகிறது. கிருஷ்ணாராவிடமும் தாக்குப் பிடிக்க முடியாத ஒருவித தடுமாற்றம்.

"ஹூம்... சரி கிளம்பறேன். பிள்ளைக்குக் கல்யாணம் பண்ணப் போறே! என்ன ஏதுன்னு விசாரிக்கலாம்னு வந்தேன். நீ என்னடான்னா ஒரேடியா விரட்றே. மனுஷா வேணும் மகாலட்சுமி. அதை மறந்துடாதே..." - புலம்பிக்கொண்டே திரும்பி நடக்கிறார். ஓடி வருகிறாள் எதிர் வீட்டவள்.

"மகா, வீட்டைக் கழுவி விடு. இல்லாட்டி தரித்திரம்தான். அவன் கனகாவை நோட்டம் போடத்தான் வந்துருக்கான். இந்த வயசுல நாயிக்கு இரண்டாம்தாரம் கேக்குது" - என்று அவள் சொன்ன போது நரசிம்மனுக்கு ஒரு விநாடி கந்தகத்தைச் சப்பியது போல் ஒரு பதற்றம். பின்னர்தான் தெரிகிறது. அவன் முதல் மனைவி இறந்து ஆறு மாதமாகிறது என்பதிலிருந்து பல தகவல்கள். அதைக் குறைப்பது போலச் சுக்குக் காப்பி போட்டு எடுத்து வந்து தருகிறாள் மகாலட்சுமி.

"என்ன நச்சு... சாப்பிடு."

"நான் சாப்பிட்றது இருக்கட்டும் மகா. நீ இனியும் இந்தத் தெருவுல இருக்கக் கூடாது."

"ஏன் இந்தத் தெருவுக்கென்ன...?"

"கார்ல சட்டுன்னு நுழைய முடியலை. நாய், கோழி, பன்னின்னு மனுஷங்களுக்குச் சரியா ஜீவராசிகள் வேற. மனுஷாளும் மலை விழுங்கிகளா தெரியறாங்களே."

"உன் ஊர்ல எல்லாரும் சத்யசந்தர்களா?"

"அப்படிச் சொல்ல வரலை. ஆனா இவ்வளவு மோசமில்லை."

"அது பாக்கற பார்வைல இருக்கு நச்சு. நான் அறிய இந்தத் தேசத்துல எல்லாத் தெருவுலையும் இதான் நிலை. அத விடு நீ, ஆமா உன் வீட்டுக்காரியைக் கூட்டிக்கிட்டு வரலியா?"

"இல்ல... அவ நிச்சயத்துக்குத்தான் வரேன்னுருக்கா. மாப்ளை வரட்டும், நானே ரெண்டுல ஒண்ணு கேட்டுப்பிடறேன்."

"கெடுத்தே போ...! மோகன் நீ நினைக்கற மாதிரி பையனில்ல. இப்ப எதையாவது கேட்டு வெச்சு மொத்த காரியத்தையும் கெடுத்துக்காதே."

"அப்படின்னா?"

"கனகா இங்க இருக்கால்லியா... எல்லாத்தையும் அவ பாத்துப்பான்னு சொல்றேன்."

இருவரும் பேசிக் கொண்டிருக்க, கனகா மோகன்ராமின் புத்தகப் பெட்டியை ஆராய்ந்து கொண்டிருந்தாள். கட்டுக் கட்டாய் சட்டப் புத்தகம்; தலையைச் சுழற்றும் ஆங்கில அணிவகுப்பாக... நடுநடுவே திருக்குறள் கதை, திருவாசக விளக்கம் என்று ஆன்மிகப் புதையல்களும்...! ஒரு பதவிசான பைண்டாகப் பொன்னியின் செல்வன் கூடத் தட்டுப்படுகிறது.

"ஓ... இந்தப் புத்தகம் இல்லாத வீடும் இல்லையோ?" நினைப்போடு பிரிக்கிறாள். ஏற்கெனவே ஒருமுறை படித்திருக்கிறாள். இரண்டாம் முறை படிக்கத் தூண்டுகிறது

அது. பக்கங்களை மருதாணி விரல்கள் நிரடுகின்றன. நடுவில் ஒரு குட்டி டைரி! வழுக்கிக் கொண்டு புத்தக அடைவு நீங்கி அவள் மடியில் விழுகிறது. எடுத்து விரித்தால் அதில் மோகனின் கையெழுத்தில் சில வரிகள்.

'வீட்டுக்கு வந்தவளிடம் நிறைய பேச ஆசைதான். ஆனாலும் என்னால் முடியவில்லை. ஏன் என்று தெரியவில்லை. இது காதலிக்கும் வயதுதான். ஆயினும் எந்த அடித்தளம் இருக்கிறது எனக்கு? முதலில் அதை அடைய வேண்டும். பிறகுதான் காதல்! நிச்சயம் அதுவரை அவள் காத்திருப்பாள். ஊனப்பட்டு நிற்கும் அவளுக்கு என்னை விட்டாலும் வேறு யார் இருக்கிறார்கள்?'

படித்த நொடியில் கனகா ஆகாயத்தில் மிதக்க ஆரம்பித்து விட்டாள். தேகம் மேகமாகிறது. மனசு பறவையாகிறது. ஓ... இவன் தான் எத்தனை நேர்த்தியான மனிதன்? நினைத்த நொடியில் என்ன வேண்டுமானாலும் என்னைச் செய்யலாம் என்கின்ற போதிலும் தன்னைத் தானே என்னமாய்ச் செலுத்திக் கொள்கிறான்!

அந்த டயரியை ஞாபகமாகப் பொன்னியின் செல்வனுக்குள் அடக்குகிறாள். மூடி வைக்கிறாள்.

சற்றுச் சோபையிழந்தது போல் இருந்தவள் முகத்தில் இப்பொழுது ஜாஜ்வல்யம் தெரிவது கண்டு நரசிம்மனுக்கே மிகுந்த ஆச்சரியம்!

காலை இப்பொழுது சுசீலாவால் நன்கு ஊன முடிகிறது. அடிபட்டு இன்றுடன் ஒரு மாதம்தான் கழிந்திருக்கிறது. அதற்குள்ளேயே இத்தனை மாற்றம்.

அவளை விடவும் அதிக ஆச்சரியம் அந்த ஆசிரமத்துச் சிலம்பாட்டக் கூட்டத்துக்குத்தான். ஒரு வருஷம் ஆனாலும் தேறுவது கடினம் என்ற கேஸ் இப்படி

இத்தனை சீக்கிரம் குணவயப்பட்டால் யாரைத்தான் ஆச்சரியம் தாளிக்காது?

அங்கும் இங்கும் தாவி, விஷயம் ஜவஹரின் காதுக்குப் போகிறது. ஜி.எச்சில் தாமு இன்னும் குணமாகவில்லை. அரைச் சதம் கூடக் காயம் ஆறியிருக்கவில்லை. ஆனால் சுசீலா எழுந்து நிற்கிறாள், நடக்கிறாள் என்றால் நம்பவா முடிகிறது?

போய்த்தான் பார்த்து விடுவோமே... அவனது பஜாஜில் ஏறி, சிட்டாய்ப் பறந்து ஆசிரமத்தை எட்டுகிறான். பகல் பொழுது வறட்டு வெயிலின் ஊமைப் பொசுங்கலில் பிடறியில் எல்லாம் வியர்க்கிறது.

ஆசிரமத்தில் ஆலமரத்தடி வேர்த்தண்டை ஒட்டி ஐந்தடி உயரத்தில் ஆஞ்சனேயஸ்வாமி விக்கிரகம் ஒன்று நின்ற நிலையில். அதன்முன் தேசிகாசாரி அமர்ந்து நிஷ்டை புரிகின்ற மாதிரி தெரிகிறது. உள்ளே மரக்கட்டிலில் கால் கைகளை நீட்டி மடக்கிக்கொண்டு பயிற்சி செய்தபடி இருக்கிறாள் சுசீலா. மற்றபடி யாரையுமே காணவில்லை.

ஒரு சிகரெட்டைப் பற்றவைத்துக் கொண்டு உள்ளே நுழைகிறான் ஜவஹர். அவன் வருவதற்கு முன்பே அவன் விட்ட புகை அவள் வரை சென்று நிமிர்த்துகிறது.

"என்ன பாக்கறே? நான்தான். பாம்பை அரைகுறையா அடிச்சுட்டு விட்டா, திரும்ப பழிவாங்கக் கிளம்பி வரும்னு சொல்லுவாங்க. உன் விஷயத்துலயும் அது நிஜம்தான்..." என்று சிகரெட்டைத் திரும்பவும் ஓர் இழுவை.

சுசீலா அந்த நிலையிலும் அவனை முறைக்கிறாள்.

"என்னடி... பதிவிரதை மாதிரி பாக்கறே? உன்னைக் கவனிக்கறதுக்கு முந்தி இந்தக் கிழவனைக் கவனிக்கணும். அப்பத்தான் சரிப்படும்..."

"அப்ப கவனி ..." - பின்புறமிருந்து உடனடியாகப் பதில் - தேசிகாச்சாரிதான்.

"ஏய்யா உனக்கென்ன கிறுக்கா...? இவளைப் போய் ஆசிரமத்துல வெச்சிருக்கியே..." புகையோடு முன் சென்று மார்பு நிமிர்த்துபவன் எதிரில் நின்று தேசிகாச்சாரி சலனமின்றிப் பார்க்கிறார்.

"ஆமா! நீ என்ன பெரிய ஆர்த்தோவா? கட்டு போட்டு வைத்தியமெல்லாம் பாக்கறே? பட்டு நெஞ்சு முடியாமப் போய் ஊரை விட்டே ஓதுங்கிட்டவன் நீ. இங்க என்னடான்னா சிலம்பம், தியானம்னு ஏதோ கலந்து விட்டுக் கிட்டிருந்தே. போகட்டும்னு விட்டா டாக்டர் வேலை எல்லாம் பாக்கறியே. ஆசிரமம் இருக்கணுமா? இல்லை அது எரியணுமா?"

திமிர்ப் பேச்சோடு தேசிகாச்சாரியைச் சிகரெட் புகையால் மூடுகிறான். அவரிடம் சலனமேயில்லை. எரிச்சல் பீறிடுகிறது ஜவஹரிடம்.

"பேசறது காதுல விழுதுதானே... கல்லுமாதிரி நின்னா என்ன அர்த்தம்?" - பேச்சின் எச்சில் அவர் முகத்தில் படுகிறது. மெல்ல சலனப்பட ஆரம்பிக்கிறார் தேசிகாச்சாரி.

"பேசிட்டியா?" கேட்கிறார்.

"இவளை முதல்ல வெளிய இழுத்து விடு. இல்ல நிறைய பேசுவேன்."

"விட மாட்டேன். நீ பேசு..."

"வேண்டாம். ராத்திரியோட ராத்திரியா இந்த ஆசிரமத்தையே சாம்பலாக்கிடுவேன்."

"ஏன் இப்பவே ஆக்கேன் பாப்போம்..." -

அவர் பேச்சு சவாலா? இல்லை, சாதாரண ரகமா என்று தெரியவில்லை. ஆனால் ஒரு தீர்மானம் தெரிகிறது. ஜவஹருக்குக் குழப்புகிறது. தடுமாற்றம் தொற்றுகிறது.

பேண்ட் பாக்கெட்டில் கைவிட்டுச் சிகார் லைட்டை எடுக்கிறான். சொடுக்கித் தீச்சுடரும் பிடிக்கிறான்.

எரியப் போவது ஆசிரமமா? இல்லை...

தேசிகாச்சாரியிடம் இப்போது ஒரு புயல்வேக மாற்றம். கண்கள் இரண்டிலும் கோவைச் சிவப்பு. அதீத காற்றை உள்ளிழுக்கும் உதட்டுச் சும்பல். புடைத்த கன்னம்... என்று உருமாறுகிறார்! இரு கைகளை அவன் எதிரே நீட்டி அவன் இரு பக்கப் பிடரியிலும் தட்டப் போக அவன் அப்படியே ஸ்தம்பிக்கிறான். மரம் போலக் கீழே விழுகிறான்.

விநாடியும் தாமதிக்காமல் அருகில் இருந்த பானைத் தண்ணீரை எடுத்து அவன் மேல் அபிஷேகிக்கிறார். அவன் உதறலான உதறு உதறுகிறான். ஆனால் வாய் மட்டும் கோணிக்கொண்டு பேச்சை இழந்து விட்டிருந்தது!

"தேசிகனுக்கு வர்மம் தெரியும்கறது உனக்குத் தெரியாதா? அறிவு கெட்டவனே...!" - கேட்டபடியே கழுத்துப்புறம் மயில்துத்தத் தைலம் போட்டு நீவி விடுகிறான் வெட்டால் பாவா! அருகிலேயே பம்பாய் மணியம் - ஜவஹரின் அப்பா.

"வெட்டால்... முதல்ல அவனைப் பேச வை - பிறகு திட்டலாம்..."

"என்னத்த போ... எதிரியோட பலம் தெரிஞ்சு மோதணும். இப்படியா போய்த் தலையக் கொடுத்து மாட்டிக்கறது...!"

"எல்லாம் உதைபட உதைபட, தானா வந்துட்டுப் போகுது..."

"அதுக்குன்னு இப்படியா. நான் இருக்கறதால பேச வெச்சுடுவேன். இதே இல்லைன்னா..."

"தா... அஞ்சு நிமிஷம் முந்தி பொறந்திருந்தா நான் எம்ஜி.ஆர்ங்கற மாதிரி எதையாவது பேசாதே! ஆமா, நான் ஒண்ணு கேக்கணும் உன்கிட்டே. இந்த வர்மம்லாம் நிஜமா?"

"அப்படின்னா...?"

"ஏய்... இதெல்லாம் சுத்த சினிமா சமாசாரம்னு நினைச்சுகிட்டிருக்கேன் நான்."

"போய் வாயைக் கழுவு. பார்வைக் கட்டு, ஒத்தக்கால் கட்டு, நயனக்கட்டு, நாபிக் கட்டுன்னு நூறு ஜாதி இருக்கு இதுல. நம்ம கிழடுங்க பல விஷயங்களைச் சொல்லிக் கொடுக்காமலே செத்துட்டாங்க."

"அப்ப தேசிக்கு மட்டும் எப்படித் தெரிய வந்துச்சு?"

"நானறிய ஒரு பத்து வருஷம் வடக்க இமயமலைப் பக்கம் போன பிறகுதான் தேசிகனுக்கு இது வசப்பட்டிருக்கு. எந்தச் சாமியார் கால் கைய அமுக்கிவிட்டுக் கத்துக்கிட்டு வந்தானோ?"

"உனக்கு எப்படித் தெரியும்?"

"எனக்குக் கட்டத் தெரியாது. அவுக்கத்தான் தெரியும். அதைக் கூடத் தேசிகன் கிட்டதான் கத்துக்கிட்டேன். ஓரளவு கத்துக்கிட்ட நிலையில சாரயம் பக்கம் போச்சு புத்தி. தேசிகன் விரட்டி விட்டுட்டான்."

பேச்சோடு பேச்சாகக் கை நீவியதில் ஓரளவு குணம் தெரிகிறது, ஜவஹரிடம். அப்பாவை 'அவ்வா' என்று அழைக்க முடிகிறது.

"இரண்டு நாள் தொடர்ந்து நீவி விடணும். எட்டிச் சாறையும் நாக்குல தடவிக்கணும். கசப்பு தாளாம கழுத்து நரம்பெல்லாம் பாம்பா நெளியும்போது மெள்ள பிடி தளர்ந்து, ரத்தம் பாய்ஞ்சு, பேச்சு வரும். இனியாவது ஆளறிஞ்சு நடந்துக்கச் சொல் உன் மகனை..."

வெட்டால் பாவா கிளம்பி விட்டான். மருத்துவக் கைமாறாகச் சாராயத்தை ஒரு மடக்கு ஊற்றிக் கொள்கிறான். தொட்டுக் கொள்ள மேட்டூர்க் கெண்டை மீன் ஊறுகாய்!

உஸ்ஸ்ஸ்...!

மோகன்ராமைச் செய்தி அடைந்த போது, முதலில் அவனால் நம்பவே முடியவில்லை. கூடவே தேசிகா சாரியைப் பார்த்துப் பேச வேண்டிய ஆசையும் துளிர் விட்டது.

புத்தகத்தை மூடிவிட்டுக் கிளம்பலாம் என உத்தேசித்தபோது ரேஷன்கார்டும் பையுமாக எதிரில் வருகிறாள் மகாலட்சுமி. "மோகன், அரிசியும் சர்க்கரையும் போட்றாங்களாம்..." என்றும் மட்டும் சொல்கிறாள்.

"வேண்டாம்மா" என்று சொல்லப் பார்க்கிறான். முடியாமல் தயங்கியபடியே பையையும் கார்டையும் வாங்குபவன் கனகாவைக் கவனிக்கிறான்.

"அத்தான் நான் வேணா போய் வாங்கிட்டு வரட்டுமா?" - கேட்கிறாள்.

"சேச்சே... நான் போறேன் நீ எதுக்கு... பாவம்!"

"அதான் இல்லை. நான் போனா லைன்ல நிக்க வேண்டாம்ல. இந்த நொண்டிக் கால் இதுக்காவது உபயோகப்படட்டுமே..."

"உனக்கென்னம்மா தலை எழுத்து...?" என்று மோகன் ராமைத் தள்ளி விடுகிறாள் மகாலட்சுமி.

"ரேஷன் கடைக்குப் போறதுல கௌரவக் குறைச்சல் இல்லை அத்தை..."

"அதுக்குச் சொல்லலைம்மா... அவனுங்க ஆளுக்குத் தகுந்த மாதிரி அளந்து போடுவாங்க. மோகனைப் பார்த்தா கொஞ்சம் பயப்படுவாங்க..."

"அதனாலேயே சண்டையும் வரும். கட்டி உருண்டிருக்கேன். அவங்களுக்கு ஒரு கிலோக்கு நூறு கிராமாவது திருடணும். இந்த ஏழைகிட்ட திருடுற கொடுமை இருக்கே..."

"டேய் கதை அப்பறமா பேசு. இப்பக் கிளம்பு. நீ வந்துதான் உலை வைக்கணும்."

கனகாவுக்கு அப்போதுதான் அந்த வீட்டு நிலை ஒரு இடி இடித்தது. அப்பாவும் போகும் போது பணம் கொடுத்து விட்டுப் போனதும் நினைவுக்கு வந்தது.

"அத்தே..."

"என்ன கனகா?"

"அப்ப பணம் கொடுத்திருக்கார். அதுல நல்ல அரிசி வாங்கிட்டு வரலாமே..." என்று சொல்லி முடிக்குமுன் வாசற்படி கடந்து விட்டான் மோகன்ராம்.

"நல்லவேளை... அவன் இருக்கும் போது பேசலை நீ; அவன் காதுல விழுந்திருந்தா விட்டத்துக்கும் கூரைக்கும் எகிறிக் குதிச்சிருப்பான்."

"நமக்குள்ள என்ன அத்தை..."

"தோ பார் கனகா... பெத்தவ என் கிட்டையே அவன் சில விஷயங்கள்ள தன்மானம் பாக்கறவன். நீ நேத்து வந்தவ... அதோட உழைச்சுதான் சாப்பிடணும்கற தெல்லாம் அவன்கிட்ட சின்ன வயசுலையே வந்துட்ட விஷயம்மா."

மகாவின் பேச்சுக்குத் தோதாக எதிரில் புதிய பட்டுத் தறி நெசவுத் திண்ணையில் இழுத்துக் கட்டப்பட்டுக் கிடக்கிறது.

ராத்திரியெல்லாம் தூங்காமல் அவனும் முகுந்தனும் பிசிறு நீக்கி இருக்கின்றனர் - கெண்டையைத் தயார்ப் படுத்தியிருக்கின்றனர். தறிமேடையைத் தயார்ப் படுத்தி யிருக்கின்றனர். தறி மேடையைப் பார்த்தால் தெரிகிறது.

இதற்கெல்லாம் பணத்துக்கு எங்கே போனான்...?

ரேஷன் கடையில் கூட்டம் கட்டி ஏறிக் கொண்டிருந்தது. கலப்படமில்லாத இந்தியா கண் எதிரில் தெரிகிறது. காரும் பங்களாவும் காஷ்மீரும் ஊட்டியும் கூட இந்திய அடக்கம்தான். ஆனால் தூக்கலாய்த் தெரிவது சோற்றுக் கவளமாகத்தானே இருக்கிறது?

உள்ளே எடை போடுவது என்கிற பெயரில் ஒரு அப்பட்டமான பகல் கொள்ளை. அரிசியும் கூட களத்து மேட்டில் காக்கை குருவி கூடப் பொறுக்கி உண்ணாத ரகத்தில்...

மோகன்ராம் மெள்ள உணர்ச்சிவயப்பட ஆரம்பிக்கிறான். எவ்வளவுதான் தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்ளப் பார்த்தும் முடியாமல் போகிறான்.

பொடியன் ஒருவன் சர்க்கரை வாங்கும்போது தராக மின்னல் வேகம் எடுக்கிறது. சரியான சில்லறை தராத ஒரே காரணத்துக்காகவே திருப்பி அனுப்பப்படுகிறாள் கிழவி ஒருத்தி. ஐந்து பைசா பத்து பைசாவையெல்லாம் நாங்கள் காசாகவே நினைப்பதில்லை என்கிற அலட்சியத்தில் பில் போடுபவன்.

"ஏம்ப்பா மோகன்..." - ஒரு தெரிந்தவளிடம் அழைப்பு.

"சாராயம் விக்கறாங்கன்னு சண்டை போட்டியே, இந்தத் திருட்டுப் பசங்களுக்கு எதிரா எப்ப போடப் போறே?" - கேட்கிறாள்.

"ஆமா யாராச்சும் நமக்காகச் சண்டை போடணும். ஆனா நாம மட்டும் வேடிக்கை பாக்கணும்" - அதே கூட்டத்திடம் இருந்து சரியான பதில் கூட

"அவங்க என்ன பண்ணுவாங்க... மந்திரி வரைக்கும் கப்பம் கட்டி ஆகணுமில்லே..." கூட்டத்தில் ஒரு மிதவாதி கூடத் தெரிகிறான். அவனை முறைக்கிறது மோகன்ராமின் பார்வை.

- தணிக்கிற மாதிரி துணிப்பையுடன் யார் அது? பானுவா?

பெண்களுக்கான வரிசையில் வந்து நிற்பவள் எதிர்ச்சாரியில் மோகன்ராமைப் பார்த்து, அதிகாலையில் ஆற்றில் முழுக்குப் போட்டுப் பெறும் பரவசத்தைப் பெறுகிறாள்.

"ஊட்டுக்குள்ளியே சினிமா வந்துருச்சு. எங்கியோ பந்து விளையாட்றாங்க. ராட்டை சுத்திகிட்டே பாக்க முடியுது. வயர் இல்லாம டெலிபோனாம்! கொல்லைக்குப் போய்க்கிட்டே கூடப் பேசலாமாம்! இன்சாட்டு, செல்லுலர்னு தஸ்புஸ்னு என்னென்னவோ எழவு... ஆனா இந்த அரிசி சர்க்கரையை ஒழுங்கான எடைல பாக்கெட்ல போட்டு விக்க மட்டும் நம்மவங்களால முடிய மாட்டேங்குது..." ரசனையோடு சலித்துக் கொள்ளத் தெரிகிறது ஒரு பொது ஜனத்துக்கு.

அந்தக் கேள்வியின் பொருள் மோகன்ராமைப் புரட்டி எடுக்க ஆரம்பிக்கிறது.

மந்திரியைப் பார்த்து மனு கொடுக்கும் ஆசைவசப் படுகிறான். கூடவே அந்த மனுத் தாளாலேயே மந்திரியின் ஆபீஸ் வாசலில் கடலைப் பொறி கட்டப்பட்டுத் தரப்படுவதாகவும் நினைத்துக் கொள்கிறான்.

மனுவெல்லாம் மகா ஒல்டு ஃபேஷன்!

ஒரே வழி அதுதான்... யோசித்து முடித்த நொடியில் ரேஷன் கடையின் கவுண்ட்டர் அடைக்கப்படுகிறது.

சரக்கு தீர்ந்துடுச்சாம்!

14

வெளியே மொய்க்கும் கூட்டம். எதைப் பற்றியும் கவலைப்படாமல் சரக்கில்லை என்று கடையை மூடி விட்டான் ரேஷன் கடைக்காரன். "பத்து பேருக்குக் கூட மண்ணெண்ணெய் ஊத்தலை... அதுக்குள்ள தீர்ந்து போச்சுன்னு மூடுறியே...?"

"மண்ணெண்ணெய் தான் தீர்ந்து போச்சு. மத்ததுமா தீர்ந்து போச்சு?" சிவந்த முகத்துடன் முன் செல்கிறான் மோகன்ராம்.

ஐய்யய்யோ!

இதைப் பயத்துடன் பார்க்க ஆரம்பிக்கிறாள் பானு. மோகன்ராமைப் பார்க்கவும் பில் போடுபவனிடம் துளி இணக்கமான சிரிப்பு.

"சாரி தம்பி... புது ரேஷன் கார்டுக்கு மனு தரணும்... ஸ்டாக் வேற எடுக்கணும். சரக்கு போட்டுக்கிட்டிருந்தா இதைப் பாக்கறது எப்படி? வேணும்னா உனக்கு மட்டும் போடச் சொல்றேன். வாங்கிக்கிட்டுப் போ..."

ஏதோ பெரிதாக உதவி விட்டது போல் அவனிடம் ஒரு பாவனை வேறு.

"ஜனங்களுக்குச் சப்ளைதான் முதல் விஷயம். நீங்க சொல்ற விஷயங்களில்ல. இப்ப எல்லாருக்கும் சரக்கைச் சப்ளை செய்யப் போறீங்களா... இல்லை...?"

குரலில் கடுமை தொனிக்க மார்பை நிமிர்த்து பவனைப் பில் போடுபவன் கூடச் சற்றுக் கோபத்துடன் தான் பார்க்கிறான்.

"போடாட்டி...?"

"அந்தக் கேள்விக்கே இடமில்லை..."

"நீ என்ன இவங்களுக்கெல்லாம் ரெப்ரசென்டேடிவா...?"

"எப்படி வேணா வெச்சுக்கோ."

"வேணாம். எங்க சிக்கல் உனக்குத் தெரியாது."

"நான் அதைக் கேக்க வரலை. பொருள் வாங்க வந்துருக்கேன்."

"ஆமா. நாங்க பொருள் வாங்க வந்துருக்கோம். அவர் கேக்கறதுல என்ன தப்பு?" முதல் தடவையாக வெளியேயிருந்து ஒரு ஆதரவுக் குரல்! கொடுத்தவள் பானு. கடைக்காரன் அவளையும் ஒரு பார்வை பார்க்கிறான்.

"எல்லாரும் சொல்லுங்க. இதை இப்படியே விடக் கூடாது. இதுக்கு ஒரு முடிவு கட்டியே தீரணும்" - பானு கூட்டத்தின் பக்கம் திரும்புகிறாள்.

"அதானே... இதை இப்படியே விடக்கூடாது..." - மோகன்ராம் பற்றவைத்த நெருப்பு, பானு மூலமாக கூட்டத்திடமும் பற்றுகிறது, தொடருகிறது. கடைக்காரன் இறுக்கம் தளருகிறான்.

சம்மதித்து விட்டதற்கு அடையாளமாகத் தூக்கிப் போட்ட பில் புக்கை எடுக்கிறான்.

"ராசா நீ நல்லா இருக்கணும்!" என்று ஒரு கிழவி முதல் அட்சதையைப் போடுகிறாள் மோகன்ராம் மீது. பானுவுக்குப் பெருமிதமாக இருக்கிறது.

"வாழ்த்தறது அப்புறம். இந்த ஒத்துமையை எப்பவும் விட்டுடாதீங்க. ஏழைகளோட ஒரே பலம் அதுதான்.." - சொல்லிவிட்டு ரேஷன் கார்டை நீட்டுகிறான். கடைக்காரன் முகத்தில், 'உன்னை கவனித்துக் கொள்கிறேன்' என்பது போல ஒரு தீர்மானம்.

சரக்குடன் திரும்பும்போது பானுவை முதல் தடவையாக ஆழமாய் ஒரு பார்வை பார்க்கிறான். சற்றுக் கனிந்த பார்வையும் கூட!

ரேஷன் கடையின் கசகசப்பிலும் அவள் ஒரு வித்தியாசமான இன்பத்தை அநுபவிக்கத் தொடங்கினாள்!

ஆளாளுக்குத் தலையைச் சொரிகிறார்கள். வார்டு பாயிலிருந்து நர்ஸ் முதல் டாக்டர் வரை! தாமுவும் சளைக்காமல் எல்லோருக்கும் ஐம்பது நூறாகவே வெட்டுகிறான்.

சாராயக் காசு. சர்வ சல்லிசான புழக்கம். தாமுவிடமும் தாராளம். உடனிருக்கும் சகாவுக்கோ எரிச்சல் தாளவில்லை.

"அண்ணே சீக்கிரம் கிளம்புங்க. உங்க பெட்டுக்கு மேலே ஒரு பல்லி ரொம்ப நேரமா உங்களையே பார்த்துக் கிட்டிருக்கு. அது ஒரு ஐம்பது ரூவா கேட்டு வெக்கப் போவுது" - என்று தாமுவைத் தூண்டுகிறான்.

தாமுவிடம் இடக்குச் சிரிப்பு.

"ஒரு ஊறல் டின்னுல எல்லாத்தையும் திரும்ப எடுத்துட மாட்டேன்" என்கின்றான் பதிலுக்கு. உடம்பு முழுக்கக் காயம் சுமாராக ஆறி விட்டிருக்கிறது. தேமல் போல அங்கங்கே மட்டும் வெள்ளையாய்... சற்று அரூபமாய்த் தெரிகிறது.

போகப் போகச் சரியாகி விடுமாம். நன்றாய்ப் பார்த்துக் கொள்ள வேண்டுமென்றால் தனது டிஸ்பென்சரிக்கு வரச் சொல்லியிருக்கார் டாக்டர்.

அந்தப் பதிலிலேயே, இங்கெல்லாம் சுமார் லட்சணத்தில்தான் பார்க்க முடியும் என்கிற நிஜத்தின் ஒளிவு.

பட்டாளத்தோடு வாசலுக்கு வருகிறான்.

"ஆட்டோ வேணுமா?" - என்றபடி ஒரு காக்கிச் சட்டை.

"அத்த வாங்கிப் போட்டு நான் என்னத்த பண்ண?" - என்கிற இடக்கு பதில் தாமுவிடம். ஆட்டோக்காரன் முகம் கும்பிப் போகுமுன் அந்த ஆட்டோவிலேயே ஏறி அமருகிறான்.

சகாக்கள் மற்ற ஆட்டோக்களில் ஏறிக் கொள்கின்றனர்.

மீட்டர் என்கிற ஒன்று ஏதோ ஒரு வேண்டாத உறுப்பாக ஓடாமல் நிற்கிறது. அதைப் போட வேண்டும் என்கிற பிரக்ஞையும் தாமுவிடம் இல்லை.

நடுவழியில் டிராஃபிக்கில் ஒரு சின்னத் திணறல். கான்ஸ்டபிள் ஆட்டோக்காரனைப் பார்க்க, "என்ன அண்ணாச்சி டூட்டி இன்னிக்கு இங்கியா?" என்கிற சிநேக பாவம் ஆட்டோக்காரனிடம்.

"ஒரு சிகரெட் இருந்தாக் கொடு..." என்கிற பதில் சினேக பாவம் கான்ஸ்டபிளிடம். உள்ளே தெரியும் தாமுவைப் பார்க்கவும் கான்ஸ்டபிள் முகத்தில் பலத்த பிரகாசம்.

"அட வாத்யாரா?"

"ஆமாஞ் சார்... சௌக்யமெல்லாம் எப்படி?"

"நான் என்ன உன்னை மாதிரி பத்தாயிரம் இருபதனாயிரமா என்ன? டி.ஏ. பேசிக்குன்னு வாரி வழிச்சா நாலு நோட்டு தாண்டாது..." என்று பேச்சே திசை மாறுகிறது கான்ஸ்டபிளிடம். இதற்குள் சிக்னல் விழ ஆட்டோக்காரன் கிளப்புகிறான்.

சகலவிதமான மனிதர்களும் ஆசை மனிதர்களாகவே இருக்கிறார்கள். தான் மட்டும் வாழ்ந்தால் போதும் என்கிற மாதிரி தெரிகிறார்கள். இவர்களுக்கு நடுவே சலவை நோட்டுக்கு மட்டுமே கதவு திறக்கிறது. இருந்தும் மோகன்ராம் போல் ஒன்றிரண்டு பேர் பிழைக்கத் தெரியாமல் நெருடுவதை என்னவென்று சொல்வது?

தாமுவின் சிந்தனை மோகன்ராமைத் தொட்டுத் தேசிகாச்சாரி, சுசீலா வரை போகிறது. குறிப்பாக, தேசிகாச்சாரி ஜவஹரை வர்மத்தில் கட்டிப் போட்டதில் மையம் கொள்கிறது.

மோகனை விடவும் இந்தக் கிழவன் பெரிய வில்லனாக இருக்கிறானே என்கிற கவலைக்கு நடுவே வெளியே பார்க்கிறான். நழுவும் அக்ரஹாரத்துப் பட்டு ஜவுளிக் கடைகளெல்லாம் ஏதோ சாதாரண பெட்டிக் கடைகளாகவே தெரிகின்றன தாமுவுக்கு.

இப்படி ஒரு கடையில் தாமு வேலை பார்த்த நாள் ஒன்று உண்டு.

மாதச் சம்பளம் இருநூறு ரூபாய். காலை எட்டு மணிக்குக் கிளம்பி வந்து விடவேண்டும். இரவு பத்து ஆகும் திரும்ப. கிட்டத்தட்ட பதினான்கு மணி நேர வேலை. சப்பணமிட்டுச் சன்யாசி போல் அமர்ந்து பட்டு வேட்டிகளைத் திறந்து காட்டி, திரும்பச் சிக்கல் சிடுக்கின்றி மடித்து... ஓ! சுவாரஸ்யமில்லாத வேலை.

சாராயத்துக்குத் தொழில் மாறவும்தான் எத்தனை சுவாரஸ்யம்... எத்தனை வருமானம்?

நினைத்து முடிக்குமுன் வீதி வந்து விடுகிறது. பள்ளம்மேட்டில் உண்டியல் காசாய் ஆட்டோ குலுங்குகிறது. ஜவஹர் வீட்டு முன் அமைதியடைகிறது. பம்பாய் மணியம் எட்டிப் பார்த்துவிட்டு ஓடி வருகிறான்.

"வாடா வா..." என்றபடி, வாசலுக்கு வருகிறான். ஆரத்தி கரைக்காத குறை. ஆட்டோக்காரன் ஐம்பதை வாங்கிக் கொண்டு வாய் பிளந்து நிற்க, உள்ளே நுழையும் தாமுவை ஜவஹரின் சோர்ந்த முகம் சற்றுச் சிரித்து உள் அழைக்கிறது.

"வா தாமு..."

"வர்றது இருக்கட்டும். எனக்கு ஒரு பொட்டச்சி. உனக்கு ஒரு கிழவன்.... ஆமா நாம உசுரோடதான் இருக்கணுமா?" விட்டத்துக்கு எகிறுகிறது, அதுவரை அடங்கிக் கிடந்த தாமுவின் கோபம்.

"டேய்... ஏண்டா வந்ததும் வராததுமா முண்டா தட்டிக்கிட்டு? அவங்கள பத்தி பிறகு பேசிக்கலாம். இப்ப உனக்கு நல்லாயிடிச்சுல்ல."

"என்னத்த நல்லாயிடிச்சு... குஷ்டம் பிடிச்ச மாதிரி ஆயிடிச்சு மாமா...!"

"விட்றா விட்றா... ஏதோ உசுர் பிழைச்சு வந்தியே. இனியாச்சும் மூளையோட நடந்துக்கற வழியப் பாரு..."

"என்ன மாமா நீ... நான் வந்ததும் அந்த நாய்ங்களைப் போட்டுத் தள்ள பிளான் சொல்லுவேன்னு பாத்தா மூளையோட நடந்துக்கோங்கறே. இப்ப என்ன முட்டாத் தனம் பண்ணிட்டோம்?"

"இனி பண்ணக் கூடாதுங்கறதுக்குன்னு அதை எடுத்துக்கோடா. சும்மா லொட்டலொடன்னுகிட்டு. மொதல்ல இதைக் குடி..."

ஒரு கண்ணாடி கிளாஸில் சாராயத்தைப் பிடித்து நீட்டுகிறான் மணியம். ஒரே மடக்கு. ஊற்றின ஜோரில் மேலும் ஆவேசம் தாமுவிடம்.

ஆசிரம வெளி முழுக்க உதிர்ந்த ஆலமரத்து இலைச் சருகுகள்; கூட்டிப் பெருக்கிக் கொண்டிருக்கிறாள் சுசீலா. பக்கத்தில் சாணியைக் கரைத்து வைத்திருக்கிறாள். கூட்டிய பிறகு மெழுக வேண்டும். ஓர் ஓரமாய்த் தர்ப்பைப் புல் கட்டு கிடக்கிறது. அதைப் பிரித்து ஒழுங்குபடுத்திக் கட்ட வேண்டும். நிறைய மூலிகைத் தண்டுகள், வேர்கள், கொட்டைகள் என்று வெயிலில் உலர்த்தி எடுத்துத் தேசிகாச்சாரி சொன்ன சதவீதத்தில் கலந்து பொடிக்க வேண்டும்...

சரியாக இருக்கும்... ஒருநாள் பொழுது போதாது. சுசீலாவின் வாழ்க்கை இப்படி மாறிப் போனது ஒரு ஆச்சரியம்தான். தாமு பழைய சுசீலாவை அடித்துப் போட்டு விட்டு - புதிய சுசீலாவுக்கு இப்படி ஒரு வாழ்க்கையைக் கொடுத்திருக்கிறானோ?

சுசீலா கர்மசிரத்தையாகக் குப்பை அள்ளுவதைப் பார்த்தபடியே உள்நுழைகிறான் மோகன்ராம். ஏறிட்டு அவனைப் பார்ப்பவள் கண்களிலும் கூட, 'எப்படி இருக்கே?' என்னும் கேள்வி நின்று ஒரு விநாடி அதிசயிப்போடு பார்ப்பவனைத் தேசிகாச்சாரியின் குரல் அழைக்கிறது.

"வா மோகன்..."

"நமஸ்காரம்."

"உக்கார். எங்க இவ்ளோ தூரம்?"

"உங்களைப் பார்க்கலாம்னுதான். ஜவஹர் பாபு விஷயமா கேள்விப்பட்டேன்..." - பதிலோடு பாயில் அமருகிறான்.

"நான் என்ன பண்ணட்டும்? அவன் பட்டுத் திருந்தற ஜாதியா இருக்கான்."

"அப்ப இனி திருந்திடுவாங்கறீங்களா?"

"திருந்தலேன்னா திரும்பவும் தட்ட வேண்டியது தான்."

தேசிகாச்சாரியின் பதற்றமில்லாத பதில்களில் ஒரு பிரமிப்பு தட்டுகிறது மோகன் ராமுக்கு. அடுத்துப் பேச வேண்டியதில் தடுமாற்றமும் தொற்றுகிறது.

"எங்கிட்ட நீ வேற எதையோ கேக்க வந்துட்டு மத்தவங்க மாதிரியே பேசிக்கிட்டிருந்தா எப்படி மோகன் ராம்?" - தேசிகாச்சாரியே சிடுக்கு நீக்கி விடுகிறார்.

"எப்படி உங்களால நான் நினைக்கறதைச் சொல்ல முடியுது...?"

"மந்திரமில்ல மோகன். எல்லாராலையும் முடியும். ஆனால கொஞ்சம் மனசைக் கட்டுப்படுத்தணும். சில பயிற்சிகள் செய்யணும்."

"வர்ம அடி கூட எனக்கு வியப்பா இருக்கு. உங்களுக்கு இன்னும் என்னவெல்லாம் தெரியும்?"

"இதுவரை எதுவும் தெரியலப்பா..."

"ப்ச்ச்ச்..." - அந்தப் பதிலுக்கான செருமலைத் தேசிகாச்சாரியும் ரசிக்கிறார். நடுவில் சுக்குமல்லி காப்பியுடன் இடையிடுகிறாள் சுசீலா.

"சாப்பிடு..."

- மோகன்ராம் அவளை வெறித்தபடியே அதை வாங்கிப் பருக ஆரம்பிக்கிறான்.

"சுசீலா வந்துட்டதுல எனக்குப் பல பிர்சனை தீர்ந்தது. சில யோகங்களைச் செய்து பார்க்க முடியாம இருந்தேன். இப்ப அதுல எல்லாம் நான் நுழைய முடியுது..."

தேசிகாச்சாரி இனி சசீலா ஒழுக்கத்துடன் இங்கேயே காலமெல்லாம் இருப்பாள் என்று சொல்லாமல் சொல்லுகிறாரா?

"ஆமாம் மோகன்... இனி சுசீலா விரும்புனா இங்கையே இருக்கலாம். எனக்கு ஆட்சேபணை இல்லை. இப்ப அவ உடம்புலையும் புது ரத்தம்தான் ஓடிக்கிட்டிருக்கு. அவ ஆசைப்பட்டா அவளை ஒரு நல்ல நாட்டு வைத்தியரா ஆக்கமுடியும்னு நான் நம்பறேன்" - மோகன்ராமின் மனக் கேள்விக்கான பதில் தூரத்தில் தர்ப்பைக் கட்டை அள்ளப் பார்த்தவள் காதிலும் விழுகின்றது. அவள் கண்கள் கலங்குகின்றன. அங்கிருந்த படியே கைகூப்புகிறாள். சம்மதமோ?

- மோகன்ராமுக்கே புல்லரிக்கிறது.

"எப்படியோ அக்காவுக்கு நல்ல வழி கிடைச்சா சரி..."

அவன் பதிலில் ஒட்டிக் கிடக்கும் பாசமும் கனிவும் சுசீலாவுக்குச் சிலிர்ப்பூட்டுகின்றன. 'கடவுளே!'

"ஆமா உனக்குப் பரீட்சை எப்போ?"

"இனிதான் தெரியவரும்."

கவனமா படி. மத்த விஷயங்களை மனசை அலைய விடாதே!"

"நிச்சயமா."

"இங்க இப்படிச் சொல்லிட்டு ஊர் வம்புக்குள்ள மூக்கை நுழைக்கக் கூடாது.. நீ பேசாம படிக்க இங்க வந்துடு. படிச்சுட்டு அப்படியே தியானமும் பண்ணிட்டுப் போகலாம். சில ஆசனங்கள் பண்ணினா ஞாபக சக்தி

அதிகரிக்கும். சமயத்துல பூர்வஜென்ம ஞாபகமெல்லாம் வந்துடும்..."

- சொல்லிவிட்டுக் குழந்தை போலச் சிரிக்கிறார். புதிர் மனிதர் சாதாரணமாகப் பேசுவதாகவும் இருக்கிறது. அதில் அசாதாரணமும் தெரிகிறது.

"ஆமா புதுசா மாமா பொண்ணுல்லாம் வந்துருக்கா போல இருக்கே?" - தேசிகாச்சாரியின் அடுத்த கேள்வி அவன் சிந்தனையைக் கத்திரிக்கிறது.

"என்ன கேட்டீங்க?"

"மாமா பொண்ணு வந்துருக்கா போல இருக்கே?"

"ஆமா..."

"ஆமாங்கறதுக்காகவா கேட்டேன்...? அந்தப் பொண்ணுக்கும் உனக்கும் கல்யாணம். அப்புறமா நீ பரமக்குடி போயிடுவேன்னெல்லாம் கேள்விப்பட்டேனேப்பா..."

"என்ன சொல்றீங்க நீங்க...?" - திடுக்கிட்டுப் போய் விட்டவனைச் சுசீலா கூடத் துளிப் பதற்றத்தோடு பார்க்கிறாள். என்ன சொல்லப் போகிறானோ?

"முதல்ல படிப்பு... அப்புறமா எனக்குன்னு சில ஆசைகள் இருக்கு. அதை எல்லாம் முடிச்சுக்காம கல்யாணம் பத்தி நான் யோசிக்கிறதா இல்ல."

"ஒருவிதத்துல நல்ல முடிவுதான். அப்படியே செய்... ஆனா நாம நினைக்கற மாதிரியே நாட்கள் போயிடற தில்லை மோகன்ராம். அதோட இழுப்புலதான் நாம் போகிறோம்" என்கிறார் இரு பொருள் பட...

15

டணங்... டணங்...

வீதி மையத்தில் கிருஷ்ணா ராவ் வீட்டு வாசலாகப் பார்த்துக் குழிதோண்டிக் கொண்டிருந்தான், கோவில் ஊமை. அருகிலேயே ஐம்பதடி நீளக் கொடி மரத்து மூங்கில்.

ஊமையனைச் சுற்றிலும் வீதி சின்னஞ் சிறிசுகள்.

"என்னா ஊமை குழி தோண்டறான்....? அதுக்குள் ளாரவா ரேணுகா அம்மன் திருநாள் வந்துடிச்சி...?"

"பின்ன...? பங்குனி பொறந்துட்டாலே திருநா தானே? இனி ஆடியில் கோட்டை மாரியம்மன் திருநாள் வரை ஜேஜேன்னு இருக்கும்."

வீதிப் பெரிசுகள் பேசிக்கொள்ள வெங்கடராமய்யர் வருகிறார். குழியை ஒட்டி நின்று கொண்டு நோட்டம் போடுகிறார். ரேணுகா அம்மன் திருநாளுக்கான காரிய கர்த்தா.

இன்றைக்கு ஆஞ்சனேய கொடிமரம் ஏறிவிடும். வீதிக்கும் தெய்விகக் களை வந்து விடும். மரம் நட்ட நாளிலி ருந்து மூன்றாம் நாள் வீதியையே அடைத்துப் பந்தல் போட்டு, சீரியல் செட் டியூப் லைட் என்று தர்பார் செய்து, நடுவீதியில் ஊஞ்சல் இருக்கையில் ரேணுகா தேவி உருவம் பக்திசிரத்தையோடு உருவாக்கப்பட்டு அமர்த்தப்படும்.

ரேணுகா தேவி....

கன்னிப் பெண்களுக்கெல்லாம் காவல் தெய்வம்!

மூன்று நாட்கள் அவள் ஊஞ்சலில் விதவிதமான கோலங்களில் தோன்றி அருள் பாலிப்பாள்.

வசூலாகும் தொகையைப் பொறுத்துத் தெருவில் பாட்டுக் கச்சேரி, பட்டிமன்றம், சிலம்பாட்டம் என்கிற சமாச்சாரங்கள்.

எப்படியோ மூன்று நாட்களுக்கு வீதியில் ஸ்பீக்கர் பிளந்து கட்டப் போகிறது.

ஒவ்வொரு விளக்குக் கம்பத்துக்கும் ஒரு குழாய் கட்டி, சிக்கு புக்கு ரயிலு பாட்டைப் போட்டுப் பக்தி வளர்க்கப் போகிறார்கள்.

சுற்று வட்டாரமே சாரி சாரியாக வந்து போகப் போகிறது.

விடலைகளுக்குக் கொண்டாட்டம்தான். ரேணு காவை முன்வைத்து, தங்கள் தேவிகா மேனகாக்களைச் சுற்றி வரலாம்.

ஒரு கோஷ்டி நாற்பது பக்க நோட்புக்கு வசூல் வேட்டையிலும் இறங்கி விட்டது.

மோகன்ராம் வீட்டுக்குள் நுழைந்தபோது மோகன் ராம் தறிமேடையில் இருந்தான். உள்ளே நுழைபவர்களைப் பார்த்துச் சிரிக்கிறான்.

"என்னப்பா மோகன் நம்ப ரேணுகா அம்மனுக்கு எவ்வளவு எழுதப் போறே?" - எனறு நோட்டை ஒருவன் முன்நீட்டுகிறான்.

"போச்சுடா... திருநா வந்துடிச்சா?"

"வராம... எவ்வளவுப்பா போட... ஐம்பதா நூறா?"

"கொழா கட்டுவீங்களா?"

"பின்ன..?"

"எல்லாரையும் செவிட்டுப் பயலாக்கிட்டுச் சாமி கும்பிடணுமா?"

"இதோ பார்... திருநான்னா ரேடியோ கட்டிப் பாடுனா தான்பா நல்லாயிருக்கும். உனக்குப் பிடிக்க லேன்னாதான் இருக்கவே இருக்கு, நாம மலை அடிவாரம். போயிடு அங்கே..."

அவர்கள் பேச்சைக் கனகாவும் கேட்டுக் கொண்டிருந்தாள். அடுப்படியில் இருந்த மகாலட்சுமியிடம் போய் மற்ற விவரம் கேட்கிறாள்.

"அத்த... ரேணுகா அம்மன் திருநாள்னா என்ன அத்த...?"

"ஒனக்குத் தெரியாதா அந்தக் கூத்து... நம்ம நெசவாளக் கூட்டத்துக்கும் பெண்களுக்கும் ரேணுகா தேவி தாம்மா காவல் தெய்வம். ஆமா எதுக்குக் கேக்கறே?"

"இல்ல... அத்தான்கிட்ட ஒரு கூட்டம் டொனேஷன் வசூலுக்கு வந்துருக்காங்க. அதான் கேட்டேன்."

"அட... ஊமையன் குழி தோண்டுனது அதுக்குத் தானா? சரிதான்... இனி ஒரு வாரத்துக்கு வீதியே கோலா கலமா இருக்கும்."

"அப்ப நல்லா பொழுது போகும்னு சொல்லுங்க."

"ஆமாம்மா... நானும் வருஷா வருஷம் அந்த அம்மன் கிட்ட வேண்டிக்கத் தவறினதேயில்லை... உன்னை மாதிரி கன்னிலக்ஷ்மிகளுக்கு அவதானேம்மா காவல்?"

மகாலட்சுமி எடுத்துக் கொடுத்த மறுகணமே கண்களை மூடிக்கொண்டு தியானிக்கத் தொடங்கி விட்டாள் கனகா.

"என்னடி... கல்யாணம் நல்லபடி நடக்கணும்னு வேண்டிக்கிறியா?"

- கனகாவிடம் வெட்கம் இழையும் ஆமோதிப்பு.

கையில் மஞ்சள் துணி. அதில் ஒரு ரூபாய் நாணயத்தை வைத்து முடிந்தபடி கண்களில் கசிந்த நீரையும் கண்டி விட்டுக் கொண்டு கைகூப்பியிருந்தாள் பானு.

எதிரே சின்னப் பிறையில் ரேணுகா அம்மனின் படம்.

"அம்மா... என் ஆசை ஈடேறணும். உன்னைத்தான் மலை போல நம்பியிருக்கேன்..." - அம்மனை வணங்கிய கையோடு அப்படியே திரும்பியவள் கிழவியையும் பார்க்கிறாள்.

மந்தாகிழவி இப்பொழுது முன் போல இல்லை. ஓர் ஓரமாகப் பந்து போல் சுருண்டு கிடக்கிறாள். நாளை அவள் எண்ணத் தொடங்கி விட்டாள். நன்றாகத் தெரிகிறது. பானுவையும் பயம் அவ்வப்போது வந்து கட்டி நெறிக்கிறது.

"பாட்டி.... பாட்டி..." - கிழவியை அவள் அழைக்கும் போது "பானு" என்கிற குரல் அவளை அழைக்கிறது.

நிமிர்ந்தால், சுசீலா!

பானுவுக்குச் சுசீலாவைப் பார்க்கவும் ஒரு தேவதை யையே பார்த்து விட்டது போல மகிழ்ச்சி.

"வாக்கா... வா... வா..."

"என்னடி கடை சீக்கிரம் முடிஞ்சிடிச்சா?"

"ஆமாம்... உக்காரு எப்படிக்கா இருக்கு உடம்பு...?"

"நீ எப்படி இருக்கே... ஏன் ஆஸ்ரமத்துப் பக்கமே வராமப் போயிட்டே?"

கேள்வியோடு சாணி மெழுகிய தரையில் அமருகிறாள் சுசீலா. இப்பொழுது மாறி விட்டிருக்கிறாள். ஸ்டிக்கர் பொட்டு, கனகாம்பரம், முன் நெற்றியில் தலை

முடிப் பிசிறு, சென்ட்டு வாசம், தூக்கலாக முகப்பவுடர் எதையும் காணோம்.

தலையைச் சாதாரணமாக அள்ளி முடிந்து குங்குமப் பொட்டு வைத்திருக்கிறாள். புடைவையிலும் ரவிக்கையி லும் கூடக் காவிநிறம்!

"அக்கா, நீ ரொம்ப மாறிட்டே..." என்கிறாள் பானு.

"கிழவிய எழுப்பு. அது என்னைப் பாக்கட்டும். இப்ப இந்தக் கோலத்துல என்னைப் பார்த்தா அது ரொம்பச் சந்தோஷப்படும்."

"என்னன்னே தெரியலை. பாட்டி நாலு நாளா சாப்பிடவே இல்லை... சாப்ட்டாலும் ஒரே வாந்தி எனக்குப் பயமா இருக்குக்கா..."

பானு பற்ற வைத்த பயம் சுசீலாவையும் பற்றிக் கொள்கிறது. கிழவியை நெருங்கித் தொடுபவளுக்குத் தூக்கி வாரிப் போடுகிறது.

"ஆமாம்... டாக்டர்கிட்ட காட்றதுக்கு என்ன?"

"எங்க... ஒண்ணும் வேண்டாம்னு சொல்லுது. நீ கொஞ்சம் பாத்துக்கிறியா, நான் போய்க் கம்பவுண்டர் பழனிய கூட்டிக்கிட்டு வந்துடறேன்..."

"போ, போ. நான் பாத்துக்கறேன்."

- பானு அடுத்த நொடி சுவர்க் கண்ணாடியில் முகம் பார்த்து, லேசாய்ச் சரிசெய்து கொண்டு வீதிக்குத் தாவுகிறாள். அருகிலேயே ரேணுகா அம்மன் படம். அருகே அவள் முடிந்து வைத்த அந்த ஒற்றை ரூபாய் மஞ்சள் துணி முடிச்சு.

சுசீலாவால் புரிந்து கொள்ள முடிகிறது.

'மோகன்ராம் கனகாவிடம் இன்னும் மயங்கி விட வில்லை. கல்யாணத்துக்கு ஒப்புதல் தந்துவிடவில்லை'

அதைப் பானுவிடம் கூறத்தான் வந்திருக்கிறாள் இப்போது. வந்த இடத்தில் மந்தா கிழவி விஷயம் திசை திருப்பி விட்டது.

மந்தாகிழவி ஹீனசுரத்தில் இப்பொழுது முனகத் தொடங்குகிறாள்.

"மந்தா... மந்தா... இங்க பார்... யார் வந்துருக்கேன் பாரு..." - அவளை மடியில் போட்டுக் கொள்ளாத குறையாகப் பேசும் போது கிழவியிடமும் கண் கட்டு பிரிந்த நிலையில் மசங்கும் பார்வையுடன் முனங்கல்.

"ஆரு சுசீலாவா?" என்கிற கேள்வி.

"ஆமாம் மந்தா... ஆமா என்ன உடம்புக்கு...?"

"வயசாயிடிச்சுல்ல... அவ்வளவுதான்!"

"அப்படி எல்லாம் சொல்லாதே... இருந்து உன் பேத்தி கல்யாணத்தப் பாக்க வேண்டாமா நீ?"

"அவ்வளவு அதிர்ஷ்டம் பண்ணினவளாடி நான். பானுவுக்குக் கல்யாணம் நடக்குமா?"

"ஏன் அப்படிப் பேசறே...? நல்லதையே நினை. நல்லதே நடக்கும். இந்தச் சசீலாவுக்கே ஒரு நல்ல வழி பொறந்து டிச்சே...?"

"கேள்விப்பட்டேனடி. எனக்கு ரொம்ப சந்தோஷம். எப்படியோ நீ அந்தச் சாக்கடையில இருந்து மீண்டுட்டே. உசுர் போனாலும் நீ இனி அந்தப் பக்கம் போகக் கூடாது..."

"போக மாட்டேன் மந்தா... இன்னிக்குக் கூடத் திருப்பதி போகலாம்னு இருக்கேன்."

"ரொம்ப சந்தோஷம் போய்ட்டு வா. பானுவுக்கும் சேர்த்து வேண்டிக்கோ..."

"உன்னை ஏன் விட்டுட்டே...? எல்லாருக்காகவும் தான் வேண்டிக்கப் போறேன். நடந்தே மலை ஏறப் போறேன் தெரியுமா?"

"சந்தோஷம் சந்தோஷம்..." - மந்தா மகிழ்ந்த ஜோரில் தடுமாறியபடி எழுந்து அமர்ந்து கொண்டு கைகளைப் பரபரவென்று சுழற்றித் தேடுகிறாள் எதையோ...

"என்ன தேடறே?"

"டப்பால சில்லறை வெச்சுருந்தேன். உண்டியலுக்குத் தரலாம்னு..."

"எல்லாம் நான் போட்டுக்கறேன்."

"சுசீலா எனக்கொரு உதவி செய்யணுமே நீ..."

"என்ன மந்தா...?"

"பக்கத்துல ஒரு பொட்டி இருக்கு பாரு..."

"ஆமா..."

"அதைத் திறந்து அதுல ஒரு துணிப்பை இருக்கும் பாரு... அதை எடுக்கிறியா?"

சுசீலா பெட்டியை எடுத்துத் திறக்கவும் அதில் மந்தாவின் சில புதிய துணிகள் ஒழுங்காகக் கூட மடிக்கப் படாமல் கிடக்க, கூடவே ராஜேஸ்வரி ஹால் நூல் பை ஒன்று சுருண்டு கிடக்கிறது.

"மஞ்சத்துணிப் பையா?"

"ஆமா... அதைத் திறந்து அதுல ஒரு தாலி இருக்கும் பாரு, எடுக்கிறியா?"

- சுசீலா மந்தா சொன்னது போலவே அந்தத் தாலியை வெளியே எடுக்கிறாள். சற்றே பளபளப்பிழந்து விட்டாலும் தங்கம் என்றும் தங்கம்தான் என்கிற ஜோரில் கையில் மின்னுகிறது.

"எடுத்துட்டியா?"

"எடுத்துட்டேன். ஆமா இதை என்ன பண்ணனும்?"

"சுசீலா அது என் மகளோடது. அதை அந்தச் சாமி உண்டியல்ல போட்டு வேண்டிக்கோடி. என்கிட்ட இருக்கற ஒரே சொத்து இது தான். இதையே நான் அந்த வெங்கடா ஜலபதிக்குத் தந்துடறேன்.. மனுஷங்களாலல்லாம் என் பேத்திக்கு விடியாதுடி. கடவுள் நினைச்சாதான் எதுவும் நடக்கும். வேண்டிக்கோடி... வேண்டிக்கோடி..."

- கிழவியின் உடைந்த குரலும், நீரைச் சொறியும் விழிகளும், சுசீலாவை ஒரு உலுக்கு உலுக்கிவிடும் அதே நேரத்தில்...

கம்பவுண்டர் பழனி வீட்டில் இல்லை. சோர்ந்து நிற்கும் பானுவிடம், "போம்மா; வந்த உடனே அனுப்பறேன்" என்கிறாள் அவன் மனைவி.

"கொஞ்சம் சீக்கிரம் அனுப்புங்க..." என்று சொல்லி விட்டு வீதியில் இறங்குபவள் ரங்காச்சாரி டீக்கடையைத் தாண்டும் போது தாமு பார்க்கிறான்... உடன் ஜால்ரா!

"பானு எங்க போய்ட்டு வரே?" என்று டீச் சூப்பலோடு கேட்கிறான். பானு பதில் பேசாமல் ஒருமுறை முறைக்கிறாள்.

"கேக்கறேன்ல..."

"உனக்குச் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை. த்தூ!" - பதிலோடு காரி உமிழ்ந்து விட்டு அவள் நடக்கிறாள். டீக்கடையில் சிலர் அதைப் பார்த்துவிட்டுத் தங்களுக்குள் சிரிக்கின்றனர்.

"ஏன் தாமு... இப்படிக் காரித்துப்பிட்டு போறாளே. எப்படிய படியவைக்கப் போறே?"

"புதுச் செருப்பு எப்பவும் கடிக்கத்தான் செய்யும். எண்ணெய் போட்டா சரியாயிடும்."

"அப்படின்னா...?"

"போகப் போகப் பாரு... எல்லா நாளும் வேடிக்கை பாக்க மாட்டேன். ஒருநாள் கதையை முடிச்சிடுவேன்..."

"பாத்துப்பா... அது கொஞ்சம் ரோஷக்காரப் பொண்ணு. தூக்குல கீக்குல தொங்கிடப் போறா."

"இவளை விடவும் மானஸ்திகளை எல்லாம் பம்பாய் மார்க்கெட்ல பார்த்துருக்கேன். ஒரு வாரம் ஒட்டுத்துணி இல்லாம ஒரு வாய் சோறில்லாம வத்தப் போட்டா சொன்ன பேச்சைக் கேட்டுத்தான் தீரணும்."

"அப்ப கத்தி போய் வாளு வந்த கதையா சுசீலா போய் பானு வரப் போறாங்கறே...?"

"ஆமா... ஆனா இந்தப் பானு எனக்கும் ஜவஹருக்கு மட்டும்தான்."

ஒதுங்கியபடி தெனாவெட்டாகப் பேசிக் கொண் டிருக்கும் அந்த நொடிப் போதில் மோகன்ராமும் டீக்கடைப் பக்கம் வருகிறான்.

அவனைப் பார்க்கவும் தாமு முகத்தில் அசுரப் பரிமாணம்.

"இவனைத் தட்ட முடியலியே உன்னால..." - ஜால்ரா பேச்சு மோகன்ராமுக்குத் தாவுகிறது.

"பொறுத்திருந்து பாரு... இந்தத் திருநா சிலம்பச் சண்டையும் போது என்ன நடக்குதுன்னு..."

பொடி வைக்கிறான் தாமு.

என்ன நடக்கும்?

போன ஜோரில் தனியாளாகத் திரும்பியவளைப் பார்த்து விடைக்கிறாள் சுசீலா.

"என்னடி... பழனி வரலியா?"

"எங்கியோ ஊர் சுத்தப் போயிட்டான்" - சுரத்தில்லாத இளைப்பெடுத்த அவள் பதிலில் கூடவே அவளின் எக்கச்சக்க கலக்கம் தெரிகிறது.

"ஏண்டி ஒருமாதிரி இருக்கே... வழியில ஏதாவது..." கச்சிதமாகப் பிடித்துக் கேட்கிறாள் சுசீலா.

"அக்கா" என்று அவள் தோளில் சரிகிறாள். கிழவியும் மசங்க மசங்கப் பார்க்கிறாள். ஒளிப்பந்தாய் உருவம் கலைந்து புலப்படுகிறது. துல்லிதமில்லை. ஆனால் பானுவின் விசும்பலில் அவள் மனத்தில் இடி விழுந்து விட்டதை அந்தக் கிழவியால் புரிந்து கொள்ள முடிகிறது.

"ஏண்டி... என்னடி நடந்துச்சு... எங்க போய்ட்டு வரே?" என்று தன் பங்கு பதற்றத்தைக் கொட்டுகிறாள்.

"பாட்டி... அந்த தாழு சும்மா சும்மா என் வழிக்கு வந்துக்கிட்டே இருக்கான். எனக்குப் பயமா இருக்கு பாட்டி..." - என்று வெடிக்கவும் சுசீலாவும் கிழவியும் சம விகிதத்தில் அதிர்கின்றனர்.

"நெருப்புல எரிஞ்சும் அந்தப் பயலுக்குப் புத்தி வரலியே..." - கருவுகிறது சுசீலாவின் உதடு.

"ஆம்பளை இல்லாத வீடுன்னு அவன் சகடம் பண்றது எனக்கும் தெரியும்டி. ஐயோ நான் இருக்கும் போதே இப்படி நடக்குதே... இல்லேன்னா...?" - கிழவியிடமும் பகீர் உணர்ச்சியின் பெருக்கம். அந்த உணர்வின் வேகம் தாளாது உடம்பு அறுந்த தந்தி இழையாய் நடுங்குகிறது.

"மந்தா, நீ கவலைப்படாதே. நான் பாத்துக்கறேன். போன தடவை சரியா எரிக்கலை. அதான் மீண்டு வந்துட்டான். இந்தத் தடவை ஜெயிலுக்குப் போனாலும் கவலையில்லை. நீ கவலைப்படாதே!"

"வேண்டாங்கா... உனக்கொரு நல்ல வழிய ஆண்டவன் காட்டிட்டான். எனக்காக நீ அழிஞ்சு போயிடாதே. என் தலையெழுத்து எப்படியோ அப்படியே ஆயிட்டுப் போகட்டும்."

"இப்ப தலையெழுத்து கால் எழுத்துன்னு புலம்பி என்னடி பிரயோஜனம்? எல்லாம் உங்கம்மா செஞ்ச தப்புடி. சாதி மாறி மதம் மாறிக் காதலிக்க ஆரம்பிச்சப்பவே கரடியா கத்தினேன். அவ கேக்கலை. இன்னிக்கு அதோட பலனை நீ அநுபவிக்கிறே. சமூகக் கட்டு மீறித் தனிப்பாதைல போனா, இப்படித்தான்... நாயும் நரியும் வந்து கடிக்கப் பார்க்கும். பாக்கறவங்களுக்கும் நல்லா அநுபவின்னு தாண்டி சொல்லத் தோணும். பாவி... பாவி!" - கிழவியால் கட்டுப்படுத்திக் கொள்ள முடியவில்லை.

"இப்ப என்ன நடந்துடிச்சின்னு இப்படிப் புலம்பறே...? அதான் அந்தத் திருப்பதி சாமிகிட்ட விட்டுட்டேல்ல. கவலையேபடாதே. அந்தச் சாமியே நேர்ல வந்து உன் பேத்திய காப்பாத்தும். நம்பு மந்தா..."

"நம்பறேண்டி... நம்பறேன். ஐயா வெங்கடாஜலபதி நீதான்யா என் பேத்திக்குக் காவல். நான் இருக்கற இருப்பைப் பார்த்தா எப்ப வேணா என் மூச்சு நின்னுடலாம். இவளுக்கு ஒரு நல்ல வாழ்க்கை அமைச்சுக் கொடுய்யா, அமைச்சுக் கொடு..."

மந்தா கிழவியின் வேண்டுதலைக் கத்தரிக்கிறது வாசல் புறமிருந்து ஒரு குரல்.

"யாரது?" சுசீலா எட்டிப் பார்த்தபடியே நிமிறுகிறாள். பானுவும்... 'பழனியோ?' ஊஹூம்... இஸ்மாயில்!

24182
H105089

16

சில விநாடி நின்று பார்த்துவிட்டு உள்நுழைகிறான் இஸ்மாயில். உறவுமுறைப்படி பார்த்தால் பானுவுக்கு அத்தை மகன். இவன் எதற்கு வந்திருக்கிறான்?

கிழவியால் துல்லியமாகப் பார்க்க முடியவில்லை. ஆனால் சுசீலாவால் சும்மா இருக்க முடியவில்லை. அவனைப் பார்த்த நொடிப் பொழுதில், அவளுக்குள் பானுவின் இருளுக்கு ஒரு மெழுகுவர்த்தி அகப்பட்டு விட்டது போல் ஓர் எண்ணம். அத்தனையையும் குழைத்தடித்து, "வாப்பா... வா!" என்கிறாள்.

இஸ்மாயில் உள்நுழைந்த ஸ்திதியில் பானுவைக் கவனிக்கிறான்.

துக்கச் செய்தி சொல்லவிருக்கிறான் - அவன் பார்வையிலிருந்து சுசீலாவால் புரிந்து கொள்ள முடிந்தது. பானுவுக்கோ அவனைப் பார்க்கவே உறுத்தியது. ஒவ்வொரு முறை அந்த வீட்டுத் தொடர்பு உருவாகும் போதும் தனக்கும் தான் சார்ந்த சமூகத்துக்கும் இடையே ஒரு கடக்க முடியாத தொலைவு இடைவெளி உருவாவது போல் பிரமை தட்டிப் போகிறது.

அதன்பிறகு கேட்பவர்களுக்கும் பதில் சொல்ல இயலாதபடி புழுங்க வேண்டி இருக்கிறது. இருக்கும் துன்பம் போதாதா? இவன் வேறா...?

"என்னப்பா என்ன விஷயம்?"

"தாத்தா திடீர்னு ஹார்ட் அட்டாக்ல போய்ட்டார். போறதுக்கு ஒரு அஞ்சு நிமிஷம் முந்தி பானு பத்திதான்

நிறைய பேசினார். பானு ஒரு தபா வந்து அவருக்கு அஞ்சலி செஞ்சா நல்லாருக்கும். தகவல் சொல்ல வந்தேன்..."

பேசினவன் இனி ஒரு விநாடி நிற்பதும் ஆகாது என்கிற மாதிரி திரும்பி நடக்கிறான்.

"அடியே பானு... யாருடி... யார் வந்துட்டுப் போறாங்க. யாரோட தாத்தாடி போய்ட்டது...?" - மந்தா பதறிப் பம்முகிறாள்.

"அது வந்து... அது வந்து பாட்டி, நம்ம சீதாராம் தாத்தா இல்ல அவர்... அவர்தான்..." - பானுவின் மின்னல் வேகச் சுதாரிப்பு வாசலைத் தாண்டும் இஸ்மாயில் காதையும் நிறைக்கிறது.

சுரீர் என்று முள் தைத்த மாதிரி நிற்கிறான்.

'இறப்பில் கூடவா மதம்? வேற்றுமை உணர்ச்சிகள்?" என்று கேட்கத்தான் நிற்கிறானோ..? நின்ற நிலையில் திரும்பிப் பார்ப்பவன் சுசீலாவைப் பார்வையாலேயே அழைக்கிறான். ஓடுகிறாள்.

"என்ன தம்பி?"

"அது பேசுனது காதுல உழுந்திச்சு. நாங்களும் மனுஷங்கதான். சொல்லப் போனா என் அம்மாவுக்குப் பானுவை மருமகளாக்கிக்கற அளவுக்கு விசாலமான மனசு உண்டு. அண்ணன் பொண்ணு ஒண்ணு அடுப்புல கருகறது பத்தி அவளுக்குத் தெரியாம இல்லை.

"இந்தக் கூட்டத்தோட ஒட்டப் பார்த்து முடியாமப் போய்ப் புழுங்கறத விட அல்லாவே எல்லாம்னு வந்துட்டா அவளுக்கு ரொம்ப நல்லது. ஏன்னா எங்ககிட்ட ஈரம் இன்னும் வத்திப் போகலை. யோசிச்சு முடிவு பண்ணச் சொல்லுங்க. அதுக்குத் தாத்தா சாவு ரொம்பவே உதவி செய்யும்னு நான் நினைக்கறேன்."

இஸ்மாயில் பேசி விட்டுப் போய் விட்டான். ஆனால் பானு...?

"அடியே இங்க வாடி..."

"என்னக்கா...?"

"என்ன பண்ணப் போறே?"

"இதென்னக்கா எனக்குத் தர்மசங்கடம்..."

"பரீட்சைன்னே சொல்... எழுதிப் பாஸ் பண்ணப் போறியா? இல்லை எழுதவே போறதில்லியா?"

"எனக்கு ஒண்ணுமே புரியலை. ஒரு பக்கம் பாட்டி. நான் அந்தத் தாத்தாவைச் சரியா பாத்தது கூடக் கிடையாது..."

"பானு... நான் உன் நல்லதுக்குத்தான் சொல்வேன். கேட்பியா?"

"என்னக்கா...?"

"போடி... போய்த் தலைய காமிச்சுட்டு வா. இந்தக் கிழவி இன்னிக்கோ நாளைக்கோன்னு இருக்கா. இவ போயிட்டா உனக்கு யார் இருக்கா? அவங்கள்ளாம் இருக்காங்கறது வெளிய தெரியட்டும்..."

"ஐயோ... வேண்டாம்கா! ஏற்கெனவே என் கடைக்கு ஆசாரம் பாக்கறவங்க வர்றது கிடையாது. அப்புறமா துப்புரவா ஒதுக்கிடுவாங்க. மோகனும் அப்புறம் திரும்பிக் கூடப் பாக்காது..."

"மோகனை விடு... அந்தத் தாமு மாதிரி ஆளுங்க உன்னை இப்ப என்ன வேணும்னாலும் செய்ய முடியுங்கற நிலை இருக்கு. அதுக்கு ஒரு கவசம் வேணும்டி.... மொதல்ல அந்த நாய் நரிங்ககிட்ட இருந்து தப்பிச்சு நில்லு..."

"மோகன்...?"

"உனக்கும் அவனுக்கும்தான்னு முடிச்சு போட்ருந்தா யாராலயும் மாத்த முடியாது. நல்லா தெரிஞ்சுக்கோ!"

- பானு தயங்கித் தயங்கி அங்கீகரிக்கிறாள். அப்பொழுது பார்த்துப் பழனியின் வருகை.

"என்ன பானு... கிழவிக்கென்ன... போய்ச் சேராம உசுரை வாங்குதா?" - உரிமைப்பட்ட கேள்வியோடு மள மளவென்று அமுக்கிப் பார்த்து, பெரிய எம்பிபிஎஸ் கணக்காய்க் கித்தாப்பு காட்டி விட்டு ஒரு ஊசி ஏற்றுகிறான்.

ஊசி போடும் போது மந்தாவிடம் உணர்ச்சியே இல்லை.

"என்ன மந்தா ஊசி போட்டேனே வலிக்கலையா?"

"ஒண்ணும் தெரியலியேப்பா... போட்டியா என்ன?"

"அப்படிக் கேளு... பானு கொஞ்சம் வா..." - எழுந்து வாசலுக்கு வந்து அவிழ்ந்த வேட்டியைச் சரி செய்தபடியே பேசுகிறான்.

"நல்லா கவனிச்சுக்க பானு. ஆசைப்பட்டத கொடு. என் கணக்குக்குப் பத்து நா தாங்குனா ஜாஸ்தி..."

"ஐயோ... பெரிய ஆஸ்பத்திரி கிஸ்பத்திரியில் காட்டுனா..."

"வெட்டி அலைச்சல். காமாலை கரை மீறிப் போச்சு. கண்ணுக்கு மருந்துனு கண்ட சனியனைக் கொடுத்ததுல உடம்புல ஒரே குளறுபடி. எம் பேச்சுல நம்பிக்கை இல்லாட்டிப் போய்ப் பார்த்துட்டு வாங்க..."

- பழனி சில்லறைக்காக நிற்கிறான். சுசிலா சேலை முந்தியில் முடிந்து வைத்ததை எடுத்துத் தருகிறாள்.

"சரி சரி, நீ சாவுக்குப் போய்ட்டு வந்துடு... நானும் திருப்பதி போறேன். இரண்டு நாள்ல, வந்துடுவேன். மத்ததை அந்தச் சாமிதான் பாத்துக்கணும்."

- சுசீலா கிளம்புகிறாள். அந்த நிலையில் பானுவுக்கு அனைத்தையும் ஒதுக்கிவிட்டு அழ வேண்டும் என்று மட்டும் தோன்றியது!.

திருப்பதி பஸ் ஒரு சிலிர்ப்பு சிலிர்ப்பியடி கிளம்பத் தொடங்கியது. பஸ்ஸின் மரை கழண்ட சீட்டுகள் எலிக்கூட்டம் கபடி விளையாடுகிற மாதிரி சப்தம் போட, ஒரு கண்ணாடி அடைந்தால் இன்னொன்று அடையாமல் சண்டித்தனம் செய்தது.

பஸ்ஸில் அமர்ந்த சுசீலாவுக்குப் பழைய நினைவுகள் திரண்டு வந்தன.

"நீ கவலைப்படாதே... ஸ்ரீதேவி ராதிகால்லாம் எனக்கு நல்ல பழக்கம். மேக்கப் போட்டாத்தான் அவங்க எடுப்பு. நீ போடாமலே எடுப்பு..." - சுருதி ஏற்றிக் கொண்டே வந்தானே தாமு!

சினிமா என்றாலே அது ஒரு சுந்தர உலகம் என்கிற நினைப்பும் அவர்களின் தர்பார்களும் மூட்டிய மயக்கம்... அன்று ரத்தத்தில் இருந்ததால் தாமு பேசுவதெல்லாம் வேதமாகவே இருந்தது.

கிளம்பியது உயிர்த் தோழி பத்மாவதிக்குக் கூடத் தெரியாது... அவளும் சினிமா பார்த்திருந்தபோதிலும் சுசீலா அளவு கரைதல் இல்லாத திடம் இருந்ததால் அவள் பாதை வேறாகி விட்டது.

ஓட்டு கேட்டு எம்ஜிஆரும் சிவாஜியும் அம்மா பேட்டை மெயின்ரோடில் ஜீப்பில் வந்ததும் - ஜனக்கூட்டம் அவர்களைத் துரத்தியதையும் நினைத்துப் பார்க்கிறாள்.

வசந்தா, ராதா, அம்சவேணி, கோகிலா எல்லாம் கூடத் தங்கள் பாடப் புத்தக நோட்டில் கமலஹாசன் நடித்த படத் துண்டுகளை வைத்திருந்தார்களே...?!

"கமல் ஒரு வித்தியாசமான ஆர்ட்டிஸ்ட்... நல்ல லேடி ஆர்ட்டிஸ்ட்டே இப்ப இல்லைன்னு சொல்லி என்கிட்ட வருத்தப்பட்டுக்கிட்டிருந்தார். எனக்கு உன் ஞாபகம் வந்துச்சு..."

- ஒரு சிகரெட்டைச் செருகிப் புகை துப்பியபடி பொய்யும் துப்பினான் அன்று தாமு.

"அப்படியா...?" - சுசீலா கேட்ட நொடியில் போஸ் மைதான சாலை வளைவில், கமலஹாசனும் ஸ்ரீதேவியைக் கட்டியணைத்தபடி 'குரு'விற்காகக் குறுகுறு என்று சுசீலாவைப் பார்க்க, "நல்ல சகுனம்..." என்று தாமு பொறி பிசகாமல் பத்த வைக்கிறான்.

சுசீலா இமயம் பார்த்ததில்லை. ஏறியதில்லை. அந்த நொடியில் ஏறி விழுகிறாள் அதன் மீது.

"சுசீ... பெரிய ஸ்டாராயிட்டா இந்தத் தாமோதரனை மறந்துடாதே..."

"ச்சீச்சீ..."

"இப்ப அப்படித்தான் சொல்வே. ஆனா அப்ப நிழலைக் கூடத் தொட விடமாட்டே."

"அதெல்லாம் ஒண்ணுமில்லை. முதல்ல ஸ்டாராக றேனான்னு பாக்கலாம்."

"இந்தச் சந்தேகம்தான் வேண்டாங்கறேன். அடுத்து நீ திரும்பும்போது திருச்சி வரை ஃப்ளைட். அப்புறமா பிளைமூத் கார். இதே போஸ் மைதானத்துல நட்சத்திர இரவு எல்லாம் தூள் கிளப்பப் போறே பார்."

"நெஜமாவா?"

"ஆமா... சம்பளத்த எப்படி கேப்பே...? நெம்பர் ஒன் அக்கௌண்ட்லையா? டூவிலையா?"

"அப்படின்னா...?"

"தத்தி! தத்தி! ஒண்ணுன்னா அரசாங்கத்துக்குத் தெரிஞ்சி... இரண்டுன்னா தெரியாம..."

"தெரிஞ்சே வாங்கிட்டுப் போறது..."

"அப்படியா... வரி எவ்வளவு கட்ட வேண்டி இருக்கும் தெரியுமா?"

"வரியா?"

"ஆமா... நூத்துக்கு அறுபதோ எழுபதோ வரியா கட்டணும். லட்சத்துக்கு எழுவதாயிரம்!"

"ஐயோ... அவ்வளவா?"

"அதனாலதானே பார்லிமெண்ட்ல மந்திரியும் அவ்வளவு பாக்கி இவ்வளவு பாக்கின்னு வறட்டு கத்து கத்தறாரு! எனக்குத் தெரிய ஹேமமாலினிக்கு எழுபது லட்சம், ஜெயப்ரதாக்கு ஒரு ஐம்பத்தி நாலு..."

சுசிலா வாய் பிளக்கிறாள். முடிந்தால் யார் வேண்டுமானாலும் நுழையலாம்! பஸ்சும் புளியமரச் சாலையில் அயோத்யா பட்டணம் தொடுகிறது. விளக்கணைப்பு இருட்டு என்கிற அம்சங்களின் இழைவில் மெள்ள அவள் தோள் மேல் கை போடுகிறான். அவளை ஏற்கெனவே லட்சத்தில் புரட்டியதில் நன்றாக வெந்திருந்தாள். இப்பொழுது குழைந்து கொடுத்தாள்.

"சுசி, கொஞ்சம் வளைஞ்சு கொடுத்துப் போ... உன்னை உச்சிக்குக் கொண்டு போயிடறேன்...." என்றான்.

கொண்டு போய் விட்டான்! பக்குவமாய்ப் பயன்பட வேண்டிய சந்தோஷ சாதனம் சுசிலாவை ஒரேயடியாய்க்

கொண்டு போய் விட்டது. அதன்பின் என்ன செய்தும் சமூக ஒட்டுறவு நிகழவேயில்லை.

'பெண்ணுக்கு மயக்கம் கூடவே கூடாது.' சுசிலாவுக்குத் தாமதமாக ஞானம் வருகிறது. அப்படியே, தாமுவின் கைகளில் பானு அகப்பட்டு விடக் கூடாது என்கிற கவலையும் சேர்ந்து கொள்கிறது.

நினைவலைகளில் மீண்டு கைகூப்புகிறாள்.

'பெருமாளே அந்தப் பெண்ணுக்கு ஒரு நல்ல வழியைக் காட்டுப்பா..."

படுக்கையில் அப்படியும் இப்படியுமாய்ப் புரண்டு கொண்டிருந்தவர்கள் எல்லாம் சப்தம் கேட்டு எழுந்து கொள்ள, அந்தக் கூட்டத்தில் மோகன்ராமும் இருந்தான். எரிச்சல் தாங்காமல் வெளியே வந்தான். வந்த வேகத்தைக் கனகா தணித்தாள். வாசலில் பெரிய கோலம் போட்டு முடித்துக் கொண்டிருந்தாள்! கோலத்தை விடவும் குளித்து முடித்த கோலத்தில் ஈர்க்கும் பவித்ரம் மின்னியது. ஒரு கால் ஊனம் ஒரு பொருட்டேயில்லை என்கிற மன உறுதியோடு... கோலம் போட்டு முடித்த கையோடு காதைப் பொத்திக் கொண்டு உள் ஓடி வந்தாள் அவள். ஆச்சரியமாய் இருந்தது அவனுக்கு. வீதியே ரசிக்கும் லவுட் ஸ்பீக்கர் இசையை இவள் மட்டும் வெறுக்கிறாளே...? அவன் கேட்க நினைத்ததை மகாலட்சுமி கேட்கிறாள்.

"ஏம்மா.... உனக்கும் பாட்டுன்னா பிடிக்காதா?"

"இல்ல அத்த... இப்படி அரக்கத்தனமா காலங்காத்தால சத்தமா கேக்கறது பிடிக்காது..."

"மோகனும் இப்படித்தான். பக்தின்னா அமைதி. ஆனா இங்க சப்தத்தைப் பக்திங்கறாங்களேம்பான்..." - குறுக்கில் நுழைந்தது அடுத்த பாட்டு. "முஸ்தபா முஸ்தபா டோன்ட் ஓர்ரி முஸ்தபா..." என்றது.

தலையிலடித்துக் கொண்டு கொல்லைப் பக்கம் சென்றான் அவன். அதைப் பெரிதும் ரசித்தாள் கனகா. ரசனை ஒன்றுபடுவதில் ஒரு சந்தோஷம்!

ஆனால் வந்து பல நாளாகியும் இன்னும் அவன் நேருக்கு நேர் நின்று நான்கு வார்த்தை பேசாத வருத்தம், உடனடியாக அந்தச் சந்தோஷத்தைக் கலைக்கிறது. மகா லட்சுமி புரிந்தது போல் ஒரு துண்டை எடுத்து அவள் வசம் தந்து மோகனிடம் கொண்டு தரச் சொல்கிறாள்.

கனகாவும் சந்தோஷமாகத் துண்டுடன் முன் செல்கிறாள். முகம் கழுவி வாய் கொப்பளிப்பவன் எதிரில் நீட்டுகிறாள்.

"தேங்க்ஸ்... நீ எதுக்கு எடுத்துக்கிட்டு வரே - அம்மா இல்லை...?" - அப்பாடா பேச்சை ஆரம்பித்து விட்டான்.

"ஏன், நான் கொண்டு வந்து தரக்கூடாதா?"

"இந்தக் காலோட எவ்வளவுதான் சிரமப்படுவேன்னு சொன்னேன்?"

"இதெல்லாம் சிரமமா?"

"இல்லியா பின்னே... வாசல் தெளிச்சுக் கோலம் போட்டு வீடு கூட்டி..."

"அது பெண்களோட கடமையாச்சே..."

"பலே... வாழ்க! உன் கடமை உணர்ச்சி! கட்டிக்கப் போறவன் கொடுத்து வெச்சவன்" - சற்று ஜாலி மூடில் மோகன்ராம் பேசுவது பாட்டு சப்தத்தில் அவள் காதில் 'நான் கொடுத்து வைத்தவன்' என்று விழுந்ததோ என்னவோ? முகம் கொள்ளாத புன்னகையில் மகாலட்சுமி யைப் பார்க்கிறாள்.

கனகத்தின் முக மலர்ச்சி அவளையும் தொத்துகிறது. கொஞ்சம் இதமாகப் பேசியிருப்பானோ?

ஆனால் மோகன் கூறுகிறான்:

"அம்மா என்னால ஒரு நிமிஷம் இந்த வீட்ல இருக்க முடியாது. ரேணுகா அம்மன் வரம்லாம் கொடுத்துட்டுப் போற வரை நான் நாம மலை ஆஸ்ரமத்துக்குப் படிக்கப் போயிட்டு வரேன். சாப்பாடு தண்ணி எதுக்கும் கவலைப் படாதே. நான் பாத்துக்கறேன்."

பேச்சோடு வேகவேகமாகப் புத்தகக் கட்டுக்களை எடுத்து ஒரு பையில் போட்டுக் கொண்டு கிளம்பியே விட்டான்....

"இவனோட இப்படித்தாண்டி... ஊருக்கெல்லாம் ஒரு வழி - இவனுக்கு ஒரு வழி..."

மகா சலித்துக் கொள்வது போல் பெருமிதப்படும் போதுதான் அந்தச் செய்தி வந்தது.

மந்தா கண்மூடி விட்டாள்!

17

மந்தா போய்விட்டாள்! தூக்கத்திலேயே உயிர் போய் விட்டிருக்கிறது. விடிய விடிய திண்ணையில் அமர்ந்து கொண்டு இன்னொரு பக்கம் செத்துக் கிடக்கும் தாத்தாவைப் போய்ப் பார்க்கலாமா? வேண்டாமா? என்று ஒரு பட்டிமன்றத்தைப் பானு நடத்திக் கொண்டிருக்கும் போதே நானும் போகிறேன் என்று கிழவி போய் விட்டாள்.

சுசீலா எதையும் யோசிக்காமல் சொல்ல மாட்டாள் தான். எனவே தாத்தா முகத்தைப் போய்ப் பார்த்துவிட்டு வந்து விடுவதுதான் நல்லது என்று காலெடுத்த போதுதான் கிழவியை ஒரு பார்வை பார்க்கும் ஆசை வந்தது.

- போய்ப் பார்த்தபோது விரைத்துக் கிடந்தாள்!

முடிந்து விட்டது. பானுவைப் பொறுத்த மட்டில் ஒரே நேரத்தில் இரண்டு இழப்பு. விடியலில் இப்படி அநாதை உறவு வந்து கட்டி அணைத்துக் கொள்ளும் என்று துளிக் கூட எதிர்பார்த்திராத அதிர்ச்சியில் காலை முடக்கி முகம் புதைத்துக்கொண்டு விட்டிருக்கிறாள்.

சுசீலா இருந்தால் ஆறுதல் சொல்லக்கூடும். இப்பொழுதுதானா அவளுக்குத் திருப்பதி ஆசை வர வேண்டும்?

அந்தக் குச்சு வீட்டில் அவளைச் சுற்றி இப்பொழுது வீதி முகங்கள். போனால் போகட்டும் என்று ரேடியோ பாட்டை நிறுத்தி விட்டிருக்கிறார்கள். கூடிக் கூடிப் பேசு கிறார்கள்.

திட்டமிட்டபடி அம்மன் வைப்பது நடக்குமா?

"அதுபாட்டும் அது... கிழவிய வேகமா தூக்கிட்டா போச்சு. அவளுக்கு என்ன பம்பாய், மெட்ராஸ்னு ஆளுங்க வரணுமா? இந்தப் பானு பொண்ணு மட்டும்தானே..." முடிவின் எதிரொலி வீட்டைத் தாக்குகிறது.

"ஏம்மா பானு... இப்படி அழுதுகிட்டிருந்தா எப்படி? பூஞ்ச உடம்பும்மா ரொம்ப நேரம் வைச்சிருக்க முடியாது. காட்டுக்குச் சொல்லணும்... அய்யருக்கும் சொல்லணும்... காசு ஏதாவது வைச்சிருக்கியா?"

"யாருய்யா, நீ. அய்யர் ஆட்டுக்குட்டின்னுகிட்டு. காரியம் பார்க்க யாருய்யா இருக்கா?"

"பானு... அழுவறத நிறுத்திட்டுக் கொஞ்சம் பேசும்மா... கைல எவ்வளவு வெச்சிருக்கே... வசூல் பண்ணணுமா? நீ சொல்ற பதில்ல தானே இருக்கு எல்லாம்..."

பானு எதுவுமே பேசாமல் அழுது கொண்டே இருக்கிறாள். அவ்வப்போது நிமிர்ந்து, வந்து நிற்பவர்களில் மோகன் ராமை மட்டும் ஒரு தேடு தேடுகிறாள்.

'இவன் என்ன இப்படி மாறிவிட்டான்?

அந்தப் பெண் கனகாவுக்கு இவ்வளவு சக்தியா என்ன?'

கிழவி-காரியம்-என்கிற சகலத்தையும் மீறி அவளுக்குள் இந்தக் கேள்விகளின் ஆளுமை தான்.

"இதென்னடா பேசிக்கிட்டேயிருக்கோம்... பதில் சொல்லாம அழுதுகிட்டேயிருக்கு? ஏம்மா இப்படிப் பண்ணா எப்படி? வசூல் பண்ணிடவா?"

கேள்விக்கு அவளிடம் பதில் வரும் முன்பே வீதியில் அவள் வீட்டு முன் துண்டு விரிகிறது.

"மந்தா போய்ட்டாப்பா... பாத்துப் போடுங்க. நமக்கெல்லாம் நாக்குக்கு வக்கணையா இட்லி, தோசை

சுட்டுப் போட்ட கிழவி போய்ட்டா. தாராளமா போடுங்க. நல்லபடியா அடக்கம் பண்ணுவோம். போடுங்கப்பா போடுங்க..."

- வரதன் என்னும் ஒரு குடிகாரன் துண்டு விரித்து விட்டான். அன்றைய காலையிலேயே ஒரு ஐந்து ரூபாய்க்காகத் தாடையைச் சொரிந்தவனுக்கு மந்தா வசமாக மாட்டி விட்டாள். பாதிக்குப் பாதி தேட்டை யிடலாம். நல்ல வேளை மோகன் ராமும் இல்லை- இருந்தால் முதலில் வசூலே நடக்குமா என்பது சந்தேகம்.

"போடுங்க... போடுங்க... குறைஞ்ச பட்சம் ஐநூறு ரூவாயாவது வேணும். இன்னும் நூறு கூட தேறலையே..."

'அசுப்பட்டதுடா சஞ்சீவி பர்வதம்' என்கிற மாதிரி உள் நுழைந்திருந்தான் தாமு!

அவன் நுழைந்த பிறகு எல்லாமே மாறிப் போய் விட்டது.

"எவண்டாவன் நான் இருக்கும் போது வசூல் பண்றது? வாடா இங்க... வசூல் பண்ண காசை எல்லாம் திருப்பிக் கொடு. நான் இருக்கும்போது கிழவி எப்படிடா அநாதை ஆவா? விட்டா துண்டு விரிச்சு ஒரு ஆட்டம் போட்றுவீங்களே...

"டேய் ராமா, போய் ஐயர்க்குச் சொல்லிட்டுவா. இந்தாடா மணி, மொதல்ல பானுவுக்குக் காப்பி-டிபனுக்கு ஏற்பாடு செய்...

"ஆமா ஏன் இப்படி மெட்டிகிட்டு மூலைக்கு மூலை வெளியே நிக்கறீங்க. போய் உள்ள உக்காருங்க.

"ஏன் தாயி வெளியே நெருப்பு போடறதுக்கென்ன?"

- பரபரக்கிறான். நன்றாகவே விரட்டுகிறான். பைஜாமா குர்தா என்கிற உடுப்பில் ஒரு மார்வாடி தோற்றம்... செயல்களில் கொப்பளிக்கும் மனிதாபிமானம்.

யாருக்கும் எதிர்த்துப் பேசும் துணிவில்லை.

'ஐயோ! ஆட்டுக்குட்டியைப் பார்த்து ஓநாய் இரக்கப்பட ஆரம்பித்து விட்டதே' என்கிற நினைப்பு உள்ளுக்குள் தோன்றினாலும், 'நமக்கெதுக்கு ஊர்வம்பு?' என்கிற இந்திய தேசம் முழுமைக்கும் குத்தகைக்கு எடுத்துக் கொள்ளப் பட்டு விட்ட பிரதான கேள்வி அவர்களைத் தடுத்து விடுகிறது. கொஞ்சம் கூடுதலாகச் சிந்திக்க முடிந்தவர்கள், 'ஹூம் எல்லாம் அவங்கவங்க தலையெழுத்து' என்று ஒரு அடிஷனையும் சேர்த்துக் கொள்கிறார்கள்.

"கனகா... கொஞ்சம் பாத்துக்கோ. போய்க் கிழவி வீட்ல தலைகாட்டிட்டு வந்துட்றேன்." மகாலட்சுமி கிளம்புகிறாள்.

"அத்தே அந்தக் கிழவி நமக்கு எதாவது உறவா?"

"அதெல்லாம் ஒண்ணுமில்ல. முப்பது வருஷப் பழக்கம்... நல்ல மனுஷி அவ்ளோதான். அநாதையா சாகணும்னு ஆண்டவன் தலைல எழுதிட்டான்."

"ஏன் பேரன் பேத்தின்னு...?"

"ஒருத்தரும் கிடையாது. ஒரு பொண்ணு இருந்தா. முஸ்லீமைக் கட்டிக்கிட்டா! அவ பொண்ணுதான் இப்ப இருக்கற பானு. அன்னிக்குக் கூடச் சுசீலாங்கறவளுக்கு வக்காலத்து வாங்கிட்டு வந்தாளே..."

"ஆமா... என்னைக் கூட முறைச்சு முறைச்சு பாத்துக் கிட்டேயிருந்தா."

"அவளேதான்... அவளை நினைச்சா தான் செத்த வயித்தப் பிசையுது. அந்தத் தாமுக் கடங்காரன் அவளை எதுவும் பண்ணிடாம இருக்கணும்."

"என்ன அத்த சொல்றீங்க?"

"அவன் ஒரு தெருப் பொறுக்கிம்மா. கட்டப் பஞ்சாயத்து, சாராயம், அடிதடி எல்லாத்துலயும் அவனுக்குத் தொடர்புண்டு. அட... நம்ம மோகன் தறிக்கு நெருப்பு வைக்கலை..."

- கனகா அகண்ட கரிய விழிகளோடு அனைத்தையும் கேட்டு அதில் மேலும் விரிவைக் கூட்டுகிறாள்.

"அவன் அந்தப் பொண்ணை என்ன பண்ணிடு வான்னு நினைக்கறீங்க?"

"நல்லா கேட்டே போ... இது எல்லாம் உனக்குத் தெரிஞ்சு ஆகப் போறதும் ஒண்ணுமில்லே. சனியனை விடு. அவன் போட்டத யாரால மாத்த முடியும்... சொல்லு பாப்போம்..." - மகாலட்சுமி பேசிக்கொண்டே வீதியில் இறங்குகிறாள்.

கனகாவிடம் புழுக்கம்... அதிலும் பானுவை உத்தேசித்து நிறையவே புழுக்கம்.

சிந்தனையின் நீட்டத்தில், மோகன்ராம் இருந்தால் என்ன செய்வான் என்கிற கேள்வி எழுகிறது.

காலியாய்க் கிடக்கும் தறிமேடையைப் பார்க்கிறாள்.

ஒரு நோட்டோ புத்தகமோ ஓரமாய்க் கெண்டை களோடு கிடக்கிறது, டைரியும். நெருங்கித் தொட்டுப் பிரிக்கிறாள். வரவு செலவுக் கணக்கிலிருந்து எதை எதையோ எழுதி வைத்திருக்கிறான். டைரியை எடுத்து வந்து நடு நடுவே சில வார மாதப் பத்திரிகைகளில் வந்த பழமொழிகளையும், முக்கியச் செய்திகளையும் கூட கட் பண்ணி வைத்திருக்கிறான். வழக்கம் போல் அவனது அபிலாஷைக் குறிப்பும் இருக்கிறது.

'இன்றைய ரேஷன் அநுபவம் சற்றுக் கொடுமை யானது. அவளும் உதவ முன் வந்தாள். ஆனால் அவளை மறக்க முடியாமல் மனத்துக்குள் திணறுகிறேன். அவளது

புகைப்படமே எனக்குப் பெரிய போதை தருகிறது. எங்கு சென்றாலும் அவள் பார்வை இடிக்கிறது. இந்த நிலையில் வீட்டுக்குள் இருந்து நான் படித்து உருப்படுவது எப்படி? நமக்கெல்லாம் நாம மலைதான் சரி..."

- படித்த வரிகளால் கனகாவின் மனம் நெகிழ்ந்து போகிறது. இவன் கைக்கு எப்படிப் போனது தனது புகைப் படம்? கேள்விப் பந்து எழுகிற நேரத்தில் எட்டிப் பார்க்கிறான் முகுந்தன்.

"மோகன் இல்லியா?"

"இல்லை... இந்தக் குழாய்ப் பாட்டுக்குப் பயந்துகிட்டு நாம மலை பக்கம் படிக்கப் போய்ட்டார்."

"அடடா... இப்ப நான் அவ்ளோ தூரம் போகணுமா?"

- முணுமுணுப்புடன் திரும்ப நினைத்தவன் சட்டென்று பிரேக்கடித்தான். வீட்டுக்குள் அமீனா கிருஷ்ணா ராவ் நுழைந்து கொண்டிருந்தார்.

ஏதோ கும்பாபிஷேகம் முடிந்து திரும்பும் சாஸ்திரி போல் கைவசம் ஒரு தட்டில் எதையோ மூடி எடுத்தும் வருகிறார்.

"நீ என்ன இங்க பண்றே வயசுப் பொண்ணு இருக்கற இடத்துல...?" என்று முகுந்தனைப் பார்த்துப் பெரிதாய்க் கேள்வி வேறு. முகுந்தன் பேசவில்லை.

"அம்மாடி... இந்தா பிரசாதம். வீட்ல ஹோமம் செஞ்சேன். அதான் இந்தா..." என்று கனகாவை நோக்கி, தட்டை நீட்டுகிறார் கிருஷ்ணாராவ்.

ஹோமப் பிரசாதம் என்று நீட்டிய தட்டில மெது வடை, சர்க்கரைப் பொங்கல் என்கிற வகையறாக்கள்!

"சும்மா எடுத்துச் சாப்பிடு... நல்லா இருக்கும். சமையக்கார சர்மாவை வெச்சு பண்ணேன், ஐம்பது பேருக்குச் சாப்பாடும் போட்டு ப்ரீதியும் பண்ணினேன்."

"கிருஷ்ணாராவ் ஒழுங்கா வெளிய போயிடு. உன் பித்தலாட்டத்தை வேற எங்காவது வெச்சுக்கோ. ஹோமம், பிரசாதம்னு யார்கிட்ட கதை விடறே...?" அப்படியே கனகா பக்கமும் திரும்பி, "இதோ பாருங்க, இந்த ஆள் ஒரு கிறுக்கன். சதா மாயம் மந்திரம்னு திரியற கேஸ். இவன் மொதல் பொண்டாட்டிய விரதம் இருக்க வெச்சே கொன்னவன்.

"இவன் புதையல் எடுப்பான்னு எந்த ஜோசியக்காரப் புளுகனோ சொல்லியிருக்கான். கூடவே ரெண்டு கல்யாணம் நடக்கும்னு ரீல் விட்ருக்கான். அதான் யார் சிக்குவான்னு அலையறான். வடைல மருந்து வெச்சாலும் வெச்சிருந்திருப்பான்..."

முகுந்தன் பேசப் பேசக் கிருஷ்ணாராவ் முகம் வெளிறுகிறது. கனகாவுக்கு நின்ற இடம் நழுவும் பிரமை.

இப்படி எல்லாம் கூட மனிதர்கள் இருப்பார்களா?

இதெல்லாம் எந்த அளவு நிஜம்? - கேள்விகளின் பிடியில் சிக்கி உதறல் கொள்கிறாள்.

கிருஷ்ணா ராவ் இனி இருந்தால் ஆபத்து என்று நினைத்தாரோ இல்லை முகுந்தன் சொன்னது உண்மையோ - தட்டுப் பிரசாதத்தோடு விட்டால் போதும் எனறு நழுவுகிறார்.

"பாத்தீங்களா ஓடிட்டான்!"

"இனி எனக்கு வடையைப் பார்த்தாலே நீங்க சொன்னது ஞாபகத்துக்கு வரும்" என்கிறாள். அவன் அதைக் கேட்டுச் சிரிக்கிறான்.

"ஆமா மோகன் கல்யாண விஷயமா என்ன சொன்னான்?" - சற்று நெருங்கியதால் அந்தரங்கமாகப் பேச ஆரம்பிக்கிறான்.

"முதல்ல படிப்பாம், அப்புறம்தான் மத்த விஷயம்ங்கற மாதிரி இருக்கார்."

"கல்யாணம் பண்ணிக்கிட்டும் படிக்கலாம். தப்பு இல்லைன்னு சொல்லுங்க... நானும் சொல்றேன். வரட்டுமா?"

"ஆமா... அவரை எதுக்குப் பாக்க வந்தீங்க... தெரிஞ்சுக்கலாமா?"

"ஒண்ணுமில்லே! இந்தப் பானு விஷயமாத்தான். கிழவி சாவுல வழக்கம் போல வீதி வேடிக்கை பாக்க ஆரம்பிச்சிடிச்சு. தாமு தர்பார் பண்ண ஆரம்பிச்சுட்டான். அந்தப் பொண்ணு மோகனைப் பாக்கணும்னு தகவல் சொல்லிவிட்டுச்சு... அதான் வந்தேன்... மலைப் பக்கம் போய்ப் பாத்துட்டுப் போறேன். வரட்டுமா?"

"கோவிந்தா... கோவிந்தா..." - கூப்பாட்டுடன் மந்தாவின் சடலம் நான்கு பேரின் தோளுக்கு ஏறுகிறது.

ஈரவேட்டி, துண்டு என்று உருமாறிக் கொள்ளிச் சட்டியும் தூக்கியபடி முன் நடக்கிறான் தாமு.

'வேண்டாம்... நீ யாருடா என் பாட்டிக்குக் காரியம் செய்ய?' - என்று பானுவுக்குக் கேட்க ஆசைதான். ஆனாலும் கேட்க முடியவில்லை. வேறு யார்தான் வந்து செய்வதாம்?

கலங்கியபடி கிழவியின் சடலம் கிடந்த இடத்தில் திரும்பவும் முகம் புதைக்கிறாள் பானு. அந்தத் துக்கத்துக்கு நடுவில் தாமுவின் முகம் முண்டி முண்டி எழுகிறது. அனைத்தையும் இழந்து விட்ட நிலையில் ஒரே சொத்தாக உடம்போடு கிடக்கும் கன்னிப் புதையல் பயம் காட்ட ஆரம்பிக்கிறது. கழுவிக் கழுவி வைத்துக்கொண்ட செம்மை நிறைந்த அழகு. மனம்தான் சலனப்பட்டுச் சகதியாக இருக்கிறது.

இட்லிப் பானையும் இரும்பு வாணலியும் தகரப் பெட்டியும் இன்னும் சில அலுமினியச் சாமான்களும் அற்பச் சொத்தாக இருக்க, அற்புதச் சொத்தாக இளமை மட்டுமே இருக்கிறது. பெரிய முதல் அது ஒன்றுதான். இனி இதை வைத்துத்தான் பிழைப்பா?

தாமு ஆசைப்பட்ட மாதிரியே அகப்பட்டு, சுசீலா போல மெல்லவும் முடியாமல் விழுங்கவும் முடியாமல் போகப் போகிறதோ வாழ்க்கை?

இந்த ஒருதலைக் காதல் வேறு நொண்டிப் பெண் ஒருத்தியோடு போட்டியிட்டு நொண்டிக் கொண்டேயிருக் கிறது.

எங்கும் வெளிச்சம் தெரியவில்லை.

சிந்தித்த புழுக்கத்தில் அந்தச் சராசரிப் பெண்ணுக்குச் சாவது மட்டும்தான் சுலபமான, சரியான முடிவாக இருக்கிறது.

கதவைத் தாழிட்டுத் தூக்குப் போட்டுக் கொள்வோம். இம்முறை ஞாபகமாக ஜன்னலை மூடிவிட வேண்டும்.

'பாட்டி நில்லு... நானும் வந்துடறேன். எந்தத் தைரியத்துல என்னை விட்டுட்டுப் போனே?'

- விருட்டென்று நிமிர்ந்து அதற்கான ஆயத்தத்திற்குத் தயாரானபோது தாமுவின் அடியாள் ஒருவன் அவளது முடிவு தெரிந்த மாதிரி முறைக்கிறான்.

'இந்த மாதிரி நேரத்துல ஒரு பொண்ணு எந்த முடிவுக்கு வருவான்னு தெரியாதா என்ன... நாங்க எத்தனை பேரைப் பாத்துருக்கோம்?"

அவளுக்குப் புரியும்படியான பதிலோடு ஒரு சின்னச் சிரிப்பு வேறு சிரிக்கிறான்.

வீதி ரேடியோவில் விவஸ்தையே இல்லாதபடி திரும்பவும் பாட்டு.

"ஊர்வசி... ஊர்வசி... டேக் இட் ஈஸி ஊர்வசி...!"

18

மழை வரும் போல இருந்தது. சேர்வராயன் மலைச் சாரலில் ஏற்காட்டுக்கு நேர் மேலே மேகம் திரண்டாலே சேலம் திமிலோகப் படப் போகிறது என்றுதான் பொருள்.

இந்த மழையின் வீச்சைக் கணிப்பதில் அச்சுப் பிணைக்கும் கண்ணாயிர முதலி, கம்ப்யூட்டர் துல்லியமான வன்.

"எலே மழை பொளந்து கட்டப் போவுது. மளமளன்னு வேலைய முடிக்காட்டி கிழிஞ்சிடும் கிருஷ்ண கிரி" - என்று புலம்பிக் கொண்டே ஆள்காட்டி விரலில் துளி சைபால் தொட்டு - துளி சாம்பலையும் தொட்டுப் பட்டு நூல் பாவை மெஷின் அச்சுப் பாவுடன் வேகவேகமாக இணைக்கிறான்.

வீதியைப் பார்த்த திண்ணைதான் அவனது தொழிற் கூடம். மழை வந்தால் சாரல் உள் சுவர் வரை இருக்கும். தூக்கிக் கொண்டு ஓடி விட வேண்டும்.

எல்லாம் ரேணுகா தேவிக்குக் கொடி நட்ட வேளை!

வெங்கட்ராமய்யர் நெற்றிக்குக் கூரை கொடுத்து வானம் பார்த்து மகிழ்கிறார்.

பங்குனி வெயில் பட்டை கிளப்பியதில் எல்லோர் வீட்டுக் கிணற்றிலும் தண்ணீர் பாதாளத்திற்கு இறங்கி விட்டது.

இன்னும் இன்னும் என்று தோண்டியதில் பூமியின் மறு பக்கமாய் நியூயார்க்கே வந்து விடும் அபாயம் வேறு!

மழை வந்தால்தான் ஆயிற்று... ஆமாம் என்று ஆமோதிக்கிற ரகமாய் வீதிக் குழாயில் ஒரு கூட்டமே வேறு முண்டிக் கொண்டு... அவர்கள் முன் ஓட்டை வாளியிலிருந்து டால்டா டப்பா வரை வரிசையில் நிற்கிறது.

தண்ணீரைப் போலவே பேச்சும் பெருகுகிறது.

"மகா கொடுத்து வைச்சவ... மருமகளை இப்பவே தயார் பண்றா பார்த்தியா?"

"கால் இல்லாதவ வந்தா இரக்கப்பட்டு முன்ன விட்றுவோம்னு நினைச்சுட்டா போல... நிக்கட்டும் கழுத..."

"ஆமா ரெண்டாவது ஆட்டம் அருணாச்சலம் போனியே எப்படிடி இருக்கு?"

"குப்பருடி... முப்பது கோடி ரூவாய ரஜினி செலவழிக்க பட்ற பாடு இருக்கே... ஆனா பாரு சாமி ரஜினி பக்கம் இருக்கறதால அது பெருகிக்கிட்டே போகுது. ஆத்தாடி எவ்ளோ கட்டுங்க தெரியுமா? அதுல ஒரு கட்டு நமக்குக் கிடைச்சாலும் பொழுது விடிஞ்சுடும்.

"ஆனா மகராசனுக்கு துளியாவது ஆசை வரணுமே. அவ்வளவையும் ஏழைங்களுக்கேன்னுட்டுப் போயிட்றாரு. ரஜினி ரஜினி தாண்டி."

"ரஜினி கதைய உடு. நம்ம பானு கதை தெரியுமா உனக்கு?"

"என்னாடி... நானும் கேக்கணும்னுகிட்டிருந்தேன். அந்தத் தாமு நாய் பெரிசா கிழவிக்குப் புத்ரன் நான்தான்னு காரியமெல்லாம் பண்ணிட்டாம் போலருக்கே..."

"சும்மா ஆடுமா குடுமி... நீ வேணா பாரு அவளை வைப்பாட்டி ஆக்காம அவன் விடப் போறதில்லே."

"அதானா அரிசியும் பருப்பும் போய் ஊட்ல இறங்கிச்சு?"

"மிச்சம்... கேஸ் அடுப்பு சிலிண்டரு புதுசு புதுசா பாத்திரங்கன்னு காலைல இருந்து போய்க்கிட்டேல்ல இருக்கு."

"பாவண்டி அந்தப் பொண்ணு நிலை. குரங்கு கை பூமாலையா ஆயிட்டாளேடி."

"நீயும் நானும் பாவம் பாத்தா ஆச்சா...? போவட்டும்னு நம்ம ஊட்டுக்கு அழைச்சுக்கிட்டு வந்து வெச்சுக்கலாம்னா நம்ம ஊட்டு ஆளுங்க நமக்கே அப்புறம் வேட்டு வெச்சிருவாங்க. அப்புறம் உள்ளதும் போச்சுடா நொள்ளக்கண்ணா கேஸ்தான். எல்லாம் தலை எழுத்துடி லட்சுமி..."

"ஹூம்... எந்த ஜென்மத்துப் பாவமோ, அவளுக்கு இப்படி ஒருநிலை. அவ அப்பன் சைட்ல - அதாண்டி சாயபு வீட்டுப் பக்கமா இருந்து கூட இங்க வந்துடுன்னு கூப்ட மாதிரி தெரியுது. இவ போக மாட்டேன் னுட்டாளே..."

"தாமுகிட்ட மாட்டிக்கிட்டு அழியணும்னு எழுதியிருந்தா நானும் நீயுமா மாத்த முடியும்?"

கனகாவின் பொறுமை அவளை அதற்கு மேல் அங்கு நிற்க அனுமதிக்கவில்லை. காலி குடத்துடன் திரும்ப ஆரம்பிக்கிறாள்.

"அம்மாடி என்ன திரும்பிட்டே - வா, வந்ததுக்குப் புடிச்சிட்டுப் போ. பரமக்குடில உங்க வீட்லையே நல்ல தண்ணி கொழா இருந்திருக்கும். உனக்கு இந்த அவஸ்தை யெல்லாம் தெரிஞ்சிருக்காது... அப்படித்தானே?"

ஒருத்தி கணிசமாகப் பரிதாபப்பட்டுக் கனகாவின் குடத்தைப் பிடுங்கி நீர் நிரப்பி இடுப்பிலும் ஏற்றி விட்டு அனுப்புகிறாள். மேகக் கூட்டமும் நீர் பிழியத் தொடங்குகிறது.

கொட்டும் மழையில் தெப்பலாக நனைந்தபடி உள்ளே நுழைகிறான் மோகன்ராம். புத்தகமெல்லாமும் நனைந்து அவன் நெடுநேரம் நனைந்தே நடந்து வந்திருப்பதைக் காட்டுகிறது.

மகாலட்சுமி கொடியில் கிடக்கும் துண்டு ஒன்றுடன் அவனைப் பார்த்துவிட்டு ஓடி வருகிறாள்.

"ஏண்டா இப்படியா நனைஞ்சுகிட்டு ஓடி வருவே?"

"அது இருக்கட்டும், மந்தா போய்ட்டாளே மேம்மா...?"

"ஆமாண்டா. நான் கூட இப்பத்தான் எழவுக்குப் போய்ட்டு வந்து தலைமுழுக்கு போட்டேன். கனகாதான் இன்னிக்கு நல்ல தண்ணியே பிடிச்சிகிட்டு வந்தா" என்றபடி தலை துவட்டி விடுகிறாள்.

"சரி, நான் போய் மத்த காரியங்களைக் கவனிக்கிறேன். என் டப்பால ஒரு ஐநூறு ரூபா இருக்கு. ஜரிகைக்குன்னு வெச்சிருந்தேன். கொஞ்சம் எடுத்துக் கொடும்மா..." என்று படபடக்க ஆரம்பிக்கிறான் அவன்.

"பணம் எதுக்குடா?"

"என்னம்மா... பாட்டிக்கு யாரும்மா இருக்கா?"

"அட போடா பைத்தியக்காரா... அந்தத் தாமு சொந்தப் பிள்ளை மாதிரி குடம் உடைச்சு கொள்ளி போட்டு, கிழவிச் சாவைக் கல்யாணச் சாவாக் கிட்டாண்டா! இன்னேரம் கிழவியும் சாம்பல் பூத்திருப்பா. வேணும்னா வீட்டுக்குப் போய் அந்த குட்டி இருப்பா. அவ முன்ன நின்னுட்டு வா..."

"குட்டியா?"

"அதான் அந்தப் பானுவைத்தாண்டா சொல்றேன். ஆண்டி எப்ப சாவான் மடம் எப்ப காலியாகுங்கற மாதிரி

கிழவி செத்த நிமிஷம் அவனும் குடும்பம் நடத்த வந்துட்டான். இவளும் கதவைத் திறந்து விட்டுட்டா..."

அந்த மொகல் பாணிக் கட்டடத்தின் மாடம் முழுக்க புறாக் கூட்டம். ராவுத்தரின் மறைவு புறாக்களுக்கும் தெரிந்து விட்டதோ என்னவோ, மௌனப் பந்தி நடத்திக் கொண்டிருக்கின்றன.

ராவுத்தரை நல்லடக்கம் செய்துவிட்டு எல்லோரும் திரும்பியிருக்கின்றனர். நடு ஹாலில், ராவுத்தரின் படம் முன் மல்லிகைப் பந்தல் போட்டு வாசம் மிகுந்த பத்தியையும் ஏற்றி வைத்திருந்தும் - அதை மீறிய பிரியாணி வாசத்தின் ஊடுருவலை யாராலும் ஒன்றும் செய்ய முடியவில்லை.

இருண்ட அறையில் முக்காடிட்ட நிலையில் விசும்பிக் கொண்டிருக்கிறாள் நபீஸா. முதலில் மகன். இப்போது கணவன். மிஞ்சியிருப்பது மகள் மட்டும்தான். அவளும் துபாய் போய்விட்ட நிலை. இஸ்மாயில் மட்டும் முடிந்த மட்டும் ஆறுதல் சொல்லிக் கொண்டிருக்கிறான்.

"கடைசி வரை பானு வரல பாத்தியா?"

"எப்படி வர முடியும்... அந்தக் கிழவியும்ல போய்ட்டா...?"

"அப்ப அந்தப் பொண்ணு இப்ப தனியா நிக்குதா?"

- இஸ்மாயில் உறைந்த மௌனத்தில் அதற்குப் பதில் சொல்லும் போது நபீஸா உடைத்துக் கொண்டு அழுகிறாள்.

"போதும்டா இஸ்மாயில்... யாருமில்லாம அநாதையா நிக்கற கொடுமை அவளுக்கு வரவேண்டாம். திடமா இருந்த உன் தாத்தாவே சாகக் கிடைக்கயில அந்தப் பொண்ணை நினைச்சுத்தாண்டா அதிகமாக கவலைப் பட்டாரு. அதை நல்லவிதமா உக்காத்தி வெச்சாதாண்டா

அவரோட ஆத்மா சாந்தியடையும். போடா போய் அவளைக் கூட்டிக்கிட்டு வந்துடு. யார் என்ன சொன்னாலும் நான் பாத்துக்கறேன்."

குதிரை மரத்தில் கண்ணாடியைத் தொங்க விட்டு முன்நின்று தோப்புக்கரணம் போடுகிற மாதிரி முகச்சவரம் செய்து கொண்டிருக்கிறான் மோகன். அவன் செயலில் ஒரு பரபரப்பு தெரிகிறது.

அந்த வீட்டுக்குள் நுழைந்த நாளில் இருந்து இன்று போல் அவன் தடுமாறிக் கனகா பார்த்ததில்லை.

கொதிக்கும் வெந்நீர்ப் பாத்திரத்தைத் தூக்கிக் கவிழ்த்து வளாவி விட்டுக் கொள்வதில் இருந்து - கொல்லையே ஈரமாகாதபடி பதவிசாய் அமர்ந்து குளிப்பது வரையில் அவளை ஈர்த்தவன் இப்பொழுது மீசையைத் திருத்தமாக நறுக்கிக் கொள்வதில் கூடச் செயலற்ற மாதிரி இருக்கிறான்.

ஊர்க்கிழவியின் மரணம் இந்த அளவுக்கா அவனைப் பாதித்திருக்க முடியும்?

"அத்தான்..." - என்கிறாள் அந்த ஐயப்பாட்டைத் தீர்த்துக் கொள்ள, திரும்பிப் பார்க்கிறான்.

"ரொம்ப நெர்வஸா தெரியறீங்களே?"

"அப்படியா...? இல்லியே... இல்லியே..."

"சொல்றதுலையே அது கன்ஃபாம் ஆகுது..."

மோகன்ராம் சோப்புக் கன்னத்துடன் அவள் மடக்கலில் அசடு வழிகிறான்.

''மந்தா பாட்டின்னா உங்களுக்கு அவ்வளவு இஷ்டமா?"

"அ... ஆமா... ஆமா..."

"எனக்கு ரொம்ப ஆச்சரியமா இருக்கு..."

"....."

''என்ன பார்க்கறீங்க... அவங்க யாரோ நாம யாரோ...? இருந்தும் அவங்க சாவு உங்களை ரொம்பப் பாதிச்சிருக்கறதை நினைச்சா ஆச்சரியமாதான் இருக்கு."

"இதுல ஆச்சரியப்பட என்னம்மா இருக்கு? அவன் என்கிட்ட சாப்பிட்டதை விட அவ கைல சாப்பிட்டது தான் அதிகம். மந்தா கை பக்குவமும் நளபாகமா இருக்கும்..." - குறுக்கில் மகன் சார்பில் தன் அபிப்பிராயத்தை நுழைக்கிறாள் மகாலட்சுமி.

"இருக்கலாம் அத்த... ஆனா வீதியில எல்லாரும் எனக்கென்னன்னும் நமக்குச் சம்மந்தமில்லேன்னும் நினைக்கும்போது அத்தான் மட்டும் ஏன் ரொம்ப வருத்தப் படறாருங்கறது தான் தெரியலை."

"கூடாதுங்கிறியா?"

"அப்படிச் சொல்லலை. இப்படிக் கவலைப்பட்டு கிட்டே இருந்தா... எப்படின்னுதான் கேக்க வந்தேன்."

''இவங்க இப்படிக் கவலைப்படாம இருந்தா எப்படின்னுதான் கேக்கணும். என்னைப் பாத்து இல்லை... வீதியைப் பார்த்து... ஒவ்வொரு வீட்டையும் பாத்து... உறவு முறை சம்பந்தம் இருந்தாதான் உருகி அழணும். இல்லேன்னா சம்பிரதாய துக்கம் போதுங்கறது யாருக்குப் பொருந்துமோ பொருந்தாதோ, மந்தாக்குச் சுத்தமா பொருந்தாது. இப்ப கூட அவளுக்கு எவ்வளவு பேர் பாக்கி தரணும் தெரியுமா? அதைக் கொடுத்திருந்தாலே கூட அவ காரியத்தை நல்லவிதமா முடிச்சிருக்கலாமே. நமக்கென்னன்னு இப்படியா வேடிக்கை பார்த்துக்கிட்டிருப்பாங்க? எது எப்படியோ அந்தத் தாமுதான் இப்ப எனக்கு இந்தச் சமூகத்தை விட உயர்ந்தவன். அவனுக்கு என்னோட நன்றியை நான் சொல்லணும்."

"நீ எந்த நாய்க்கும் நன்றி சொல்ல வேண்டாம். ஒழுங்கா உன் வேலைய பாரு. நன்றியாம் நன்றி." - திருவட்டக் கையோடு கோபிக்கிறாள் மகா.

"ஏம்மா அப்படிச் சொல்றே... நான் சொல்றதுல என்ன தப்பு இருக்கு?"

"என்னடா புரியாம பேசறே... அந்தத் தாமுக் கடன் காரன் ஒண்ணும் மந்தா மேல் உள்ள மதிப்பு மரியாதைல காரியம் பண்ணலைடா. எல்லாம் அந்தப் பானுவுக்காக."

"இருக்கலாம்... ஆனா ஒரு பொண்ணு சம்மதமில்லாம யாரும் எதுவும் பண்ணிட முடியாதும்மா?"

"அப்ப சுசீலா சம்மதிச்சுதான் விபசாரி ஆனாளா?"

"அப்படின்னா...?"

"ஆமாம் அத்தான்... நான் கூடக் குழாயடியில எல்லாரும் பேசிக்கறதைக் கேள்விப்பட்டேன். அந்த தாமு அந்தப் பொண்ணை வைப்பாட்டியாக்கிக்கப் போறதா..."

"ஓஹோ... இவங்களா இவங்க சட்டசபைல தீர்மானம் போட்டு நிறைவேற்றிட்டாங்களோ?"

"டேய் ஏண்டா கத்தறே...? அந்தப் பொண்ணுக்கு வேற என்னடா வழி இருக்கு?"

"ஏன் இல்லே...?" - கேள்விக் கனலுடன் சட்டையை மாட்டிக் கொண்டு கிளம்ப ஆயத்தமானவனை அதிர்ச்சி யுடன் பார்க்கிறாள் மகாலட்சுமி.

"எங்க கிளம்பிட்டே?"

"போய்ப் பாத்துட்டு வரேன்."

"போதும்டா. போய் உன் வேலைய பார். ஏற்கெனவே உன்னை வெட்டுவேன் குத்துவேன்னுகிட்டிருக்கறவன் கிட்ட எவளோ ஒருத்திக்காகப் போய் முட்டிக்கப்

போறியா? நீ யார் மாமனா மச்சானான்னு கேப்பான். என்ன சொல்வே?"

மகாவின் கேள்வி மோகன்ராமைத் திணற அடிக்கிறது. ஆனால் கனகா அற்புதமாய் அதற்கொரு பதிலைச் சொன்னாள்.

"அத்தே... மாமன் மச்சான்தான் இதையெல்லாம் கேக்கணும்னு இருந்தா இந்தத் தேசத்துல ஒரு பொண்ணு கூட நல்லபடி இருக்க முடியாது. நல்ல பொறுப்புள்ள மனுஷன்கற ஒரு தகுதி போதும். நீங்க போங்க அத்தான். அந்தப் பொண்ணுக்கு நாம இருக்கோம்னு காட்டிட்டு வாங்க..."

மோகன்ராம் முதல் முறையாகக் கனகாவைச் சிலிர்ப்புடன் பார்க்கிறான். பிரமிப்புடன் பார்க்கிறான்.

இடையில் கத்தரித்தது ஒரு குரல்.

''மோகன்... ரொம்ப அவசரம். உன்னைத் தேசிகாச்சாரி கையோடக் கூப்பிட்டுக்கிட்டு வரச் சொன்னார்."

19

ஆஸ்ரமம் பார்க்க ஏனோ இருண்டு கிடக்கிற மாதிரி தெரிந்தது. காற்று வீச்சும், பறவைக் சுத்தலுமாய் இருக்கும் ஆலமரத்தடி முதல், சதா கழியைச் சுழற்றியபடி இருக்கும் களரி மைதானம் வரை எல்லா இடத்திலுமே பந்த் நடத்துகிற மாதிரி ஒரு வகை இறுக்கமான அமைதி.

வேட்டி நுனியைப் பிடித்தபடி ஆஸ்ரம வாயிலில் நிற்கும் மோகன்ராம் வழக்கமாய் அங்கு வந்தாலே அடையும் பரவசத்தை யாரோ பிடுங்கிக் கொண்டது போல உணர்கிறான்.

"வா மோகன்ராம்... உள்ள வா!" - உள்ளிருந்து தேசிகாச்சாரியின் குரல் மட்டும் கேட்கிறது. அவர் வழக்கமான தனது மாம்பலகை ஆசனம் மேல் வழக்கத்திற்கு மாறாக எண்ணெய் பூசிய திருமேனியாக விவசாயக் கச்சு உடுத்தி அமர்ந்திருக்கிறார்.

"என்ன குரு இது... நம்ம ஆஸ்ரமம்தானா இது?"

"ஏன் அப்படிக் கேக்கறே...?"

"சொல்லத் தெரியலை. ஒரே சோம்பலா, இருட்டா இருக்கே..."

- எதிரில் அமருகிறான்.

"சுசீலா இல்லையில்லையா அதான்..."

"இல்ல குரு... அக்கா இப்ப வந்தது தானே? ஆனா அக்கா இல்லாத நிலையிலையும் ஆகாங்கற மாதிரி இருந்த இடமாச்சே இது...?"

-தேசிகாச்சாரி முகத்தில் மிக அதிசயமாக கவலை ரேகை ஓடுவதைப் பார்க்கிறான். கூடவே ஒரு கொத்து மௌனம்.

"வரச் சொன்னீங்களாமே என்ன விஷயம்?"

"ஆமாம்... நான் கொஞ்ச நாள் தேசாந்திரம் போய் வரலாம்னு நினைக்கறேன். அதுவரை இந்த ஆஸ்ரமத்தை நீதான் பாத்துக்கணும்..."

"நானா?"

"ஏன் அப்படிக் கேக்கறே... பாத்துக்கக் கூடாதா?"

"என்ன குரு இது திடீர் முடிவு?"

"திடீர் முடிவில்ல மோகன். புது ஆசை..."

"அப்படின்னா...?"

"ஓர் உள்ளுணர்ச்சியோட தூண்டல்னு வெச்சுக் கோயேன்..."

"எதுவா இருந்தாலும் நீங்க இந்த ஆஸ்ரமத்தை விட்டுப் போகக் கூடாது குரு..."

"ஏன், உன்னால பாத்துக்க முடியாதா?"

"அதுவும் ஒரு காரணம். படிப்பு ஒரு பக்கம். நெசவு இன்னொரு பக்கம். புதுசா பானு ரூபத்துல இப்ப இன்னொரு பிரச்னை.."

"தெரியும்... என் காதுக்கும் வந்தது. என்ன பண்ணப் போறே?"

"தெரியலை... ஆனா பானுவை அந்தத் தாமு பாழாக்கிடக் கூடாதுன்னு மட்டும் நினைக்கறேன்."

"அந்த நினைப்பை எப்படிச் செயல்படுத்தப் போறே?"

"....."

"எப்படிச் செயல்படுத்தறதுன்னு கூடத் தெரியாத குழப்பத்துல இருந்துக்கிட்டா செயல்படப் போறே...?"

"அவளுக்கு யாரும் இல்லைங்கற காரணத்தாலதான் அந்தத் தாமு அவளைத் தன் விருப்பப்படி நடத்தப் பார்க்கறான். நான் இருக்கேன்னா ஒதுங்கிப் போயிருவான் இல்லையா?"

- தேசிகாச்சாரி உடனேயே அந்தப் பதிலுக்குச் சிரித்து விட்டார்.

"ஏன் சிரிக்கிறீங்க?"

"இல்லே... நீ எப்படிப்பட்டவனா இருக்கேன்னு ஒரு கேள்வி இருக்கு இல்லியா?"

"....."

"திரும்பவும் குழப்பம், தயக்கம். நான் சொல்லட்டுமா? நீ அவளை மனசார விரும்பறே. ஆனா உன் காதலை உனக்குள்ளேயே பூட்டி வெச்சிருக்கே. அதைக் காட்டி இப்ப கல்யாணம் பண்ணிக்கலாம்னா அதுக்கும் நீ தயாரில்லை. படிச்சு முடிச்சு ஒரு நல்ல நிலைக்கு வந்த பிறகு கல்யாணம் பண்ணிக்கலாம்கறது தான் உன் எண்ணம். ஆனா காலம் தாமு ரூபத்துல உன் முன்ன மல்லுக்கு நிக்குது. பத்தாததுக்கு வீட்லையே ஒரு பொண்ணும் வேற..."

"குரு... கனகாகிட்ட நான் ஒருநாள் கூட ஒரு ஆசை வார்த்தை பேசினதில்லை..."

"அது சரி... ஆனா நீ அவளை நேசிக்கலைங்கறது அவளுக்குத் திடமா தெரியுமா?"

"நான் ஒதுங்கிப் போறத வெச்சு, தெரிஞ்சிக் கிட்டிருக்கமாட்டாளா என்ன?"

-திரும்பவும் சிரிக்கிறார் தேசிகாச்சாரி.

"என்ன குரு... இப்படிச் சிரிச்சா என்ன அர்த்தம்?"

"போய் அதைத் தெரிஞ்சிக்கிட்டிருக்காளான்னு முதல்ல உறுதி செய். பிறகு மற்றக் காரியங்களைப் பார்..."

"கனகாவே போய்ப் பானுவுக்கு உதவி செய்யச் சொன்னா குரு..."

"அது மனிதாபிமானம் காரணமா கூட இருக்கலாம். நீ உன் எண்ணத்த அவகிட்ட சொல்லிடு. பானுவை நான் பாத்துக்கறேன்."

"குரு..."

"ஆமாம் மோகன். பானுவை நான் ஆஸ்ரமத்துக்குக் கூட்டிக்கிட்டு வந்து வெச்சக்கறேன். நீ உன் படிப்பை முடி. லட்சியப் பாதைல வேகமா நட. நானே உங்களுக்கு ஒரு நல்ல நாளில் கல்யாணம் பண்ணி வைக்கறேன். ஆனா நடுவுல வேற எதுவும் நடந்துடாம இருக்கணும்."

"அப்படின்னா...?"

"ஆசைப்பட மட்டும்தான் நம்மால முடியும். ஈடேற்றித் தருவது தெய்வம்தானே?"

"நீங்களா இப்படிச் சந்தேகத்தோட பேசறீங்க?"

"திரும்பவும் சொல்றேன். என் திடசித்தம் சில நாளா கலங்கி இருக்கு. சராசரி மனுஷர்களைப் போலக் கவலை, குழப்பம்னு ஏற்பட்டு தெளியறேன். என் மனம் என் வசப்பட்டுட்டதா நம்பியிருந்தேன். இல்லைன்னு இப்ப உணர்றேன். அதனாலதான் திரும்பவும் தேசாந்திரம் போகணும்னு முடிவுக்கு வந்தேன்."

"வேண்டாம் குரு... எனக்குச் சமூகத்துல யாரைப் பார்த்தாலும் கோபமா வருது. உங்களைப் போல ஒரு சிலராவது இருக்கறதாலதான் நான் கோபத்துல எரிஞ்சுடாம இருக்கேன்."

"நல்லது மோகன்... அப்படியே இனி யோகப் பயிற்சிகள் சிலதுக்கும் நேரம் ஒதுக்கு. இனி இந்த ஆஸ்ரமம் உன்னுடையது."

- மோகன் எழுந்து கொண்டான்.

"அப்ப நான் கிளம்பறேன்."

தேசிகாச்சாரியும் எழுந்து கொண்டார்.

"உனக்குச் சிலம்புல அடித்தார் வரிசை தெரியும் தானே?"

"உம்..."

"வா... அதுல களவுக்கட்டுன்னு ஒண்ணு போட்டா அதைத் திறக்கறது எப்படின்னு சொல்லித் தரேன்..."

"இப்பவா?"

"இப்பவே..."

"அங்க பானு..."

"ஒண்ணும் ஆயிடாது - வா - சட்டையக் கழற்று..."

"என்ன குரு இது... சாயந்திரமா வெச்சுக்கலாமே..."

"சாயந்திரம் பயிற்சி. இப்ப பாடம், வா..."

- மோகன் ராமுக்கு அந்த ஞானக்கிழவரின் பிடிவாதம் சற்று எரிச்சலைத் தந்த போதிலும் வேறு வழியின்றிச் சட்டையைக் கழற்றிவிட்டுக் கைகளில் மூங்கில் கழியை எடுத்துக் கொள்கிறான்.

இஸ்மாயிலின் பிரவேசத்தைப் பார்த்து ஆச்சரியம் மட்டுமல்ல; அதிர்ச்சிக்கும் உள்ளாகிறான் தாமு.

"ஏய்... நீ எதுக்கு இங்கல்லாம் வர்றே?"

"அதை நான் உன்னைப் பார்த்துக் கேட்கணும். பானு கிளம்பு. அம்மா உன்னைக் கையோட அழைச்சிக்கிட்டு வரச் சொன்னாங்க..."

"இவ்வளவு நாளா இல்லாத சொந்தம் இப்ப என்னடா திடீர்னு?"

"நீ யாருடா இதைக் கேக்க? சாராயக்கார நாயே, முதல்ல போடா வெளிய..."

"என்னடா சொன்னே?" - தாமு பாய்ந்து இஸ்மாயிலைத் தாக்கத் தொடங்க, பதிலுக்கு இஸ்மாயிலும் தாக்கத் தொடங்க, தன்னை உத்தேசித்துத் தன் எதிரில் நடக்கும் அந்த யுத்தத்தைப் பார்த்து, அந்தக் குச்சு வீட்டின் மூலையில் நொறுங்கி அமருகிறாள் பானு.

'தெய்வமே... இன்னும் என்னவெல்லாம் நடந்து அதை நான் பார்க்க வேண்டும்? இது என்ன சாகவும் முடியாமல் வாழவும் முடியாமல்..."

அவள் காது பொத்தி, கண் மூடி, நெஞ்சு பதறக் கதறியபோது, நல்ல வேளையாகத் தேசிகாச்சாரி அந்த இடத்திற்கு வந்து விட்டிருந்தார். அவரைப் பார்த்த நொடியில் இருவரும் பிடியைத் தளர்த்திக் கொண்டு நிமிர்கின்றனர்.

தேசிகாச்சாரி தோளில் பரவிய துண்டை எடுத்து இடுப்பில் முறுக்கிக் கட்டிக் கொள்கிறார். தரை தடவி நிற்கும் வேட்டி முனையும் கச்சக்கட்டாக மாற ஆரம்பிக்கிறது.

புரிந்து கொள்கிறான் தாமு.

தேசிகாச்சாரி தாக்கத் தயாராகி விட்டார்.

இந்தக் கிழவனோடு மோதினால் ஜவஹருக்கு ஏற்பட்ட கதியை விட மோசமாகவே எதாவது நேரலாம்.

-விவேகமாக, திறந்து கிடக்கும் கதவு வழியாக மெல்ல நழுவ ஆரம்பிக்கிறான்.

இஸ்மாயில் மட்டும் அகலாமல்...

தேசிகாச்சாரி அவனை ஊன்றிப் பார்க்கிறார், கேட்கிறார்.

"எங்கப்பா வந்தே?"

"அம்மா, பானுவை அழைச்சுட்டு வரச் சொன்னாங்க..."

"சந்தோஷம்... ரொம்பச் சந்தோஷம். இந்த ஜனங்களைப் போல எனக்கென்னன்னு இருந்துடாம, சாதி மதங்கற இடைஞ்சல்களையும் பொருட்படுத்தாம இவளைப் பாதுகாக்கணும்னு நினைச்சு அனுப்பி இருக்காங்க பாரு. அதுக்கு ஆயிரம் சலாம்."

"அப்ப நான் அழைச்சிட்டுப் போறேன். வா, பானு..."

- அவன் அழைப்பின் முன் தேங்குகிறாள் பானு. தேசிகாச்சாரியையும் இஸ்மாயிலையும் மாறி மாறிப் பார்க்கிறாள்.

வாசப்புறமும் உள்ளே இருள் கட்டும் அளவு வீதிக் கூட்டம். அதில் மோகன்ராம் இருக்கிறானா என்று ஒரு பார்வை பார்க்கிறாள். இல்லை அவன். அதன் நிமித்தம் கண்ணிரண்டும் கலங்கிக் கசிகின்றன.

"இப்படி அழுதுக்கிட்டு நின்னா எப்படி... தம்பி கூப்பிடுதுல்லே. போறியா? இல்லை..."

- மறுப்பாகத் தலையை அசைக்கிறாள்.

"அப்ப என் கூட ஆஸ்ரமத்துக்கு வந்திடறியா?"

"வரேன்... வந்துட்றேன்..." - படுவேகமான சொற்கள். அந்த வீட்டை விட்டு விலகினால் போதும் என்கிற அவள் துடிப்பை நன்கு வெளிக்காட்டுகின்றன.

"மன்னிச்சுக்க தம்பி... அவளுக்கு இஷ்டமில்லை. அதனால நான் அழைச்சுட்டுப் போறேன். ஆனா எப்ப அவ விரும்பினாலும் அனுப்பி வைப்பேன். உன் அம்மாவும், நீயும் பாக்கணும்னாலும் ஆஸ்ரமத்துக்கு வரலாம். வரட்டுமா?"

பானுவை அழைத்துக் கொண்டு, வீட்டையும் பூட்டிக் கொண்டு வீதியில் இறங்குகிறார். எல்லாரும் வெறிக்கின்றனர். சிலருக்கு வெட்கமாக இருக்கிறதோ என்னவோ, தலையைத் தாழ்த்திக் கொள்கின்றனர்.

"பானுவை நான் அழைச்சுட்டுப் போறேன்... போகலாம் இல்லியா?"

வீதியின் மையத்தில் நின்று கேட்கிறார். தெருச் சபை மௌனமாய் அங்கீகாரம் தருகிறது.

-தன்னையும் மீறி உணர்ச்சிப் பெருக்கேறி, நடு வீதியை ஆக்ரமித்து நிற்கும் ரேணுகா அம்மன் திருவிழாப் பந்தலைப் பார்க்கிறார்.

"எந்தக் கடவுளும் பூஜை புரஸ்காரம் தேங்கா பழம் பொங்கலுக்கு மயங்கி அருள் செய்திடாது. பயமும் தன்னலமும் இல்லாதவன் இதை எல்லாம் செய்யலேன்னா லும் அருள் தராம விடாது.

"வீதியையே கோயிலாக்கிப் பாக்கற ஆசை கொண்ட நாம், ஒவ்வொரு பொண்ணும் ஒரு கோயில்ங்கறதை ஏனோ மறந்துட்டோம்..."

-தேசிகாச்சாரி பேசப் பேச, வீதி இளக ஆரம்பிக்கிறது.

"போதும் குரு... பானுவை இனி நாங்க பாத்துக்கறோம்" என்று அந்தப் பேச்சின் பலனாக ஒருவன் முன் வருகிறான்.

"பானு நீ இங்கேயே இரு. கடையைத் தொடர்ந்து நடத்து.... யார் வந்தாலும் நான் பாத்துக்கறேன்" என்று அடுத்தவன் முன் வருகிறான்.

தேசிகாச்சாரி சற்று நெகிழ்கிறார். ஆஸ்ரமம் நோக்கி நடக்க ஆரம்பிக்கிறார். பின் தொடருகிறாள் பானு.

இதையெல்லாம் பார்த்துக் கொண்டிருந்த கனகா 'அப்பாடா' என்று பெருமூச்செறிகிறாள்.

நல்ல வேளை! ரேணுகா அம்மனிடம் பானுவுக்காகச் செய்த பிரார்த்தனை வீண் போகவில்லை!

புழுக்கத்தில் இருக்கிறான் தாமு. இந்த மாதிரி ஜென்மங்கள் புழுங்க ஆரம்பித்தாலே சாராயத்துக்குத்தான் கேடு. முதல் பாட்டில் முடிந்து, இரண்டாவது பாட்டிலில் ஒரு பாதி குறைந்திருந்தது. கண்ணிரண்டும் கலங்கிச் செவ்வரி யோடி புஸ் புஸ் என்று மூச்சிலும் ஒழுங்கு செத்திருந்தது.

எத்தனை தான் டின் டின்னாகச் சாராயம் கடத்தி விற்றாலும் அதில் ஒரு சொட்டைக் கூட ருசித்திராத பாம்பே மணியம் கூடக் கிளாஸ் குடித்திருக்கிறான்.

பக்கத்தில் கயிற்றுக் கட்டிலில் இடிவிழுந்த மாதிரி கிடக்கிறான் ஜவஹர் பாபு. அதிசயமாக அந்தக் கூட்டத்தில் ரேஷன் கடைக்காரனும் இருக்கிறான். பொறுமலோடு உட்கார்ந்திருப்பவர்கள் நெடுநேரம் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொள்கின்றனர்.

வெளியில் ரேடியோவின் அலறல். அதில் பொருத்தமான பழைய சினிமா. எரிச்சலைப் பெருக்குகிறது. "டேய், போய் அருணாசலத்தைப் போடச் சொல்லுடா.. எந்த நேரம் எந்தப் பாட்டு வைக்கறதுன்னு இல்லாம..." மணியம் ஒருவனை முடுக்கிவிட்டுவிட்டுத் தாமுவைப் பார்க்கிறான்.

"டேய்... இந்தாடா போகட்டும், விடுடா. இந்தப் பானு இல்லாட்டி இன்னொரு தேனு, மீனு. இப்போதைக்கு நிலைமை சரியில்லை. வேற ஆகவேண்டியதப் பாரு..."

"என்னத்த ஆகவேண்டியதப் பாரு... ஒண்ணத் தொட்டு ஒண்ணத்தொட்டு அவன் நம்மளை அடிச்சிக் கிட்டே வரான். இதுக்கு ஒரு கிழட்டுப் பய வக்காலத்து. நடுத்தெருவுல நின்று உபதேசம் வேற.. முதல்ல அந்தக் கிழவனை ரெண்டுல ஒண்ணு பாக்கணும்."

"அப்ப பாத்துட்டு வா... அடுத்து என்ன பண்றதுன்னு யோசிப்போம்."

"இங்க யோசிக்கல்லாம் நேரமில்லை. மாமா, நீ சாராயம் வித்தாலும் விக்காட்டியும் ஸ்டேஷனுக்கு வாரம் தவறாம மாமூல் வெட்டணும். நான் விக்கறதில்லேன்னாக் கூட அவனுங்க விடமாட்டானுங்க. அதே மாதிரி தான் நம்ம ஜான் ஆசீர்வாதம் தனக்கு வர்ற தொண்ணூத்தைந்து கிலோ மூட்டை அரிசியை நூறுக்குக் கணக்குக் காட்டி யாகணும். நாம பிடிச்சிருக்கறது புலியோட வாலை. அப்படி எல்லாம் விட்ற முடியாது..."

"அப்ப என்ன பண்ணணுங்கறே?"

"நான் பண்ண வேண்டியதைப் பண்ணிடுவேன். ஆனா நீ எனக்கென்னன்னு கழண்டுக்கக் கூடாது. நான் தூக்குக்குப் போற நிலை வந்தா, நீயும் கூட வரணும். வருவியா?"

"நம்ம பலமே, ஒத்துமையும் ஒருத்தருக்கொருத்தர் உயிரையே கொடுத்துக்கறதும் தானே? விஷயத்துக்கு வாடா..."

- விஷயத்துக்கு வந்தான் தாமு. மணியமும் ஜவஹர்பாபுவும் ரேஷன் கடைக்காரனும் அதைக் கேட்டனர். அகன்ற அவர்களின் விழிகளில் அதிர்ச்சி, ஆச்சரியம் என்று எல்லாம் கலந்த கலவையின் வியாபிப்பு!

20

தாமுவின் முடிவால் விதிர்த்துப் போனவர்கள் நெடு நேரம் வரை ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக்கொண்டு, அவன் முடிவுக்குச் சம்மதம் தர தயங்கித் தயங்கி நிற்கிறார்கள்.

"டேய் ரொம்பப் பயமா இருக்குடா... விவகாரம் பெரிசாயி மதக்கலவரமாவே ஆயிட வாய்ப்பு இருக்குடா." மணியம் மிடறு விழுங்கிச் சொன்னதை, "ஆமாம் தாமு, வேற வழி இருக்கா, பார்" என்று படல் கட்டுகிறான் ரேஷன் கடை ஜான் ஆசீர்வாதம்.

"வேற வழி இருக்கு... ஆனா அதுல வழக்கம் போல அந்த மோகன் எழுந்திரிச்சு வந்துடுவான். கிழவனை உள்ள வெச்சாத்தான் நாம நம்ம காரியத்தைப் பண்ணவே முடியும்."

"நீ பண்ணு தாமு... இவங்க கிடக்கறாங்க! கிழவனை உள்ள வெச்சே தீரணும். என்ன ஆனாலும் சரி..." - விரைத்துக் கிடந்த ஜவஹர் பாபு சிலிர்த்து எழுந்து கத்துகிறான்.

"என்னைப் பண்ணச் சொல்லிட்டு நீங்க விரல் சூப்பிக்கிட்டு நின்னுடக் கூடாது. உங்களுக்கெல்லாமும் ஆளாளுக்கு ஒரு வேலை இருக்கு..."

"டேய்... முதல்ல நீ சொன்னதைச் செஞ்சு கிழவனை உள்ள தள்ளு. அப்புறமா அடுத்ததப் பத்தி பேசுவோம்..."

"ஆமா இன்னிக்கு வீதில என்ன பட்டிமண்டபமா?"

"ஆமா... 'வாழ்க்கைல முன்னுக்கு வர உதவியா இருக்கறது வாய்ப்பா - உழைப்பா'ன்னு ஒரு புடலங்கா தலைப்பு...."

"சாராயம்தான்னு தெரிஞ்சும் என்ன மாமா இது பெனாத்தல்?"

"அது நமக்குடா முட்டாப்பயலே... எல்லாரும் சாராயத்தால முன்னுக்கு வந்துட்டா. அப்புறம் நாம எங்க போய்டா விக்கறது?"

"அப்ப நாளைக்குத்தானே சிலம்பம்?"

"ஆமாண்டா... இங்க மோகன்ராமை நான் சுருட்றேன். அங்க நீ கிழவனைச் சுருட்றே."

மணியம் முற்றுப்புள்ளி வைக்கிறான். ஜான் ஆசீர்வாதம் மட்டும் உள்ளூற நடுங்கிக் கொண்டே இருந்தான்.

'ஆதித்ய ஹ்ருதயம்" சொல்லிக் கொண்டிருந்தார், வக்கீல் பகவந்த ராவ். ஹாலில் பிரம்பு நாற்காலியில் அவருக்காகக் காத்திருக்கும் மோகன்ராமின் காதிலும் அந்த ஸ்லோகத்தின் ஒலி அலைகள் மோதிக் கொண்டிருந்தன. கேட்டுக் கொண்டே இருக்கலாம் போல் இருந்தது. இப்படி நாமும் நிதமும் ஒரு ஸ்லோகமாவது சொல்லிப் பழக வேண்டும் என்கிற ஆசையும் மூண்டது. கூடவே பொருள் தெரியாமல் சொல்வதால் என்ன லாபம் என்கிற கேள்வியும்... அதைக் கலைக்கிறது மணி சப்தம். பகவந்த ராவ் கர்ப்பூரத் தட்டுடன் அறைக்கு வெளியே வந்து ஹாலில் தொங்கும் படங்களுக்கெல்லாம் அந்தக் கர்ப்பூர ஆரத்தியைக் காட்டுகிறார்.

நடுவில் 'கொஞ்சம் பொறு வந்துட்றேன்' என்கிற பாவனை காட்டியபடி, திரும்ப பூஜை அறைக்குள் நுழைந்து கொள்கிறார்.

கையில் தம்ளருடன் சமையல்கட்டிலிருந்து வருகிறாள் சாரதா, பகவந்தராவின் மனைவி.

"இந்தாப்பா சாப்டு..." என்கிறாள்.

"நான் காபி, டீ சாப்பிடறதை நிறுத்திட்டேன்."

"தெரியும்... இது சுக்கு மல்லி காப்பி" என்கிறாள். கையில் சில திருத்துகுழாய்களுடன் பகவந்த ராவும் பூஜையறையில் இருந்து வெளிப்படுகிறார். லீடிங் லாயர்... உண்மையைப் பொய்யாய் - பொய்யை உண்மையாய்க் காட்ட முடிந்த நா வித்தகர். அவருக்குள்ளும் அழுத்தமான பக்தி. அவர் வீடும் ஒன்றும் பெரிய பங்களா இல்லை. ஆனாலும் மகாலட்சுமியை இழுத்துக் கட்டிப் போட்ட மாதிரி ஒரு நேர்த்தி தெரிகிறது. சுவரில் படங்களை மாட்டுவதற்குக் கூட இலக்கணம் உண்டு போலும். தூசு தும்பு கிடையாது.

ஒரு நெசவாளி வீட்டில் இத்தனை நேர்த்தியை, தூய்மையை எதிர்பார்க்க முடியுமா? அதைக் கொண்டு வந்து நிலைப்படுத்தத்தான் முடியுமா?

"என்னப்பா என்னாச்சு உனக்கு...?" பகவந்தராவின் உசுப்பலில் கலைகிறான்.

"ஒண்ணும் இல்ல சார். இங்க வந்தா நான் என்னையே மறந்துடறேன் - அதான்..."

"இப்ப நான் யாருன்னாவது ஞாபகம் இருக்கா?"

"ஐயோ என்ன சார் இது கேள்வி... வரச் சொன்னீங்களாமே?"

"ஆமாம்ப்பா... ஆமா பரீட்சைக்குத் தயாராயிட்டியா?"

"ஆகிக்கிட்டே இருக்கேன்..."

"அதோ பார்... அதுதான் உன் சீட். இப்பவே ரெடியா இருக்கு."

- மோகன்ராம் அவர் சுட்டிக் காட்டிய நாற்காலி மேஜையை அதன் பின்புறத்துச் செந்நிறப் புத்தகக் கூட்டத்தை... அந்த மேஜைக்கு மேல் ஆசீர்வதித்தபடி படத்தில் தொங்கிக் கொண்டிருக்கும் காஞ்சிப் பெரியவரை என்று சகலரையும் ஒரு பார்வை பார்த்து முடித்துப் பரவசமாகிறான்.

"அப்புறம் மோகன், பாரதியை உனக்குத் தெரியும் தானே?"

"என்ன சார் கேள்வி இது... மகாகவியைத் தெரியாமலா?"

"தெரியும் சரி.. புரியுமா?"

"புரியும்னா...?"

"அவன் எப்படி... அவனது குணம் எதிர்பார்ப்பு இவை. அப்புறம் அவனது ஆசைகள் - மனிதம் - சமூகம் - இயற்கை... இது பத்தி எல்லாம் அவன் வைத்திருந்த அபிப்ராயங்கள்..."

"நல்லாவே புரியும் சார்..."

"நானும் நீ சொல்றதை நம்பறேன். அந்த மகாபுருஷன் பேரால ஒரு மன்றம் தொடங்கலாம்னு இருக்கேன். தலைவர் அவன்தான். ஆனா செயலாளன் நீ...!"

"சார் என்ன இது திடீர்னு..."

"திடீர்னுதான்... பானுங்கற பொண்ணோட பாட்டி செத்துப் போய் வகுல் அது இதுன்னு நடந்து, கடைசில அந்தச் சாராயக்கார தாமு வந்து மூக்கை நுழைச்சு காக்கா விரட்டினதா கேள்விப்பட்டேன். உன் தறி எரிஞ்ச விஷயம் ஏற்கெனவே தெரியும். தெருவுல ஒரு விளக்குக் கூட

எரியலைங்கறதும் தெரியும். சின்னதும் பெரிசுமா நிறைய பிரச்னைகள்...

"ஒண்ணாங் கிளாஸ்லையே மாடுகள் கதை நமக்குச் சொல்லித் தந்தும் நாம அதைச் சரியா புரிஞ்சுக்கலை. நாலு மாடுகள் தனித்தனியா மேயும் போது அடிச்சுச் சாப்பிட வந்த புலி, நாலும் ஒண்ணாயிட்டப்போ ஓடி ஒளிஞ்ச கதைதான் உனக்குத் தெரியுமே..."

"புரியுது சார்... நல்ல சிந்தனைகள் - சமூகப் பார்வைகள் கொண்டவங்க தனித்தனி கூரைக்குக் கீழ் இல்லாம ஒரு கூரையின் கீழ இருந்தா பலம்னு சொல்ல வர்றீங்க... ஆனா என்னைப் போய் செகரட்ரியா..."

"இதோ பார் இத ஒரு பதவியாவோ, உன்னைப் பதவி ஆசை பிடிச்சவன்னு சிலர் நினைச்சுடுவாங்கங்கற தயக்கமோ வேண்டாம். சில காரியங்களைச் செய்ய சில பொறுப்புகள் அவசியம். இது உனக்கு நான் கொடுக்கற ஆயுதம்.

"என்னைக் கேட்டா ஒரு நல்லது செய்ய ஆசைப் பட்றவனுக்குப் பதவி ஆசை இருந்தா அது தப்பு இல்லேம்பேன்... எங்கேயும் விளைவுதான் முக்கியம்."

அரை மனதாய்த் தலையசைக்கிறான் மோகன்ராம்.

"உன் நண்பர்களை உறுப்பினர்களா சேரு. மாதம் ஒரு கூட்டம் போடுவோம். பொறுப்புல இருக்கற பெரிய தலைகளைக் கூப்பிடுவோம்; கைகுலுக்குவோம். அவன் லஞ்ச ஊழல் பேர்வழியா இருந்தாலும் உத்தமன்னு சொல்லுவோம்! நாம சொன்னதுக்காகவாவது அவன் உத்தமனா நடந்துக்க அப்புறமா முயற்சி செய்யணும். அப்படிச் செயல்படுவோம். அப்பவும் மாறலேன்னா இருக்கவே இருக்கு உண்ணாவிரதம் மறியல்னு ஆயிரம் அகிம்சை வழி."

"இப்போதைய அரசியல்வாதிங்க, அதிகாரிங்க இந்த உண்ணாவிரதம் மறியலுக்கெல்லாமா மசியறாங்க...?"

"தெரியும், நீ எங்க வரேன்னு... ஒண்ணு நல்லா தெரிஞ்சுக்க. சில புத்திசாலித்தனமான விஷயங்கள் கொண்ட அணுகுமுறை தோற்கவே தோற்காது.

"கேரம் போர்டு விளையாட்டு மாதிரிதான் பிரச்னை களோட நாம உறவாட்றதும்! சில காயினை நேரா போடலாம். சிலது கவுண்டர் பண்ணி... இன்னும் சிலதை எதிரியோட காயினை வெச்சே போடணும். நடுவுல அவன் காயின்களைக் கலைக்கணும். நிறைய இருக்கு... அதை எல்லாம் நான் உனக்குச் சொல்லித் தரேன்."

முகுந்தன் கூட அன்று முதலில் நம்மை நாம் பலப்படுத்திக் கொள்ள வேண்டும் என்றான். இன்று அதை நோக்கித் திரும்பி இருக்கிறது பாதை...

"இந்தா மோகன், இந்த ஆயிரம் ரூபாய வெச்சுக்கோ... இதோட நாலாயிரம் ஆகுது... மாசம் ஐநூறு ஐநூறா சம்பளத்துல கழிச்சுக்கறேன்..." - பகவந்த ராவ் சற்றும் எதிர்பாராமல் ஒரு தொகையை நீட்டுகிறார்.

"சார், எப்படி சார் நன்றி சொல்வேன்..."

"உயிர் போற நிலையிலேயும் நேர்மையை இழந்துடாம இருந்து..."

மோகன் அவர் கால்களை நோக்கிக் குனிகிறான்.

மீட்டர் ரீடிங்கிற்காக மின்வாரிய ஆள் வந்திருந்தான். ஆனால் பதிவுக் கார்டைக் காணவில்லை. தேடி அலுத்துப் போய் வந்தவன் எதிரில் பரிதாபமாகப் பார்க்கிறாள் மகா லட்சுமி.

"என்னங்க இது... தேடி எடுத்து வைங்க - நாலு வீடு பார்த்துட்டு வரேன். இப்படியா பொறுப்பில்லாம இருப்பீங்க...?"

- அவன் அபிப்ராயம் மகாலட்சுமியை விட கனகாவை அதிகம் காயப்படுத்துகிறது.

"அத்தே... நீங்க இருங்க நான் தேடறேன்" என்று ஒரு இடம் பாக்கி விடாமல் கட்டைக் காலுடன் தேட ஆரம்பிக்கிறாள் மகாலட்சுமி. பட்டுப் பிசிறுகளைச் சுருட்டிச் சுருட்டிக் கூரை மூங்கில் இடுக்குகளில் செருகி வைத்திருக்கிறாள். அங்கங்கே ஜரிகைப் பிசிறுகள்.

ஓர் ஓட்டு இடைவெளியில் ரேஷன் கார்டு - இன்னொரு இடத்தில் பழைய கல்யாணப் பத்திரிகைகள்...

ஒரு பத்திரிகை பெரிதாகப் பளிச்சென்று சுண்டி இழுக்கிறது.

எடுத்துப் பார்க்கும் ஆசை வருகிறது.

'இதைவிட பெரிதாக அப்பா தனக்குப் பத்திரிகை அடிப்பார்' என்று உள்குரல் ஒலிக்க, மருதாணி விரல்களால் பத்திரிகையைப் பிரிக்கிறாள். மீட்டர் ரீடிங் கார்டு தேடும் எண்ணம் சற்று ஒதுங்கி நின்று கொள்கிறது. முகுந்தனின் தங்கைக்கான கல்யாணப் பத்திரிகை என்று கவர் மேலேயே முகாந்திரங்கள். உள்ளே அந்த மஞ்சள் நிற மங்கலத் தாள் விரியும் போது ஒரு புகைப்படத்தையும் உள்ளடக்கி இருந்தது அது.

யாருடைய புகைப்படம்...? நான்கு பெண்கள். இதற்கு மேல் போட முடியாத மேக்கப்புடன் பட்டு உடுத்திக் கொண்டு ஸ்டுடியோவிற்கே போய் எடுத்துக் கொண்ட போட்டோ...

நடுவில் பானுவும் நிற்கிறாள். பளிச்சென்ற சிரிப்புடன்! கனகாவின் விரல்கள் அநிச்சையாய் நடுங்க ஆரம்பிக்க, அந்தப் புகைப்படம் கவிழ்ந்து கீழே விழுகிறது.

பின்னால் ஏதோ எழுத்துக்கள்...

எடுத்து வாசித்த போது நெஞ்சை அடைத்தது. இதயம் கரணமடித்து வாய் வழியாக வெளியே வரும் போலக் கூடத் தோன்றியது.

இரண்டு கண்களின் பாப்பாக்களையும் இருட்டு வர்ணம் பூசினது போல் வந்து மூடியது.

'நடுவில் இருப்பவளே...
என் இதயக் குடுவையில் இருப்பவளே...
கொஞ்சம் பொறு... கல்யாணப் படத்தில் நான்தான்
உன் அருகில் நிற்பேன், மாப்பிள்ளையாக!'

மோகனின் கையெழுத்துதான் அது... இந்தப் புகைப் படத்தைப் பற்றித்தான் டயரியில் குறிப்பிட்டிருந்தானா?

கனகாவால் எழுந்திருக்க முடியவில்லை. அவன் நினைப்பு அழுத்துகிறது.

"என்னம்மா கிடைச்சிடிச்சா?" என்று கேட்டு வரும் மகாலட்சுமி எதிரில் தடுமாறத்தான் முடிகிறது.

"ஐய இங்கல்லாம் இருக்காது... அந்த மீட்டர் கிட்டேயே தேடிப் பாரு..."

"எதை?" என்கிற கேள்வியோடு உள்நுழைகிறான் மோகன்ராம்.

"வாடா... எங்கடா கரண்ட்டு கார்டு?"

"என்கிட்ட கேட்டா?"

"அத காணாமதான் தேடிக்கிட்டு இருக்கேன். இவளும் தேட்றா. ஆனா கிடைச்ச பாட்ட காணலை. அளவெடுக்கறவன் வந்து மூக்க சிந்திட்டுப் போறான்."

மகாலட்சுமி புலம்பிக் கொண்டே சுற்று முற்றும் பார்க்க, மோகன்ராம் கச்சிதமாகக் கனகாவின் கையில் பத்திரிகையை - கூடவே மறைந்த நிலையில் இருக்கும் போட்டோவை - அப்படியே அவள் நொடித்துப் போய்ப்

பிரமை பிடித்து நிற்பதை என்று சகலத்தையும் ஒரு பார்வையில் பார்த்து முடிக்கிறான்.

'எப்படித் தொடங்குவது?' என்கிற நெருடலான விஷயம் இங்கே தொடங்கி முடிந்து விட்டிருக்கிறதே?

ஒரு வகையில் நல்லதுதான்...

இன்னொரு வகையில்...?

கனகா அதற்குப் பதில் சொல்லும் ஆசையுடன் கொல்லைப்புறம் நோக்கிச் சமிக்ஞை செய்தபடி நடக்கிறாள்.

வெளிப்பகுதி ஆதலால் தெருக்குழாயின் அலறலில் ராசாவைச் சித்தெறும்பு அன்றைய தினத்தில் மட்டும் ஏழாவது முறையோ எட்டாவது முறையோ கடித்துக் கொண்டிருக்கிறது.

"என்ன கனகா?"

"கங்ராஜுலேஷன்ஸ்..."

"....."

"ஒரு தேங்க்ஸ் கூடச் சொல்ல மாட்டீங்களா?"

"அதால உன் மனசு நிரம்பாதுன்னு எனக்குத் தெரியும்."

"இனி எதாலையும் நிரம்பாது அத்தான்..."

"அப்படிச் சொல்லாதே... உன் அழகுக்கும் சுறுசுறுப்புக்கும் நான் சாதாரணம். என்னை விட ஒசந்தவன் உனக்குக் கிடைப்பான்."

"தேங்க் யூ.. அத்தான் ஒரு ரிக்வெஸ்ட்."

"என்ன கனகா?"

"அப்பாகிட்ட உங்களைப் பிடிக்கலைன்னு பொய் சொல்லப் போறேன். தப்பா எடுத்துக்கக் கூடாது நீங்க..."

"அது உண்மையா இருந்தாலே தப்பா எடுத்துக்க மாட்டேன் கனகா."

"நீங்க தப்பையே தப்பா எடுத்துக்காதவர்ங்கறது எனக்குத் தெரியும். ஆனா அப்பா நேர் எதிர். அவரை வேற விதமாத்தான் சமாளிக்கணும்."

"இதுல சமாளிக்க என்ன இருக்கு... எக்ஸ் இல்லேன்னா ஒரு ஒய்ன்னு போகத் தெரியாதவரா உங்க அப்பா...?"

"அவர் வரைல எக்ஸ், ஒய் எல்லாமே நீங்க மட்டும் தான். அதோட நீங்க என்னை விரும்பலைங்கறதை விட பெரிய விஷயம் பானுவை விரும்பறது. அதை அவராள ஜீரணிக்கவே முடியாது. இந்த விஷயத்துல அவர் கட்சியில தான் உங்க அம்மாவும் சேருவாங்க. நீங்க அப்புறமா தனி நபரா ஆகிக் கஷ்டப்படணும். ஆகையால..."

"ஆகையால..."

"இப்போதைக்கு உங்க காதல் வெளிய தெரிய வேண்டாம். என் கல்யாணம் முடிஞ்ச பிறகு தெரியட்டும்..."

"உன் கல்யாணமா?"

"ஆமாம்... நான் உங்களை விரும்பின மாதிரி இங்க என்னை ஒருத்தர் விரும்பிக்கிட்டு இருக்காரு. தான் விரும்பற நபரை விட தன்னை விரும்பற நபர்தான் ஒரு பெண்ணுக்கு ஏற்றவன்னு ஒரு பழமொழி கூட இருக்கே."

"யார் அது?"

கனகா அந்த நபரின் பெயரைச் சொன்ன போது, மோகன்ராமுக்குச் சுரீர் என்றிருந்தது.

24182
4105089

21

"என்ன நான் சொல்றதுல உங்களுக்கு நம்பிக்கை இல்லியா? நிஜமாத்தான் சொல்றேன். அவர் என்னை விரும்பறாரு..." - கனகா திரும்பவும் சொல்லி மோகன் ராம் மனத்துக்குள் சாட்டை சொடுக்குகிறாள்.

மோகன்ராம் தன் கலங்கிய முகத்தைத் தாழ்த்திக் கொண்டு மேலும் கலங்குகிறான்.

"என்னால நம்ப முடியலை... ஜீரணிக்கவும் முடியலை" என்கிறான் உடைந்த குரலில்.

"நான் ஜீரணிச்சுட்டேன். நீங்களும் ஜீரணிக்கணும். மாட்டேன்னு பிடிவாதம் பிடிச்சாலும் அதுதானா ஜீரணம் ஆயிடும் அத்தான்."

மனத்தில் சோர்வுக் கப்பலின் நங்கூரம் ஆழமாக விழுகிறது.

வீதிமுக்கில் சதா நான்கு பேர் பீடி பிடித்தபடி பேசியதையே பேசிக் கொண்டிருப்பார்கள். நான்கு நாட்களுக்கு ஒரு முறை குளித்தால் அதுவே பெரிது. அவர்களைப் பார்க்கப் பார்க்கப் பற்றிக் கொண்டு வரும். இந்த விநாடியில் மோகன்ராம் மனத்தில் அவர்கள் புத்திசாலிகளாக மாறுகிறார்கள்.

'வாழ்க்கையை வளைத்து இழுக்கும் வேலையைச் செய்வது வீண். அது தன் பாட்டையில்தான் நம்மை இழுத்துச் செல்லும் என்கிற ஞானம் மிக்கவர்களே அவர்கள்?' உள்ளே வந்து நெசவுத் திண்ணை மேல்

அமர்ந்து கொண்டு கண்களை மூடிக்கொண்டு பலவாறு சிந்திக்க ஆரம்பிக்கிறான்.

"என்ன அத்தான்... எதுக்கு இத்தனை கவலை? நான்தான் நொடியில் அதை ஜீரணிச்சு வேற பாதையையும் காட்டிட்டேனே.." - நெருங்கி வந்து கிசுகிசுக்கிறாள் கனகா.

"நீ ஜீரணிச்சுட்டே... ஆனா என்னால முடியலை. எப்படி உன்னால இத்தனை சீக்கிரமா மனச மாத்திக்க முடிஞ்சது? அதைவிடப் பெரிய விஷயம் அவன் உன்னை நேசிக்கிறான்னு சொன்னதுதான். என்னைக் கல்யாணம் பண்ணிக்கத்தான், நீ இந்த வீட்டுக்கே வந்திருக்கேன்னு தெரிஞ்சிருந்தும் அவன் எப்படி உன்னை நேசிக்கலாம்...?"

"ஓ... உங்க கவலைக்குக் காரணம் இது தானா? ஆமா நான் ஒண்ணு உங்களைக் கேக்கவா?"

"நல்லா கேளு..."

"பானுவை நீங்க விரும்பறீங்களே... அவ உங்களை விரும்பறாளா இல்லையான்னு தெரியுமா?"

"இது என்ன கேள்வி கனகா...?"

"நீங்க உங்க விருப்பத்தை அவகிட்ட சொல்லியிருக்கீங்களா?... இல்லை, அவதான் தன் விருப்பத்தை உங்ககிட்ட சொல்லியிருக்காளா?"

"ரெண்டும் இல்லை..."

"சொல்லாம கொள்ளாம நீங்க ஸ்னேகிக்கலாம். ஆனா நான் குறிப்பிட்ட நபர் மட்டும் அப்படி நடந்துக்கக் கூடாதோ?"

"அது எப்படி உனக்குத் தெரியும்?"

"கனகா மாதிரி ஒரு பொண்ணு மோகனுக்குக் கிடைக்க அவன் கொடுத்து வெச்சுருக்கணும். அவன்

மட்டும் இல்லேன்னா நான் கனகாவைத் தூக்கிக்கிட்டுப் போய்க் கல்யாணம் செய்துப்பேன்னு அவர் உளறினதை - சாரி அத்தான் - நான் அப்ப அப்படித்தான் நினைச்சேன் - கேட்டேன்."

"அப்படிக் கேட்டுட்டத மட்டுமே நம்பியா நீ இப்ப கல்யாணம் செய்துக்கற அளவு சிந்திக்கிறே?"

"கூடாதா?"

"எனக்குச் சொல்லத் தெரியலை கனகா... ஆனா அது சரியான முடிவா நிச்சயம் எனக்குத் தோணலை."

"அதுதான் சரியான முடிவு அத்தான். அதை நீங்க போகப் போகப் புரிஞ்சுக்குவீங்க. இதை விட்டா உங்களுக்கு உதவ வேற வழியும் தெரியலை. பை த பை கையக் கொடுங்க..."

"எதுக்கு?"

"பானுவை ஸ்னேகிச்சதுக்கு... அவளுக்கும் வாழ்க்கை கொடுக்க முன் வந்ததுக்கு... காதலிக்கறதுக்கு முன்ன தகுதிகளைத் தேடிக்கணும்னு நினைச்சு செயல்பட்டுகிட்டு இருக்கறதுக்கு... தலையெழுத்தை நொந்துக்காம நெசவு நெய்யறவனும் பெரிய படிப்பாளி ஆக முடியும்கற உதாரணமா இருக்கறதுக்கு... சின்ன விஷயத்துல கூடச் சிறுமைகளைக் கண்டு சீறும் குணத்துக்கு..."

"போதும் கனகா போதும்... என்கிட்ட குறைகளே இல்லேங்கற மாதிரி பேசறியே..."

"ஒரே ஒரு குறைதான் எனக்குத் தெரிஞ்சு இருக்கு..."

"என்ன கனகா?"

"ரொம்ப உணர்வுபூர்வமா இருக்கற நீங்க நல்ல அறிவு பூர்வத்துக்கு மாறணும்."

"நன்றி..." என்கிறான் நெகிழ்ச்சியோடு, பதிலுக்குப் பனித்த கண்களுடன் அதை அங்கீகரிக்கிறாள் அவள்.

அடுக்களையில் மகாலட்சுமி வேறு நினைப்பில் இருக்கிறாள். இருவரும் மனசு விட்டுப் பேசும்போது, காதல் ஊற்றெடுக்கும் போது தடையாகத் தான் இருந்து விடக் கூடாது என்கிற விவேக லஜ்ஜையோடு...

"கொஞ்சம் தண்ணி..." என்று வீட்டு வாசலில் நின்றபடி கேட்க வேண்டியது. தண்ணீர் கொண்டுவர அந்த வீட்டுக்காரப் பெண்மணி உள்ளே நுழையும்போது அப்படியே நிலைகால் படி தாண்டி எட்டிப் பார்த்தால் வலப் பக்கமோ இடப் பக்கமோ நிலைகால் சுவரை ஒட்டியே நெசவுத் திண்ணை தெரியும். தறியும் நீண்டு கிடக்கும். முகத்துக்கு இருபக்கமும் கிருதா வளைகிற கணக்காக, தறிக்கு இருபக்கமும் நல்ல ஜரிகைக் கண்டு வேட்டியின் பார்டரில் ஓடி முடிந்து சுருட்டித் தொங்கவிடப்பட்டிருக்கும்... கைவசத்துக் சுத்தரியால் நறுக்!

தண்ணீரோடு உள்ளே போனவள் வருவதற்குள் ஜரிகை சுருட்டப்பட்டுவிடும். அப்படிச் சுருட்டப்படும் சரக்குகளை வாங்குவதற்கென்றே ஒரு ஜென்மமாய்தான் இந்தக் கிருஷ்ணாராவும் அவதாரம் எடுத்திருக்காரே...?

கிருஷ்ணாராவ் கணக்குப் பிள்ளை மேஜையைத் தன் சாவியால் திறந்து உள்ளே சுருட்டி வைக்கப்பட்டிருக்கும் தராசை எடுத்து, மில்லி கிராம் சுத்தமாக எடை போட்டு மார்க்கட் ரேட்டுக்குப் பாதிக்கும் கீழே விலை வைக்க, திருடனும் தலையைச் சொரிந்தபடி வாங்கிக் கொண்டு போவது வாடிக்கையான விஷயம் தான். இன்னும் அது தொடருகிறது.

இந்த முறை ஜரிகையைக் கொண்டு வந்திருப்பவன் ஒரு பத்து வீட்டிலாவது தேட்டை போட்டிருப்பான் போலும். மூன்று கிலோ தாண்டி விட்டிருக்கிறது சரக்கு.

ஒரு கிராம் ஜரிகை பத்து ரூபாய்க்குப் போகிறது. மூன்று கிலோவுக்கு மூவாயிரம் ரூபாய் வருகிறது. அந்த விடலைப் பையன் எதிரில் ஆயிரம் ரூபாயை அதுவும் அழுக்கு நோட்டாகத் தூக்கிப் போடுகிறார் கிருஷ்ணாராவ்.

அவனும் விட்டால் போதும் என்று வாங்கிக் கொண்டு வாசல் தாண்டுகிறான். ஆனால் அவனது துரதிர்ஷ்டம் அவனை இப்பொழுது ஒருவன் வீதியில் விரட்டத் தொடங்கியிருந்தான்!

தன் வீட்டில் ஜரிகை திருடு போனது தெரிந்த மறு நிமிடம் ஒரு யுகமாய்க் கிருஷ்ணாராவ் வீட்டுப் பக்கம் வந்ததன் பலன்.

ஓடுபவனை இப்பொழுது வீதியே பார்த்து விட்டுத் துரத்த ஆரம்பித்தது. இறுதியில் வீதிமுக்கில் மோகன்ராம் வசம் அவன் வசமாய்ச் சிக்கிக் கொள்ளும்படி ஆயிற்று.

"த்தூ!" வீதியே காரி உமிழ்ந்ததில் கிருஷ்ணாராவ் முகம் தொங்கிப் போகிறது. சினிமா டிக்கெட்டுக்காகச் சில வருங்கால மன்னர்கள் தங்கள் பாடப் புத்தகங்களை எல்லாம் கூட கிருஷ்ணாராவிடம் விற்றிருக்கின்றனர். ரேஷன் கார்டிலிருந்து பட்டுப் பாவு வரை மனிதர் வாங்கிப் போட்டிராத சரக்கே இல்லை.

அடிமாட்டு விலைக்குச் சாணியைக் கூட வாங்கிப் போடும் ஒரு மைதாஸ் பாத்திரமாகவே கிருஷ்ணாராவ் தெரிகிறார்.

துணிந்து ஒருவனைப் பிடித்துக் கட்டி வைத்து உதைத்து, சரக்கைத் திரும்ப வாங்கப் போக, எல்லாமே வெளி வந்து விட்டது. போலீசுக்குப் போவேன் என்று மிரட்டியதில் மனிதர் ஆடிப் போய்ச் சர்வத்தையும் எடுத்து வெளியே போட்டு விட்டார்.

அப்படிப் போட்டதில் ஜரிகையும் கெண்டையும் மோகன்ராமை அவ்வளவாகப் பாதிக்கவில்லை. பாடப் புத்தகங்கள் மட்டும் மொத்தமாக அவன் மனத்தைப் பிராண்டிக் கொண்டிருந்தன.

விற்ற அத்தனை பேர்களும் ஒரு காலைக் காட்சிக்காக அதை விற்ற கொடுமையை நினைத்துப் புழுங்கிக் கொண்டே இருக்கிறான்! இப்படிப்பட்ட இளைஞர்களை எதிர்நோக்கியும் நம்பியும்தானே இருபத்தியோராம் நூற்றாண்டு, கம்ப்யூட்டரும் கையுமாகக் காத்துக் கொண்டிருக்கிறது?

தொடங்கவேண்டிய பாரதி நற்பணி மன்றத்துக்கு இதையெல்லாம் மாற்ற வேண்டிய கடமைகள் நிறைய இருப்பதாக நினைத்துக் கொள்கிறான்.

நடுத்தெருவில் போக்குவரத்தைத் தடுத்துக் கொண்டு தென்னங்கிடுகுப் பந்தல். உள்ளே ஊஞ்சல் கட்டி ரேணுகா தேவியை உட்கார்த்தி வைத்து ஆட்டி விட ஒரு கூட்டமே மஞ்சள் வேட்டித் துண்டோடு மும்முரமாக வேலை பார்த்துக் கொண்டிருக்கிறது.

ஊடே கிருஷ்ணாராவ் வீட்டுக்குள் தாடையைத் தடவிக் கொண்டு நுழைகிறான் தாமு.

"என்ன ராவ்... ரொம்ப தாளிச்சிட்டாங்களோ?"

கிருஷ்ணாராவ் அவனைப் பார்த்து மிரண்டு போகிறார். இரண்டு பேருக்குமே திருட்டுப் புத்திதான் என்றாலும் ரவுடித்தனம் இல்லாத திருட்டுப் புத்தி ராவுக்கு. அதனால்தான் இதுநாள் வரையில் இணக்கம் இல்லை. இப்போது அதற்கு ஒரு வழி காண வந்திருக்கிறான் தாமு.

"என்னய்யா முழிக்கிறே... போலீசுக்குப் போவேன்னு மிரட்டுன உடனே இருக்கற சரக்க பூரா எடுத்துப் போட்டு வாங்கிக் கட்டிக்கிட்டு நிக்கிறியேய்யா... அறிவில்லே

உனக்கு? என்னைக் கூப்டுக்கக் கூடாது. இந்தக் காலத்துல எவன் யோக்கியன்....? விக்கறவனை விட்டுட்டு வாங்குன உன்கிட்ட மோதுனா என்ன அர்த்தம்?"

"....."

"நல்லா முழி. இப்பவும் ஒண்ணும் கெட்டுப் போயிடலை. நான் சொல்றதைக் கொஞ்சம் நல்லா கேட்டுக்கோ. அப்புறம் பாரு என்ன நடக்குதுன்னு..."

அவன் சொல்லச் சொல்ல அதைக் கேட்டுக் கொள்ளும் கிருஷ்ணாராவுக்குத் தரைப் பகுதியே நழுவுவது போல ஒரு பிரமை!

யோசித்து யோசித்துப் பார்த்துவிட்டு அம்மன் திருவிழாவின் மூன்றாம் நாள் ராத்திரி நேரத்தைத் தேர்ந்தெடுத்துக் கொண்டு ராவுத்தர் தெருவுக்குள் நுழைந்து விட்டிருக்கிறார் கிருஷ்ணாராவ். திரைச்சீலை தொங்கும் ஜன்னல்கள் - கூம்பு கூம்பான வாசல் மாடல்கள். அலகு உரசியபடி வேடிக்கை பார்க்கும் சிமிண்டு நிறப் புறாக்கள் என்கிற மொகல் லட்சணங்கள் எதையும் இருட்டில் பார்க்க முடியவில்லை. ஆனாலும் இஸ்மாயில் வீட்டைத் துல்லியமாய் அடையாளம் கண்டு நுழைய முடிகிறது. நல்ல வேளை இஸ்மாயில் இருந்தான். கிருஷ்ணாராவை அதிசயமாய்ப் பார்த்துக் கண் சிமிட்டுகிறான்.

"இங்க இஸ்மாயில்ங்கறது..?"

"நான்தான்..."

"நான் பானு இருக்கற தெருவுலதான் இருக்கேன். ஒரு முக்கிய விஷயமா உங்களைப் பாக்கலாம்னு வந்தேன்."

"மொதல்ல உக்காருங்க..." - இஸ்மாயில் பாயை எடுத்து விரிக்கிறான்.

"இருக்கட்டும் இருக்கட்டும்... நான் இங்க வந்துருக்கறது அந்த மோகன்ராமுக்குத் தெரிஞ்சா ரொம்ப ரசாபாசமாயிடும். விஷயத்தைச் சொல்லிடறேன்..."

கிருஷ்ணாராவின் செயற்கையான பதற்றம் மரப்படியில் இருந்து இறங்கிவரும் நபீஸாவையும் தொற்றுகிறது.

"இஸ்மாயில் யார் இவரு?"

"நம்ம பானுவோட தெருவுல இருக்கறவராம்... ஐயா நீங்க விஷயத்தைச் சொல்லலையே..."

"நான் சொல்றது கூட முக்கியமில்ல. ஆனா நான் சொன்னது வெளிய தெரியக்கூடாது..."

"விஷயத்தைச் சொல்லுங்க முதல்ல..."

"உங்க பானுவை அந்தத் தேசிகாச்சாரி தன் ஆஸ்ரமத்துக்குக் கூட்டிக்கிட்டுப் போய் விபசாரத்துல ஈடுபடுத்த இருக்கான். ஏற்கெனவே அங்க சுசீலான்னு ஒருத்தி போய்ப் பிரமாதமா தொழில் நடத்திக்கிட்டு இருக்கா. இதெல்லாம் உங்களுக்குத் தெரியுமோ தெரியாதோ... சொல்லிட்டுப் போகலாம்னு வந்தேன்... என்ன இருந்தாலும் பானு உங்க சமூகப் பொண்ணு. அவ என்னதான் எங்க ஆளுங்க வீட்டுல வளர்ந்தாலும் உங்க ரத்தம்தானே...?"

கிருஷ்ணாராவ் பேசப் பேச நபீஸாவுக்குப் பதற ஆரம்பிக்கிறது. ஆனால் இஸ்மாயில் துளிக் கூடப் பதற்றப் பட்ட மாதிரியே தெரியவில்லை.

"நீங்க சொல்றத முதல்ல நான் நம்பத் தயாராயில்லை. அந்தப் பெரியவர் வீதியில நின்னு பேசின பேச்சு இப்பவும் என் காதுல இருக்கு. உங்க கதையை யார்கிட்டேயாவது போய்ச் சொல்லுங்க..."

"அப்படியா... பானுவைக் காப்பாத்தணும்கற நல்ல எண்ணத்துல வந்தேன் பாரு. எனக்கு இதுவும் வேணும் -

இன்னமும் வேணும். அவளைக் கெடுக்க தாமுவும், அந்தத் தேசிகாச்சாரியும் ஒரு போட்டியே நடத்திக்கிட்டிருக்காங்க. இதுல அவ தேசிகாச்சாரிய நல்லவன்னு நம்பி மாட்டிக் கிட்டிருக்கா.

"மலைப் பக்கம் போன நான் அவபோட்ட சத்தத்தையும் கூச்சலையும் கேட்டுட்டுத்தான் ராத்திரின்னு பாக்காம இங்க வந்தேன். நீ என்னடான்னா இப்படிச் சொல்றே..."

கிருஷ்ணாராவ் வேகமாக வாசல் தாண்டுகிறார்.

"இஸ்மாயில் போய் ஒரு பார்வை பார்த்துட்டுத் தான் வாயேன். ஏண்டா இப்படிப் பிடிவாதம் பிடிக்கறே?"

"சும்மா இரு பாட்டி... அந்தப் பெரியவர் அப்படிப் பட்டவர் கிடையாது. இந்த ஆள் யாரோ... இவன் பேச்சை எல்லாம் கேட்டுக்கிட்டு! இதுல ஏதோ சதி இருக்கு!"

"என்னடா சதி கிதின்னு பேசறே... அப்படியே இருந்தாதான் என்ன? அவ நல்லா இருக்காளா இல்லியான்னு பாக்கப் போனதா இருக்கட்டுமே."

"அது விரும்பித்தான் அங்க போயிருக்கு. அதுக்கு இங்க வர இஷ்டமும் கிடையாது. நாம மட்டும் ஆசை பாசம்னு துடிக்கறதுல அர்த்தம் இல்லை. அது அவளுக்கும் இருக்கணும். சும்மா போற வர்றவன் பேச்சைக் கேட்டுக் கிட்டெல்லாம் இந்த ராத்திரியில என்னால அந்த மலைக் காட்டுப் பக்கம் போக முடியாது. எல்லாம் விடியட்டும் பாத்துக்கலாம்..."

பேசிவிட்டு விறுவிறுவென்று வெளியேறுகிறான். ஒரு சால்வையைப் போர்த்திக் கொண்டு பானுவைக் கண்டு வர கிளம்புகிறாள் நபீஸா!

அங்கே கத்தியும் கையுமாய்க் காத்திருக்கும் தாமுவின் சூழ்ச்சி தெரியாமல்...

22

தெரு, சுந்தரலோகமாகக் காட்சி அளித்துக் கொண்டிருந்தது. சீரியல் செட், ட்யூப் லைட் வெளிச்சத்தில் பூசின மாதிரி ஒரு பணக்காரக் களை. சாதாரண நாட்களில் நாயும் பன்றியும் மோண்டு திரியும் தெருவா இது என்று கேட்கத் தோன்றும் புதிய அழகு!

எல்லோர் வீட்டு வாசலிலும் பெரிய பெரிய பூக்கோலம். குறுக்கிலும் நெடுக்கிலும் மாவிலைத் தோரணம். அதில் வருடம் முழுக்க சுத்தபத்தமாக இருக்க முடியாது. ஒரு மூன்று நாளைக்கு மட்டும் இப்படி இருந்து விட்டுப் போகும் தீர்மானம் புரிகிறது.

அனைத்துத் தறிமேடையும் அடங்கிக் கிடக்கிறது.

பாலிதீன் தாள், பழைய வேட்டிக்குள் பட்டுத் தறியைக் கட்டிப் போட்டு விட்டு எல்லோருமே வீதிக்கு வந்து விட்டார்கள்.

பழையதைப் பொறுக்கி விற்கும் பிசுக்குத் தாத்தா கூட இருப்பதில் தெளிவான ஒரு வேட்டியுடன் சட்டை போட்டுக் கொண்டிருக்கிறார்.

பந்தலுக்குள் ரேணுகா தேவி இடுப்பில் எவர்சில்வர் குடத்துடன் எழுந்தருளியிருக்கிறாள். நிஜமாலுமே ஒரு தேவதை வானம் விட்டு இறங்கி வந்து பந்தலுக்குள் புகுந்த மாதிரிதான் இருக்கிறது.

ஏழைச் சமூகத்து வீதிக் கோலாகலம்தான் என்றாலும் படிப்பறிவில்லாத விரல்களில் இப்படி ஒரு சிருஷ்டியை உருவாக்க முடிந்த கலைநயம் ஆச்சரியம் தருகிறது.

உற்றுப் பார்த்தபடியே நின்று கொண்டிருக்கிறார் பகவந்தராவ்.

பொதுவில் சாமி பெயரில் நடைபெறும் ஒரு சம்பிர தாயக் கூத்து இது என்று தமக்குள் நினைத்துக் கொண்டிருப்பவருக்கு, இந்தக் கூத்திலும் ஒரு அற்புதமான கலை ஜீவித்துக் கொண்டிருப்பது தெரிகிறது.

அருகிலேயே நின்று கொண்டிருக்கிறான் மோகன் ராம். பகவந்தராவின் வியப்பை, மௌனத்தை, பக்தியாக உணர்ந்து ஆச்சரியப்படுகிறான்.

"வரவே மாட்டேன்னீங்க... இழுத்துக்கிட்டு வந்தா வந்த இடத்துல உருகி நிக்கறீங்களே...?"

"ஆமாம் மோகன்! வெறும் மஞ்சள்ளையும் தண்ணீர் லையும் இப்படிக் கூட ஒரு உருவத்தை உருவாக்க முடிஞ்சதை நினைச்சு சிலிர்த்துப் போய் நிக்கறேன்! ஆமாம் யார் இத செஞ்சது...?"

"நம்ப குப்புசாமி. அதான் சாயப்பட்ற குப்பன்... ஓய் குப்பா வா இங்க..."

மோகன்ராம் அழைப்பின் முன் குப்புசாமி என்னும் குள்ள மனிதன் ஒருவன் மஞ்சள் வேட்டி, துண்டுடன் ஓடி வந்து நிற்கிறான்.

"நீதான் செஞ்சியா?"

"ஆமாம்."

"எப்படித் தெரியும்... யார்கிட்ட கத்துக்கிட்டே?"

"கத்துக்கறதா? இதுக்கென்ன பள்ளிக்கூடமா இருக்கு, சொல்லித் தர? சும்மா கைப்போக்குல பண்றதுதானே? அவளையே நினைச்சுக்கிட்டு விரதம் இருந்து செஞ்சா, இருக்கற விரதத்துக்கு ஏற்ப அழகா கைல வந்து உக்காந்துடுவாளே ரேணுகாதேவி."

பகவந்தராவ் வியப்புக் கலையாமல் மோகனோடு பந்தலை விட்டு வெளியே வருகிறார்.

"கேட்டியா மோகன்... அவன் எவ்வளவு பெரிய விஷயத்தைச் சாதாரணமா சொல்லிட்டான்! இவனை எல்லாம் முறைப்படி படிக்க வெச்சிருந்தா எவ்வளவு பெரிய கலைஞனா வந்துருப்பான் தெரியுமா? நம்ம பாரதி மன்றத்துல இதுக்கெல்லாமும் ஏற்பாடுகள் செய்யணும். ஞாபகத்துல வெச்சுக்கோ..."

வீதி மையத்தில் ஒரு சதுர மைதானம் நான்கு முனைக் கயிற்றால் உருவாகியிருந்தது. நடுவில் நிறைய வண்டல் மண் அடித்து, அதில் சின்னஞ்சிறிசுகள் குதித்து விளையாடிக் கொண்டிருந்தார்கள்.

எல்லோரையும் ஒரு வளர்ந்தவன் விரட்டி, போட்டி ஆரம்பமாகப் போகிறது என்கிற ஜரூரை உருவாக்கிக் கொண்டிருந்தான்.

சற்றுத் தள்ளி ஒரு கூட்டம் கழிகளைச் சுழற்றியபடி ஒத்திகை பார்த்துக் கொண்டிருந்தது. பாலன் என்று ஒருவன் அதில் புதிய முகமாய்த் தெரிந்தான். மோகன் ராமையே இமைக்க மறந்து பார்த்துக் கொண்டிருந்தான்.

'குறைந்தது மூன்று மாதத்திற்காவது மோகன்ராமைப் படுத்த படுக்கையாகக் கிடத்த வேண்டும்' என்று பாம்பே மணியன் சொன்னதோடல்லாமல் ஒரு பத்தாயிரத்தை அநாயாசமாகத் தந்திருப்பதெல்லாம் மற்றவர்களுக்குத் தெரிந்திருக்க நியாயமில்லை!

அடித்தார் வரிசையில் ஒரு குறிப்பிட்ட ரக வீச்சு இடுப்பு சுற்றிக் கடக்கும் போது பின் முதுகுத் தண்டு வடத்தில் ஸ்பைனல் கார்டுக்கு நேராகவே போய் அடி விழும். அந்த ராஜஎலும்புதான் மனிதன் நிமிர்ந்து நிற்கவே அடித்தளம். சமயத்தில் அதை நொறுக்கும்போது உயிர்

நாடியே மரத்துச் செயலிழந்து போய் விடும் அபாயம் உண்டு.

அந்த வகையில் கன்யாகுமரி வரை போய் அதில் தேர்ந்த நாட்டார்குருக்களிடம் பயிற்சி பெற்று வந்திருக்கும் அவனைக் கூலிக்கு விலை பேசிக் கூட்டி வந்தாயிற்று... இனி எப்படியாவது மோகன்ராமை உள் இழுத்து விட்டால் போதும்... அதற்கும் ஏற்பாடு செய்திருந்தான் மணியம். அதுவும் வெங்கட்ராமய்யர் மூலமாகவே...

இதோ.... என்ன வக்கீலய்யா... எப்படி இருக்கு ஏற்பாடெல்லாம்?"

"அமர்க்களம், அம்மன் உருவம் அற்புதமா வந்திருக்கு. சின்னக் கீறல் கிளறல் இல்லை."

"எல்லாம் அவ அனுக்ரஹம். இந்தத் தடவை சிலம்பப் போட்டிக்கு நீங்கதான் தலைமை தாங்கணும்."

"ஐய்யய்யோ... எனக்குச் சிலம்பத்துல அஞ்சடி, பத்தடி கூடத் தெரியாது. என்னைப் போய்..."

"அப்படி எல்லாம் சொல்லப்படாது... இந்தத் தடவை முதல் தடவையா ஆயிரத்து ஒரு ரூபா பரிசா வேற அறிவிச்சிருக்கோம். மதுரைல இருந்தெல்லாம் முண்டா தட்டி ஆட்கள் வந்திருக்காங்க. அமோகமா நடக்கணும்னு வேண்டிக்கிட்டு ஆரம்பிச்சு வையுங்க."

"அப்பா மோகன், நீயும் இன்னிக்குக் களம் எறங்கறே..." - வெங்கட்ராமய்யர் சூது தெரியாமல் பேசுகிறார்.

"நானா... வேண்டாம் வேண்டாம். எனக்கு டச் விட்டு ரொம்ப நாளாச்சு..."

"அட என்னப்பா நீ... தேசிகாச்சாரிகிட்ட நேத்து கூட மோதிக்கிட்டிருந்தேன்னாங்க. டச் விட்டுப் போச்சுன்னு கிட்டு. இறங்கறே நீ..."

சொல்லிவிட்டுக் கைக் கடிகாரத்தைப் பார்க்கிறார் வெங்கட்ராமய்யர். மணி ஒன்பது!

இருட்டில் மலை அடிவாரத்து ஆசிரமம் நோக்கிச் செல்வது என்பது இத்தனை கஷ்டமாக இருக்கும் என்று நபீஸா நினைக்கவேயில்லை.

முக்காடிட்டுக் கொண்டு சால்வைக்குள் அவள் நடப்பதைப் பார்த்தால் அரை இருட்டில் பீதியாகக் கூட இருக்கிறது. ஒரு குறிப்பிட்ட இடத்தில் அவள் கடந்து செல்வதை ஊர்ஜிதம் செய்யும் ஒருவன் அங்கிருந்து போட்ட பிளான்படி போலீஸ் ஸ்டேஷனுக்கு நடக்க ஆரம்பிக்கிறான்.

ஸ்டேஷன் தூங்கி வழிந்தபடி கிடக்கிறது! ஏட் மட்டும் எதையோ கிறுக்கியபடி.... உள்ளே நுழையும் அவனை இளக்காரமாய்ப் பார்க்கிறார்.

"என்னா ஏழுமலை... அதிசயமா இந்தப் பக்கம் வந்திருக்கே. என்ன விஷயம்?"

"சப்-இன்ஸ்பெக்டர் எதுவும் சொல்லலியா?"

"சொல்லலியே..."

"இப்ப அவர் எங்கே?"

"இந்நேரம் வீட்ல கவுந்தடிச்சுப் படுத்துக் கிடப்பாரே..."

"போன் இருக்குல்ல...?"

"இருக்கு... போடணுமா?"

"போடு... மலை ஆசிரமத்துல அந்தத் தேசிகாச்சாரி கிழவன் நபீஸாங்கற பொம்பளைய கத்தியால குத்திப் பிட்டான்னு சொல்லு. விடிஞ்சா சாதிக் கலவரமா வெடிக்கப் போவுதுன்னு சொல்லு."

"எலேய்... என்னாடா சொல்றே?"

"எல்லாம் ஒரு கணக்குதான்! நீ கண்டுக்காதே. எங்களுக்குத் தெரியும் எல்லாம்."

"ஏண்டா, சாராயம் கஞ்சாவோட உங்க லொள்ள நிறுத்திக்கப்படாதா...? ஏண்டா இப்படி ஜாதிமதம்னுல் லாம் தாவறீங்க?"

"என்ன பெரிசா ஞாயம் பேசறே... பிரச்னைக்குத் தகுந்த ஆயுதத்த நாங்க எடுப்போம். உனக்குப் புரியாது ஏட்டு. அந்தக் கிழவியோட ஆளுங்க கம்ப்ளைண்டு கொடுக்க வருவாங்க. எஸ்.ஐ.ஆர். போடும் போது அவங்க சொன்னாலும் சொல்லாட்டியும் அந்தக் கிழவன் பேர் எஸ்.ஐ.ஆர்ல வரணும். அப்படியே அவனைப் பிடிச்சுக்கிட்டு வந்து உள்ற போட்டுடு. இப்ப இல்ல. காலைல, ஞாபகத்துல வெச்சுக்கோ... ஆமா மணி என்ன?"

"ம்... ஒம்பதே முக்கால்!"

"தெருவுல போட்டி நடந்துகிட்டு இருக்கும். நம்ம புதுகாந்திய மதுரைக்கார பாலன் போட்டுத் தள்ளியி ருப்பான்."

"என்னடா சொல்றே நீ...?"

"நான் ஒருத்தன் உன்கிட்ட ஒளறிகிட்டு. போன் போட்டு ஏழுமலை வந்துட்டுப் போனாங்கறத எஸ்.ஐ.கிட்ட சொல்லிடு. மறந்துடாதே, வர்ட்டா... விசயம் பிசிறடிச்சுடப் படாது ஏட்டு. பாத்து நடந்துக்க."

"விர்ர்ர்... விர்ர்ர்..." கழிகள் சுழல காற்று கிழிபட்டு அலற, விசித்திர சப்தமெல்லாம் எழும்பியது. மோகன் ராமும் பாலன் என்னும் அந்த மதுரைக்காரனும் பிளந்து கட்டிக் கொண்டிருந்தனர். சுற்றி வளைத்து நிற்கும் கூட்டத்தில் கனகாவும் இருந்தாள். பீதியோடு அந்த வீர விளையாட்டைப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

சாலையில் போடப்பட்ட வண்டல், பல சமயம் கெல்லி எறியப்பட்டுப் பல பேர் கண்களைக் கரிக்க விட்டது. சமயங்களில் கழிமுனை கூட்டத்தவர் முகம் முன் கூடச் சென்று திரும்பியது.

ஆனால் அடித்தார் வரிசை விளையாட்டு அதன் நியதியிலிருந்து விலகி எங்கெங்கோ போய்க் கொண்டிருக் கிறது. விவரமறிந்த சிலம்பாடிகள் அதைப் பார்த்துத் தங்களுக்குள் கிசுகிசுத்துக் கொள்ள, மோகன்ராம் விழாமல் சமாளித்துக் கொண்டிருந்தான்.

அந்த வேகத்திற்கு நடுவிலும், தேசிகாச்சாரியை நினைத்து, வியக்காமல் இருக்க அவனால் முடியவில்லை. அவர் எதற்காக அத்தனை அவசரத்தோடு பூட்டை உடைக்கும் வித்தைக்கு அடிக்கல் போட்டார் என்று இப்பொழுது அவனுக்குப் புரிகிறது.

பாலனின் வீச்சில் அவனது இடுப்பு முன் கழி விழுந்து விழுந்து தடுக்கிறது. ஒருமுறைக்கு நூறு முறை தடுத்தாகி விட்டது. ஆனாலும் பாலன் விடுவதாக இல்லை.

பதிலுக்கு அவனுக்கே இந்த வீச்சைத் திருப்பினால்?

மோகன்ராம் தடுத்துக் கொள்வதோடு பாலனது தப்பான வீச்சை இப்பொழுது அவனும் போடத் தொடங்குகிறான்.

சரியான பதிலடி. தெரியவே தெரியாது என்று எல்லோரும் நினைக்கும் பதிலடிதான். ஆனால் பாலன் போடுவதைப் பார்த்தே உடனடியாகக் கற்றுக் கொண்டு விட்டான் மோகன்.

'உய்ய்ங்ங்... உய்ய்ங்ங்..." என்று இப்பொழுது மோகனின் கழி பாலனின் இடுப்புப் பிரதேசத்தைச் சுற்றிச் சுழல்கிறது.

மோகனைப் போலப் பாலனால் தடுத்துக் கொள்ள முடியவில்லை. மூன்று நான்கு முறை தவறிய வீச்சு ஐந்தாவது முறையில் தண்டு வடம் மேல் 'பம்'மென்று அழுத்தமாகவே தாக்குகிறது.

'அம்மாாா...' என்கிற அலறலோடு பாலனின் கைக்கழி வானம் எகிறிக் கூட்டம் நோக்கிக் கீழே விழ, அப்படியே சுருளுகிறான் பாலன்.

"ஏய் மோகன் என்ன இது...? முறையில்லாம ஆடிக்கிட்டு....? இப்படியா முரட்டுத்தனமா அடிப்பே?"

மிகப் பொறுமையாக அதுவரையில் இருப்பது தெரியாமல் இருந்த ஜவஹர், ஏறி வந்து மோகன்ராமின் தோளைப் பிடித்துக் கீழே தள்ளுகிறான். பாலனிடம் தப்பி விட்ட உன்னை இந்த இடத்திலேயே வேறுவிதத்தில் அடித்தால்தான் ஆத்திரம் அடங்கும் என்கிற அவன் வேகம் அவனது கூட்டத்துக்கும் புரிந்ததோ என்னவோ, ஆளுக்கொரு கழியால் தாக்க ஆரம்பித்தனர்.

குறுக்கே புகுந்து தடுக்கப் பார்த்த பகவந்தராவுக்கும் அடிவிழுந்தது. கூட்டமும் சிதற ஆரம்பித்தது. குழாய் விளக்குகள் புகை கக்கியபடி சப்தம் போட்டு வெடித்துச் சிதறுகின்றன.

வெங்கட்ராமய்யர் ஓடிப் போய் ரேணுகா அம்மன் விக்கிரகம் முன் நின்று கொண்டார். அந்த வார்ப்புப்பட உருவுக்கு எந்தச் சேதமும் வந்து விடக் கூடாதே என்று நடுங்க ஆரம்பித்தார்.

முணுக்கென்று மின்சாரம் வேறு போய்க் குத்துவிளக்கு வெளிச்சம் மட்டும் கொஞ்சம் போல் ஒளிவிட, வீதியில் அங்கும் இங்குமாய்ப் பலர் குறுக்கும் நெடுக்கும் ஓடும் சப்தமும் கூக்குரலும் மட்டும் தெளிவாகக் கேட்கின்றன.

'ஐய்யய்யோ... என்ன இது மங்கலமான திருவிழா இப்படி ரசாபாசத்தில் முடிந்து விட்டதே...' என்று அவர் அங்கலாய்க்க மகாலட்சுமி, கனகாவுடன் இருட்டில் மோகன் ராமைத் தேடிக் கொண்டிருந்தாள்.

"மோகன்... மோகன்..." என்று அவள் கதறுவது தெளிவாகவே காதில் விழுகிறது. சடசடவென மெழுகு வர்த்திகளும் லாந்தர் விளக்குகளும் ஏற்றப்பட்டு வாசலுக்கு வாசல் வந்து நிற்க, வீதியில் மோகன்ராம் ஒரு மூலையிலும் பாலன் இன்னொரு மூலையிலும் சுருண்டு கிடந்தனர்.

மகாலட்சுமி மகனை நோக்கி ஓட ஆரம்பித்தாள்!

தரையில் குப்புறக் கிடந்தவனைத் திருப்பி மடி மேல் போட்டுக் கொள்ள ஆயத்தப்பட்ட போதுதான் அந்த இன்னொரு அநியாயமும் தெரியவந்தது. அடிவயிற்றில் ஆழமாய் ஏறிய நிலையில் கைகளை ரத்தச் சகதியோடு நிரடியது கத்தி ஒன்று!

ஒருக்களித்துச் சாத்தியிருக்கும் கதவைத் திறந்து கொண்டு உள் நுழைகிறான் இஸ்மாயில். மணி பத்தைக் கடந்து விட்டிருக்கிறது. நபீஸா சாதாரணமாக இந்நேரம் தூக்கத்தில் குறட்டை கட்டியிருப்பாள்.

இப்படிக் கதவெல்லாமும் திறந்து கிடக்காது. விளக்குகளும் எரிந்து கொண்டிருக்காது. இது என்ன வழக்கத்திற்கு நேர் மாறாக...

"பாட்டி... பாட்டி..." - குரலை அனுப்பியடி சட்டையைக் கழற்றுகிறான். சாதாரணமாக ஒடுங்கும் படுக்கை மூலையையும் எட்டிப் பார்க்கிறான். காலியாகக் கிடக்கிறது.

'எங்கே போயிருப்பாள்?' என்னும் கேள்வி எம்பிக் குதிக்கிறது. உள்முழுக்கப் பார்த்து விட்டு வெளியே வந்த போது மீரான்சாயபு தன் பெட்டிக் கடையை ஏறக் கட்டி

விட்டுச் சாவிக் கொத்து சப்திக்க நடந்து கொண்டிருக்கிறார் வீதியில்...

"என்னப்பா... உன் பாட்டி இந்த ராத்திரியில எங்க போகுது... சால்வைய சுத்திகிட்டு...?" என்று கேள்வியையே அவன் வரையில் பதிலாகத் தருகிறார்.

இஸ்மாயில் திகைத்துப் போய் யோசிக்க ஆரம்பிக்கிறான்.

"பாட்டி நிச்சயமாய் மலை அடிவாரத்துக்குப் பானுவைப் பார்த்து வரத்தான் போயிருக்க வேண்டும்' என்கிற சரியான தீர்மானத்துக்கு வருகிறான். கோபத்தோடு கொஞ்சம் பயமும் கலந்து வருகிறது.

அடுத்த நொடி சட்டையை எடுத்து மாட்டிக் கொண்டு ஒரு டார்ச் லைட்டையும் எடுத்துக் கொண்டு கிளம்புகிறான்.

ஆசிரமம் அமைதியாக இருக்கிறது. சின்ன லாந்தரின் வெளிச்சத்தில் சுவர்க் கோழி சப்தத்துக்கு நடுவில் மெலிதான தென்றல் வீச்சோடு கிடக்கிறது.

பகலிலேயே பார்த்துத்தான் வர வேண்டும். இரவில் கேட்கவே வேண்டாம். டார்ச் லைட் வெளிச்சத்தை உருட்டிக் கொண்டு இஸ்மாயில் வரும்போது அவன் நடந்து வரும் சப்தம் தவிர வேறு சப்தமே இல்லை.

நேராக ஆசிரம வாசலுக்கு வந்து நிற்கிறான். உள்ளே ஆழ்ந்த அமைதி. சில விநாடி வரை மௌனமாக நின்றவன், "பானு..." என்கிறான் உரக்க...

"யாரது?" என்று பதில் கேள்வி உள்ளிருந்து... தொடர்ந்து ஆசிரமக் கூரையின் தட்டிக் கதவு வழியாக லாந்தரும் கையுமாக எட்டிப் பார்க்கிறார் தேசிகாச்சாரி.

இஸ்மாயிலைப் பார்த்து ஆச்சரியம் கொள்கிறார்.

"என்ன தம்பி... இந்த நேரத்துல...?"

"பாட்டிய தேடி வந்தேன். இங்க வரலையா?"

"உன் பாட்டியா... இங்க எதுக்கு வரணும்...?"

"ஒண்ணுமில்லை. நான் வரேன்" - இஸ்மாயில் திரும்பிப் போகிறான். அப்பொழுது ஒரு ஈனக்குரல், அருகில் ஆசிரம ஆலமரத்தடியில் இருந்து வந்தது.

"இஸ்மாயில்ல்ல்...!"

23

அடித்துத் துவைத்துப் போட்ட போர்வைத் துணி போலக் கிடக்கிறாள் நபீஸா. தேசிகாச்சாரி ஓடிப் போய் லாந்தரை எடுத்து வருகிறார். வெளிச்சம் அவளது ரத்த சகதியைக் காட்டுகிறது.

குரூரமான கத்திக் குத்து... முதுகு, இடுப்பு என்று வெள்ளைச் சோளிப் பரப்பிலெல்லாம் ரத்தத் தோய்வு!

"பாட்டி... யார் இப்படிச் செய்தது?" நரம்பறுந்தது போலக் கத்துகிறான் இஸ்மாயில்.

தேசிகாச்சாரி கணமும் தாமதிக்காமல் லாந்தரை பானு வசம் தந்துவிட்டு, குனிந்து இஸ்மாயிலுடன் சேர்ந்து நபீஸாவைத் தூக்குகிறார்.

"யாரைக் கேட்டு நீ இந்த ராத்திரி வேளைல கிளம்பி வந்தே? ஆமா இப்படிக் குத்துனது யாரு...?"

"சொல்றேன்... சொல்றேன்... முதல்ல தண்ணி!" - ஈனக் குரலில் தத்தளிக்கும் கிழவியின் உலர்ந்த இதழ் பிளந்து நீரை நிரப்பத் தயாராகிறான் இஸ்மாயில்.

தேசிகாச்சாரி பச்சிலைக் கட்டுக்கு ஆயத்தமாயிருக்கிறார்.

கண்ணில் கண்ணீர் உருண்டைகளுடன் லாந்தர் கையோடு நிற்கும் பானுவை அந்த நிலையிலும் நபீஸாவின் துவண்ட கரங்கள் அருகில் அழைக்கின்றன.

"நல்லா இருக்கியாம்மா?" - நலம் விசாரிக்கும் வேளையா இது?

"நல்லாருக்கேன் பாட்டி.... உங்களுக்கு எப்படி இப்...?" - பானுவின் தொண்டைப் பாலம் தாண்ட மறுக்கிறது சொற்கள்.

"சொல்றேன்... சொல்றேன்" - அவள் முனகவும் இஸ்மாயில் நீரை உதட்டில் வார்க்கவும் வேகமாக விழுங்குகிறாள்.

அத்தனை தாகம்.

தேசிகாச்சாரி மூலிகைக் கட்டுப் போட ஆயத்தமாகிறார்.

பதற்றம் என்பதே அறியாதவர் கைகளிலும் நடுக்கம்.

"பாட்டி.... யார் பாட்டி இப்படிச் செஞ்சது, அந்தத் தாமுதானே?"

"அவன் பேரெல்லாம் தெரியாது இஸ்மாயில், தாடியும் மீசையுமாக இருந்தான். இருட்டுல தெளிவா பாக்க முடியல. ஆனா குரல் நல்லா காதுல விழுந்துச்சு. விடியும்போது இந்து... முஸ்லீம் சண்டையா பொழுது விடியப் போகுது பாருன்னு யார்கிட்டையோ அவன் சொல்லிக்கிட்டுப் போனது என் காதுல விழுந்துச்சு. நான் செத்துப் போயிட்டதா நினைச்சுட்டாங்க. அல்லா எனக்கு இந்த நொடி பேசற சக்திய கொடுத்துருக்காரு. அதுக்குக் காரணம் இருக்கு இஸ்மாயில். இப்படி மறைஞ்சிருந்து தாக்கற பேடிங்க ஆசைப்படி எதுவும் நடந்துடக் கூடாது..."

"நீ என்ன சொல்றே? அவனைச் சும்மா விடக்கூடாது பாட்டி..."

"உணர்ச்சி வசப்படாதே. அல்லா மேல் சத்தியம். பாட்டிக்கு ஒண்ணும் ஆகலை. இதை ஞாபகத்துல வெச்சுக்கோ."

"பாட்டி அவனைப் பதிலுக்குக் குத்தினாத்தான் என் ஆத்திரம் அடங்கும். நா இப்பவே..." - ஆவேசமாகக்

கிளம்பப் பார்த்தவனை நபீஸாவின் கரங்கள் இழுத்துக் கட்டுகின்றன.

"வேண்டாம்... சொன்னா கேள். இப்ப எது செஞ்சாலும் பிரச்னை பெரிசாயிடும். இது ஒரு குடும்பப் பிரச்னை. இதைச் சமுதாயப் பிரச்னையா ஆக்கிடாதே. நீ போனா சத்யமா நான் உசுரை விட்டுடுவேன்..." - கிழவியின் அஸ்திரம் நன்றாகவே வேலை செய்கிறது. அதே சமயத்தில்...

இன்டென்சிவ் கேரில் இன்னமும் மோகன்ராம் கண் திறந்திருக்கவில்லை. வெளியே குட்டி போட்ட பூனை போல ஒரு கூட்டமே நடந்து கொண்டிருக்கிறது. குறிப்பாக பகவந்த ராவ்! நடந்ததையறிந்து ஏரியா இன்ஸ்பெக்டரே வந்திருக்கிறார்.

வந்தவரைப் பகவந்த ராவ் ஏறெடுத்துக் கூடப் பார்க்கவில்லை. "சார்... இன்ஸ்பெக்டர் வந்திருக்கார். நடந்ததைச் சொல்லுங்க" - ஒருவன் அவரைத் தூண்டி விடுகிறான்.

தொழில் நிமித்தம் இன்ஸ்பெக்டருக்குப் பகவந்தராவை நன்கு தெரியும். எனவே நேராக அவர் கால்கள் பகவந்த ராவிடம் தான் வந்து நிற்கின்றன.

"என்ன மிஸ்டர் ராவ்... நீங்கள்ளாம் இருந்தும் கலவரம் கத்திக் குத்துன்னு நடந்துருக்கே. நல்லவேளை உங்களுக்கு ஒண்ணும் ஆகலை போல. கலவரம் ஆரம்பிச்ச உடனேயே ஓடி ஒளிஞ்சு தப்பிச்சுக்கிட்டீங்களா?"

இன்ஸ்பெக்டர் வார்த்தைக்கு வார்த்தை கலவரம் என்கிற சொல்லைப் பயன்படுத்துவதன் பொருள் பகவந்த ராவுக்கும் புரிகிறது.

மெல்ல இன்ஸ்பெக்டரின் காதை நெருங்கிச் சற்று உக்ரமாகவே கிசுகிசுக்கிறார்.

"ஒரு பிளானோட வந்திருக்கிங்கங்கறது நல்லாத் தெரியுது. இன்ஸ்பெக்டர் கலவரம் நடக்கணும்னு ரொம்ப ஆசைப்பட்றீங்க போல. அப்பத்தானே நினைச்சவனை எல்லாம் பிடிச்சு உள்ள போடலாம். ஒண்ணு தெரிஞ்சுக்குங்க. இந்த இன்டர்நெட் யுகத்துல ஒரு தற்குறிக்குக் கூட உங்க செயல்பாடுகள் பத்தி நல்லாவே தெரிஞ்சிருக்கு. ஆகையால் பேசாம வந்த வழியே திரும்பி நடங்க, இங்க பாதிக்கப்பட்ட யாரும் கம்ப்ளையிண்டே கொடுக்கலை. இது எங்க சொந்த பிரச்னை. கிட்டத்தட்ட குடும்பப் பிரச்னை. எங்களால தீர்த்துக்க முடியலைன்னா உங்ககிட்ட வருவோம். அப்ப பேசிக்கலாம்..."

பகவந்தராவின் உணர்ச்சி மிகுந்த பேச்சுக்கு என்ன பதில் சொல்வதென்று இன்ஸ்பெக்டருக்கே தெரியவில்லை.

கசகசப்பாக நிற்கிறார். கண்ணைக் கசக்கிக் கொண்டு மூலையாய்ப் பார்த்து முடங்கியிருக்கும் மகாலட்சுமியை நெருங்கி ஒரு பார்வை பார்த்தும் பலனில்லை.

கனகா அருகிலேயே நின்றபடி அத்தையைத் தாங்கிய வண்ணம் உள்ளாள். அவளைப் பார்க்கிறார். அவளும் வேறுபுறம் முகத்தைத் திருப்பிக் கொள்கிறாள். சுற்றி அங்கும் இங்குமாய் மேல் சட்டை இல்லாத நெசவாள ஆண்கள் பீடிக் கையோடு இன்ஸ்பெக்டரைப் பார்த்துவிட்டு ஒன்றுமே நடக்காத மாதிரி ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொள்கின்றனர்.

ஆஸ்பிடல் கேஸ் ரிக்கார்டிலும் கத்தி தவறி வயிற்றில் குத்தி விட்டதாக ஒரு திட்டமிட்ட பதிவு.

அனைத்தின் பின்னாலும் பகவந்தராவ் இருக்கிறாரா?

இன்ஸ்பெக்டரின் கோபப் பார்வை பகவந்தராவை முறைக்கிறது.

ஆனால் உண்மை நிலையோ வேறு.

ஆட்டோவில் ஏற்றி ஆஸ்பத்திரிக்குக் கொண்டு செல்லப் பார்த்த அந்தப் பதற்றமான வேளையில் மோகன்ராம், பகவந்தராவை அழைத்துத் தீர்க்கமாகக் கட்டளை இடுகிறான்.

"சார்... இந்த விஷயத்தைப் போலீஸ் கோர்ட்டுன்னு கொண்டு போயிடாதீங்க. அது எந்த விதத்துல பார்த்தாலும் நல்லதுக்கில்லை. திருவிழா சமயத்துல அவங்க வந்து விழா சந்தோஷத்தைக் கெடுத்துடப் போறாங்க. என் ஒருத்தனுக்காக ஒரு கூட்டத்தோட சந்தோஷம் கெட்டுடக் கூடாது. என் பிரச்னையை எனக்குத் தீர்த்துக்கத் தெரியும். தயவுசெய்து போலீஸ்கிட்ட போயிடாதீங்க. மீறிப் போனா வாக்குமூலம் கொடுக்க வரும்போது என்னை யாரும் குத்தலைன்னு சொல்லிடுவேன்..."

பகவந்தராவின் காதில் அவன் சொன்னது ஓடிக் கொண்டேயிருக்கிறது. நின்று பார்த்து விட்டுக் கை பிசைந்து கொண்டு வெளியேறும் இன்ஸ்பெக்டருக்குள் அது ஒருவகை புத்திசாலித்தனமான தப்பித்தல் உணர்வாக ஓடினாலும், வீதியைப் பொருத்த மட்டில் மோகன்ராம் பற்றிய பரிமாணம் உயர்ந்து விட்டிருக்கிறது.

'தாமு கூட்டம் செய்தது கொஞ்சமும் சரியில்லை. இவர்களை வளர்த்துவிட்டு இன்று நாம் அநுபவிக்கிறோம்...'

அடர்ந்த இரவில் உறக்கம் பிடிபடாமல் எல்லோரும் மல்லாந்த நிலையில் யோசித்துக் கொண்டிருக்கின்றனர்.

தெரு முழுக்க திருவிழா விளக்கொளி...

நடுத்தெரு பந்தலில் அநாதையாக விடப் பட்டவள் போல ரேணுகா தேவி அமர்ந்திருக்கிறாள்!

விடிந்து விட்டது.

தாமுவும், மணியமும், ஜவஹரும் திட்டமிட்ட மாதிரி ரசாபாசப் பொழுதாக விடியவில்லை. எப்பொழுதும் போல் பால்காரன் மணி ஆட்டியபடி வந்து கொண்டிருக்கிறான்.

பேசி வைத்துக் கொண்டது போல நபீஸாவும், மோகன்ராமும் உணர்ச்சி வயப்படாமல் பெருந்தன்மைக்குள் புகுந்து கொண்டதன் எதிரொலி, மிக அமைதியான பொழுதைத் தந்திருக்கிறது.

ரங்காச்சாரி கடையை நோக்கி நடந்து வரும் தாமு, அந்த அமைதியை ஜீரணிக்க முடியாமல் சகலரையும் பார்க்கிறான்.

வந்து நின்றாலே நுரை ததும்பக் காப்பியை நிரப்பிப் பயந்த புன்னகையுடன் தரும் ரங்காச்சாரியிடம் இன்று பயமில்லை. மாறாக வெறுப்பு தெரிகிறது.

டீக்கடையில் கூடி நிற்கும் கூட்டத்தின் கண்களில் எல்லாம் அது ஏறித் தெரிகிறது. எல்லோரும் ஒருமித்து முறைத்தே எரித்து விடுவார்கள் போலத்தான் இருக்கிறது. ஆனாலும் எதற்கோ, யாருக்கோ கட்டுப்பட்டு அவர்கள் முறைப்பதோடு நிறுத்திக் கொள்கிறார்கள்.

இப்படி யாராவது முறைத்தாலே தாமுவுக்கும் பிடரியை உசுப்பிக் கொண்டு கோபம் வரும். இன்று அப்படி வரவில்லை. அவனே அவனுக்குத் தடையாகி விட்டது போல ஓர் இம்சை.

பீடியைப் பற்றவைத்துக் கொண்டு, அங்கிருந்து நேராக ஜவஹர் வீட்டை நோக்கி நடக்கிறான். வழியிலேயே கிளை விடும் ராவுத்தர் தெருவைப் பார்க்கிறான்.

கறிக்கடை பாய், மரத்துண்டில் ஊதுபத்தி பற்ற வைத்துச் செருகிக் கொண்டிருக்கிறான்.

"பாய் என்ன எதுவும் விசேஷமில்லையா?"

"என்ன விசேஷம்?"

"இந்தப் பக்கம் எதுவும் கலாட்டா கத்திகுத்து..."

"ஏன், நடக்கலேன்னு கவலையா இருக்கா...? காலங்கார்த்தால வந்து பேச்ற பேச்சைப் பாரு..." - பாய் விட்டால் கடைக் கத்தியால் அவனையே கைமா போட்டாலும் போட்டு விடுவார் போலும். தாமு சொல்லால் பட்ட அடி போதும் என்று நடையை எட்டிப் போடுகிறான்.

கிட்டத்தட்ட அவனைப் போலவேதான் புழுக்கத்தில் இருக்கிறான் ஜவஹர். அடிக்கொரு தடவை கட்டிலில் அமர்ந்திருக்கும் மணியத்தை நோக்கி முறைக்கிறான்.

குமரன் காட்டுக்கும் நாமமலைக்கும் இடையில் கனிரென்று சூரியக் கதிர் கொத்து பாயும் போது வீதி முழுக்க வெண்பட்டுப் பாவு விரித்து நீட்டப்பட்டு, பிசிறு நீக்கப்பட்டுக் கொண்டிருக்கும். மழை நாளில்தான் இந்த மாதிரி காலைப் பொழுதில் வீதியில் கைவீசி நடக்கலாம்.

ஆனால் இன்று அப்படித்தான் இருக்கிறது.

எட்டிப் பார்த்தபோது எல்லோரும் மோகன்ராமைப் பார்த்து வர ஆஸ்பத்திரிக்குக் கிளம்பிக் கொண்டிருப்பதைத் தெரிந்து கொள்ள முடிகிறது.

ஒரு கத்திக் குத்தும் அதன் எதிரொலிகளும், மிக அதிசயமாக இந்தத் தேசத்தில் ஒரு அழுக்கு வீதியை முற்றிலும் எதிர்பாராத திசைக்குத் திருப்பியிருக்கிறது.

வேடிக்கை பார்த்தே பழக்கப்பட்டவர்கள் சற்று நெகிழ்ந்து கசிந்து போயிருக்கிறார்கள்.

சகலத்தையும் உணர்ந்த நிலையில் உடைந்து போய் வீட்டுக்குள் நுழைகிறான் தாமு.

"மாமா... கணக்கு தப்பா போச்சு மாமா. தப்பாப் போச்சு!" - என்றவனாய் மணியத்தின் கட்டிலில் அருகில் போய் அமருகிறான்.

மணியம் பதிலே பேசவில்லை. ஆனால் ஜவஹருக்குக் கொதிப்பு அடங்கவில்லை.

"நீயும் உன் பிளானும்... அவனைக் குத்தத் தெரியாம குத்தி ஹீரோ ஆக்கிட்டோம். ஆமா கிழவியைக் குத்தினேன்னு சொன்னியே. அந்த நெருப்பாச்சும் பத்திக்கிச்சா, இல்லை அதுவும் அம்பேலா...?"

"ஒண்ணும் தெரியல ஜவஹர். ராவுத்தர் தெருப் பக்கம் எப்பவும் போலத்தான் அமைதியா இருக்கு. ஸ்டேஷன்லையும் கம்ப்ளையிண்ட் எதுவும் பதிவாக லைன்னு நல்லாத் தெரியுது. இன்னேரம் ஒரு களேபரம் நடந்து முடிஞ்சிருக்கும்னு நினைச்சேன். ஆனா எங்க கோட்டை விட்டேன்னு தெரியலை."

சொன்ன கையோடு அடுத்த பீடிக்குத் தாவினவன் நிமிரும்போது நிலைக் கால் படியில் நிழல் ஒன்று விழுந்தது. நிழலுக்குக் காரணம் பகவந்தராவ்!

24

அந்தக் காலை வேளையில் துளிக் கூட மூவரும் எதிர்பார்த்திருக்கவில்லை. மூக்கை உசுப்பிக் கொண்டு சுவரைப் பார்க்கிறான் தாமு. பாம்பே மணியத்துக்கு அவர் வருகை என்னவோ செய்கிறது. ஜவஹர் பாபுவிடம் மெலிசாய்ப் பதற்றம் தொற்றுகிறது.

"என்ன மணியம்... உள்ளே வான்னு கூப்பிட மாட்டியா?" அவர் குத்தலாகக் கேட்கிறாரா எதார்த்த மாகவா என்பது தெரியவில்லை.

"வாங்க..." என்கிறது மணியத்தின் அரை ஹீனம். சொல்லி வாய் மூடவும் ஒரு நிழல்!

நிமிர்ந்தால் அருகருவே பகவந்தராவும் தேசிகாச்சாரி யும்! 'இதென்ன இப்படிக் கச்சை கட்டிக் கொண்டு வந்திருக்கிறார்கள்? சதிகளைப் பற்றி முழுவதும் தெரிந்து கொண்டு இரண்டில் ஒன்று பார்க்க வந்திருக்கிறார்களா, இல்லை...'

தேசிகாச்சாரி இமைக்க மறந்ததுபோல முறைக்கிறார். குறிப்பாக, தாமுவின் மேல் வைத்த விழிகளை அவரால் அப்படி இப்படி அசைக்க முடியவில்லை.

தாமுவாலும் தேசிகாச்சாரியின் அந்த உக்ரப் பார்வையை நேருக்கு நேர் எதிர் கொள்ள முடியவில்லை; கூசிப் போகிறான்.

உள்ளே நுழைந்தபடி பகவந்தராவ் அந்த மெலினப் புழுக்கத்தைத் தம் பேச்சால் கலைக்க முனைகிறார்.

"என்ன நடந்ததுன்னு உங்களுக்கு எல்லாம் தெரியும், மணியம். ஆனா நீங்க திட்டமிட்ட மாதிரி எதுவுமே நடக்கலை. அப்படி எதுவும் நடக்கவும் நாங்கள்ளாம் விட மாட்டோம்.

"இந்த நிமிஷம் நீங்க ஏவிவிட்ட வன்முறையை மோகன்ராமும் நபீஸாவும் தங்களோட பெருந்தன்மையான குணத்தால ஜீரணம் செய்திருக்காங்க. அவங்க துளி உணர்ச்சி வசப்பட்டிருந்தாலும் விஷயம் விபரீதம் ஆயிருக்கும். நீங்க உள்ள நுழைஞ்சிருப்பீங்க. கலகமும் பிறந்திருக்கும்.

"இது எதுவுமே நடக்காம உங்களையும் விட்டு வெச்சிருக்கோம்னா அதுக்குக் காரணம் பெருந்தன்மை தான். புரிஞ்சு திருந்துங்க. அதுதான் எல்லாருக்கும் நல்லது. திருந்தாம, திரும்பவும் அடுத்த கட்ட வன்முறைல இறங்கினா நிச்சயம் அப்ப அந்த ஆயுதத்தை ஜீரணம் செய்ய மாட்டோம்."

பகவந்தராவின் எச்சரிக்கை மூவரையும் சற்றுப் பயமுறுத்திய மாதிரிதான் தெரிகிறது. பேசின வேகத்தில் பகவந்தராவ் திரும்பி நடக்க ஆரம்பிக்கிறார்.

தேசிகாச்சாரியிடம் இன்னமும் இமைத் துடிப்பில்லை. முறைப்பிலும் குறைவில்லை. அப்படி ஒரு அனல் விழியாக அந்தத் தவசியின் விழிகள் ஆகிப் போகும் என்று கனவிலும் கூட நினைத்திருக்கமாட்டார்கள் அவர்கள்.

ஒரு ஊசியை போட்டுவிட்டு நபீஸாவின் துவண்ட தோல் பரப்பைத் தேய்த்து விடுகிறார் டாக்டர். குத்தப்பட்ட இடங்களில் எல்லாம் தையல் கட்டு என்று சிகிச்சைப் பரிமாணங்கள். சுற்றிலும் ராவுத்தர் தெருவே வளைத்துக் கட்டி நின்று கொண்டிருக்கிறது.

அதில் இஸ்மாயிலை சிலர் குடைந்து கொண்டிருக்கிறார்கள்.

"இஸ்மாயில் நீ எதையோ மறைக்கிறே... என்ன ஆச்சு நபீஸாவுக்கு? யார் குத்துனது? சொல்லு..."

"நேத்து ராத்திரி அது சால்வையைப் போத்திக்கிட்டுத் தனியா போனப்பவே நான் சந்தேகப்பட்டேன். அப்புறம் தான் ஏதோ நடந்துருக்கு. என்ன, எதுனா அந்தப் பானுப் பொண்ணு சம்பந்தமான விவகாரமா?"

"சொல்லுடா... யார் செஞ்சது? சொல்லு... நாம அத்தனை பேருமா சேர்ந்து போய் இரண்டுல ஒண்ணு பாத்துட்டு வருவோம். போயும் போயும் ஒரு பெண், அதுலையும் ஒரு வயசான பெண்ணைக் குத்தி வீரத்தைக் காட்டுன அந்த பேடி யாரு... நபீஸா என்ன சொல்லிச்சு?"

அனைத்துக் கேள்விகளையும் விழுங்கிக் கொண்டு மௌனமாக நிற்கிறான் இஸ்மாயில். மனசுக்குள் தாமுவைத் தூக்கிப் போட்டுப் புரட்டி எடுக்கும் ஆக்ரோஷம் அலையடித்தாலும் குர்ஆன் மேல் சத்தியம் வாங்கி அவனைக் கட்டிப் போட்டிருக்கிறாளே நபீஸா!

'மூச்சு விடக் கூடாது... ஒரு 'உம்' வார்த்தை கூட இப்பொழுது ஒரு தீக்குச்சியாகிவிடும் என்பது அந்தக் கிழவிக்கு எப்படியோ தெரிந்தும் புரிந்தும் இருக்கிறது!

எல்லாம் காலம் கற்றுத் தந்த பாடம். காரணமே இல்லாமல் கலவரங்கள். பெயர் வைப்புக்காகச் சண்டைகள். சிலைக்காகவெல்லாம் ரத்தக் களரிகள். என்ன தேசம் இது? அவள் கலங்கிப் போன கணங்கள் பல கழிந்திருக்கிறதே!

'நினைவு தெரிந்த நாளாக நல்ல அரிசியை ரேஷனில் பார்த்ததில்லை. ஒருமுறை, ஒரேமுறை எடை குறைவில்லாமல் பொருள் வாங்கியதில்லை. மேடு பள்ளமில்லாத ஒரு சாலையில் பயணம் செய்ததில்லை. காத்திருக்காமல், வரிசையில் நிற்காமல் தண்ணீர் பிடித்ததில்லை. சாக்கடை கொசு, நாய், பன்றி என்று வாழ்வதை நினைத்துச் சிந்தித்ததில்லை.

இங்கெல்லாம் வரவேண்டிய கோபம், இங்கெல்லாம் வர வேண்டிய ஒற்றுமை, இங்கெல்லாம் வரவேண்டிய எதிர்ப்புணர்ச்சி எப்படி இப்படிப் பெயருக்கும் சிலைக்கும் திசை மாறிச் செல்கின்றன?

புரியவேயில்லை.

அவள் சிந்தனையைக் கலைக்கிறது கூட்டம்.

"நபீஸா... யார் உன்னை இப்படிச் செஞ்சது சொல்லு. இப்படியே விட்டா அப்புறமா ராவுத்தருங்கன்னாலே இளப்பமாயிடும். பதிலுக்குப் பதில் கொடுத்தாத்தான் கொஞ்சமாவது புத்தி வரும்..." பெட்டிக் கடை மீரான் சாயபு நபீஸாவின் காதருகே பேசியதற்கு, கச்சிதமாகப் பதில் தருகிறாள் நபீஸா.

"நான் பதிலுக்குப் பதில் கொடுத்துக்கிட்டுத் தான் இருக்கேன் மீரான்."

"என்ன உளர்றே... வீதியே கொதிச்சுக் கிடக்குது. பதிலுக்குப் பதில்ங்கறது இப்படி வாயை மூடிப் படுத்துக் கிடக்கிறது கிடையாது."

"இப்ப சும்மா இருக்கறது தாண்டா சரியான பதில். வேதம் படிச்சிருக்கேல்ல நீ?"

"அதப்பத்திப் பேசற நேரமில்ல இது..."

"முட்டாப் பயலே... இஸ்லாம்னா என்னடா அர்த்தம்?"

- மீரான் நபீஸாவின் கேள்வி முன் திணறல் கொள்கிறார்.

"நான் இஸ்லாத்துக்கு அர்த்தம் சொல்லிக்கிட்டிருக்கேன். நீங்கல்லாம் போய் அவங்கவங்க வேலையப் பாருங்க..." சொல்லும் போதே இன்ஸ்பெக்டரின் விஜயம் அங்கே...!

"வாங்க சார்..." என்று சேரைத் தூக்கிப் போடுகிறான் இஸ்மாயில்.

"எல்லாம் கேள்விப்பட்டுத்தான் வந்தேன். ஆமா, ஏன் யாருமே கம்ப்ளையிண்ட் கொடுக்க ஸ்டேஷனுக்கு வரலை?" உட்காருவதற்கு முன் அவரிடம் கேள்வி பிரதானமாக இருக்கிறது.

- இஸ்மாயில் நபீஸாவைப் பரிதாபமாகப் பார்க்கிறான்.

"ஏதாவது பிரச்னை இருந்தாத் தானே தம்பி கம்ப்ளையிண்ட் கொடுக்க?" நபீஸாவின் படுக்கை நிலை பதிலில் ஒரு தீர்மானம். அது வந்தமர்ந்தவரை ஒரு குத்துக் குத்துகிறது. சமாளித்துக் கொண்டு பார்வையாலேயே சுற்றி இருப்பவர்களைப் பார்த்துச் சற்று ஒதுங்கிப் போகச் சொல்கிறார். அந்த அறையில் அவர்கள் இருவர் மட்டுமே...

"பாட்டிம்மா சும்மா தைரியமா சொல்லுங்க. உங்களை யார் குத்தினது... அந்த ஆஸ்ரமத்துக் கிழவன் தானே?" - இன்ஸ்பெக்டர் கேட்கும் விதத்திலேயே அந்தக் கிழவன்தான் என்று சொல்ல மாட்டாயா எனும் நப்பாசையையும் நபீஸா உணருகிறாள்.

"அப்படின்னு உங்களுக்கு யார் சொன்னது?" மெலிய கேட்கிறாள்.

"சொல்லணுமா என்ன... இப்பத்தான் அந்த ஆஸ்ரமத்துல பலான தப்புங்கல்லாம் நடக்கறதா தகவல் வருதே..."

"அப்படியா... போய்ப் பார்த்தீங்களா?"

"இதென்ன கேள்வி பாட்டிம்மா? இப்பத்தானே தகவல் வர ஆரம்பிச்சிருக்கு. இனி போய்ப் பாத்து பிடிக்காம விடுவோமா என்ன...? வரவர சாமியாருங்கன்னாலே பயமால்ல இருக்கு?"

நபீஸா ஏதும் பேசாமல் தலையைத் தாழ்த்திக் கொள்கிறாள்.

"இப்படிச் சும்மா இருந்தா எப்படி? அந்தக் கிழவன்தான் உங்களைக் குத்தி இருக்கணும். நான் கம்ப்ளையிண்ட் ரெடி பண்றேன். ஒரு கையெழுத்து மட்டும் போடுங்க. மத்ததை நான் பாத்துக்கறேன்."

தாழ்ந்திருக்கும் நபீஸாவின் சிரம் இப்பொழுது மெல்ல நிமிருகிறது. பூஞ்சை விழிகளில் கண்ணீர் திரண்டிருக்கிறது.

"எதுக்கு அழுவறீங்க?"

பதில் சொல்லாமல் நபீஸா அருகில் மோடா ஒன்றின் மேல் கிடக்கும் குர்ஆன் புத்தகத்தை நடுங்கும் கரங்களால் எடுக்கிறாள். இன்ஸ்பெக்டருக்கு அந்தச் செய்கை என்னவோ செய்கிறது. குர்ஆனுக்குள் ஒரு ஸ்படிக மணிமாலை! கைகளால் அந்த மாலையை எடுத்துக் கொண்டு ஜபிக்கத் தொடங்குகிறாள்.

"பாட்டிம்மா... எனன இது? கேட்டதுக்குப் பதில் சொல்லாம இப்படி ஜபம் பண்ணிக்கிட்டு..."

"தயவு செய்து எழுந்திருச்சு வெளியே போயிடுங்க தம்பி. நான் சுத்த பத்தமா ஜபம் பண்றவ. அஞ்சு தொழுகை விடாதவ. இந்தக் கத்திக்குத்து காயத்துல கூட அதை நான் விடலைன்னா பாத்துக்குங்களேன்."

"சரி, அதுக்கென்ன இப்போ... நான் உங்க நல்லதுக்குத் தானே வந்துருக்கேன்."

"போதும் தம்பி... எனக்கு எழுபது வயசாகுது. கேபிள் டீவில தினம் பத்துப் படம் ஓடுது... ஒண்ணு இரண்டாவது பாக்கும்படி ஆயிடுது. வாரப் புத்தகம் பேப்பர்னும் இஸ்மாயில் நிறைய வாங்கறான். அதையும் புரட்டிப் பாக்கறவ நான். நல்லது கெட்டது எதுன்னு எனக்கு நல்லா தெரியும்..." - ஆவேசிக்கிறாள்.

"நானறிய நாற்பது வருஷமா இங்க கள்ளச் சாராயம் விக்கறாங்க. அதைத் தடுக்க போலீஸ் வந்து பாக்கலை. நானறிய எவ்வளவோ திருட்டு. புகார் கொடுத்தும் ஒரு பலனுமில்லை. இப்ப என்னடான்னா கம்ப்ளையிண்ட் கொடுக்காமலே வந்துருக்கீங்க. அந்த ஆசிரமத்துச் சாமியார் தானே குத்தவாளின்னு நீங்களே தீர்மானம் பண்ணிக் கேக்கறீங்க. வாஸ்தவத்துல அந்த மகராசன் என்னைக் காப்பாத்தினவர். யாரோட காசு பணத்துக்காக நீங்க இப்படிப் பறக்கறீங்கன்னு எனக்குத் தெரியலை. ஆனா ஒண்ணு மட்டும் நல்லா தெரியும்.

"நீங்க சமூகத்தைக் காப்பாத்தறவர் இல்லை. நியாயம் பக்கம் நிக்கறவர் இல்லை. நான் வயிறு எரிஞ்சு உங்களப் பார்த்து நல்லா இருக்க மாட்டேன்னு சொன்னா அது பலிச்சுடும். அதனால தான் சொன்னேன். நான் ஜபிக்கிறவ, தொழறவன்னு...

"ஐயா, உன்னைக் கெஞ்சிக் கேட்டுக்கறேன். நல்லதுக்குத் துணை செய்யாட்டியும் கெடுதல் பண்ணாம இருய்யா..."

- நபீஸா பிடித்த பிடியில் இன்ஸ்பெக்டரிடம் ஸ்தம்பிப்பு. பதில் எகிறலையோ, கோபத்தையோ துளிக் கூடக் காட்ட முடியவில்லை.

இதய மையத்தைக் குறிவைத்து நபீஸா கொட்டிய வார்த்தைகளின் சக்தியில் அங்கெல்லாம் இப்பொழுது வலி.

மௌனமாக எழுந்து கதவைத் திறந்து கொண்டு நடக்க ஆரம்பிக்கிறார்.

நெகிழ்ச்சியின் உச்சம் என்று ஒன்றிருந்தால் அதில் இருப்பதாகத் தன்னைக் கருதிக் கொள்கிறான் மோகன்ராம். காரணம் நபீஸா! பெரிய ஆஸ்பத்திரியில் அட்மிட் ஆகி அவள் கிடப்பதிலிருந்து இன்ஸ்பெக்டரிடம் பேசியது வரை எல்லாமே இப்பொழுது அவனுக்குச் சொல்லப்பட்டிருக் கிறது.

ஒரு கூடை ஆப்பிள் ஆரஞ்சுடன் இஸ்மாயில் அந்தச் செய்தியையும் சுமந்து கொண்டு வந்து மோகன்ராமின் நலனை விசாரித்துவிட்டு முன்னால் நின்று கொண் டிருக் கிறான்.

"என்னை விசாரிக்கிறதுல பாட்டி முந்திக்கிட்டாங்க. நான் எப்படி நன்றி சொல்வேன்...!" தேம்புகிறான்.

"அழாத மோகன்... தையல் பிரிஞ்சிட வாய்ப்பிருக்கு..." அருகில் இருந்து எச்சரிக்கிறான் முகுந்தன்.

"முகுந்தா, பாத்தியா பாட்டியோட செய்கையை... ஒரு பெரிய கலவரத்தையே தன் பெருந்தன்மையால தடுத்து நிறுத்தியிருக்காங்க."

"நீயும்தானே... இப்ப நீ கையசைச்சா கூடப் போதுமே அந்தத் தாமுவை, ஜவஹர் பாபுவை, இரண்டுல ஒண்ணு பாத்துட மாட்டோம்."

"முகுந்தா, இன்னுமா உன்னை இந்தப் பழி உணர்ச்சி விடலை. நான் கோடுதான் போட்டேன். பாட்டி ரோடே போட்ருக்காங்க. இதை எல்லாம் பாத்துமா இப்படிப் பேசறே...?"

"அப்படின்னா அந்தப் பசங்க இந்நேரம் திருந்தியிருப் பாங்கன்னு நினைக்கறியா நீ? திருந்தறவங்களா அவங்க... அவங்களும் திருந்தப் போறதில்லை; நம்ம ஜனங்களும் திருந்தப் போறதில்லை. இப்ப இருக்கற இந்த நெகிழ்ச்சிக்

கோபம், ஒத்துமை உணர்ச்சி இதுக்கு எல்லாம் ஆயுள் நாலு நாள்தான்!"

"ஆமாம் மோகன் ராம்... நாலு நாள் தான் இதுக்கெல்லாம் ஆயுள். அஞ்சாவது நாள் அவன் திரும்ப சாராயம் விப்பான். ஜனங்களும் ஒளிஞ்சு போய்க் குடிப்பாங்க. இதை எல்லாம் மறந்துடுவாங்க. பானு மாதிரி பெண்களுக்கு வலை விரிப்புகளும் தொடரும்.

"அந்தக் கூட்டத்தை விட்டு வைக்கறது கொஞ்சம் கூட நல்ல முடிவாப் படலே. நீ, என் பாட்டி, உங்க பெருந்தன்மை எல்லாம் வீணா போகப் போகுது. எழுதிக்க; இந்தச் சமூகத்தைத் திருத்தவே முடியாதுன்னு நீ சொல்லப் போறே..."

இஸ்மாயில் முகுந்தனின் கருத்தோடு இணைந்து பேசுகிறான். நெகிழ்ச்சியை மீறி இப்போது வலிக்கிறது மோகன் ராமுக்கு. இவர்கள் சொல்கிற மாதிரி ஆகிவிடுமோ என்கிற பயம் மெல்ல மனக்கூட்டில் தன் குஞ்சுகளைப் பொறிக்க ஆரம்பிக்கிறது. நல்லவேளை... இதம் தருவது போல் தேசிகாச்சாரி அங்கு அவர்கள் நடுவில் நுழைந்திருக்கிறார்.

"என்னப்பா ரொம்பக் கலக்கமா இருக்கே! வயசுக்கு மீறின பெருந்தன்மை காட்டுன மனசுல கலக்கமா? எங்க உன் பெருந்தன்மைக்கும் பொறுமைக்கும் மதிப்பில்லாமப் போயிடுமோன்னு பயப்படறியா? நல்ல விஷயங்களுக்கெல்லாம் ஆயுள் நாலு நாள் தான்ங்கறது தானே உன் பயம்?"

படுத்திருக்கும் நிலையில் மோகன்ராமின் சிரம் விடையை எதிர் நோக்கி அசைகிறது. இஸ்மாயிலுக்குத் தேசிகாச்சாரியின் அந்த மனத்தைப் படிக்கும் சாதுர்யம் வியப்பைப் பெருக்குகிறது.

ஆனால் பதில் ஒரு அஸ்திரம் போல் நிற்கப் போவது அவர்களுக்குத் தெரியாது.

25

எந்த ஒரு நல்ல விஷயத்திற்குமே ஆயுள் நான்கு நாள்தான் இந்தத் தேசத்தில் என்கிற முகுந்தனின் கருத்துக்கும், இஸ்மாயிலின் கருத்துக்கும் தேசிகாச்சாரி அளிக்கும் பதில் ஒரு விநாடி அவர்களையே திக்கு முக்காட வைக்கிறது.

"ஆமாம் அப்படின்னா நீங்கள்லாம் நல்ல விஷயங்கள்ள நாட்டம் கொண்டவங்க இல்லியா?" - அந்தக் கேள்வியின் உட்பொருள் முகுந்தனுக்குப் புரிகிறது. தன் கருத்துப்படி பார்த்தால் தானே ஒரு கெட்டவன் என்கிற பொருள் வருகிறது. நல்லவன் என்று பார்த்தால் இந்த இருபத்து நான்கு வயதிலும் மாறாமல் இருப்பதாய் ஆகிறது. இருந்தும் சமாளிக்கிறான்.

"நான் விஷயங்களுக்குச் சொன்னது எங்களுக்கு எப்படிப் பொருந்தும்?"

"ஏன் பொருந்தாது... விஷயங்கள் யாரால உருவாகுது? உங்களால ... உங்களைப் போன்ற மனிதர்களால தானே...?"

"அப்படிப் பார்த்தா நூத்துக்குத் தொண்ணூறு பேர் இன்னிக்குச் சரியானவங்க கிடையாதுங்கறதுதான் என் கருத்து."

"அப்படி இருக்குன்னே வெச்சுப்போம். மிச்சமிருக்கிற பத்து பேருக்கு அவங்க சமமாக மாட்டாங்க தெரியுமா உனக்கு? ஊருக்கு ஒரு வைத்தியன் போதும் முகுந்தன்."

"இது வாதத்துக்குச் சரியா இருக்கலாம். ஆனா இன்றைய நடைமுறைக்கு மோகன்ராம் - நபீஸா காட்டியிருக்கற - பெருந்தன்மைக்கு வேற பேர்தான் கிடைக்கும். 'பயந்துட்டாங்க - கோழைங்க -' பத்தாம் பசலிங்கன்னு'தான் சொல்வாங்க" - முகுந்தன் அழுத்தமாய் மறுக்கிறான். இஸ்மாயிலும் இணை சேர்கிறான்.

"காந்திய விடவா மோகன்ராம் பொறுமைசாலி? திருவள்ளுவரை விடவா இவன் பெரிய கருத்து உள்ளவன்? பாரதியை விடவா இவன் சமூகக் கோபம் கொண்டவன்? சங்கரர், ரமணர், நபிகள் நாயகத்தை விடவா இவன் நல்லது சொன்னவன்?"

"அதுக்காக?"

"இத்தனை பேர் சொல்லியும் பேசியும் எழுதியும் வாழ்ந்து காட்டியுமே இந்தத் தேசம் திருந்தலையே... இனிதானா திருந்தப் போறாங்க... நாங்க அதை நம்பவா?"

இஸ்மாயிலின் கேள்விக்குத் தேசிகாச்சாரி பதில் சொல்லாமல் மோகன்ராமைப் பார்க்கிறார்! 'நீதானே வலிதாங்கி. நீயே பதில் சொல்' என்கிறது அந்தப் பார்வை.

"தேசம் திருந்தலைங்கற வாதத்தை நான் ஒப்புக்க மாட்டேன்."

சற்று இணக்கமான குரலில் அவன் பதில் தரத் தொடங்குகிறான்.

"அப்ப பாலும் தேனுமா பெருகி ஓடுது இப்போ...?"

"எப்பவுமே எங்கையுமே அப்படி ஓடினதில்லை. அது ஒரு மிகையான விளக்கம்."

"சரி, இந்தத் தேசத்துல நல்லது இருக்கா இன்னும்...? பேப்பர் பார்த்தியா இன்னிக்கு... தென்மாவட்டத்துல அண்ணன் தம்பிகள் வெட்டிக்கறாங்கடா..."

"ஆனா உலகம்கறது தென்மாவட்டம் மட்டுமில்லை முகுந்தன்..."

"முடிவா என்னதான் சொல்றே...?"

"நீ சொன்னியே அண்ணன் தம்பிங்க வெட்டிக்கறாங் கன்னு..."

"ஆமா... சொன்னேன். அதுதானே உண்மை!"

"அதனாலதான் என்னைக் குத்தின சகோதரனை நான் இங்க திரும்பக் குத்தலை. காட்டியும் கொடுக்கலை. நெருப்பை நெருப்பால அணைக்க முடியாதுன்னு எனக்குத் தெரியும் முகுந்தன்."

"அப்படின்னா..."

"நான் படிச்ச பாரதி என் கோபத்தை இப்படித்தான் காட்டச் சொல்றான். வள்ளுவர், அவ்வை, ரமணர், நபிகள் எல்லாரும் இப்படித்தான் நடந்துக்கச் சொல்றாங்க.

"நான் மட்டுமில்லடா... நான் ஒரு சுண்டைக்காய். பெரிய பெரிய தியாகங்களை - பெரிய பெரிய செயல்களைச் சொல்லாம கொள்ளாம ரொம்பப் பேர் செய்துகிட்டுத் தாண்டா இருக்காங்க. அதனாலதான் அச்சு முறியாம பூமி சுத்திக்கிட்டு இருக்கு. எப்பவுமே அடிச்சா அது எல்லாருக்கும் தெரியும். ஆனா அணைக்கறது அப்படி இல்லை. அது தெரியாது. நல்ல விஷயங்களே இல்லைன்னா நான் இப்படிச் சிந்திச்சுப் பேச முடியுமா - நாமெல்லாம் கவலைப்படுவோமா?"

மோகன்ராமின் விளக்கம் தேசிகாச்சாரியை நெகிழ்த்துகிறது. ஒரு நாள் இவனும்தான் இந்த முகுந்தன் போல் தன்னிடம் கேள்வி கேட்டவன். ஆனால் இன்று இவனே பதில் சொல்லும் அளவு பக்குவப்பட்டிருக்கிறான். இருந்தும் நல்ல விஷயங்களில் மோகன்ராம் அளவு முகுந்தனுக்கோ இஸ்மாயிலுக்கோ நம்பிக்கை இல்லாமல்

போய் விட்டதே.? கவலைப்பட ஆரம்பிக்கிறார் தேசிகாச்சாரி.

இந்த மாதிரி நேரத்தில் எல்லாம் வானம் பார்த்துப் பிரார்த்தித்தால் உதவிக்கு அங்கிருந்து ஒரு கரம் வருமாமே? எத்தனை ரிஷிகள் சொன்ன சத்தியம் இது... எத்தனை மகான்கள் உணர்ந்து காட்டிய நிஜம் அது?

தேசிகாச்சாரியின் மனமும் 'சுற்றுச் சலசலப்பு, மருந்து நெடி, கேள்விச் சலனம்' எல்லாம் விலக்கி ஒருமுகப்படு கிறது.

அருகிலேயே ஒரு மர பெஞ்சு. அதில் ஏறி அமருகிறார். பத்மாசனம் கொள்கிறார்.

நேரத் துளி சப்தம் சொட்டாகக் காதில் விழுகிறது.. முகுந்தனும் இஸ்மாயிலும் மௌனமாய் இதைப் பார்க்கின்றனர்.

இனி பேசிப் பயனில்லை... நமது கேள்விகளுக்கு அவரிடம் விடையும் இல்லை என்று முடிவு செய்தவர்களாக எதுவும் பேசாமல் கிளம்பக் கால் எடுக்கின்றனர்.

வார்டு அறை வாசலில் இப்பொழுது ஜான் ஆசீர்வாதம் தெரிகிறான். ரேஷன் கடைப் பெருச்சாளி!

'உன்னைக் கவனிக்க வேண்டிய இடத்துல கவனிச்சுக்கறேன்' என்று சொன்னவன், பார்க்க மதர்ப்பாக மாமிசமலையாகக் காட்சி தருபவன், இப்பொழுது பணிவாகக் கலக்கக் கண்களோடு நிற்கிறான். கையில் வயர் கூடை அதில் ஆப்பிள், ஹார்லிக்ஸ் கூட்டணி.

முகுந்தன் அவனைப் பார்த்தபடியே நிற்க அவன் மோகன்ராமை நெருங்கி வருகிறான்.

"வாங்க..." மோகனிடம் வரவேற்பு.

"எப்படி இருக்கே மோகன்ராம்?"

"எனக்கு ஒண்ணுமில்ல... நல்லாத்தான் இருக்கேன்."

"உனக்கு ரொம்பப் பெரிய மனசு. என்னை மன்னிச்சுடு மோகன்ராம்."

"ஐய்ய... என்ன இது பெரிய வார்த்தையெல்லாம் சொல்லிக்கிட்டு."

"உன்னைத் தட்டிவைக்கணும்னு முடிவு பண்ணி னப்போ நானும் கூட இருந்தேன்."

"ஓஹோ! அங்க அவங்க கூட இருந்து கொலை செய்ய ஏற்பாடு செய்துட்டு இங்க ஆறுதல் சொல்ற மாதிரி என்ன நிலைல இருக்கான்னு பாக்க வந்திருக்கியா?" - முகுந்தனின் இடைச் செருகல் ஆசீர்வாதத்தைக் கோபப்படுத்தவில்லை. மாறாகத் திடும்மென அவனை விசும்ப விடுகிறது.

"இல்ல தம்பி... சத்யமா இல்ல..." என்கிறான் வெடிக்கும் குரலில்.

"முகுந்தா, கொஞ்சம் சும்மா இருக்கியா?" - மோகன் ராமும் கண்டிக்கிறான். ஆசீர்வாதத்தின் விசும்பலோ தொடர்ந்து கொண்டே போகிறது.

"என்ன இது சின்னக் குழந்தையாட்டம் அழுது கிட்டு..." - மோகன்ராம் படுத்த நிலையில் கைகளை நீட்டி ஆசீர்வாதத்தின் கரத்தைப் பற்றுகிறான்.

"இனி நான் எப்பவும் அழும்படியா பண்ணிட்டாரு கர்த்தர்" என்று அவன் கரத்தை அழுந்தப் பற்றுகிறான் ஆசீர்வாதம்.

"என்ன சொல்றீங்க?"

"ஆமாம் மோகன், ரேஷன் கடைல நான் எவ்வளவோ ஏழைகள் வயித்துல அடிச்சதுக்கு ஆண்டவன் பதில் சொல்லிட்டான்."

"புரியும்படி சொல்லுங்க ஆசீர்வாதம்."

"என் ஆசை மகளுக்கு இதயத்துல ஓட்டையாம்! உயிர் வாழறதே கஷ்டம்னு டாக்டருங்க சொல்லிட்டாங்க. என் பெண்டாட்டி அந்த நிலைலயும் என்னைப் பார்த்துக் கேட்ட கேள்விய என்னால தாங்கிக்க முடியலை. 'உனக்கு'த்தான் இருதயம் இருந்தும் இல்லைன்னா உன் மகளுக்கும் அப்படியே ஆக்கிட்டார் பார்த்தியா கர்த்தர்'னு அவ சொல்லி அழுதப்போ என் உயிரே போயிடிச்சு. 'போய்யா போய் இனியாவது நல்ல காரியம் செய். என் மக பிழைக்கணும்; அதுக்குண்டானதைச் செய்'யுன்னு துரத்தி விட்டா. எனக்கு உடனே உன் ஞாபகம்தான் வந்தது. வந்துட்டேன். நின்னு கொல்றதுன்னா என்னன்னு எனக்குப் புரிஞ்சுப் போச்சு மோகன்ராம். உடனே கொன்னா கூட இப்படி வலிக்காது. என்னை மன்னிச்சு என் மகளுக்காகப் பிரார்த்தனை செய் மோகன். நீ பிரார்த்தனை செஞ்சா நிச்சயம் கர்த்தர் ஓடி வருவார். ஏன்னா நீ பாவிகளுக்காக ரத்தம் சிந்தினவன். எனக்கு அவர் முகத்தைப் பாக்கற யோக்யதை கூட இல்லை."

ஆசீர்வாதத்தின் விசும்பலில் ஆஸ்பத்திரியே திரும்பிப் பார்க்கிறது; கூடவே அர்த்த புஷ்டியோடு தர்மமுமல்லவா? தேசிகாச்சாரியும் தனது குட்டி நிஷ்டையைக் கலைக்கிறார்.

இஸ்மாயிலும் முகுந்தனும் பிரமித்து நிற்கின்றனர்.

நல்லதெற்கெல்லாம் ஆயுள் நான்கு நாட்கள்தானா?

புழுதி பறக்க வந்து நிற்கிறது டாடா சுமோ. வாரிச் சுருட்டிக் கொண்டு இறங்குபவர் பரமக்குடி நரசிம்மன். மோகன்ராமுக்கு நேர்ந்த விபரீதம் பரமக்குடியிலிருந்து புயல் வேகத்தில் இழுத்து வந்திருக்கிறது.

உள்ளே நுழைவதிலேயே அதன் ஆக்ரோஷமும் தெரிகிறது. "அக்கா... அக்கா... என்ன இது 'ஏதேதோ கேள்விப்பட்டேனே..."

உள்ளே மகாலட்சுமி சுடச் சுடக் கஞ்சி காய்ச்சி எடுத்துக் கொண்டு ஆஸ்பத்திரி கிளம்பத் தயாராக இருக்கிறாள். பதறியபடி வரும் தம்பியைப் பார்த்துக் கூடையைக் கீழே வைக்கிறாள். சலனமில்லாமல் வெறிக்கிறான்.

"என்னக்கா ஒண்ணும் பேச மாட்டேங்கறே - ஆமாம் எங்க மாப்ளை?"

"என்னடா கேள்வி இது... அவன் இப்ப பெரிய ஆஸ்பத்திரியில..." என்கிறாள் மிகச் சாதாரணமாக.

"என்னக்கா நீ... எவ்வளவு பெரிய அநியாயம் நடந்துருக்கு. சாதாரணமா இருக்கே நீ...?"

"சரி, சரி கிளம்பு. ஆஸ்பத்திரிக்குப் போய்க்கிட்டே பேசுவோம்."

"ஆமாம்... எங்க கனகா?"

பதிலுக்கு அவள் காய்கறி கூடையுடன் உள்ளே நுழைகிறாள்.

"வாங்கப்பா... வாசல்ல கார் பார்த்தேன். இப்பத்தான் வந்தீங்களா?" - கனகாவிடமும் பெரிதாகக் கவலை, பதற்றமெல்லாம் இல்லை. ஆச்சரியம் பிடுங்குகிறது நரசிம்மனுக்கு.

"ஆமா, என்ன இது துளிக் கூட ஒரு படபடப்பு இல்லாம இருக்கீங்க ரெண்டு பேரும்? எனக்குப் போன் வந்தப்போ ஒரு நிமிஷம் மூச்சே நின்னு போச்சு தெரியுமா?"

"சரி, சரி நட... கனகா வீட்ட பாத்துக்கம்மா."

மகாலட்சுமி நடக்க ஆரம்பிக்கிறாள். நரசிம்மன் மகளைப் புரியாமல் பார்த்துவிட்டு மகாலட்சுமியைத் தொடருகிறான். மகாலட்சுமி கார் இருந்தும் தெருவில் இறங்குகிறாள்.

"அக்கா கார்ல போவோம்."

"வேண்டாம் நச்சு. நடப்போம். அதுதான் உடம்புக்கும் நல்லது. நீ வேணா கார்ல வா. அட பாவமே! உனக்குச் சாப்பிடக்கூட ஒண்ணும் தராம இழுத்துகிட்டு வந்துட்டேனே..."

என்ன பதில் இது? நரசிம்மனைப் பிசைகிறது. அரைமனதாய், அவரும் தொடர்ந்து நடக்கிறார். எதிர்ப்படும் ஒருவன் மகாலட்சுமியிடம் விசாரிக்கிறான்.

"எங்க மகா... மகனுக்குக் கஞ்சி கொண்டு போறியா?"

"ஆமாம்..."

"உன் மகன்கிட்ட சொல்லு, நான் இப்ப குடிக்கற தில்லைன்னு."

"சொல்றேன்... ஆமா, நீ சொல்றதை நிஜமா நம்பலாமா?"

"சத்யமா மகா, எப்ப அந்த நாயுங்க நம்ம மோகனை இப்படிக் குத்திப் படுக்கப் போட்டுட்டாங்களோ, அப்பவே எனக்கு வெறுத்துப் போச்சு. அவனுங்கள தெருவை விட்டே துரத்தணும். நாம குடிக்காம இருந்தா அவன் போய்த் தானே தீரணும்?"

"சொல்றேன்... சொல்றேன்..."

நரசிம்மன் வியப்போடு அதைக் கேட்டு மகாலட்சுமி யைப் பார்க்க, அவளிடம் ஒரு சின்னப் புன்னகை.

"என்ன பாக்கறே நச்சு... நான் ஏன் பதட்டப் படலைன்னு இப்ப தெரியுதா... மோகன் வயித்துல விழுந்த

கத்திக்குத்து அவன் பொறுமையா, அகிம்சையா நடந்து கிட்டதால ரொம்ப பேர் மனசுலையும் விழுந்துடிச்சு. இந்த ஜென்மத்துல இவங்கள திருத்த முடியாதுன்னு நினைச்ச ரொம்பப் பேர் மனசு மாறியிருக்காங்க. அவன் குத்துப்பட்டு விழுந்த நிமிஷத்துல இருந்து இந்த நிமிஷம் வரை சாராய ஒட்டம் இல்லை. இதை எல்லாம் பாக்க சந்தோஷமா இருக்கும்போது எப்படிப் பதட்டப்பட முடியும்?"

"அது சரி... மோகன் உடம்புக்கு ஒண்ணுமில்லியே?"

"ஆண்டவன் புண்ணியத்துல எல்லாம் நல்லாயிடிச்சு. பத்து நாள் கழிச்சு தையல் பிரிச்சுடலாமாம். அதுவரை படுத்தே இருக்கணும்."

- பேச்சோடு பாதையில் பிரியும் ராவுத்தர் தெருவில் நுழைகிறாள்.

"இந்தப் பக்கம் எங்க போறே?"

"வா சொல்றேன்..." -

இருவரும் நபீஸா வீட்டினுள் நுழைகின்றனர். திரைச்சீலை விலகுகிறது. பானுவின் முகம் தெரிகிறது!

"நீ எப்ப வந்தே இங்கே...?"

"தேசிகாச்சாரி மாமாதான் உதவியா இருன்னு கொண்டு வந்து விட்டாரு... ஆமாம், அவருக்கு எப்படி இருக்கு?"

"உனக்கு மாங்கல்ய பிராப்தமும் பலமும் இருக்கறதால அவன் நல்லபடியா பொழைச்சுகிட்டான் பானு..." என்று மகாலட்சுமி பானுவுக்குத் திருஷ்டி கழிக்கிறாள். நறுக்கென்று குத்துகிறது நரசிம்மனுக்கு...

"மகா என்ன சொல்றே நீ?" - அவர் கேள்வியை ஒதுக்குகிறது நபீஸாவின் அழைப்பு.

"வா மகாலட்சுமி வா! வா..."

"நல்லா இருக்கீங்களா? வலி எல்லாம் ஒண்ணு மில்லியே?"

"அல்லா அருளால எல்லாம் தாங்கிக்கற மாதிரிதான் இருக்கு. என் பேத்தி வேற. பக்கமா வந்துட்டால்ல? எல்லாம இனி எனக்குத் தானா சரியாயிடும். அது இருக்கட்டும். வந்ததுல இருந்தே பானுவுக்கு இங்க கால் நிற்கலை. எப்பப் போய் மோகனைப் பார்ப்போம்னு துடிக்கறா. கூட்டிக்கிட்டுப் போய் வா மகாலட்சுமி..."

"அதுக்கென்ன... கிளம்புடியம்மா..."

மகாலட்சுமி பானுவை அழைக்க, பானு பாய்ந்து உள் ஓட நரசிம்மன் முகத்தில் பிரளய ரேகைகளின் விரிவு.

"ஆமா யார் அது?"

"என் ஒண்ணு விட்ட தம்பி. பரமக்குடியில இருக்கான். பெரிய வக்கீல்."

"உக்காரச் சொல்லு... எதுக்கு நிக்கறாரு...! உக்காருங்க தம்பி."

அந்தக் கரிசனத்தைக் காதில் வாங்கிக் கொள்ளாமல் நரசிம்மன் கால்கள் வீதி வாசல்படியில் போய் நிற்கின்றன.

நேசமும் அன்பும் பெருக்கெடுக்கத் தொடங்கி விட்டால் எவர் வீட்டு வாசலிலும் எவரும் நெஞ்சு நிமிர்த்தி நிற்க முடியும் என்பதற்குச் சான்றாக...

அதே இருவரும் வேறுபட்டிருந்தால் இப்படி நிற்க முடியுமா? இங்கே இந்நேரம் போலீசின் கால்கள் அல்லவா திரிந்தபடி இருக்கும்...?

நரசிம்மனுக்கு அதெல்லாம் தெரிந்திருக்க நியாய மில்லை. மனசு சுனகா என்னும் பெண் வசம் சிக்கி

விட்டது. அவள் இருக்க இந்தப் பெண்ணை எப்படி மகா லட்சுமியால் மருமகளாக நினைக்க முடிகிறது?

என்ன நடக்கிறது இங்கே... புரியவில்லையே?

குழம்பிக் கொப்பளிக்கும் போதுதான் அந்தச் சம்பவமும் நடக்க ஆரம்பித்தது!

ராவுத்தர் தெருமுனையில் குடிபோதையில் தன் குறி தப்பி விட்ட பிசகை வார்த்தைப் படுத்திக் கொண்டும், நபீஸா வீட்டில் பானு இருப்பதைத் தெரிந்து கொண்டும் வந்து கொண்டிருக்கிறான் தாமு.

சாலைப் பேருந்துகளும், கார்க்காரர்களும் அவன் நிலை பார்த்து நின்று வளைத்துச் செல்லப் பார்த்தும் விதி அவனை விடவில்லை. ஒரு லாரியின் முன்பாகம் கடந்து பின்சக்கரத்தின் முன் தன்னையறியாமல் போதையில் விழுகிறான். விழுந்தது தெரியாமல் பின் சக்கரங்கள் அவன் மேல் ஏறியதில் அவனது போதை உதட்டைப் பிளக்கிறது... கூக்குரல்?

அது வீட்டினுள் நேசத்துடன் பேசியபடி இருக்கும் நபீஸா, மகாலட்சுமி காது வரைக்கும் கூடக் கேட்கிறது.

24182
4105089

26

சப்தம் கேட்டு வெளியே வந்து பார்க்கிறாள் மகாலட்சுமி. தோள் பின்னால் பானுவும்...

நரசிம்மன் கூட்டம் நோக்கி நடக்கத் தொடங்கி விட்டார்.

நெருங்க நெருங்க மனித தேகங்களின் வளைப்பிலும் சலசலப்பிலும் தாமு தொண்டை கிழியக் கத்துவது துல்லியமாகக் கேட்கிறது.

அது மட்டுமா...?

"டேய் காப்பாத்தறேன்னு தொட்டு வெச்சி மாட்டிக்காதீங்கடா. போலீஸ்காரங்க நாற அடிச்சுடு வாங்க..." என்னும் குரலும்!

"எனக்குத் தெரியும் இவன் குடிச்சுப்புட்டு ஆட்டம் போடும்போதே நினைச்சேன். எங்கையாவது உழுந்து சாகப் போறான்னு..." என்னும் கருத்தும் மாறி மாறிக் காதில் விழுகிறது.

ஜனக்கூட்டம் குடைந்து எட்டிப் பார்க்கிறது. இடக் காலைப் பின் சக்கரங்கள் துவையலாய் ஆக்கி விட்டிருக் கின்றன. லாரிக்காரனும் ஓடிவிட்டிருக்கான். சாதாரண மாய் இந்நிலையில் பிரக்ஞை தப்பிவிட்டிருக்கும். ஆனால் தாமு வரையில் மயக்கம் வருவேனா என்கிறது. கழுத்து நரம்பு புடைக்க அலறிக் கொண்டு எல்லாரையும் பார்க்கிறான். அவனது கந்தல் உடம்பிலிருந்து பிரிந்து நீளும் ரத்தப் பாம்பு நரசிம்மனின் கட்டை விரலைத் தீண்டுகிறது.

அவரும் இப்படி வேடிக்கை பார்ப்பது துளிக் கூட மனிதாபிமானமுள்ள செயல் அல்ல என்கிற உறைப்போடு காப்பாற்றும் ஆயத்தம் கொள்கிறார்.

"என்ன இது... இப்படி எல்லாரும் வேடிக்கைப் பாத்துக்கிட்டு நிக்கறீங்களே? ஆட்டோவையாவது, டாக்சி யையாவது கூப்பிடுங்க.."

"சார் வேண்டாம் சார்... இவன் போறதுதான் நல்லது. குடிகாரப் பாவி சார் இவன். போலீசும் கோர்ட்டு குளம்னு நம்மளைப் பிரிச்சு மேஞ்சுடுவாங்க... ஆட்டோகாரனும் வர மாட்டான் சார்..."

"ஆமாம் சார்... ஆண்டவனா பாத்துத் தண்டனை கொடுத்துருக்கான் இவனுக்கு. விட்றுங்க... விட்றுங்க..."

தாமு கதறுகிறான். தனக்கான சமூக அங்கீகாரம் இப்படியா பட்டிமன்றம் நடத்தும்?

"ஐயோ வலி தாங்கலையே... அந்த லாரிக்காரனை முழுசா என் மேல ஏத்தியாவது கொல்லச் சொல்லுங்களேன்..."

அவன் கதறலுக்கு நடுவில் கூட்டத்தில் தெரியும் பானுவின் முகம் அவனைக் கூடுதலாய் அலற விடுகிறது.

"பானுவா..." - நடுங்கும் கைகள் கெஞ்சுவதற்காக உயர எழும்பப் பார்க்கின்றன. முடியாது போகிறது.

"பானு... சாமி இல்லாம போயிடலை பார்த்தேல்ல... இவனா குடிச்சுப்பிட்டு வந்து உழுந்து எப்படி ஆயிட்டான் பாத்தியா?" - ஒரு மகாஜனம் மகத்தான தனது கண்டு பிடிப்பைக் கொட்டி முழக்குகிறது.

நரசிம்மனுக்கு எரிச்சல் பீறிடுகிறது.

"யோவ்! இது காரணம் பாக்கற நேரமில்ல.. சாமி இருக்காம் சாமி. இப்ப அதா முக்கியம்...?" - தன் டாடா சுமோ நோக்கி ஓடுகிறார்.

பானு வெறித்துக் கொண்டே நிற்கிறாள். அவன் கண்ணீர் விழியோடு துடிக்கிறான்.

என்ன இருந்தாலும் மந்தா கிழவிக்குத் தோள் கொடுத்தவன்... அப்போது தன்னை வேடிக்கை பார்த்து நின்ற ஜனக்கூட்டம் இப்பொழுது இவனைப் பார்க்கிறது. விளை அம்புகள்தான் எத்தனை வேகமாகத் திரும்பி விடுகின்றன? அவளது ஆச்சரியத்தைக் கலைக்கிறது சுமோவின் ஹாரன் சப்தம். இறங்கி ஓடி வருகிறார் நரசிம்மன்.

"ஒரு கை பிடிங்கப்பா..." என்று சிலரைப் பார்க்க, அரைமனதாக அவர்கள் முன்வருகின்றனர்.

தாமு ரத்த மூட்டையாக உள் ஏறுகிறான். பானு பார்த்துக் கொண்டிருக்கிறாள்.

செய்தி கேள்விப்பட்டு ஓடி வந்து பார்க்கும் ஜவஹரும் மணியமும் அந்த ரத்தச் சகதி பார்த்துக் கசங்கிப் போகின்றனர்.

மணியத்தை அந்தக் காட்சி என்னவோ செய்கிறது. லாரியின் பக்கவாட்டு பாடி மேல் சாய்ந்து கொண்டு தலையை உதறிக் கொள்கிறான்.

"என்னப்பா...?"

"ஒண்ணுமில்லை..."

"இப்படி நின்னா எப்படி...? தாமு பெரிய ஆஸ்பத்திரிக்குத்தான் போயிருக்கணும். வா போய்ப் பார்ப்போம்..."

"வேண்டாம்..."

"ஏன்?"

"வேண்டாம் விட்று, என் மனசே சரியில்லை..."

"போய்ப் பாக்காட்டி கத்துவான் அவன்..."

"டேய், இந்த மாதிரி விஷயத்துல மனசக்கு நிர்ப்பந்தமே கூடாதுடா... என்னை விட்று..."

"அப்ப நான் போறேன்..."

"கிளம்பும்மா..." - காரை நிறுத்திவிட்டு உள் நுழைந்த நரசிம்மன் பறக்க ஆரம்பிக்கிறார். முல்லைப் பூவைக் கட்டிக் கொண்டிருக்கும் கனகா ஒரு சின்னச் சிரிப்போடு கேட்கிறாள்.

"எங்கப்பா...?"

"எங்கையா... நம்ம வீட்டுக்குத்தான்."

"அதுக்கென்ன கிளம்பிட்டா போச்சு... ஆமா அத்தானைப் பாத்தியா? அத்தை வரலை."

"அத்தான், அத்தை... மண்ணாங்கட்டி அதான் என் மூஞ்சில அந்தப் பய கரிய பூசிட்டானே? இன்னும் என்ன அத்தான்... கிளம்பு கிளம்பு..."

"ஓ... பானு விஷயம் உனக்கும் தெரிஞ்சிடுச்சா...?"

"எனக்குத் தெரிஞ்சது இருக்கட்டும். நீ எப்படி இதை ஜீரணிச்சே?"

"ஜீரணிக்க இதுல என்னப்பா இருக்கு?"

"என்னம்மா அப்படிக் கேட்டுட்டே... இந்த விநாடி என்னால சமாதானம் அடைய முடியலை தெரியுமா...? நொண்டின்னுதானே அந்தப் பய உன்னைத் திரும்பிப் பாக்கலை... இருக்கட்டும்... இருக்கட்டும்... இவன் என்னம்மா பெரிய... நான் உனக்கு அமெரிக்க மாப்பிள்ளையையே பார்க்கறேன்."

"ஏம்ப்பா... அப்படி ஒரு மாப்பிள்ளையை நான் பாத்தா நீங்க ஒத்துக்க மாட்டீங்களா?"

கனகாவின் மடக்கலில் ஒரு சின்னத் தினறல் மண்டுகிறது நரசிம்மனிடம்.

"என்னம்மா சொல்றே?"

"முதல்ல உக்காருங்க சொல்றேன்..."

"நீ விஷயத்த சொல்லு..."

"அப்பா... மோகன் அத்தானைத் தப்பா நினைக்காதே. அவர் பேர்ல எள்ளளவு குற்றமும் கிடையாது. நீயும் நானும் இங்க வருவதற்கு முந்தியே அத்தானுக்கும் பானுவுக்கும் காதல் உண்டு. இது தெரியாம அப்ளிகேஷனோட வந்ததுதான் நாம பண்ணின தப்பு. அத்தான் மாதிரி கண்ணியமான மனுஷனைப் பார்க்க முடியாது. பானு மாதிரி பரிதாபத்துக்குரிய பொண்ணையும் பார்க்க முடியாது. இந்த உலகத்துல எவ்வளவோ விதமான காதலைப் பார்க்கறோம். ஆனால் தகுதிகளைச் சம்பாதிச் சுட்டுத்தான் காதலையே வெளிப்படுத்தணும்னு நினைக்கற ஒரு கட்டுப்பாடான காதலை நான் அத்தான்கிட்டத்தான் பார்த்தேன். அது மட்டுமில்ல... இப்பல்லாம் இளரத்தம்னாலே கனவு கற்பனைதான்... கோபம் ஆக்ரோஷம்தான்! ஆனா அத்தான் நேர் எதிர். இன்னிக்கெல்லாம் இந்தச் சமூகமே சிந்திக்கும்படியா அத்தான் காட்டியிருக்கற பொறுமை ஒரு இந்திய ஆச்சரியம்! அத்தானோட சமூகப் பிரக்ஞையும் ஒரு அர்த்தபுஷ்டியுள்ள முன் உதாரணம். உங்க பொண்ணுக்கு அவர் மாப்ளையா கிடைக்கலைங்கற கோபத்துல இத்தனை நியாயங்களை மறக்கறது எந்த விதத்துலப்பா சரி...?"

மகளின் கேள்வி முன் நரசிம்மன் அப்படியே ஒடுங்கிப் போய்த் தலைகுனிகிறார்.

"ஆமாம்... நீ யாரையோ மாப்பிள்ளையா பார்த்ததா..." - நரசிம்மன் நெடுநேரம் கழித்து இந்தக் கேள்விதான் கேட்பார் என்பது தெரிந்தவள் போல் கனகா பூச்சரங்களோடு அவரை நிமிர்ந்து அழுத்தமாகப் பார்க்கிறாள்.

"என்னம்மா பதிலையே காணோம்..."

சொல்றேன்பா... அதுக்கு முந்தி எனக்கு ஒரு உதவி செய்வீங்களா?"

"என்னடா?"

"ஒரு லட்ச ரூபா வரை கடனா தரணும்."

"எதுக்கு...?"

"அப்பதானே ஒரு சாதாரண நெசவாளி அமெரிக்க என்ஜினியர் மாப்பிள்ளையா ஆக முடியும்?"

"புதிர் போடாத கனகா. விஷயத்துக்கு வா நேரா..." -

கனகா பூச்சரத்தைக் கீழே வைத்து விட்டு எழுந்து கொள்கிறாள். உள்ளே செல்கின்றவள் திரும்பும் போது அவள் கைவசம் ஒரு கவர் இருக்கிறது.

"அப்பா, இந்தக் கவர்ல ஒரு நல்ல படிப்பாளியோட அப்ளிகேஷன்ஸ் இருக்கு. இந்த அப்ளிகேஷன் எல்லாம் அமெரிக்காவுல உள்ள எதாவது ஒரு யூனிவர்சிடிக்குப் போகணும். அவருக்கு அங்க படிக்க வாய்ப்புக் கிடைக்கணும். அதுக்கு 'நீங்க எல்லா உதவியும் செய்யணும். வழியும் காட்டணும். தன் வரையில அது ஒரு சந்திர மண்டலம். தன்னால எல்லாம் அங்க போக முடியாது'ங்கற ஒரு தாழ்வு மனப்பான்மை அவருக்கு இருந்தது. நான் அதை மாத்தினேன். உங்களால முடியும்னேன். இப்ப அவருக்கும் அந்த நம்பிக்கை வந்தாச்சு. நான் உதவி செய்யறேன்னும் சொன்னேன். அவர் கேக்கலை. என் காதலுக்காக இதை ஒத்துக்கக் கூடாதான்னு வெளிப்படையாவே கேட்டேன். அது ஒரு நொண்டிப் பெண்ணுக்கு நான் வைக்கற விலையாயிடும். வேண்டவே வேண்டாம்னு சொல்லிட்டார் அவர். ஒரு கோணத்துல அது சரிதான். அதனாலதான் கடனா கேக்கறேன் உங்ககிட்டே... ஏன்னா அவர் ஓர் ஏழை நெசவாளி..."

"யாரும்மா அவர்?"

"முகுந்தன்" என்கிறாள் வெட்கக் கசிவோடு!

கிரீச்சிட்டு நின்ற பேருந்திலிருந்து இறங்குகிறாள் சுசீலா! மஞ்சள் சோளி, மஞ்சள் புடைவை. கையில் கறுப்புக் கயிறு, இரண்டு பெரிய நூல் பை, வயர் கூடை என்கிற லட்சண சொரூபத்தோடு... நெற்றியில் அகலமான சைஸில் குங்குமப் பொட்டு. முகத்தில் எப்போதும் இல்லாதபடி ஒரு வகை சாந்தம்.

"வா சுசீலா... ஆமா இப்படியா காணாமப் போவே?"

"நீ இங்க இல்லாத நாட்கள்ள இங்கே தெருவே மாறிப் போச்சேடி... தெரியலை உனக்கு?"

"மந்திரம் போட்டாக் கூட இப்படி ஒரு மாறுதல் வருமாங்கறது சந்தேகம் சுசீலா. அந்த மோகன்ராம் புண்ணியத்தக் கட்டிக்கிட்டான்."

எல்லோரும் பேசுவது அவள் வரையில் புதிராக இருக்கிறது. நேரே மோகன்ராம் வீட்டு வாசலில்தான் போய் நிற்கிறாள். உள்ளே தறி ஓடும் சப்தம். எட்டிப் பார்த்தால் தறிமேடையில் பானு!

"அக்காரா..." - பானுவின் அழைப்பொலி மகாலட்சுமியையும், கனகாவையும் கூட ஒரு சேர சசிலா பக்கம் திருப்புகிறது.

"வாடி... திருப்பதிக்குப் பஸ்ல போனியா இல்ல பாதயாத்திரையா போனியா நீ?" மகாலட்சுமி அரிசி முறத்துடன் மிகச் சாவதானமாகக் கேட்பதும், கீரை நறுக்கிக் கொண்டு கனகா அமர்ந்த நிலையில் தன்னைப் பளிச்சென்று பார்ப்பதும்...

சுசீலா திக்குமுக்காடத் தொடங்குகிறாள்.

"பானு நீ எப்படி இவ்வளவு உரிமையோட இங்க...?" - இது முதல் கேள்வி. அடுத்து இரண்டாவது, அதற்கும் அடுத்து மூன்றாவது, நான்காவது, ஐந்தாவது...

வரிசையாகக் கேள்விகள் - விளக்கங்கள்.

முடிவில் புல்லரிக்கும் ஸ்தம்பிப்பு!

சுசீலா நடந்ததை எல்லாம் கேள்விப்பட்டுச் சிலையாகவே ஆகிவிட்டாள்.

சைக்கிளில் வந்திறங்கி, அதை வாசலில் நிறுத்திவிட்டு வந்து குறுக்கிடுகிறான் முகுந்தன். கைகளில் பாரதி நற்பணி மன்றத் துவக்கத்தை அனைவருக்கும் தெரிவிக்கும் பிட் நோட்டீஸ் புரூஃப்!

நோட்டீஸைக் காட்டியபடியே ஒரு நல்ல செய்தியைத் தூக்கிப் போடுகிறான்.

"விஷயம் தெரியுமா உங்களுக்கு? நம்ம பாரதி மன்றத்துக்குப் பத்தாயிரம் ரூபா தர முன் வந்துருக்கார் கிருஷ்ணாராவ்!"

"ஏய் நெஜம்மாவா...?"

"சத்தியமா தாயே... திருட்டுச் சரக்கை வாங்கின பாவத்துக்கு இப்படிப் பிராயச்சித்தம் பண்ணிக்கிறேன்னு ஒரே புலம்பல் வேற..."

"இன்னொரு ஷாக் நியூஸ்..."

"என்னப்பா... ஆர்டினரி நியூஸே இன்னிக்குக் கிடையாதா?"

"நம்ம பாம்பே மணியம் இனி சாராய வியாபாரம் செய்யறதில்லைன்னு சத்தியம் செய்துட்டு மன்றத்துல ஆயுட்காப்பாளரா சேரப் போறாரு. துணைத் தலைவர் யார் தெரியுமா...? இஸ்மாயில்!"

"எக்ஸலண்ட்!" கனகா வளைக் கரங்களால் ஒலி யெழுப்பிப் பாராட்டுகிறாள்.

"சரி சரி. இன்னிக்கு மோகனை டிஸ்சார்ஜ் பண்ணப் போறாங்க. ஆரத்தியோட ரெடியா இருங்க. பகவந்தராவ் கார்ல கரெக்டா ஒரு மணிக்கெல்லாம் வந்துடுவோம்..."

முகுந்தன் சொல்லிக் கொண்டு கிளம்புகிறான்.

"தம்பி இருப்பா, நானும் வரேன்..." சுசீலா லட்டு பிரசாதமுடன் எழுந்திருக்கிறாள்.

பிரசாதத்தைச் சாப்பிட்டபடி கண் கலங்குகிறான் மோகன்ராம்.

"உன் பிரார்த்தனை வீண் போகலைக்கா..." என்கிறான்.

"உன் பிரதிஞையும்தான் வீண் போகலை. முக்கியமான சமயத்துல காட்டற பொறுமைக்கும் சகிப்புத் தன்மைக்கும்தான் எத்தனை மதிப்பு?"

"உம்... அவசரப்படக் கூடாது..." என்று கத்தரிக்கிறார் அருகிலேயே நின்று கொண்டிருக்கும் தேசிகாச்சாரி. அனைவர் பார்வையும் அவர் மேல் திரும்புகிறது.

"இந்த மாற்றம் ஓர் ஆரம்பம்தான். போகப் போகக் காலம் திரும்பவும் கண்ணாமூச்சி விளையாட ஆரம்பிக்கும். பரீட்சை வைக்கத் தொடங்கும். அப்ப இப்ப ஏற்பட்டிருக்கற உறுதியும் பிரக்ஞையும் மெல்ல மாறலாம். களைப்படையலாம். காலைல குளிச்சா மாலைல அழுக்காறதில்லையா? திரும்பக் குளிச்சாதானே அழுக்குப் போகுது...? அதுமாதிரிதான் சமூகச் செயல்பாடுகளும்... கண் கொத்தி பாம்பா கவனிச்சு உற்சாகம் குறையாம செயல்பட்டுக்கிட்டே இருக்கணும். இல்லேன்னா நேற்றைக்கு நான் நல்லவனா இருந்தேன் கதைதான்..."

சுசீலா அதை அசை போட்டபடி திரும்புகிறாள். பகீரென்கிறது. எதிர்வரிசைப் படுக்கையில் கும்பிட்ட கரத்துடன் தாமு! ஒரு விநாடி உடம்பே உலுக்கப்பட்ட மாதிரி வியர்க்கிறது சுசீலாவுக்கு.

"என்னம்மா பாக்கறே... தாமு இப்ப மாறிட்டான். அவன் நம்பள்ள ஒருத்தன்..." - தேசிகாச்சாரி விளக்கம் அவள் காதுகளில் தேய்ந்து விழுகிறது.

தாமுவிடம் பதற்றம் கூடுகிறது. படுக்கை நிலையில் இருந்து எழப் பார்க்கும் வேகம் தொற்றுகிறது.

"பக்கமாப் போ... உன் கூடப் பேச ஆசைப்படறான்..."

- சுசீலா தயங்கித் தயங்கி அவனருகே செல்கிறாள். சற்றும் எதிர்பாராதபடி படுக்கையிலிருந்து சரிந்து சுசீலாவின் கால்களைப் பற்றுகின்றன, அவனது கரங்கள்.

"சுசீ... சுசீ... சுசீ..." - தாமுவால் அழைக்கக்கூட முடிய வில்லை.

சுசீலாவால் அந்தச் சூழ்நிலையில் பொங்கி அழாமலும் இருக்க முடியவில்லை. நெடுநேரம் அழுகிறாள்.

அவன், அவள் திரும்பமாட்டாளா என்று பார்த்த படியே விசும்பிக் கொண்டிருக்கிறான். காலம் போட்டிருக்கும் விபரீதமான கால்கட்டை ஒரு பார்வையும் அவளை மறுபார்வையும் பார்த்து விசும்பலைக் கதறல் நிலைக்குக் கொண்டு செல்கிறான்.

அவள் மெல்லத் திரும்புகிறாள். அவனை நெருங்கு கிறாள். தந்திக் கம்பி போல நடுங்கும் அவனது கரங்களைப் பற்றுகிறாள்.

அவனுள் புத்துணர்வு பெருக ஆரம்பிக்கிறது.

அதுவரை இருவரையும் பார்த்துக் கொண்டும் சுசீலா என்ன செய்யப் போகிறாள் என்ற எதிர்பார்ப்போடு இருந்த மோகன்ராம் உற்சாகமாக, "அக்கா, இனி நீ தனிக்கட்டை யில்லை..." என்று சொல்லிக் கொண்டே கண் கலங்குகிறான்

வெளியே வானமும்!

(முற்றும்)

24182
4105089